

# சமூகக் கல்வியும் வரலாறும்

## 11 ஆம் தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகக் கல்வியும் வரலாறும்

# 11 ஆம் தரம்

தேசிய கல்வி நிறுவகம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பதிப்பு: 2000

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே

இந்நூல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

2001/ෆද/11/213/85,000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நமதலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே-நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே -
நகு மடி தனையோட்டே -
அமைவுறும் அறிவுடனே
அடல்சேறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லறம் அறிவான்ற தலைமுறை
நம் நாட்டிலே தோன்றிட
நம் மரசளிக்கும் கொடையிது
நல்வழி காட்டும் நல்லொளியாம்!

உங்கள் பின்வரும்
உடன் பிறவிகள் பொருட்டும்
உணர்வுடன் இதைப் பேணல்
உங்கள் கடனெனக் கொள்வீர்!

அறிவை வளர்த்திடச் சமவுரிமை
அனைவர்க்கும் வழங்கும் நோக்கில்
அரசு தரும் ஏடிதை
அக மகிழ்ந்து ஏற்றிடுவீர்!

றிச்சட் பதிறண

கல்வி, உயர்கல்வி அமைச்சர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

சமூகக்கல்வியும் வரலாறும் என்னும் இந்நால் 1999 ஆம் ஆண்டு தொடக்கம் அமுல்படுத்தப்படும் புதிய கல்விச் சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைய புதிய பாடத்திட்டத்துக்கு ஏற்ப தேசிய கல்வி நிறுவகத்தினால் எழுதப்பட்டதாகும்.

பாடசாலைகளில் 11ஆம் தரத்தின் மாணவர்களுக்காக இந்நூல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது. இதில் உதவிய எல்லோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனந்த சிறிசேன
பதில் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
"இசுருபாய"
பத்தரமுல்லை.
2000 - 06 - 08

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

புதிய பாடத்திட்டங்கள், அப்பாடத்திட்டங்களுக்கு அமைவான பாடநூல்கள் ஆகியன தயாரிக்கப்பட்டு பாடசாலைகளுக்கு அனுப்பப்பட வேண்டியது கல்விச் சீர்திருத்தச் செயன்முறையின் முக்கியமான ஓர் அம்சமாகும். அச் செயன்முறைக்கு அமைவாகவே இப்பாடநூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய கல்விக் குறிக்கோள்களையும், அடிப்படைத் தகைமைகளையும் இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இப்பாடநூல், மாணவர் மையக் கற்றல் கற்பித்தற் செயன்முறைக்கு மாணவரை இசைவுபடுத்தக் கூடியதாக அமைந்துள்ளது.

மாணவர் விருப்புக்களையும் பிரச்சினைகளையும் இனங்கண்டு. அவர்களைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்திச் சுயமாகக் கற்க வழிநடத்துவதன் மூலம் வாழ்நாட்கல்விச் செயன்முறையில் ஊக்கம் பெறக்கூடியவாறாக இப்பாடநூலை மாணவர் பயன்படுத்த வகைசெய்ய வேண்டியது ஆசிரியரின் முக்கிய பொறுப்பாகும்.

பெற்றோரும், மூத்தோரும் தமது பிள்ளைகளின் அன்றாடக் கல்விக் கருமங்களில் கவனஞ் செலுத்தி, அவர்களுக்கு உதவி ஒத்தாசை புரிய வேண்டியது அவசியமாகும். அதன் மூலம் பெற்றோரும், மூத்தோரும் கல்விச் செயன்முறையில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் துணை புரியலாம்.

இந்நூலைத் தயாரித்து வெளியிடுவதில் அயராது உழைத்த அனைவருக்கும் எனது நன்றியறிதல் உரித்தாகும்.

பேராசிரியர் லஷ்மன் ஜயதிலக
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டல்:

பேராசிரியர் லஷ்மன் ஜெயதிலக - பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்

ஆலோசனைக் குழு:

| | |
|---|---|
| திரு. கலாநிதி தம்மிக்க பிபிலை | உதவிப் பணிப்பாளர் நாயகம், கலைத்திட்ட அபிவிருத்தி |
| திருமதி கலாநிதி சுவர்ணா விஜயதுங்க | கொழும்புப் பல்கலைக்கழகம் முன்னாள் |
| திருமதி ரஞ்சினி ஜயவர்த்தன | பணிப்பாளர், சமூக விஞ்ஞான திணைக்களம். |
| திரு. சரத்சந்திர ஜயவர்த்தன. | பிரதம செயற்திட்ட அதிகாரி, சமூக விஞ்ஞான திணைக்களம் |

பாடக்குழு:

| | |
|---|---|
| திரு. சரத்சந்திர ஜயவர்த்தன | பிரதம செயற்திட்ட அதிகாரி சமூக விஞ்ஞான திணைக்களம். |
| திரு. எஸ். ஏ. சீ. திஸாநாயக்க | பிரதம செயற்திட்ட அதிகாரி சமூக விஞ்ஞான திணைக்களம். |
| திரு. டபிள்யூ ஏ. சுமதிபால | செயற்திட்ட அதிகாரி சமூக விஞ்ஞான திணைக்களம். |
| திரு. கே. ரி. கனகரத்தினம் | செயற்திட்ட அதிகாரி சமூக விஞ்ஞான திணைக்களம். |
| திருமதி ரஞ்சினி தனவர்த்தன | உதவிச் செயற்திட்ட அதிகாரி சமூக விஞ்ஞான திணைக்களம். |

பதிப்பாசிரியர்கள்:

| | |
|---|---|
| திருமதி ரஞ்சினி சேனநாயக்க | பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர். |
| திரு. எம். ஜயசேகர | பிரதிக் கல்வி வெவியீட்டு ஆணையாளர். |
| திரு. என். கச்சிமுஹம்மத் | பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர். |
| திரு. சரத்சந்திர ஜயவர்த்தன | பிரதம செயற்திட்ட அதிகாரி |
| திருமதி ரஞ்சினி ஜயவர்தன | முன்னாள் பணிப்பாளர். சமூகக்கல்வி திணைக்களம் |
| திரு. கே. ரி. கனகரத்தினம் | செயற்திட்ட அதிகாரி சமூக விஞ்ஞான திணைக்களம். |
| திரு. எப். எம். நவாஸ்தீன் | உதவிச் செயற்திட்ட அதிகாரி சமூக விஞ்ஞான திணைக்களம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர் குழு

| | |
|---|---|
| 1. ஜி. டி. விமலரத்தினா | ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர், ஹொரணை |
| 2. சி. எஸ். ஜெயசிங்க | ஆசிரிய ஆலோசகர், ஹொரணை |
| 3. எச். எம். எஸ். தயானந்த | ஆசிரிய ஆலோசகர், மாவத்தகம |
| 4. எச். எஸ். சிறிவர்த்தனா | ஆசிரிய ஆலோசகர் - கிரியுள்ள |
| 5. கே. ஏ. பி. பெரேரா | ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர், வென்னப்புவ |
| 6. பத்மினி டீ. சில்வா | ஆசிரிய ஆலோசகர், கடுகஸ்தோட்டை |
| 7. எஸ். இ. ஜெயவீர | ஆசிரிய ஆலோசகர், தங்காலை |
| 8. எல். எஸ். எச். சந்திரசோமா | உதவி கல்விப் பணிப்பாளர், மாத்தளை |
| 9. றீனி விஜய குணரத்தின | ஆசிரிய ஆலோசகர், வத்தளை |
| 10. எல். எஸ். திலகரத்தினா | ஆசிரிய ஆலோசகர், கொழும்பு |
| 11. டி. எம். எம். குணவர்த்தனா | ஆசிரிய ஆலோசகர், களுத்துறை |
| 12. எல். எஸ். டபிள்யூ. அமரக்கோன் | ஆசிரிய ஆலோசகர், களுத்துறை |
| 13. ரி. கே. விக்கிரமசிங்க | ஆசிரிய ஆலோசகர், களுத்துறை |
| 14. ராணி லுனுவில | ஆசிரிய ஆலோசகர், மாத்தறை |
| 15. எஸ். ஜி. அபயசேகரா | ஆசிரிய ஆலோசகர், கம்பஹா |

மொழி பெயர்ப்பாளர்கள்

| | |
|---|---|
| 1. ஐ. எல். ஏ. அபூர் | ( 1 ஆம் அத்தியாயம்) |
| 2. திரு. உ. நவரத்தினம் | ( 2 ஆம் அத்தியாயம்) |
| 3. திரு. எச். எம். நளீர் | ( 3 ஆம் 6 ஆம் அத்தியாயம்) |
| 4. திரு. எம். எஸ். எம். ஹஸன் | ( 4 ஆம் அத்தியாயம்) |
| 5. திரு. ஏ. ஜே. பெர்னான்டோ | ( 5 ஆம் அத்தியாயம்) |

சரவை பார்த்தலும், சீராக்குதலும்

| | |
|---|---|
| திரு. என். சிதம்பரநாதன், | ஓய்வு பெற்ற பணிப்பாளர், தேசியக் கல்வி நிறுவகம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாட உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. சர்வதேச வர்த்தகமும், சர்வதேச ஒத்துழைப்பும் | 01 - 26 |
| 2. சர்வதேச அமைப்புகள் | 27 - 55 |
| 3. உலகில் ஏற்பட்டுவரும் பிரச்சினைகள் | 56 - 93 |
| 4. சனநாயகம் | 94 - 108 |
| 5. இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள அரசியல் யாப்பு | 109 - 141 |
| 6. தேசப்படக் கல்வி | 143 - 178 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச வர்த்தகமும் சர்வதேச ஒத்துழைப்பும்

**புராதன பொருளாதார முறை**

புராதன சமூக அமைப்பில் அனேக நாடுகளில் சுயதேவைப் பொருளாதாரமே காணப்பட்டன. அக்காலத்தில் கிராமவாசிகள் கிராமத்தில் தமக்குத் தேவையானவற்றைத் தாமே உற்பத்தி செய்து கொண்டனர். புராதன இலங்கையிலும் வரையறுக்கப்பட்ட தேவைகளையுடைய இலகுவான பொருளாதார அமைப்பே காணப்பட்டது. சுய தேவைக்கு மேலதிகமாக உள்ள உற்பத்திப் பொருட்களை ஏனையவர்களுடன் பண்டமாற்றுச் செய்து கொண்டனர். காலப்போக்கில் சனத்தொகை அதிகரித்துச் சென்றமையால் மனித தேவைகளும் அதிகரித்தன. இதனால் பொருட்களின் கேள்வியும் அதிகரித்தன.

**சர்வதேச வர்த்தக விருத்தி**

ஒரு நாட்டின் உற்பத்தியைத் தீர்மானிப்பதில் அந்நாட்டின் புவியியல் அமைப்பு, காலநிலை, வளங்களின் பரம்பல் ஆகிய காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. மேற்கூறப்பட்ட காரணிகளின் வேறுபட்ட தன்மைகள் காரணமாக உலகில் எந்தவொரு நாடும் தமக்கு தேவையான எல்லாப் பொருட்களையும் உற்பத்தி செய்து கொள்ளமுடியாத நிலை காணப்படுகின்றது. இதன் காரணமாக ஒவ்வொரு நாடும் தமது நாட்டில் இலகுவாக உற்பத்தி செய்துகொள்ளக்கூடிய பண்டங்களை தாமே உற்பத்தி செய்து கொள்வதற்கும் தேவையான ஏனைய பொருட்களை வெளிநாடுளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலைக்கும் உள்ளாகியுள்ளது. உதாரணமாக வளம்மிக்க ஈரக்களிமண் உள்ள இடைவெப்ப வலயப்பிரதேசங்களில் கோதுமை செழிப்பாக வளர்வதையும், ஈரலிப்பான வளம்மிக்க வண்டல் மண் கொண்ட அயனக் காலநிலைப் பிரதேசங்களில் நெல் செழிப்பாக வளர்வதையும் காணலாம். இதற்கேற்ப உலக நாடுகளுக்கிடையில் தானியங்கள் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. அத்தியாவசியப் பொருட்கள் பண்டமாற்றம் செய்யப்பட்டதின் விளைவாக உலக நாடுகளுக்கிடையே பரஸ்பரத் தொடர்புகள் விருத்தி அடைந்தன. மத்திய கால ஐரோப்பாவில் ஏற்பட்ட புதிய கண்டுபிடிப்புகளின் காரணமாகவும், நாடு காண் பயணங்களின் மூலமாகவும் நாடுகளுக்கிடையில் கொடுக்கல் வாங்கல்களிலும் தொடர்பு களிலும் விருத்தி ஏற்பட்டது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளுக்கும், கீழைத் தேச நாடுகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் விருத்தியடைந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கைத்தொழிற் புரட்சி**

கைத்தொழிற் புரட்சிக்குப் பின் இந்நிலையில் மேலும் வளர்ச்சி காணப்பட்டது. கைத்தொழிற் புரட்சி காரணமாக ஐரோப்பிய நாடுகளின் உற்பத்திகள் பல மடங்காக பெருகியது. அதன் விளைவாக வர்த்தகப் போக்குவரத்துக்கள் அதிகரித்தன. உலகின் பல நாடுகளிலிருந்து தேவையான, தொகையான மூலப்பொருட்களை ஐரோப்பிய நாடுகள் பெற்றுக் கொள்வதற்கும், உற்பத்தி செய்த முடிவுப் பொருட்களைச் சந்தைப் படுத்துவதற்கும் இவ் போக்குவரத்து வசதிகள் அதிகரிப்பது அவசியமானதொன்றாக காணப்பட்டது. இதன் விளைவாக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுளிலிருந்து மூலப் பொருட்களை மலிவாகப் பெற்றுக் கொள்ளவும், தமது பொருட்களைச் சந்தைப்படுத்துவற்காகவும் அந்நாடுகளை அடிமைப்படுத்தி குடியேற்றங்களாக்குவதில் ஐரோப்பிய நாடுகள் கடும் போட்டியில் ஈடுபட்டன. இதன் விளைவாக ஐரோப்பிய கைத்தொழில் நாடுகள் செல்வம் மிக்க நாடுகளாக மாறியதோடு பிற்காலத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகளாகவும் மாறின. இந் நாடுகள் மூலதனத்திலும், தொழில் நுட்பத்திலும் உயர்ந்த நிலையை அடைந்தன. குடியேற்ற நாடுகளாக காணப்பட்ட நாடுகள் குறை விருத்திப் பொருளாதார நாடுகளாகக் காணப்பட்டன. இந் நாடுகள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளாக கருதப்படுவதோடு, அபிவிருத்தியை நோக்காக கொண்டு அபிவிருத்தியடைந்த நாடுகளில் இருந்து தொழில் நுட்பம், மூலதனம், நவீன இயந்திர சாதனங்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு இந்நாடுகள் முயன்று வருகின்றன.

நவீன தொழில் நுட்ப முறைகளை அபிவிருத்தியடைந்த நாடுகளில் இருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக காணப்படுவதால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் விவசாயம். கைத்தொழில், ஆகியவற்றை விருத்தி செய்யும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. அத்தோடு சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, தொடர்பாடல் ஆகிய துறைகளிலும் விருத்தி ஏற்படுத்துவதற்கும் நாடுகளுக்கிடையேயுள்ள தொடர்புகள் உதவி உள்ளன.

**தொடர்பாடற் சாதனங்கள்**

நவீன தொலைத்தொடர்பு ஊடகங்களின் முன்னேற்றம் சர்வதேச தொடர்புகளின் விருத்திக்கு ஏதுவாய் அமைந்துள்ளது. உதாரணமாக இன்று சர்வதேச ரீதியில் பரந்து காணப்படும் இணையத்தின் (இன்ரநெற்) வளர்ச்சியைக் கூறமுடியும். இந்நிலைமை உலக நாடுகளின் தொடர்புகளுக்குக் காரணமாக அமைவதோடு, அந் நாடுகளில் இருந்து தகவல்களையும் விரைவாக பெற்றுக் கொள்ளவும் உதவுகின்றது. அபிவிருத்தியை நோக்கி முயற்சி செய்துகொண்டிருக்கிற நாடுகளுக்கு ஏனைய நாடுகளில் இருந்து உதவிகளையும் உபகரணங்களையும் பெற்றுக் கொள்ளவும் வழி செய்கின்றது. இதன் காரணமாக தொடர்புகள் தனிமனிதர்களுக்கிடையிலும், நாடுகளுக்கிடையிலும் பாரிய அளவில் அதிகரித்துவிட்டது. எனவே எந்த ஒரு நாடோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனமோ தனி மனிதனோ தனித்து வாழ முடியாது என்பது தெளிவாகிறது.

**சர்வதேச ஒத்துழைப்புகள்**

எனினும் உலகில் உள்ள சில நாடுகளில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருப்பதை நீங்கள் அறிவீர்கள். உதாரணமாக புவி நடுக்கம், வெள்ளப்பெருக்கு, வரட்சி, பஞ்சம் போன்ற இயற்கை அனர்த்தங்களைக் கூறலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் சர்வதேச அமைப்புகள் போலவே உலக நாடுகளும் உணவுப் பொருட்கள், உடை, மருந்துகள், பாலுணவுகள் போன்ற பொருட்களை மட்டுமன்றி போக்கு வரத்து வசதிகள், வைத்திய சிகிச்சை வசதிகள் போன்றவற்றையும் அளித்து வருகின்றன. இதன் மூலம் சர்வதேச ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தினை நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது. இத் தொடர்புகள் துண்டிக்கப்படும்போது நாடுகள் மிக்க துன்பங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. உலகில் மோதல்கள் ஏற்பட்டுள்ள பிரதேசங்களுக்கு இடையில் உணவுப் பொருட்கள், அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் போன்றவற்றின் விநியோகம் தடைப்படுவதை உதாரணமாக கூறலாம். அவ்வாறே உலகின் ஒரு சில நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களால் அந்நாடுகள் ஏனைய நாடுகளை தனியுரிமை அடிப்படையில் ஆதிக்கம் செலுத்துகின்றன. உதாரணமாக பெற்றோலியம் அத்தகைய ஒரு பொருளாக விளங்குகின்றது. தற்போதைய உலகில் பெற்றோலியம் இல்லாது பொருளாதார நடவடிக்கைகள் பெரும்பாலானவற்றை மேற்கொள்ள முடியாத நிலை உண்டு. சில நாடுகள் மட்டுமே அதனை விற்பனை செய்யக்கூடியதாக மேலதிகமாக உற்பத்தி செய்கின்றன. பெற்றோலியத்தை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நாடுகள் ஒன்றிணைந்து அதன் விலையை உயர்த்துவதால் பல நாடுகளின் பொருளாதார அமைப்பில் நெருக்கடிகள் தோன்றக் காரணமாக உள்ளன.

இவ்வாறான பிரச்சினைகள் தோன்றிய போதும் நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பு மனித விருத்திக்கு அவசியமாகின்றது. சனத்தொகையின் விரைவான வளர்ச்சி, அதனால் தேவைகள் அதிகரித்துச் செல்லல், அத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வளங்கள், உற்பத்திகள் மட்டுப்படுத்தப்பட்டு உள்ளமை என்பன போன்ற காரணங்களால் உலகில் எந்த நாடும் தனித்து வாழ முடியாத நிலை காணப்படுகின்றது. எனவே நாடுகளுக்கு இடையில் பரஸ்பர ஒத்துழைப்பு, புரிந்துணர்வு என்பவற்றுடன் செயலாற்றுவது அபிவிருத்திக்கான அறிகுறியாகும். இன்று உலகில் பொருளாதார, சமூக, கலாசார துறைகளில் அதிக வளர்ச்சிகளைக் கண்ட நாடுகள் பல உள்ளன. அவையாவும் மேன் நிலைமையடைந்தமைக்கு காரணம் அவற்றுக்கிடையே ஏற்பட்ட ஒத்துழைப்பேயாகும். நாடுகளுக் கிடையே உதவிகள், ஒத்துழைப்புகளை விருத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள சர்வதேச அமைப்புகள் பல இன்று உலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதும் இயங்கி வருவதைக் காணலாம். அவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும் சேவைகள் தொடர்பாக அடுத்துவரும் பாட அலகுகளில் கற்போம்.

## வெளி நாட்டு வியாபாரம்

பொருட்களின் தெரிவு அதிகரித்தல்

உலகில் உள்ள எல்லா நாடுகளும் தமக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் உற்பத்தி செய்ய முடியாது. அதன் காரணமாக உற்பத்தி செய்ய முடியாத பொருட்களை வேறு நாடுகளில் இருந்து பெற்றுக் கொள்கின்றன. நாடுகளுக்கிடையே ஏற்படும் தொடர்ச்சியான கேள்வி, நிரம்பல்களை பூர்த்தி செய்யும் முகமாகவே சர்வதேச வியாபாரம் மேற்கொள்ளப் படுகின்றது. ஒரு நாடு உற்பத்தி செய்யும் மேலதிகப் பொருட்களை ஏனைய தேவையான நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதோடு அந் நாட்டுக்கு தேவைப்படும் தம் நாட்டில் உற்பத்தி செய்ய முடியாத அல்லது அதிக உற்பத்தி செலவான பொருட்களை இறக்குமதி செய்கின்றன. இதன் விளைவாக உலகின் பல்வேறு பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்கள். பழ வகைகள், துணிவகைகள், இயந்திர சாதனங்கள் என்பன ஒரு நாட்டவருக்கு கிடைக்கக்கூடியதாக உள்ளது. அதாவது தெரிவுக்கான பொருட்கள் அதிகமாக காணப்படுகின்றன.

கிரேக்கம், உரோம், பாரசீகம், போன்ற மேலை நாடுகளுடனும், சீனா, இந்தியா, பர்மா போன்ற கீழைத் தேசங்களுடனும் வியாபாரத் தொடர்புகளை இலங்கை கொண்டிருந்தது என்பதை வரலாறு கூறுகின்றது. அந் நாடுகளில் இருந்து பட்டுத்துணி, பீங்கான் பொருட்கள், சுகந்த வாசனைப் பொருட்கள் போன்றவற்றை இறக்குமதி செய்தோம் என்பதையும், எமது நாட்டில் இருந்து வாசனைத்திரவியங்கள், மாணிக்கம், முத்து, யானைத் தந்தங்கள் என்பன ஏற்றுமதி செய்யப்பட்டன என்பதையும் நாம் அறிவோம். இந்த வர்த்தக நடவடிக்கைகள் காரணமாகவே இலங்கை உலகில் பிரசித்தி பெற்ற நாடாக விளங்கியது என்பதும் அண்மைக் காலத்தில் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர் இலங்கையைத் தம் ஆட்சியின் கீழ் வைத்திருந்தனர் என்பதையும் நாம் அறிந்து வைத்துள்ளோம். அக் காலத்தில் விலையுயர்ந்த, பாரமில்லாத பொருட்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருந்த சர்வதேச வியாபாரம் இன்று ஏறக்குறைய சகல பொருட்களுக்கும் விரிவடைந்து காணப்படுவதோடு தொகையளவிலும் பல மடங்காக அதிகரித்து உள்ளது.

பண்டைக் காலத்தில் குறிப்பிட்ட சில நாடுகளுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டிருந்த சர்வதேச வியாபாரமானது காலப் போக்கில் உலகின் எல்லா நாடுகளுக்கும் பரவியுள்ளது. இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச வர்த்தகம் விருத்தியடைவதற்கு பின்வரும் காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன.

**சர்வதேச வர்த்தக விருத்திக்கான காரணிகள்**

- நாடுகாண் பயணங்களின் விருத்தி.
- கைத்தொழிற் புரட்சியின் காரணமாக பொருட்களின் உற்பத்தித் தொகை பன்மடங்காக அதிகரித்தமை.
- போக்குவரத்து, செய்தித் தொடர்பாடல்களின் விருத்தி.
- தொழில்· நுட்ப அறிவும், பணப் பரிமாற்றமும் விருத்தி யடைந்தமை.
- பௌதீக சூழல், காலநிலை, இயற்கை வளங்கள் என்பவற்றைப் பொறுத்து குறிப்பிட்ட பொருட்களை சிறப்பாக உற்பத்தி செய்ய முடிந்தமை.
- சிறப்புத் தேர்ச்சி அடிப்படையில் சில பொருட்கள் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டமை. உதாரணமாக யப்பான் நாட்டில் மோட்டோர் வாகன உற்பத்தியும், சுவிர்சர்லாந்தில் கடிகார உற்பத்தியும்.
- அந் நாடுகளில் எல்லா உற்பத்திகளும் இல்லாமை. உ+ம் இலங்கையில் பெற்றோலியம் இல்லாமை.
- தனது உற்பத்தி பற்றாக்குறையாக இருக்கும் போது அவற்றை வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்தல்.
- சில பொருட்கள் தமது நாட்டில் உற்பத்தி செய்வதிலும் பார்க்க வேறு நாடுகளிலிருந்து குறைந்த விலையில் இறக்குமதி செய்வது இலபகரமாக இருத்தல்.
- நுகர்வோருக்கு தெரிவுச் சுதந்திரத்தை அதிகரித்தல்.

சர்வதேச வியாபாரமானது இரு பிரதான பகுதிகளாக வகுக்கப் படுகின்றது.

1. இரு பக்க வியாபாரம்
2. பல் பக்க வியாபாரம்

**இரு பக்க வியாபாரம்**

இரு நாடுகளுக்கிடையில் மேற்கொள்ளப்படும் பொருட்கள், சேவைகள் என்பவற்றின் பரிமாற்றம் இருபக்க வியாபாரம் எனப்படும். இதற்காக இரு நாடுகளுக்குமிடையில் ஒப்பந்தம் மேற் கொள்ளப்படும். ஒப்பந்தத்தில் பரிமாற்றம் செய்யப்படும் பொருட்கள், தரம், விலைகள், காலவரையறை, பணம் கொடுக்கல் வாங்கல் தீர்த்துக் கொள்ளும் முறை போன்றன இடம் பெற வேண்டும். ஒப்பந்தம் செய்யப்பட்ட பொருள் அல்லது பொருட்களின் விலைகள் உலக சந்தையில் மாற்றம் அடைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிலும், ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறும். இவ்வாறான ஒப்பந்தம் இலங்கைக்கும், மக்கள் சீனாவுக்கும் இடையில் நடை முறைப்படுத்தப்பட்ட இரப்பர் அரிசி ஒப்பந்தம் ஓர் உதாரணமாகும். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் "இலங்கை இந்திய சுதந்திர வியாபார ஒப்பந்தம்" என்னும் பெயரில் ஒரு ஒப்பந்தம் நடைமுறையில் உள்ளது. அன்னிய செலாவணிப் பிரச்சினைகள் உள்ள நாடுகளுக்கு இம் முறை பிரயோசனமானதாகும்.

பல் பக்க வியாபாரம்

இரண்டுக்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையில் மேற் கொள்ளப் படும் பொருட்கள் சேவைகளுக்கிடையிலான பரிமாற்றம், பல்பக்க வியாபாரம் எனப்படும். ஒப்பந்த அடிப்படையல்லாது சர்வதேச வர்த்தகத்தில் காணப்படும் பண அலகுகளால் கொடுக்கல் வாங்கல் தீர்க்கப்படுகின்றன. இம் முறையாவது இன்றைய உலகில் இடம் பெறும் பிரதான வியாபார முறையாக அமைகிறது. இதன் படி கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும் நாடுகள் ஏற்றுமதி தொடர்பாக பெற்றுக்கொள்ள வேண்டிய பணத்தினால் இறக்குமதி செய்து பொருட்களுக்குரிய பணத்தினைச் செலுத்தலாம். அதாவது இலங்கை தேயிலையை பிரித்தானியா விற்கு ஏற்றுமதி செய்ததால் பெறப்பட்ட பிரித்தானிய ஸ்ரேலிங் பவுணைப் பாவித்து அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்த கோதுமைக்குரிய பணத்தைச் செலுத்தலாம். இதுவே இதன் முக்கிய இலட்சணமாக அமைகின்றது. பண அலகுகளுக்கிடையே மாற்று விகிதங்கள் உண்டு.

அமெரிக்காவிலும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் பாவனையில் உள்ள பணஅலகுகள்

சர்வதேச வர்த்தகத்தில் பல்வேறு பண அலகுகள் நடைமுறையில் உள்ளன.

| நாடுகள் | பண அலகு |
|---|---|
| ஐக்கிய அமெரிக்க குடியரசு | யூ. எஸ். டொலர் |
| ஐக்கிய இராச்சியம் | ஸ்ரேலிங் பவுண் |
| பிரான்சு | பிராங் |
| ஜேர்மனி | டொயிஸ் மார்க் |
| ஆஸ்திரியா | சிலிங் |
| சுவிர்சர்லாந்து | சுவிஸ் பிராங் |
| சுவீடன் | குரோனர் |
| ஸ்பானியா | பெஸ்டா |
| நெதர்லந்து | கில்டர் |
| போர்த்துக்கல் | எஸ்கியூடோ |
| இத்தாலி | லீரா |
| பெல்ஜியம் | பிராங் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கிழக்கு ஐரோப்பாவில் உள்ள சில நாடுகளின் பண அலகுகள் | செக்கஸ்லோவாக்கியா | கொரு |
| | ஹங்கேரி | பொரின்ட் |
| | போலந்து | ஸ்லோட் |
| | ரூமேனியா | லியூ |
| | யூகோஸ்லாவாக்கியா | தினார் |
| கீழைத்தேச நாடுகள் சிலவற்றின் பண அலகுகள் | சீனா | யுஆன் |
| | யப்பான் | யென் |
| | இந்தியா | ரூபா |
| | இந்தோனேசியா | ரூபியா |
| | பாகிஸ்தான் | ரூபா |
| | சிங்கப்பூர் | டொலர் |
| | பிலிப்பைன் | பெஸோ |
| | இலங்கை | ரூபா |
| | தாய்வான் | தாய்வான் டொலர் |
| பெற்றோலியம் உற்பத்தி செய்யும் நாடுகளின் பாவனையில் உள்ள பண அலகுகள் | எகிப்து | பவுண் |
| | ஈரான் | றியால் |
| | ஈராக் | தினார் |
| | இஸ்ரேல் | இஸ்ரேல் சிகார் |
| | ஜோர்தான் | தினார் |
| | குவைத் | தினார் |
| | லெபனான் | பவுண் |
| | ஓமான் | ஓமான் றியால் |
| | சவூதி அரேபியா | சவூதி றியால் |
| | பஹ்ரேன் | தினார் |

**வன் நாணயம்**

சர்வதேச வியாபாரத்தில் பெறுமதியின் அடிப்படையில் உலகம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பண அலகுகளாக அமெரிக்க டொலர், ஸ்ரேலின் பவுண், ஜேர்மனிய டொயிஸ் மார்க், யப்பானின் யென் என்பன விளங்குகின்றன. இவை அதிக கேள்வியுடைய வன் பணங்களாக விளங்குகின்றன.




ஐக்கிய அமெரிக்க டொலர் நாணயம்
படம் 1.1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென் நாணயம்

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பாவனையில் காணப் படும் நாணயங்களின் அலகுகள் மென் பணமாக விளங்குகின்றது. இதற்குரிய கேள்வி குறைவானதாகும்.

பணத்தின் பரிமாற்று முறையில் உலகின் பொருளாதார சக்தி வாய்ந்த நாடுகள் தங்கள் பண அலகின் பெறுமதியை உயர்த்துகின்றன. இதனால் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பயன்பாட்டிலிலுள்ள பண அலகுகளின் பெறுமதி குறைவடை கின்றன.

பணப்பரிமாற்று முறையில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பண அலகுகளின் பெறுமதி குறைவடைவதால் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. உதாரணமாக அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரித்தமையால் ஐரோப்பிய நாடுகளின் பணப்பெறுமதி குறைவடைந்தது. அதன் விளைவாக ஐரோப்பிய நாடுகள் ஒன்றிணைந்து "யூரோ" என்ற பண அலகை நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளன. கொடுக்கல் வாங்கல்களின் போது அதன் பெறுமதி குறைவடைவதைக் தவிர்ப்பதும், பெறுமதியை நிலையானதாக வைத்திருப்பதும் இதனால் எதிர்பார்க்கப்பட்டதாகும்.

நாணய மாற்று விகிதம்.

உலக நாடுகள் சர்வதேச வியாபாரத்தில் பல்வேறு வகையான நாணய அலகுகளைப் பயன்படுத்துவதனால் பெறுமதி தொடர்பான பல பிரச்சினைகள் தோன்றுவதுண்டு. இப் பிரச்சினையைப் போக்குவதற்காக சர்வதேச வியாபாரத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாணய மாற்று விகிதமொன்று உரு வாகியது. இதன்படி ஒரு நாட்டில் பயன்பாட்டில் உள்ள பண அலகை இன்னொரு நாட்டின் பண அலகுடன் மாற்றும் போது சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாற்றுவிகிதம் நாணய பரிமாற்று விகிதம் எனப்படும். பெறுமதியின் விகிதம் நாளுக்கு நாள் வேறுபடும்.

நாணய மாற்று விகிதம்

உதாரணம்: இலங்கையில் மத்திய வங்கி நாணயமாற்று விகிதத்தை அறிவிக்கின்றது. அவ் விகிதங்கள் நாள்தோறும் தொலைக்காட்சி செய்திகளிலும் வெளியிடப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாணய மாற்று விகிதம் 14-04-2000

மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிக்கும் இடையிலான உடன்மாற்று விகிதம் வருமாறு.

| | வாங்குதல் ரூபா | விற்றல் ரூபா | | வாங்குதல் ரூபா | விற்றல் ரூபா |
|---|---|---|---|---|---|
| அமெரிக்க டொலர் | 73.2820 | 73.8260 | ஸ்டேர்லிங் பவுண் | 11.8600 | 117.3960 |
| யூரோ | 69.4920 | 70.8620 | சுவிஸ் பிராங் | 44.2000 | 45.0100 |
| ஜப்பானிய யென் | 0.6866 | 0.7004 | சவூதி அரேபியா றியால் | | 19.5353 |
| பாஹ்ரேயின் டினார் | | 194.3759 | குவைத் டினார் | | 239.6010 |
| கட்டார் றியால் | | 20.1430 | யூ. ஏ. ஈ. டிராம் | | 19.9605 |
| ஓமான் றியால் | | 190.4353 | | | |

### வர்த்தக மீதி

வர்த்தக மீதி

ஏற்றுமதிப் பொருட்கள் மூலம் கிடைக்கும் வருமானத்திற்கும், இறக்குமதிப் பொருட்களால் ஏற்படும் செலவுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் "வர்த்தக மீதி" எனப்படும். இது வருடாந்தம் கணக்கிடப்படுவதாகும். ஏற்றுமதி வருமானம், இறக்குமதி செலவைக் விட கூடுதலாக இருக்கும் போது அதனை சாதகமான வர்த்தக மீதி என்றும், ஏற்றுமதி வருமானத்திலும் கூடுதலாக இறகுமதிச் செலவுகள் அமைந்திருக்குமாயின் அதனை பாதகமான வர்த்தக மீதி எனவும் கொள்ளப்படும். எனவே வர்த்தக மீதி கூடியும், குறைந்தும் காணப்படலாம். பொதுவாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வர்த்தக மீதி பாதகமாகவே காணப்படுகின்றன. இந் நாடுகளின் ஏற்றுமதிப் பொருட்களுக்கு நிலையான விலைகள் இல்லாது தளம்பல்கள் ஏற்படுவதும், ஒப்பிட்டு ரீதியாக விலைகள் குறைந்து செல்வதும் காரணங்களாக அமைகின்றன.

உதாரணம்: இலங்கையின் வர்த்தக மீதி

| ஆண்டு | இலங்கையின் ஏற்றுமதி வருமானம் மில்லியன்களில் | இலங்கையின் இறக்குமதிச் செலவினங்கள் மில்லியன்களில் | பாதகமான வர்த்தக மீதி மில்லியன்களில் | சாதகமான வர்த்தக மீதி மில்லியன்களில் |
|---|---|---|---|---|
| 1997 | 4639 | 5864 | – 1225 | – |
| 1998 | 4798 | 5869 | – 1092 | – |
| 1999 | 4,600 | 5899 | – 1299 | – |



2. S. P. C 000405

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தக விகிதம்

வர்த்தக விகிதம்

ஒரு நாடு இறக்குமதி செய்யும் பொருட்களின் பெறுமதிக்கும், ஏற்றுமதி செய்யும் பொருட்களின் பெறுமதிக்கும் இடையில் உள்ள மாற்று விகிதம் "வர்த்தக விகிதம்" என சர்வதேச வர்த்தகத்தில் கூறப்படுகின்றது. ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்களின் விலை மட்டத்தின் மூலம் வர்த்தக விகிதம் கணிக்கப்படுகின்றது. அதாவது ஒரு வருடத்தின் ஏற்றுமதிகளின் விலையும், இறக்குமதிகளின் விலையும் 100 வீதமாக கணிக்கப்பட்டு, அடுத்து வரும் ஆண்டுகளில் ஏற்றுமதிகளின் விலைகளிலும் பார்க்க இறக்குமதிகளின் விலைகள் அதிகரித்தால் வர்த்தக விகிதம் 100க்குக் குறைவாக மாறும். அது பாதகமான வர்த்தக விகிதமாகும். ஏற்றுமதிகளின் விலை மட்டம் இறக்குமதிகளின் விலை மட்டத்திலும் பார்க்க உயர்வாக காணப்பட்டால் வர்த்தக வீதம் 100க்கு மேல் அதிகரிக்கும். அது எமது நாட்டுக்கு சாதகமான வர்த்தக விகிதம் ஆகும். எனினும் சாதகமான வர்த்தக விகிதத்தை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் அநுபவிப்பது அரிதாகும்.

வெளிநாட்டு வியாபாரத்தின் அநுகூலங்கள்:

சர்வதேச வர்த்தக அநுகூலங்கள்

- ஒரு நாட்டில் தம்மால் உற்பத்தி செய்துகொள்ள முடியாத பொருட்களை ஆனால் அவசியமாக உள்ளவையாக இருக்கும் பொழுது அவற்றை இறக்குமதி செய்யக் கூடியதாக உள்ளது.
- ஒவ்வொரு நாடுகளும் தாம் மிகையாக உற்பத்தி செய்யும் பொருட்களை மற்ற நாடுகளுக்கு தேவைப்படும் பொழுது விற்கக் கூடியதாக உள்ளது.
- குறைந்த செலவில், உச்சப்பயனுள்ள தரமான, அதிகமான பொருட்களை உற்பத்தி செய்யவும் அவற்றைச் சந்தைப்படுத்தவும் வாய்ப்புகளை சர்வதேச வர்த்தகம் உதவுகிறது.
- நாட்டில் உள்ள வளங்களில் இருந்து உச்சப் பயனைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல்.
- பல்வேறு நாடுகளில் உற்பத்தியாகும் பொருட்களைப் பரிமாறிக் கொள்வதால் நுகர்வுக் கோலம் விரிவடைகின்றது.
- உற்பத்திக்கான விரிவான சந்தை வாய்ப்பு கிடைத்தல்.
- தமது நாட்டில் உற்பத்தி செய்வதைவிட குறைந்த விலையில் பொருட்களை பெறக்கூடியதாக இருத்தல்.
- சர்வதேச தொடர்புகள் அதிகரித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச வியாபாரத்தில் தோன்றுகின்ற பிரச்சினைகள்

சர்வதேச வர்த்தகத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகளைப் போல அபிவிருத்தியடைந்த நாடுகளும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பின்வருமாறு:

### 1. முதனிலைப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைதலும், தளம்பலடைதலும் :

*முதனிலைப் பொருட்களின் விலை வீழ்ச்சியடைதலும் தளம்பலும்*

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பெரும்பாலும் முதனிலைப் பொருட்களையே ஏற்றுமதி செய்கின்றன. அப் பொருட்களுக்கு விலை வீழ்ச்சியடைதல், விலை தளம்பலடைதல், நிலையான விலை கிடைக்காமை ஆகிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. எனவே இந்நாடுகளின் வெளிநாட்டுச் செலாவணியை உழைப்பதில் ஏற்ற, இறக்கம் காணப்படுகின்றது. கிடைக்கும் வெளிநாட்டு வருமானத்தின் நிச்சயமற்ற நிலைமையால் உள்நாட்டு அபிவிருத்தித் திட்டங்கள் தடைப்படுகின்றன. ஏற்றுமதி வருமானத்தில் வீழ்ச்சி ஏற்படும் போது பொருட்களை இறக்குமதி செய்யும் சக்தி குறைவடைகின்றது. அவசியமான பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காவும் கூட வெளி நாட்டுக் கடன்களை பெற வேண்டியுள்ளது. வெளிநாட்டு ஒதுக்குகளிலும் தாக்கத்தைக் ஏற்படுத்துகின்றது.

### 2. முதனிலை வர்த்தகப் பொருட்களை விற்பனை செய்வதில் உள்ள இடையூறுகள்:

*முதனிலைப் பொருட்களை விற்பதில் இடையூறுகள்*

இன்று அபிவிருத்தியடைந்த நாடுகள் தமது மூலதனத்தையும், தொழில் நுட்பத் திறனையும் பயன்படுத்தி இயற்கை மூலப் பொருட்களுக்கு பதிலாக செயற்கை உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதில் முற்பட்டுள்ளன. உதாரணமாக இயற்கை இறப்பருக்கு பதிலாக செயற்கை இறப்பர் உற்பத்தி, மரங்களுக்கு பதிலாக பிளாஸ்ரிக் தளபாட உற்பத்தி போன்றனவாகும். அதனால் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் தமது முதல் விளைவுப் பொருட்களை விற்பதில் பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றன.

மேலும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் இவ்வாறான முதல் விளைவுப் பொருட்களை விற்கும் பொழுது தமக்குள் போட்டியிட வேண்டியுள்ளது. உதாரணமாக தேயிலை விற்பனையில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் தமக்குள் போட்டியிட வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள், ஒரு சில முதல்விளைவுப் பொருட்களை மாத்திரம் ஏற்றுமதி செய்யும் நாடுகளாகக் காணப்படுகின்றது. அவற்றில் ஒன்றின் விலை வீழ்ச்சியடையும் போது வெளிநாட்டுச் செலாவணியும் குறைவடையும். அதன் விளைவாக இறக்குமதிச் சக்தி குறைவடைவதோடு அபிவிருத்தித் திட்டங்களை இடைநிறுத்தி வேறும் பல உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு ஆளாக வேண்டியுள்ளது.

3. **முதனிலைப் பொருட்களின் பெறுமதியில் பெரும் பகுதி அபிவிருத்தியடைந்த நாடுகளைச் சென்றடைதல்:**

**முதனிலைப் பொருட்களின் பெறுமதியில் பெரும் பகுதி அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு சென்றடைதல்**

சர்வதேச வர்த்தகத்தில் வர்த்தகச் செயற்பாடுகள், வர்த்தகச் சேவைகள், போக்குவரத்துச் சேவைகள் என்பன அபிவிருத்தியடைந்த நாடுகளாலே மேற்கொள்ளப்படுகின்றன. வர்த்தகத்துக்கான தொடர்பாடல் சேவைகள், அவற்றுக்கான இயந்திர உபகரணங்கள், கப்பல்கள், கப்பல்களுக்கான காப்புறுதிகள் என பல வழிகளிலும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் செலுத்த வேண்டியுள்ளது. இதனால் முதனிலைப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் அந்நியச் செலாவணி வருமானத்தில் பெரும் பகுதியை கணனி, பக்ஸ் போன்ற இயந்திர உபகரணங்களுக்காகவும், கப்பல் கட்டணங்களாகவும், காப்புறுதிக் கட்டணங்களாகவும் செலுத்த வேண்டியுள்ளது. அதன் விளைவாக கிடைக்கும் அந்நியச் செலாவணியின் பெரும் பகுதி அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கே சென்று அடைவது பாரிய பிரச்சினையாக உள்ளது.

4. **அபிவிருத்தியடைந்த நாடுகள் மேற்கொள்கின்ற பாதுகாப்பு ஒழுங்குகள், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் உற்பத்திகள் அந்நாட்டுச் சந்தைகளுக்கு செல்லாது தடை செய்வதால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கைத்தொழில்கள் பாதிப்படைதல்:**

**அபிவிருத்தியடைந்த நாடுகள் இறக்குமதிப் பாதுகாப்புகளை விதிப்பதால்**

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் முதனிலைப் பொருட்களின் விலைத் தளம்பல்களால் தம்மைப் பாதுகாத்துக் கொள்க, அவற்றைப் பயன்படுத்தி முடிவுப் பொருட்களாக கைத்தொழில்கள் மூலம் மாற்றியமைத்து அவற்றை அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முற்படும் போது அபிவிருத்தி அடைந்த நாடுகள் உயர்ந்த சுங்க வரிகளை விதித்தல், கோட்டா முறையில் இறக்குமதிக்கு அனுமதி அளித்தல், இறக்குமதிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகளின். கைத்தொழில் கள் பாதிப் படைதல்

கட்டுப்பாடுகளை விதித்தல் போன்ற முறைகளைக் கடைப்பிடித்து இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துகின்றனர். இதனால் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் உற்பத்தி செய்யப்பட்ட முடிவுப் பொருட்களை சந்தைப் படுத்துவதில் இடையூறுகள் ஏற்படுகின்றன. அதனால் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் கைத்தொழிலும் கூட வளர்ச்சி யடைய முடியாதுள்ளது.

5. அபிவிருத்தியடைந்த நாடுகளின் உற்பத்திப் பொருட் களின் விலைகள் உயர்வடைதல்

அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பொருட்கள் சேவைகள் என்பவற்றின் விலைகள் அதிகரித்தல்

அபிவிருத்தியடைந்த நாடுகளின் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தொழில் பொருட்கள், மூலதனப் பொருட்கள் ஏனைய சேவைகள் என்பன உயர்வடைவதைக் காணலாம். இதனால் முதனிலைப் பொருட்களை ஏற்றுமதி செய்யப்படுவதால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பெறும் அந்நிய செலாவணி இறக்குமதிக்கு போதியதாக இல்லை. 1970 இல் பெற்றோலியத்தின் விலைகள் உயர்ந்தமையால் அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகள் சர்வதேச வியாபாரத்தில் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியது. பாதகமான வர்த்தக மீதியை எதிர் நோக்க வேண்டியேற்பட்டதும், அதனால் வெளிநாட்டுக் கடன்களைப் பெறவேண்டியும் நேர்ந்தது. இதற்கு மாறாக வெளிநாட்டுப் பொருட்கள் எவ்வித கட்டுப்பாடற்ற திறந்த பொருளாதாரக் கொள்கை அடிப் படையில் இறக்குமதி செய்ய அனுமதிக்கும் போது வெளிநாட்டுப் பொருட்களுடன் போட்டியிட முடியாத கைத்தொழில்கள் பாதிப்படைகின்றன. இவ்வாறு பல வழிகளிலும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் சர்வதேச வர்த்தக பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன.

அபிவிருத்தியடைந்த நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

1. மூலப்பொருட்களைப் பெறுவதில் சிக்கல்கள்

பொருட்களை உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான தடைகள், கடந்த காலங்களில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் இருந்து அபி விருத்தியடைந்த நாடுகள் இலகுவாக தமக்கு தேவையான மூலப் பொருட்களைப் பெற்று வந்தன. ஆனால் இன்று அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி முடிவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் கைத்தொழில்களை ஆரம்பித்துள்ளமையால் அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடைந்த நாடுகள் மூலப்பொருட்களைப் பெறுவதில் தடைகள் ஏற்பட்டுள்ளன.

## 2. முடிவுப் பொருட்களை விற்பனை செய்வதில் உள்ள பிரச்சினைகள்

முடிவுப் பொருட்களை விற்பதில் பிரச்சினைகள்

இன்று அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளதுடன் உலக சந்தையில் அவற்றைச் சந்தைப்படுத்தவும் முன் வந்துள்ளன. அதன் விளைவாக அபிவிருத்தியடைந்த நாடுகளின் பொருட்களுக்கு கேள்வி குறைவடைந்துள்ளன. அத்துடன் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் விலை குறைந்தவையாகவும் காணப்படுகின்றது. மேலும் இன்று கைத்தொழிலில் துரித முன்னேற்றம் பெற்ற நாடுகளாக சீனா, தாய்வான், தென் கொரியா, ஹொங்கொங், மலேசியா போன்ற நாடுகள் விளங்குகின்றன. அவை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் சந்தையைப் பிடித்துக் கொள்ளவும் முயற்சிக்கின்றன. இவ்வாறு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் வியாபார நடவடிக்கைகளில் எதிர்பாராத தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன.

## 3. பெற்றோலியத்தின் விலை உயர்வடைதல்

பெற்றோலியத்தின் விலை உயர்வடைதல்

பெற்றோலிய விலை அதிகரிப்பு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு மட்டுமன்றி, அபிவிருத்தி அடைந்த நாடுகளையும் குறிப்பாக உற்பத்தித் துறைகளில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பொருளாதார அமைப்பு முற்றாகக் கைத்தொழில் மயமாக்கப்பட்டிருப்பதனால் பெற்றோலியம் அவசியமான பொருளாக இருக்கின்ற போதிலும் அதிகமான அபிவிருத்தி அடைந்த நாடுகள் தமது நாட்டுக்குத் தேவையான பெற்றோலியத்தை வேறு நாடுகளில் இருந்து பெற்றுக் கொள்வதால் பெற்றோலியத்தின் விலை அதிகரிப்பு அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கே பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி அடைந்த நாடுகள் சர்வதேச வர்த்தகத்தின் போது தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்.

### 1. ஏற்றுமதியை பன்முகப்படுத்தல்

ஏற்றுமதியை பன்முகப் படுத்தல்

சர்வதேச வர்த்தகத்தில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் ஏற்றுமதி செய்யும் முதன் விளைவுப் பொருட்களுக்கு நியாயமான விலைகள் கிடைக்காமை அவை எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினையாகும். அபிவிருத்தியடைந்த நாடுகளாலும், பல்தேசிய கம்பனிகளாலும் மேற்கொள்கின்ற நடவடிக்கைகளால் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் முதல் விளைவுப் பொருட்களின் விலைகள் அடிக்கடி தளம்பல் அடைவதாலும், நிலையான விலை கிடைக்காமையாலும் அந் நாடுகளின் பொருளாதாரம் நிலையற்றதாக அமைகின்றன. இதனால் அந்நாடுகளின் வர்த்தகத்தில் பாதகமான வர்த்தக மீதிகள் ஏற்பட்டுள்ளன. செலவு மீதியால் வெளிநாட்டு ஒதுக்குகள் குறைவடைதல், கடன் வாங்கல், உதவிகளை எதிர்பார்த்தல் ஆகிய பிரச்சினைகளுக்கு ஆழாகின்றன.

சுதந்திரத்தின் பின் இலங்கையின் ஆரம்ப வருடங்களில் ஏற்றுமதி சில பொருட்களில் மாத்திரம் வரையறுக்கப்பட்டதாக அமைந்தது. தேயிலை, இறப்பர், தென்னை இதற்கு உதாரணங்களாகும். 1960 ஆம் ஆண்டில் இவற்றின். மூலம் பெற்ற ஏற்றுமதி வருமானம் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 90% ஆகும். இது 1977 இல் 74% ஆகவும் 1996 ஆம் ஆண்டளவில் மேலும் 20 சதவிதத்தால் குறைவடைந்தது.

இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பல்வேறு வகையான பொருட்களை ஏற்றுமதி செய்யும் ஒழுங்கு முறை ஒன்றினை ஆரம்பித்துள்ளன. இதன் கீழ் ஏற்றுமதியில் முதல் விளைவுப் பொருட்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தாமல் பல்வேறு வகையான பொருட்களையும் ஏற்றுமதி செய்யும் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

இலங்கையும் இவ்வாறான ஏற்றுமதியைப் பன்முகப்படுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் கறுவா, கோப்பி, கொக்கோ, சிங்கோனா, கராம்பு, ஏலக்காய், சாதிக்காய், மிளகு, பாக்கு, வெற்றிலை மரக்கறி, பழ வகை ஆகிய உற்பத்திகள் பலவற்றை ஏற்றுமதி செய்ய ஆரம்பித்துள்ளன. சுதந்திர வர்த்தக வலையங்களிலிருந்தும் பல்வேறு புதிய உற்பத்திகள் வெளிநாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு ஏற்றுமதியாகின்றன. ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் போல் இலங்கையும் ஏற்றுமதியினை பன் முகப்படுத்தலில், ஈடுபட்டதின் விளைவு இதுவாகும் அதே போன்று ஏற்றுமதி செய்யப்படும் கைத்தொழிற் பொருட்களும் பன்முகப் படுத்தலில் அடங்கும். ஏற்றுமதிப் பொருட்கள் பெரும்பாலும் ஆடை வகைகளாகவே அமைகின்றன. மொத்த கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதியில் 63 சதவீதம் ஆடை வகைகளாகவே அமைந்தன. எனவே கைத்தொழில் ஏற்றுமதிகள் மேலும் விஸ்தரிக்கப்பட வேண்டும். தீர்வை வரிச்சலுகைகள் கிடைப்பதனாலும் சப்தா உடன்படிக்கை மூலம் இலங்கைக்கு பெரும் நன்மைகள் கிட்டலாம்.

## 2. வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்கொள்ளல்

அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் போன்றே அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளும் தற்போது ஏனைய நாடுகளுடன் இணைந்து ஒத்த அமையங்களையும் வர்த்தக உடன்படிக்கை களையும் ஏற்படுத்திக் கொண்டு சர்வதேச வர்த்தகத்தில் தோன்றும் பிரச்சினைகளையும் ஏனைய பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன.

**அமையங்களையும் வர்த்தக் உடன் படிக்கைகளையும் ஏற்படுத்தல்**

அண்மைக் காலத்தில் தெற்காசிய நாடுகள் ஒன்றிணைந்து கைச்சாத்திட்ட "சப்தா" வர்த்தக உடன்படிக்கையினால் அந்நாடு களில் வர்த்தக நடவடிக்கைகளின் போது தோன்றியுள்ள பிரச்சினைகளை இயன்றளவு குறைத்துக் கொள்ள முயற்சி யெடுக்கப்பட்டது. இவ்வொப்பந்தத்தின் கீழ் பிராந்திய நாடு களிடையே பரிமாறிக்கொள்ளப்படும் பொருட்களுக்கான தீர்வை வரி தொடர்பாக ஒரு இலகுவான கொள்கையொன்றினைக் கடைப்பிடிப்பதற்கு இணங்கியிருப்பது, ஒரு முக்கியமான விடய மாகும். மேலே குறிப்பிட்டவாறு தற்போது இலங்கைக்கு பொருள் களை வழங்கும் முக்கிய நாடு இந்தியாவாக இருப்பதும் இந்தியா வில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு தீர்வைச் சலுகைகள் கிடைப்பதினாலும் "சப்தா" உடன்படிக்கை மூலம் இலங்கைக்கு பெரும் நன்மை கிட்டலாம்.

## 3. வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்ளல்

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுள் பெரும்பாலானவை சர்வதேச வர்த்தகத்தின் போது சென்மதி நிலுவைப் பிரச்சினை களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இவ்வாறான சந்தர்ப் பங்களில் அப்பிரச்சினைக்குப் பரிகாரமாக வெளிநாட்டு உதவி களைப் பெற்றுக் கொள்ள அந்நாடுகள் முனைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் வெளி நாட்டு வர்த்தகம்

இலங்கையின் சுதந்திரத்துக்கு பின் சில வருடங்களாக ஏற்றுமதி வருமானம் சில முதனிலைப் பொருட்களில் மாத்திரம் வரையறுக்கப்பட்டதாகவே அமைந்தது. தேயிலை, இறப்பர் தென்னை என்பன இதற்கு உதாரணங்களாகும். 1960 ஆம் ஆண்டில் இவற்றின் மூலம் பெற்ற ஏற்றுமதி வருமானம் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 90% சதவீதமாகும். இது 1977 ஆம் ஆண்டில் 74% சதவீதமாகவும், 1996ஆம் ஆண்டில் 54 சதவீதமாகவும் குறைவடைந்தது. இது ஏனைய நாடுகள் போல் ஏற்றுமதியைப் பன்முகப்படுத்தியதன் விளைவாக இந்நிலை ஏற்பட்டது. விவசாயப் பொருட்கள் மட்டுமல்லாது கைத் தொழிற் பொருட்கள் ஏற்றுமதியும் அதில் குறிப்பாக தைத்த ஆடைகளின் ஏற்றுமதியும், ஏற்றுமதிக் கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டதற்கு காரணமாகும்.

**இலங்கையில் வர்த்தகம்**

இலங்கை அரசாங்கமானது 1977ஆம் ஆண்டி ஆரம்பித்த திறந்த பொருளாதாரக் கொள்கையானது சர்வதேச வர்த்தக நடவடிக்கைகள் மேலும் விரிவு பெறச் செய்தது. எனினும் உள்நாட்டு தேசிய கைத்தொழில்களை பாதுகாப்பதற்கான கொள்கையாக்கத்தின் கீழ் உயர்ந்த இறக்குமதி வரி, விதித்தல், கோட்டா முறையில் இறக்குமதிக்கான உத்தரவுப் பத்திரங்களை வழங்கல் என்பனவும் கடைப் பிடிக்கப்பட்டன.

இன்று இலங்கையின் பொருட்களை கொள்வனவு செய்வதில் முக்கிய நாடாக விளங்குவது ஐக்கிய அமெரிக்க நாடுகளாகும். 40 சதவீத ஏற்றுமதி ஐக்கிய அமெரிக்காவுக்கு அனுப்பப் படுகிறது. இதில் 74 சதவீதம் தைத்த ஆடைகளாக காணப் படுகின்றது. இரண்டாவது முக்கிய இறக்குமதியாளராக ஐக்கிய இராச்சியம் விளங்குகிறது. ஏற்றுமதியில் 13 சதவீதம் ஐக்கிய இராச்சியத்தைச் சென்றடைகின்றது. ஜேர்மனி மூன்றாவது இடத்தையும், யப்பான் நான்காவது இடத்தையும் பெற்றுள்ளது. ஜேர்மனிக்கு 5 சதவீத ஏற்றுமதியும் யப்பானுக்கு 4 சதவீத் ஏற்றுமதியும் இடம் பெறுகிறது. மத்தியகிழக்கு நாடுகள், கிழக்கைரோப்பா, ருஷ்யா ஆகிய நாடுகளுக்கான ஏற்றுமதி வீழ்ச்சியடைந்துள்ளது.

இறக்குமதியைப் பொறுத்தவரையில் நுகர் பொருட்கள் இடை நிலைப் பொருட்கள் மூலதனப் பொருட்கள் என்பன இடம் பெறுகின்றன. இதில் நுகர் பொருட்களில் பொதுவான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. உணவுப் பொருட்களின் இறக்குமதி குறைவடைய மோட்டார் வாகனங்கள் மின்சார நுகர் பொருட்களின் இறக்குமதி அதிகரித்துள்ளது. எனினும் நுகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்கள் மொத்த இறக்குமதியில் 21 சதவீதமாக விளங்குகிறது. இடைத்தரப் பொருட்கள் நெசவுப் பொருட்கள், பெற்றோலியப் பொருட்கள், வைரங்கள் போன்றவையாகும். இவை மொத்த இறக்குமதியில் ஏறக்குறைய 51 சதவீதமாகும். மூலதனப் பொருட்களாக இயந்திர சாதனங்கள், உபகரணங்கள், ரக்ரர்கள் காணப்படுகின்றன. இவ்வை இறக்குமதியில் 28 சதவீதமாக அமைந்துள்ளது. இலங்கைக்கு பொருட்களை விற்கும் முதனிலையான நாடாக விளங்குகிறது. யப்பான்நாடு மோட்டார் வாகனங்கள் உதிரிப் பாகங்கள் நெசவுப் பொருட்கள் முக்கிய மானவையாகும். அடுத்தது இந்தியாவாகும். ஏனை நாடுகளாக சிங்கப்பூர், கொரியக் குடியரசு, தாய்வான், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா என்பன விளங்குகிறது.

## வெளிநாட்டு உதவி

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பெரும்பாலும் முதனிலைப் பொருட்களையே ஏற்றுமதி செய்கின்றன. உலக சந்தையில் இவற்றுக்கு குறைந்த விலையே கிடைக்கின்றது. இதனால் வெளிநாட்டு வருமானம் குறைந்த நாடுகளாகவே காணப்படுகின்றன. ஆனால் உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், மூலதனப் பொருட்கள் என்பவற்றுக்கு அதிகமான விலை கொடுத்து வெளிநாடுகளில் கொள்வனவு செய்ய வேண்டியதாக உள்ளது. இறக்குமதிச் செலவுகள் அதிகரிப் பதனாலும், ஏற்றுமதி வருமானம் குறைவடைவதாலும் பாதகமான வர்த்தக மீதிகள் தோன்றுகின்றன. அதன் விளைவாக உள்நாட்டு முதலீடுகள் குறைவடைகின்றன. அதனால் உற்பத்தி வீழ்ச்சியும் ஏற்படும். நாட்டின் சேவைகள், உற்பத்திகள், சொத்துக்கள் என்பவற்றைக் பராமரிப்பதற்கான நடைமுறைச் செலவுகள், மீண்டெழும் செலவுகளுக்காக பண ஒதுக்கீடுகள் மேற் கொள்ளப்பட்ட பின்பே புதிய முதலீட்டுக்களுக்கு நிதி ஒதுக்க முடியும். மேற் கூறப்பட்ட பாதகமான வர்த்தக நிலைமைகளால் அபிவிருத்திக்கான புதிய திட்டமிடல், அல்லது முதலீட்டுக்கு நிதி இன்மையால் வெளிநாட்டு உதவிகளை பெறவேண்டிய நிர்பந்த நிலை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் காணப்படுகின்றது. எனவே நாட்டின் பொருளாதார விருத்திக்கும், ஏனைய வாழ்க்கை நலன்களின் விருத்திக்கும் இலவசமாகவும், குறைந்த வட்டியில் பெறப்படும் கடன்கள் வெளிநாட்டு உதவிகள் எனப்படும்.

**மார்ஷல் திட்டம்**

இவ்வாறான வெளிநாட்டு உதவித் திட்ட முறை இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் ஆரம்பிக்கப்பட்டது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் பல நாடுகளின் பொருளாதார நிலைமைகள் சீர்குலைந்ததுடன், மக்களது அன்றாட வாழ்க்கைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமங்களும் தடைப்பட்டதினால் மக்கள் இன்னல்களை அநுபவித்தனர். இத்தகைய அவல நிலையில் ஐரோப்பிய நாட்டு மக்களின் இன்னல்களைப் போக்குவதற்கு அமெரிக்காவினால் ஐரோப்பாவுக்கு உதவி வழங்கும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அதுவே மார்ஷல் திட்டம் எனப்பட்டது. அத்திட்டமானது வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டதோடு, அதன் பொருத்தப் பாட்டுத் தன்மையை கண்ட உலகில் உள்ள பல நாடுகளும் அதனை முன்மாதிரியாகக் கொண்டு வேறு பல அமைப்புகளை நிறுவின. இதன் அடிப்படையில் வெளிநாட்டு உதவிகளை நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் வழங்கத் தொடங்கின.

இன்று வெளிநாட்டு உதவிகள் வழங்கும் முறை பல உள்ளன. நன்கொடை, கடன், சேவை என்பன அவையாகும்.

### நன்கொடை

நாடுகளுக்கிடையே நன்கொடைகள் பரிமாறிக் கொள்வதுடன், நிறுவனங்களும் நாடுகளுக்கு நன்கொடைகளை வழங்குகின்றன. நிதி, இயந்திர உபகரணங்கள் அல்லது பொருட்கள், கட்டிடங்கள், சேவைகள் என நன்கொடைகள் பல வகைப்படும். விவசாயம், கைத்தொழில்கள், வைத்தியம், கல்வி, மீன் பிடி ஆகிய பல்வேறு அபிவிருத்திக்காகவே நன்கொடைகள் வழங்கப்படுகின்றது. வெளிநாட்டு உதவிகளில் அளவில் குறைந்தது நன்கொடைகளாகும்.

### கடன் வகைகள்

கடன்கள் பல்வேறு தேவைக்காக, பல நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. கடன் வழங்கும் போது கடன் வழங்கும் நாடு அல்லது நிறுவனம் கடன் பெறும் நாட்டின் மீது பல்வேறு நிபந்தனைகளை முன்வைக்கும். கடன்கள் வட்டியோடு கூடிய கடன், வட்டியில்லாக் கடன்கள் என வகைப்படுத்தலாம். வட்டியில்லாக் கடன்களைப் பெறுவது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு நன்மை பயப்பதாக அமையும். அவ்வகையான கடன்கள் குறைந்தளவிலே கிடைக் கின்றன. வட்டியோடு கூடிய கடன்களை வழங்கும் போது வட்டி விகிதம், திருப்பிச் செலுத்த வேண்டிய காலம், திருப்பி வழங்கும் முறை என்பன நிபந்தனையில் இடம் பெறும். இதிலும் நீண்டகாலக்கடன்கள், குறுகிய காலக் கடன்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. சில நாடுகள் கடன்கள் வழங்கும் போது அத்தொகைக்கான பொருட்களை தமது நாட்டில் இருந்து கொள்வனவு செய்யவேண்டும் என நிபந்தனை விதிக்கின்றது. நிபந்தனையோடு கூடிய கடன்களைப் பெறுவது அதிக நன்மை பயப்பதாக காணப்படுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்கள், சேவைகள்

இதற்கும் மேலதிகமாக இயந்திர உபகரணங்கள், வாகனங்கள் என்பன வெளிநாட்டு உதவியாக வழங்கப்படுகின்றன. கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம், விவசாயம், கைத்தொழில்கள் என்பவற்றின் பயன்பாட்டுக்குரிய பல்வேறு வகைப்பட்ட இயந்திர உபகரணங்கள் வெளி நாட்டு உதவியின் மூலம் எமது நாட்டுக்கு கிடைத்துள்ளன. அத்துடன் பல்கலைக்கழகங்கள், வைத்திதிய சாலைகள், சமூக தாபனங்களுக்குரிய கட்டிடங்களும் நன் கொடையாக வெளிநாட்டு உதவியின் கீழ் பெற்றுள்ளதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். வைத்தியம், பொறியியல், விவசாயம், மீன் பிடி ஆகிய துறைகளில் ஆராய்ச்சிக்காகவும், பயிற்றுவிப்பதற் காகவும் வெளிநாட்டில் இருந்து நிபுணத்துவம் பெற்றவர்களின் சேவையும் எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

அத்துடன் அத்துறைகளில் இருந்து தெரிவு செய்யப் பட்டவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கி அந்நாடுகளில் தேவையான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதற்காக உலக நாடுகள் பலவும், பல்வேறு தாபனங்களும் முன்வந்துள்ளன.

- *1978 ஆம் ஆண்டில் இலங்கை பெற்ற வெளிநாட்டுக் கடன் 371.6 கோடி ரூபா*
- *1966 ஆம் ஆண்டில் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற் காக இருபக்க வெளிநாட்டு உதவித் திட்டம் ஆரம்பம்.*
- *1996 ஆம் ஆண்டளவில் வெளிநாட்டுக் கடன் பழு 52,117.7 கோடி ரூபா*
- *1976 ஆம் ஆண்டில் இருந்து 1996 ஆம் ஆண்டுவரை தனி மனிதன் வெளிநாட்டுக் கடன் பழு 396 ரூபாவில் இருந்து 19,648 ரூபா வரை உயர்ந்துள்ளது.*

இதுவரை தரப்பட்ட விபரங்களைக் கற்ற நீங்கள் இலங்கை போன்ற நாடுகளுக்கு வெளிநாட்டு உதவியின் முக்கியத்துவம் பற்றிய விளக்கத்தைப் பெற்றிருப்பீர்கள். இந் நாட்டில் செயற்படுத்தப்பட்ட முக்கிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் யாவும் வெளிநாட்டு உதவிகள் கொண்டே மேற்கொள்ளப்பட்டன. உதாரணமாக துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தைக் கூறலாம். இங்குள்ள பிரதான நீர்த்தேக்கங்கள், மின் உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கு உதவிய நாடுகள் பெரிய பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, சுவீடன் ஆகிய அபிவிருத்தியடைந்த நாடுகளாகும். பண்டாரநாயக்கா ஞாப கார்த்த மண்டபம் சீன நாட்டின் நன்கொடையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியடைந்த நாடுகளில் இருந்து மட்டுமன்றி இந்தியா, குவைத் போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இருந்தும் உதவிகள் கிடைத்துள்ளன.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு உதவும் நிறுவனங்கள் பல உண்டு. அவற்றில் சிலவற்றுக்கு கீழே அறிமுகம் கொடுக்கப்படுகின்றது.

## வெளிநாட்டு உதவி வழங்கும் சர்வதேச நிறுவனங்கள்

**உலக வங்கி (IBRD) 1945**

உலக வங்கி என்ற பெயரை நீங்கள் அறிந்திருப்பீர்கள். "உலக வங்கியின் ஆலோசனைப்படி" "உலக வங்கியின் உதவியுடன்" என்ற தலைப்புகளில் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ளமையை நீங்கள் வாசித்திருப்பீர்கள். இலங்கைக்கு உதவி வழங்கும் இத்தாபனத்தின் முழுப் பெயர்" சர்வதேச புனரமைபுக்கும், அபிவிருத்திக்குமான வங்கி" என்பதாகும். ஐக்கிய நாடுகளின் அமையத்துடன் ஒன்றிணைக்கப்பட்ட இத்தாபனமானது அங்கத்துவ நாடுகளின் அங்கத்துவ பணத்திலிருந்து அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு கடன் உதவிகளை வழங்கி வருகின்றது. அந்நாடுகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது அதன் நோக்கமாகும். வருமானம் தரக் கூடிய திட்டங்களுக்கு மாத்திரம் கடன் வழங்கி வருகின்றது. கடன் கொடுப்பதிலும் அதிக அக்கறை காட்டி வருகின்றது. இலங்கையின் மீன்பிடி, வனமாக்கல், நீர்பாசனம், துறைமுகம், விமான நிலையம், விவசாயம் ஆகியவற்றுக்கு அபிவிருத்தி நோக்கில் கடன் வழங்குகின்றது.

**சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (IDA) 1945**

சர்வதேச புனரமைப்புக்கும், அபிவிருத்திக்குமான வங்கியின் ஒரு அங்கமாக தோற்றுவிக்கப்படட இத்தாபனமானது. உலக வங்கியினது நிபந்தனைகளை விட தளர்த்தப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் உதவி வழங்கி வருகின்றது. ஒரு அரசாங்கத்தின் பிணையின்றி அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் உள்ள திட்டங்களுக்கு உதவி வழங்கி வருகின்றது. இத்தாபனம் அதிகமான கடன்களை விசவாயம், கிராமிய அபிவிருத்தி, சக்தி ஆகியவற்றின் வளர்ச்சிக்கு வழங்கியுள்ளது.

**ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) 1966**

1966 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வங்கி பிலிப்பைன் நாட்டின் தலைநகரான மணிலாவில் அமைந்துள்ளது. ஆசிய பசுபிக் நாடுகள், ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளையும் அங்கத்துவ நாடுகளாக கொண்ட அமையமாகும். ஆசிய, பசுபிக் நாடுகளின் அபிவிருத்திக்காக உதவி வழங்குவதே இதன் பிரதான நோக்கமாகும். அதிகமான ஆசிய நாடுகளின் சக்தி அபிவிருத்திக்காக இதன் மூலம் உதவி வழங்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் கல்வி நடவடிக்கைகள், நகராக்க அபிவிருத்தி நடவடிக்கைகள், நீர்பாசனம், சுகாதார (பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இத் தாபனம் உதவி வழங்கியுள்ளது).

**கொழும்புத் திட்டம் (Colombo plan) 1950**

தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பொருளாதார, சமூக விருத்திக்காகவும், குறிப்பாக மக்களின் வாழ்க்கைத்தர விருத்திக்காகவும் இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைமையகம் கொழும்பில் அமைந்துள்ளது. இதன் ஆரம்பத்தில் பொதுநலவாய நாடுகள் மாத்திரம் அங்கத்துவம் வகித்தன. பின் தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பொதுநலவாயத்தில் இல்லாத நாடுகளும், ஐக்கிய அமெரிக்க நாடும் தொடர்புகொண்டன. வட்டியில்லாக் கடன்கள், இயந்திர உபகரணங்கள், கோதுமை மா, நிபுணத்துவ பயிற்சி, பல்கலைக் கழகங்களுக்கான உபகரணங்கள் என்பன இத்தாபனத்தால் உதவியாக வழங்கப்பட்டன.

**ஒபெக் நிறுவனம் 1960 (Opec)**

பெற்றோலியத்தை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நாடுகள் ஒன்றிணைந்து ஏற்படுத்திக் கொண்ட நிறுவனமே "ஒபெக்" ஆகும். பெற்றோலியத்தின் விலையை நிலையாக வைத்திருப்பது இதன் நோக்கமாகும். பெற்றோலியத்தின் விலை உயர்வால் நெருக்கடிகளை எதிர்நோக்கும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு உதவி செய்வதும் இத் தாபனத்திலிருந்து எதிர்பார்கப்படுகின்றது.

**ஐக்கிய நாடுகளுடன் இணைந்த நிறுவனங்கள்**

மேற்கூறிய நிறுவனங்களை விட முன்பு தனித் தாபனங்களாக இருந்து ஐக்கிய நாடுகள் அமையத்தில் இணைந்து கொண்ட தாபனங்களும், ஐக்கிய நாடுகள் அமையத்தினால் உருவாக்கப்பட்ட பல தாபனங்களும் உதவி வழங்குவதில் ஈடுபட்டுள்ளன. உலக உணவு விவசாயத்தாபனம், யுனெஸ்கோ நிறுவனம், ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம், உலக சுகாதார தாபனம், ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தி அமையம், ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் என்பன அத்தகைய உதவி வழங்கும் ஐக்கிய நாடுகளின் நிறுவனங்களாகும். உதாரணமாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் குழந்தைகளுக்காக கல்வி, போசாக்கு, பராமரிப்பு போன்றவற்றில் உதவிகளை வழங்கி வருகின்றது. இவற்றை விட பொருளாதார வளர்சிக்கும் வியாபார வளர்ச்சிக்குமான பல நிறுவனங்கள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டு வியாபாரம் தொடர்பான சர்வதேச தாபனங்கள்

**ஐரோப்பிய பொதுச் சந்தைச் சமூகம்**

1957 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஐரோப்பிய பொதுச் சந்தையானது பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, ஒல்லாந்து, லக்ஷம்பேர்க், இத்தாலி ஆகிய நாடுகளின் அங்கத்துவத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டில் ஐக்கிய இராச்சியமும் அங்கத்துவம் பெற்றது. பின்னர் ஸ்பானியாவும் போர்த்துக்கல்லும் இணைந்து கொண்டன. இன்று இதில் இருபது நாடுகள் வரை அங்கத்துவம் வகிக்கின்றன. அங்கத்துவ நாடுகளுக்கிடையே பொதுச் சந்தை ஒன்றைக் உருவாக்குவது இதன் நோக்கமாகும். அங்கத்துவ நாடுகளுக்கிடையே தீர்வைகள் நீக்கப்பட்டு, மூலதன அசைவுகளும், தொழிலாளர்கள் அசைவுகளும் அநுமதிக்கப்பட்டு பொருளாதார ரீதியாக ஒரு நாடு போன்று இயங்கி சகல அங்கத்துவ நாடுகளின் பொருளாதார வளர்ச்சியே பின் விளைவாகும். அங்கத்துவ நாடுகள் அல்லாதவற்றுக்கு சுங்கத் தீர்வைகள், இறக்குமதிக்கட்டுப்பாடுகள் என்பவற்றை அங்கத்துவ நாடுகள் கூட்டாக தீர்மானிக்கின்றன.

**உங்டாட் (UNCTAD) 1964**

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் தாபிக்கப்பட்ட இத் தாபனம் 1964 ஆம் ஆரம்பிக்கப்பட்டது. வர்தகத்துக்கும் அபிவிருத்திக்குமான ஐக்கிய நாடுகளின் மகாநாடு என்பது இதன் முழுப் பெயராகும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் முதனிலை ஏற்றுமதிப் பொருட்களுக்கு நிலையான விலைகளைப் பெற்றுக் கொடுப்பதும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு கைத்தொழில் அபிவிருத்திகளை மேற் கொள்வதற்கான தொழில் நுட்பத்தைக் பெற்றுக் கொடுத்தலும் இவ் மகாநாடுகளின் நோக்கமாகும். இதில் 179 நாடுகள் அங்கத்துவம் பெற்றுள்ளது. ஐக்கிய நாடுகளின் அமையத்தில் உள்ள சகல அங்கத்துவ நாடுகளும் இதில் அங்கத்துவம் வகிக்கின்றது. இதன் தலைமைக் காரியாலயம் சுவிர்சர்லாந்தில் ஜெனீவா நகரில் அமைந்துள்ளது.

**சர்வதேச வர்த்தக சங்கம் (WTO)**

வர்த்தகத்துக்கும் தீர்வைக்குமான பொது ஒப்பந்தம் அல்லது கார்ட் தாபனம் இன்று சர்வதேச வர்த்தக சங்கமாக பெயர் மாற்றம் பெற்றுள்ளது. வெளி நாட்டு வர்த்தகம் தொடர்பாக காணப்படும் தீர்வைகள், இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நீக்கி சர்வதேச வர்த்கத்தினை விரிவடையச் செய்வதே இதன் நோக்கமாகும். ஐக்கிய நாடுகளின் இணைப்பு நிறுவனமாக செயல்படுகின்றது. வெளிநாட்டு வர்தகத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகள் பல் தேசியக் கொம்பனிகளை உருவாக்கிக் கொண்டு உலக வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்த முற்படுகின்றன. அதனால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பாதகமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்கு தள்ளப்படுகின்றது. முதனிலைப் பொருட்களை உற்பத்தி செய்யும் மூன்றாம் உலக நாடுகள் இந்நிலையை எதிர்கொள்ள வேண்டுமாயின் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளைக் கொண்ட பலம் வாய்ந்த வர்த்தக கூட்டு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இவ்வமையம் 1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் உலக வர்த்த சங்கம் என்று பெயர் சூட்டபட்டிருப் பதுடன் அவ் அமைப்பின் நடவடிக்கைகள் பரந்த அளவில் இதன்மூலம் செயற்படுத்தப்படுகின்றன.

சுருக்கம்

புராதன பொருளாதார அமைப்பில் சர்வதேச வர்த்த கம் ஒருசில விலையுயர்ந்த பொருட்களை அடிப்படையாகவே கொண்டு இடம் பெற்றது. எனினும் காலப்போக்கில் நாடுகாண் பயணங்கள், கைத்தொழில் புரட்சி, தொழில் நுட்ப விருத்தி, தொடர்பாடல் சாதனங்கள் போன்ற பல்வேறு காரணங்களால் சர்வதேச வர்தகம் வளர்ச்சி கண்டது.

மேலும் உலகின் நாடுகள் பலவும் இயற்கை அனர்தங்களாலும் யுத்தங்களாலும் பாதிக்கப்பட்டமையால் அவ்வாறு நிலையுடைய நாடுகளுக்கு உதவி, ஒத்துழைப்பும் வழங்கவும் நாடுகள் முற்பட்டுள்ளன. அதற்கான சர்வதேச தாபனங்களும் தோன்றியுள்ளன.

நாடுகாண் பயணங்களின் விருத்தி, கைத்தொழில் புரட்சியின் காரணமாக பொருட்களின் உற்பத்தி பன்மடங்காக பெருகியமை, தொழில் நுட்ப அறிவு பண பரிமாற்றம், கால நிலை , மண்வகைக்கு ஏற்ப உற்பத்திப் பொருட்கள் சிறப்பாக உற்பத்தி செய்ய முடிந்தமை, கைத்தொழில் பொருட்கள் சிறப்புத் தேர்ச்சி அடிப்படையில் சில பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டமை, சில நாடுகளில் குறைந்த விலைகளில் பொருட்களைக் பெறமுடிந்தமை, நுகர்வோர் தெரிவுச் சுதந்திரம் அதிகரித்தமை, சர்வ தேச வர்த்தகம் பெருகியமைக்கு காரணங்களாகும். இருபக்க வியாபாரம், பல்பக்க வியாபாரம், பண அலகுகள், வன்நாணயம் மென்நாணயம், நாணய மாற்று விகிதம், வர்த்தக மீதி, வர்த்தக விகிதம் சரவ்தேச வர்த்தகத்தின் அனுகூலங்கள் சர்வதேச வர்த்தகத்தில், அபிவிருத்தி யடைந்த, அடைந்துவரும் நாடுகள் எதிர் நோக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகள் அதற்கான தீர்வுகள், இலங்கையின் ஏற்றுமதி, இறக்குமதி கட்டமைப்பு, வெளிநாட்டு உதவிகள், உலகவங்கி, சர்வதேச அபிவிருத்திச் சங்கம், ஆசிய அபிவிருத்திச் சங்கம், கொழும்புத்திட்டம், ஒபெக் நிறுவனம் ஆகிய ஒத்துழைப்பு நிறுவனங்களும், ஐக்கிய நாடுகளின் உலக ஒத்துழைப்பு நிறுவனங்கள் ஐரோப்பிய பொதுச் சந்தை, உங்டாட், சர்வதேச வர்த்தக சங்கம் போன்ற தாபனங்கள் பற்றிய எண்ணக்கருக்கள் விளக்கப்பட்டுள்ளது.

செயற்பாடு

1. நீர் தரம் 11 இல் உள்ள மாணவன் மாணவி எனக் கருத்திற்கொண்டு உமது பாடசாலையின் வகுப்புச் சஞ்சிகைக்கு பிரசுரிப்பதற்காக "சர்வதேச ஒத்துழைப்பு" என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதுக.

2. சர்வதேச வியாபாரத்தின் நன்மை, தீமைகளைப் பட்டியல் படுத்துக.

3. பின்வரும் தலைப்புகளில் விவாதம் அல்லது கலந்துரையாடல் ஒன்றை வகுப்பறையில் நடத்துக.

   அ. அந்நிய உதவியில் தங்கியிருப்பது இலங்கை போன்ற ஒரு நாட்டுக்கு பொருத்தமானதா?

   ஆ. "எமது பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கு பன்முகப்படுத்தப்பட்ட ஏற்றுமதி பொருத்தமானதா?

4. பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி, நூல்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றைத் துணையாக கொண்டு பின்வரும் தலைப்புகளில் தகவல்களைத் திரட்டி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

   அ. வெளிநாட்டு வர்த்தகம், வெளிநாட்டு உதவிகள், வெளிநாட்டு வர்த்தகத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள்.

   ஆ. வெளிநாட்டு நாணய வகைகளும், தற்கால நாணய மாற்றுப் பெறுமதியும்.

   இ. இலங்கைக்கு கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளும் அவற்றை வழங்கும் நாடுகளும் நிறுவனங்களும்.

   ஈ. வர்த்தக மீதி, இரு பக்க வியாபாரம், பல்பக்க வியாபாரம், வர்த்தக விகிதம், ஏற்றுமதியை பன்முகப்படுத்தல் விலைத் தளம்பல்கள்; பணவீக்கம், வறுமை எனப்படும் நச்சுச் சக்கரம்.



3. S. P. C 000405

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இலங்கை போன்றதொரு நாட்டிற்கு வெளிநாட்டு உதவி ஏன் அவசியம்? என்ற தலைப்பில் அவுஸ்திரேலிய நாட்டு நண்பன் சுமித்துக்கு கடிதம் ஒன்று எழுதுக.

6. இலங்கை போன்ற ஒரு நாட்டிற்கு சொந்த உழைப்பை உயர்த்துவதற்கு முன்வைக்கக் கூடிய கருத்துக்களைக் கொண்ட ஒரு கடிதத்தைப் பத்திரிகைக்கு எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச அமைப்புகள்

உதவி

சமூகத்தில் வாழும் மக்களாகிய நாங்கள் பிறரின் உதவி இன்றி எமது செயற்பாடுகளை வெற்றிகரமாக செய்ய முடியாது என்பதை நீங்கள் அறிவீர்கள். இவ்வாறே சம கால உலக சமூகத்திலும் ஒரு நாடு மற்றொரு நாட்டின் உதவியில் தங்கி யிருப்பது தவிர்க்க முடியாதுள்ளது.

நாடுகள் சில சேர்ந்தோ அல்லது பொதுத் தேவைகளின் அடிப்படையிலோ சர்வதேச அமைப்புக்கள் தோற்றம் பெறுகின் றன. உலகத்துக்கு பொதுவான அரசியல், பொருளாதார, சமூக கலாச்சார அம்சங்கள் பல காணப்படுகின்றன. இங்கு வலப்பக்கத்தில் தரப்பட்டுள்ள படத்தில் அவை காட்டப் பட்டுள்ளன. அதனை அவதானியுங்கள்.

உலகில் பல்வேறு சர்வதேச தாபனங்கள் காணப்படுகின்றன. அவ் வகையான அமைப்புகளில் இருந்து எமது நாடு தனது சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான உதவிகளைப் பெற்றுக் கொள்கின்றது. உங்கள் பாடசாலையில் உள்ள கல்வி தொடர்பான பிரச்சினைகளுக்கு யுனெஸ்கோ, யுனிசெப் ஆகிய நிறுவனங்கள் உதவி செய்து வருகின்றன. குழந்தைகளின் சுகாதாரம், தாய், சேய் போசாக்கு போன்ற தேவைகளுக்கு உலக அமைப்புகள் பல உதவுவதை நீங்கள் அறிவீர்கள். சில வலயங்களைச் சார்ந்த நாடுகள் தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு கூட்டாக இயங்குகின்றன. எமது நாடும் அதனது அயல் நாடுகள் சிலவும் ஒன்றாகச் சேர்ந்து பிராந்திய ஒத்துழைப்புடன் செயற்படுவதை, அடுத்து நாம் நோக்குவோம்.

## சார்க் அமைப்பு


பிராந்திய அமைப்பு

இலங்கையும் அதன் அயலில் உள்ள தென் ஆசிய நாடுகளும் சேர்ந்து சார்க் அமைப்பை உருவாக்கி உள்ளன. (தென் ஆசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்புக்கான கூட்டமைப்பு) இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மாலை தீவு ஆகிய ஏழு நாடுகள் இக் கூட்டமைப்பில் சேர்ந்து இயங்குகின்றன. 2.1 படத்தில் அந்நாடுகளை அறிந்து கொள்க. உலகின் பல்வகைப்பட்ட சர்வதேச அமைப்புகள் தமது அடையாளத்தை இலச்சினைகள் மூலம் வெளிப்படுத்துவதை நீங்கள் அறிந்தீருப்பீர்கள். அவ்வகையில் சார்க் அமைப்பின் இலச்சினையை படம் 2.2 வெளிக் காட்டுகின்றது. இங்கு தரப்பட்டுள்ள படத்தில் அந் நாடுகளை அடையாளம் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுங்கள். சார்க் நாடுகளின் இலச்சினை இங்கு காட்டப்பட்டுள்ளது. அவ்வாறு உலகத்தில் உள்ள ஒவ்வொரு நாடும் தனது நாட்டைப் பிரதிபலிக்கும் விதத்தில் தேசியக் கொடிகளைப் பயன்படுத்திக்கொள்கின்றன. சார்க் நாடுகளின் தேசியக் கொடிகளை 2.3 படத்தில் நீங்கள் அவதானிக்கலாம்.




படம் 2.1
சார்க் நாடுகள்




படம் 2.2
சார்க் அமைப்பின் இலட்சினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிராந்திய நாடுகளின் தேசியக் கொடிகள்**




படம் 2.3

**சார்க் அமைப்பின் குறிக்கோள்கள்**


- தெற்காசிய நாடுகளில் வாழும் மக்களின் வாழ்க்கையை விருத்தி செய்தல், அன்றாட வாழ்க்கை வசதிகளை முன்னேற்றுதல்.
- பொருளாதார துரித வளர்ச்சி காணல், சமூக முன்னேற்றத்தில் தனது பிராந்திய கலாசாரத்தைப் பாதுகாத்தல்.
- தெற்காசிய நாடுகள் தத்தமது பிராந்திய பலத்தை, தற்காப்பினை, கூட்டாக சேர்ந்து பாதுகாப்பைப் பலப்படுத்தல்.
- தத்தமது நாடுகளில் ஏற்படும் பிரச்சினைகளைப் பகிர்ந்து ஒருவருக்கு ஒருவர் நம்பிக்கையுடன் விளங்கி முடிவு காணல்.
- விஞ்ஞானம், தொழில்நுட்பம், கலை, கலாசாரம், தொழில், பொருளாதாரம், என்பவற்றினை கூட்டாக இணைத்து ஒருவருக்கு ஒருவர் உதவி அபிவிருத்தியடைதல்.
- மற்றைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடன் ஒத்துழைத்து, தமது இயற்கை வளங்களைப் பகிர்ந்து அபிவிருத்தியடைய முயற்சித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சர்வதேச பொது நியாயத்தீர்வுகளில் கூட்டாக முடிவெடுத்து அதற்கு ஆதரவு அளித்தல் அல்லது எதிர்த்தல்.
- சர்வதேச பொதுத் தாபனங்களிலும், பிராந்திய தாபனங்களிலும் ஒன்றுபட்ட கருத்தைக் வெளிப்படுத்தல்.

இவ் அமைப்பு 1985ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சார்க் அமைப்பின் 10 ஆவது மகாநாடு 1998 ஆம் ஆண்டு யூலை மாதம் கொழும்பில் நடைபெற்றது. இதில் பங்கேற்றுக் கொண்ட நாட்டுத் தலைவர்களின் படம் 2.4 இல் கொடுக்கப்பட்டுள்ளது. அதை அவதானியுங்கள்.



படம் 2.4

சார்க் அமைப்பின் அரச தலைவர்களின் புகைப்படம் (1998 ஜுலை கொழும்பு)

**சார்க் அமைப்பு தத்தமது நாடுகளில் வறுமையை ஒளிப்பதற்காக அடையாளம் கண்ட செயற்றிட்டங்கள்**

- விவசாய அபிவிருத்தி
- கல்வி, கலாசார விளையாட்டு, அபிவிருத்தி
- சுகாதாரம், சனத்தொகை, குழந்தை நலன் பேணல்
- உல்லாசப் பயணத் துறை
- சப்தா (தெற்காசிய நாடுகளின் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் SAPTHA)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தொடர்பாடல் அபிவிருத்தி
- சுற்றாடல் அபிவிருத்தி
- சப்ரா (தென் ஆசிய நாடுகளின் சுதந்திர வர்த்தக விருத்திக்கான ஒப்பந்தம்)
- போதைவஸ்த்து பாவனை, கடத்தல் ஆகியவற்றைத் தடுத்தல்
- கிராமிய அபிவிருத்திச் செயற்பாடுகள்
- போக்குவரத்துத்துறை அபிவிருத்தி
- அங்கத்துவ நாடுகள் இடருறும் வேளையில் உணவு அளிப்பதற்கான அமைப்பு
- தொழில்நுட்ப அறிவைப் பரிமாறிக் கொள்ளல்

## கொழும்புத் திட்டம்

**கொழும்புத் திட்ட ஆரம்பம்**

கொழும்புத் திட்டமானது தெற்காசிய, தென் கிழக்காசிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்துக்கான ஒத்துழைப்புத் திட்டம் என அறிமுகப்படுத்தப்படுகின்றது. இத் திட்டமான 1951 ஆம் ஆண்டில் இருந்து நடை முறைப்படுத்தப்படுகின்றது. 1950 ஆம் ஆண்டில் சனவரி மாதத்தில் கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய வெளிவிவகார அமைச்சர்கள் மகாநாட்டில் இத் திட்டம் முன்மொழியப்பட்டது: இம் மகாநாட்டினை இலங்கையின் சார்பில் கௌரவ நீதியமைச்சராக இருந்த ஜே. ஆர். ஜெயவர்தனாவும், அவுஸ்திரேலியப் பிரதிநிதி சேர் பேர்சி ஸ்பென்சர் அவர்களும் தலைமை தாங்கி வழிநடத்தினர் படம் 2.5 இல் கொழும்புத் திட்டத்திற்கான இலச்சினை காட்டப்பட்டுள்ளது.




படம் 2.5
கொழும்புத் திட்ட அமையத்தின் இலட்சினை

**வளர்ச்சி**

ஆரம்பிக்கப்பட்ட போது ஏழு நாடுகள் மட்டும் பங்கேற்றன பின்னர் இவ் அமைப்பில் 27 நாடுகள் பங்கேற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொழும்புத் திட்டத்தில் இடம் பெறும் நாடுகள் | |
|---|---|
| இலங்கை | நேபாளம் |
| பெரிய பிரித்தானியா | தாய்லாந்து |
| நியூசிலாந்து | பூட்டான் |
| லாவோஸ் | பங்களாதேஷ் |
| மியன்மார் | கொரியா |
| பிலிப்பைன்ஸ் | ஆப்கானிஸ்த்தான் |
| சிங்கப்பூர் | இந்தியா |
| ஈரான் | கம்பூச்சியா |
| பப்புவா நியூகினி | வியட்நாம் |
| அவுஸ்திரேலியா | இந்தோனேசியா |
| கனடா | மலேசியா |
| பாகிஸ்தான் | மாலை தீவு |
| ஐக்கிய அமெரிக்க நாடுகள் | பிஜித் தீவுகள் |

இவ் அமைப்பினது முக்கிய நோக்கம் அங்கத்துவ நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு தேவையான மூலதன உதவியை வழங்குவதாகும். இவ்உதவிகள் உறுப்பு நாடுகளில் இருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றது. விவசாயம், செய்திப் பரிமாற்றம், சக்தி, கல்வி, சுகாதாரம் போன்ற சமூகப் பொருளாதார அபிவிருத்திக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன. இவற்றுக்குத் தேவையான நிபுணத்துவ சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல், பயிற்சி பெறுவதற்கான புலமைப் பரிசில்களை வழங்குதல். ஆய்வுக்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல் ஆகியன மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் தாய்லாந்து, கொரியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளும் உதவி வழங்க முன்வந்துள்ளன. பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகள் மாணவர்களுக்கு தொழில் நுட்பம் சார்ந்த புலமைப் பரிசில்களை வழங்கி வருகின்றன. மலேசியாவைச் சார்ந்த மாணவர்களுக்கு அவுஸ்திரேலியா அதிக அளவில் புலமைப் பரிசில்களை வழங்கியுள்ளது.

கொழும்புத் திட்டத்தின் கீழ் அபிவிருத்திக்காக வளர்ச்சி யடைந்த நாடுகள் வழங்கிய சேவைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| உதவி வழங்கிய நாடுகள் | உதவி பெற்ற நாடுகள் | உதவிகள் |
|---|---|---|
| அவுஸ்திரேலியா | பங்களாதேஷ் | குழாய்க் கிணறுகள் அமைத்தல் |
| பெரிய பிரித்தானியா | நேபாளம் | வனப்பாதுகாப்புத் திட்டம் |
| நியூசீலாந்து | பிஜித் தீவுகள் | மண் ஆராய்ச்சித் திட்டம் |
| கனடா | இலங்கை | புகையிரத இயந்திரவியல் |

இலங்கையில் பொருளாதார சமூக அபிவிருத்திக்காக இயந்திரங்கள், வாகனங்கள், புகையிரத இயந்திரங்கள் விவசாய உபகரணங்கள், மீன் பிடி வள்ளங்கள், கல்வி சார் நடவடிக்கைகளுக்கான உபகரணங்களுடன், தொழில்நுட்பவியலாளருக்குரிய விசேட பயிற்சிகளும், மாணவர்களுக்கான புலமைப் பரிசில்களும் வழங்கப்படுகின்றன. உறுப்பு நாடுகளில் போதை வஸ்த்துகளுக்கு எதிராக செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தலும், அதனை நிர்வகித்தலும், அதனுடன் தொடர்புடைய அம்சங்களில் பயிற்சி வழங்கலும், தனியார் முயற்சிகளுக்கு உதவி அளித்தலும், தெற்கு நாடுகளான அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் தொழில் நுட்பத் செயற்றிட்டங்களுக்கும் உதவி அளித்தலும் கொழும்புத் திட்டத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## பொதுநலவாய அமைப்பு

சூரியன் அஸ்தமிக்காத பரந்த குடியேற்றங்களைக் பிரித்தானியா கொண்டிருந்ததை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இரண்டாம் உலக யுத்தம் வரை உலகில் எல்லாக் கண்டங்களிலும் பாரிய குடியேற்றங்களைக் கொண்டிருந்தது என்பது இதன் கருத்தாகும்.

**பொது நலவாய நாடுகளின் ஆரம்பம்**

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் குடியேற்ற நாடுகளில் சுதந்திரம் பற்றிய கோரிக்கைகள் எழுந்தன. இதனால் பேரரசுக் கொள்கையானது நலிவுறத் தொடங்கியது. ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் பல நாடுகள் சுதந்திரத்தைப் பிரித்தானியாவிடம் இருந்து பெற்றுக் கொண்டன. இத்தகைய சுதந்திரம் பெற்ற நாடுகளுக்கிடையில் கூட்டுறவை வலுப்படுத்த பிரித்தானிய பொதுநலவாயம் என்றபொது அமைப்பு உருவாக்கப்பட்டது. காலம் செல்ல பிரித்தானிய பொதுநலவாயத்தில் ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் தொகை அதிகரித்ததினால் இவ் அமைப்பு பொது நலவாயம் எனப் பெயர் மாற்றப்பட்டது. இவ் பொது நலவாயத்துக்குரிய படம் 2.7 இல் காட்டப்பட்டுள்ளது. அதனைக் கற்று அதன் நாடுகளை அறிந்து கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 2.6
பொதுநலவாய அமைப்பின் அரச தலைவர்கள்


குறிக்கோள்கள்

- அங்கத்துவ நாடுகளுக்கிடையில் அரசியல், பொருளாதார, கலாசார துறைகளில் பரஸ்பர நல்லுறவை விருத்தி செய்து கொள்ளல்.
- தொழில் நுட்பங்களைப் பரிமாறிக் கொள்ளல்
- புலமைப்பரிசில்களை வழங்கி, அறிவுப்பரிமாற்றத்தை ஏற்படுத்தல்
- அங்கத்துவ நாடுகளுக்கிடையில் வர்த்தக தொடர்புகளை பேணுதல்

பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான தொடர்புகள் பல்வேறு வழிகளில் இடம் பெறுகின்றன. வர்தகம், நிதி, முதலீடுகள், சனத்தொகை இடப்பெயர்வுகள், நீதித்துறை, பொதுக்கல்வி, விளையாட்டுகள் என்பவற்றால் அங்கத்துவ நாடுகளுக்கிடையில் தொடர்புகள் ஏற்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம் 2.7

பொதுநலவாய நாடுகளின் அமையத்தில் அங்கத்துவ நாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுநலவாய அமைப்பினால் இலங்கைக்கு கிடைக்கும் உதவிகள்

- நீர் மின்சக்தியைப் பெறுவதற்கான உதவிகள்
- வனவள அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவிகள்
- கைத்தொழில் விருத்திக்கான தொழில் நுட்ப உதவிகள்
- மாணவர்கள் புலமைப் பரிசில்கள் ஊடாக தொடர்புகளைப் பெருக்கிக் கொள்ளல்
- வர்த்தகம் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கான உதவிகளைப் பெற்றுக் கொள்ளல்
- பல்கலைக்கழகங்களின் விருத்திக்கான உதவிகளைப் பெற்றுக் கொள்ளல்

## ஐக்கிய நாடுகள் சபை

**ஐக்கிய நாடுகளின் தோற்றத் துக்கான பின்னணி**


பல இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்து, எண்ணற்ற சிறுவர்கள் அங்கவீனராகி, பல கோடி சொத்துக்கள் அழிக்கப்பட்ட பின்புதான் இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இத்தகையதொரு கொடிய யுத்தம் இனிமேல் ஏற்படக் கூடாது என்ற எண்ணம் கொண்ட சனநாயக வாதிகளின் கருத்தில் இந் நிறுவனத்தின் தோற்றம் பற்றிய எண்ணக்கரு பிறந்தது.

இவ் அமைப்பு அமெரிக்க ஐக்கிய குடியரசின் சனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ற் பிரித்தானியப் பிரதமர் வின்சன்ற் சேர்ச்சில், சோவியற் ருஷ்யாவின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் ஆகியோரின் ஆலோசனையில் 1945 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் சன்பிரன்சிஸ்கோ நகரில் கூட்டப்பட்ட மகா நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதில் 50 நாடுகள் அங்கம் வகித்தன. 1945 ஆம் ஆண்டு யூன் 26 ஆம் திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட நாடுகள் கையொப்பம் இட்டதின் மூலம் ஐக்கிய நாடுகள் சாசனம் அங்கீகரிக்கப்பட்டதோடு அதனை அங்கீகரித்த முதல் 50 நாடுகளாகவும் விளங்குகின்றன.

உலகில் உள்ள பெரும்பாலான நாடுகள் அங்கம் வகிக்கும் இத் தாபனம் ஐக்கிய நாடுகளின் அமையம் என அறிமுகப்படுத்தப்படுகின்றது. ஆரம்ப காலத்தில் இருந்த 50 அங்கத்துவ நாடுகளின் தொகை இரண்டு மடங்காக அதிகரித்து பின்பு 2000 ஆம் ஆண்டில் 188 நாடுகளாக அதிகரித்தது. படம் 2.8 னைப் கற்பதன் மூலம் இவ் அமைப்பின் படிமுறை வளர்ச்சியை விளங்கிக் கொள்வீர்கள். படம் 2.9 இல் ஐக்கிய நாடுகள் அமையத்தின் இலச்சினையை அடையாளம் காண்பீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம் 2.8



படம் 2.9

ஐ.நா.தாபன இலட்சினை

**ஐக்கிய நாடுகள் அமையம்**

சீனா, பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, ருஷ்யா ஆகிய 5 நாடுகள் அமையத்தின் கொள்கையைக் ஏற்றுக் கொண்டு கையொப்பம் இட்ட தினமான ஒக்டோபர் 24 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் அமையத்தின் தினமாக உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்டு கொண்டாடப்படுகிறது.



படம் 2.10

இலங்கையில் ஐ. நாடுகள் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐக்கிய நாடுகள் அமைபத்தின் நோக்கங்கள்

**முக்கிய நோக்கங்கள்**

1. சர்வதேச சமாதானத்தையும், பாதுகாப்பையும் பேணுதல்.
2. அடிப்படை மனித உரிமைகளையும், சுய கௌரவத்தையும் அடிப்படையாக கொண்டு நட்புறவை நாடுகளுக்கிடையே விருத்தி செய்தல்.
3. சர்வதேச பொருளாதார, சமூக கலாசார, மனித தொடர்பான பிரச்சினைகளை தீர்க்க உதவுதோடு மனித உரிமைகளையும், அடிப்படை உரிமைகளையும் உறுதிப் படுத்தவும் உதவுதல்
4. மேற்கூறிய பொதுக் குறிக்கோள்களை அடைவதற்குரிய சர்வதேச நிலையமாகச் செயற்படுதல்


## ஐக்கிய நாடுகள் அமைபத்தின் அமைப்பு

**அங்கத்துவம்**

**மொழி**

**உறுப்புகள்**

ஐக்கிய நாடுகள் அமைபத்தின் கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டு, அதன் செயற்பாட்டு இயக்கத்தில் பங்களிப்பு செய்து கொண்டும், உலக சமாதானத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் நாடுகள் அனைத்தும் அதில் அங்கத்துவம் வகிக்கும் உரிமை உண்டு.எந்த நாடும் பாதுகாப்புச் சபையின் சிபார்சுக்கு இணங்க பொதுச் சபையூடாக அங்கத்துவத்தை பெறமுடியும். சீனம், ஆங்கிலம், பிரான்சு, ருஷ்ய, ஸ்பாணியா, அரபு ஆகிய மொழிகள் ஐக்கிய நாடுகள் அமைபத்தின் உத்தியோக ரீதியான மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் சபை ஆறு உறுப்புக்களைக் கொண்டதாகும். அவற்றை படம் 2.11 இனைக் கற்றுக்கொள்வதால் அறிந்து கொள்ள முடியும்.




படம் 2.11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1. பொதுச் சபை

எல்லா நாடுகளும் இதில் அங்கம் வகிக்கின்றன. பிரதான கருத்துப் பரிமாற்றம் இச் சபையிலேயே இடம் பெறும். ஒரு நாட்டுக்கு ஒரு வாக்குரிமை மட்டுமே உண்டு.

### செயற்பாடுகளும் அதிகாரங்களும்

- ஆயுதங்களைக் களைதல், ஆயுதங்களை கட்டுப்படுத்தல் தொடர்பான தத்துவங்கள் உட்பட சர்வதேச அமைதி, பாதுகாப்பு என்பவற்றைப் பராபரிப்பதற்காக ஒத்துழைப்பு வழங்கும் தத்துவத்தின் அடிப்படையில் விதப்புரைகளை வழங்க் ஆலோசித்தல்.
- பாதுகாப்புச் சபையிடம் இருந்தும் ஏனைய ஐக்கிய நாடுகளின் அமைப்புகளிலிருந்தும் அறிக்கைகளைப் பெற்று அவற்றின் மீது ஆலோசித்தலும்.
- ஐக்கிய நாடுகள் அமையத்தின் வரவு செலவுத் திட்டத்தை அங்கீகரித்தலும், அதனைச் செலுத்துவதற்கு அங்கத்துவ நாடுகளுக்கிடையில் பகிர்ந்தளித்தலும்.
- பாதுகாப்புச் சபையின் சிபார்சுப்படி செயலாளர் நாயகத்தை தெரிந்தெடுத்தல்.

வருடாந்த பொதுச் சபைக் கூட்டமானது ஒவ்வொரு வருடமும் செப்ரம்பர் மாதம் மூன்றாவது வியாழக்கிழமையில் ஆரம்பித்து டிசம்பர் மாதம் நடுப்பபகுதி வரை செல்லும். சர்வதேச அடிப்படையில் இடம் பெறும் முக்கிய விடயங்கள் தொடர்பாக அங்கத்துவ நாடுகளுக்கிடையே கலந்துரையாடல்கள் இடம் பெறும். பொதுச் சபை மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கு ஏற்பவே வருடம் முழுவதும் அமையம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாக அமையும், பிரதான குழுக்கள் ஏழும், வேறு விசேடமாக அமைக்கப்பட்ட குழுக்களும் செயல்பட்டு வருகின்றன.

### 2. பாதுகாப்புச் சபை

சர்வதேச சமாதானத்தையும், பாதுகாப்பையும் பேணும் முக்கிய பொறுப்பு பாதுகாப்புச் சபையிடம் வழங்கப்பட்டுள்ளது. சீனா, ருஷ்யா, பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகிய ஐந்து நாடுகளும் நிரதந்தர அங்கத்துவ நாடுகளாகும். இது தவிர இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பொதுச் சபையினால் 10 நாடுகள் பாதுகாப்புச் சபைக்கு தெரிவு செய்யப்படுகின்றன.

எனவே பாதுகாப்புச் சபையின் மொத்த அங்கத்தவர்கள் 15 நாடுகளாகும். அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குகளே உண்டு. தீர்மானம் மேற்கொள்ளப்படும் போது எல்லா நிரந்தர அங்கத்துவ நாடுகளும் உட்பட ஆகக் குறைந்தது 9 நாடுகள் ஆதரவாக வாக்களிக்க வேண்டும்.

**இரத்துச் செய்யும் அதிகாரம்**

எந்தத் தீர்மானமும் நிரந்தர அங்கத்துவ நாடு விரும்பினால் தனது இரத்ததிகாரத்தைப் பயன்படுத்தலாம். அவ்வாறு மேற்கொள்வதால் தீர்மானம் நிராகரிக்கப்பட்டதாக கருதப்படும்.

### செயற்பாடும் அதிகாரமும்

- ஐக்கிய நாடுகளின் கொள்கைக்கும், நோக்கத்திற்கும் ஏற்ப சர்வதேச் பாதுகாப்பையும், சமாதானத்தையும் பேணுவதாகும்.
- சர்வதேச பிரச்சினைகளுக்கான எந்தவொரு விடயம் தொடர்பாக காரணகாரியங்களை பகுத்து ஆராய்தல்
- அவ் வகையான பிரச்சினைகளைத் தீர்க்கும் வழி வகைகளைச் சிபார்சு செய்தல்.
- ஆக்கிரமிப்பாளருக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- ஆயுதங்களை நிர்வகித்தல் தொடர்பான ஒழுங்கு முறையினை திட்டமிடல்.

**அமைதிக்கும் பாதுகாப்புக் குமான நடவடிக்கை கள்**

சர்வதேச சமாதானத்துக்கும் பாதுகாப்புக்கும் பங்கம் விளைவிக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றை சமாதானமாக தீர்க்கும் வழி வகைகளை சிபார்சு செய்யலாம், கண்டனம் தெரிவிக்கலாம், அல்லது பொருளாதாரத் தடைகளை மேற்கொள்ளலாம் அல்லது அமைதி காக்கும் படைகளை அனுப்பி சமாதானத்தை ஏற்படுத்தலாம் அல்லது இறுதியாக படைகளை அனுப்பித் தீர்க்கமான ஒரு முடிவுக்கு கொண்டு வரலாம்.

### 3. பொருளாதார சமூக சபை

**சமூக பொருளா தார சபை**

- ஐக்கிய நாடுகளின் அமையத்தில் ஒன்றிணைந்த அமைப்புகளில் ஒன்றாக சமூக பொருளாதார சபை மிக முக்கியமான உறுப்பாகும்.
- இச் சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 54 ஆகும்.
- மேற்படி உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் அதாவது 18 நாடுகள் பதவி விலக அதே தொகையினர் பொதுச் சபையினால் ஆண்டு தோறும் நியமிக்கப்படுவர். ஒவ்வொரு உறுப்பு நாடுகளின் பதவிக்காலம் மூன்று வருடங்களாகும். ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்கே உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளும் அதிகாரங்களும்

- சர்வதேச ஒத்துழைப்புடன் மிக முக்கியமான பொருளாதார, சமூக விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடல்
- மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக முக்கிய செயற் பாடுகளில் ஈடுபடல்
- அதன் அதிகாரத்துக்குட்பட்ட விடயங்களில் சர்வதேச மகாநாடுகளைக் கூட்டி பொதுச்சபைக்கு சமர்ப்பிப்பதற்காக அறிக்கை தயாரித்தல்
- விசேட தாபனங்களுடன் பேசி ஒப்பந்தங்களை மேற் கொள்வதும், அவற்றுக்கும் ஐக்கிய நாடுகளுக்கும் இடையில் உள்ள தொடர்புகளை நிர்ணயிப்பதும்
- சபையானது மேற்கொள்ளும் விடங்கள் பற்றி அரசு சார்பற்ற நிறுவனங்களோடு ஆலோசனை செய்தல்

4. நம்பிக்கைப் பொறுப்புச் சபை

நம்பிக்கைப் பொறுப்புச் சபை

நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் கீழ் நம்பிக்கைப் பொறுப்புப் பிரதேசங்களின் நிர்வாகத்தைக் கவனிப்பதற்காக ஏற்படுத்தப் பட்டதாகும். இப் பிரதேச மக்களின் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது இதன் கடமையாகும். காலக்கிரமத்தில் இந் நாடுகளை பூரண சுதந்திரமுடைய நாடுகளாக பிரகடனப் படுத்துவது இதன் நோக்கமாகும். ஆரம்பத்தில் பதினொரு பிரதேசங்கள் நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் கீழ் இருந்தன. இறுதியாக 1994 ஆம் ஆண்டில் ஐக்கிய இராச்சியத்தின் கீழ் இருந்த பாலுத் தீவு சுதந்திரம் அடைந்து ஐக்கிய நாடுகள் சபையின் 185 வது அங்கத்துவ நாடாக மாறியது. இப் பிரதேசங்கள் சுதந்திர நாடுகளாக மாறும் பொழுது நம்பிக்கைப் பொறுப்புப் பிரதேசங்களும் குறைவடைந்து செல்கின்றன.

ஏற்றுக்கொள் ளப்பட்ட பிரதேசங்கள், பாலுத்தீவு

செயற்பாடுகளும் அதிகாரங்களும்

- பொறுப்பாக்கப்பட்ட பிரதேச மக்களின் அரசியல், பொருளா தார, சமூக, கல்வி விருத்தியினை ஏற்படுத்தல்.
- பொறுப்பாக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரித்தல்.
- பிரதேசங்களைப் பொறுப்பேற்ற நாடுகளுடன் ஆலோசனை மேற்கொள்ளல்.
- பொறுப்பேற்கப்பட்ட பிரதேசங்களுக்கு விசேட குழுக்கள் செல்லல்.



4. S. P. C 000405

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. சர்வதேச நீதி மன்றம்

சர்வதேச நீதிமன்றம்

- ஐக்கிய நாடுகள் தொடர்பான முக்கிய நீதித்துறை நிறுவனம் இதுவாகும்.
- அங்கத்துவ நாடுகள் சர்வதேச பிணக்குகளை சமாதானமாக தீர்த்துக் கொள்ள இதன் முன் தமது அறிக்கைகளை சமர்ப்பிப்பர்.
- பாதுகாப்புச் சபை குறித்த விடயங்கள் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணிக்கலாம்
- பாதுகாப்புச் சபைக்கும், பொதுச் சபைக்கும் நீதி தொடர்பான ஆலோசனைகளை வழங்கலாம்.

### நீதி அதிகாரம்

அங்கத்துவ நாடுகள் சர்வதேச விவகாரம் தொடர்பாக பிரச்சினைகளை முன் வைக்கும் போது அதனை விசாரிக்கும் உரிமை உண்டு.

முக்கிய விடயங்களில் பிரச்சினைக்கு உட்பட்ட இரு நாடுகளும் நீதிமன்றத்தின் தீர்ப்பினை ஏற்றுக் கொள்வதாக ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை மேற்கொள்ளுமாறு வற்புறுத்த உரிமை உண்டு.

நீதிமன்ற செயற்பாடுகள் நெதர்லாந்து நாட்டின் ஹேக் நகரில் இடம் பெறும்

## 6. செயலகம்

செயலகம்

- ஐக்கிய நாடுகளின் முக்கிய நிர்வாக நடவடிக்கைகள் இதன் மூலம் நடைபெறுகின்றது.
- செயலகத்தின் முக்கிய நிர்வாக அதிகாரி, செயலாளர் நாயகமாகும். இவர் பாதுகாப்புச் சபையின் விதந்துரையின் படி பொதுச் சபையால் நியமிக்கப்படுவார். அவரது பதவிக் காலம் 5 வருடங்களாகும்.
- செயலாளர் நாயகம் ஐக்கிய நாடுகளின் சாசனங்களுக்கு அமைவாக அவற்றைச் செயற்படுத்தும் பிரதான நிர்வாக அதிகாரியாகும்.

செயலாளர் நாயகம்

- அதி பொறுப்புள்ள அதிகாரியாகவும், இராஜதந்திரியாகவும், செயற்பாட்டாளராகவும், ஆலோசகராகவும், புதிய கருத்துக்களின் ஊற்றாகவும் விளங்குகின்றார்.
- உலக அமைதி, பாதுகாப்பு ஆகியவற்றுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் போது அதனைக் பாதுகாப்புச் சபையின் கவனத்திற்க்கு உடனடியாக கொண்டு வருபவரும், தேவையான ஆலோசனைகளை வழங்குபராகவும் அவர் செயற்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● சர்வதேச சமூகத்தில் அங்கத்துவ நாடுகளுக்காக அரச மட்டத்தில் செயற்படும் சேவையாளராகவும் விளங்குகின்றார்.

## ஐக்கியநாடுகள் அமையத்தின் இணைத் தாபனங்கள்

● **ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான கலாசார நிறுவனம் (யுனெஸ்கோ)**

யுனெஸ்கோ நிறுவனம் பற்றி பின்வரும் விடயங்களைக் கற்றுக் கொள்ளுங்கள்

யுனெஸ்கோ

| ஆரம்பம் | நோக்கங்கள் |
|---|---|
| ● யுனெஸ்கோ என சுருக்கமாக குறிக்கப்படும் அமைப்பு 1946 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.<br>● அதனுடைய ஆரம்பத்தில் 20 நாடுகள் அங்கத்துவம் வகித்தன. தற்போது 182 நாடுகள் உண்டு. | ● யுத்தம், சமாதானம் என்பன மனித உள்ளத்திலேயே தோன்றுகின்றது. உள்ளத்தில் அமைதி நிலை நாட்டப்பட்டால் அமைதி நிலை நாட்டப்படும் என்ற கருத்துடன் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமாகும்.<br>● சர்வதேச மட்டத்தில் உள அமைதியை உருவாக்கல்<br>● அங்கத்துவ நாடுகளின் கல்வி, சுகாதாரம், கலாசாரம், மானிடவியல் தொடர்பான விருத்தியை ஏற்படுத்தல் |

படம் 2.12
யுனெஸ்கோவின் இலட்சினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் யுனெஸ்கோ நிறுவனம் மேற்கொண்டுள்ள சேவைகள் பின்வருமாறு:

- இலங்கையில் முறைசார் கல்விதொடர்பான கல்வி வளர்ச்சிக்கு உதவுதல்
- இலங்கையின் திறந்த பல்கலைக் கழகம், மொரட்டுவை தொழில் நுட்பக் கல்லூரி (தற்போது பல்கலைக்கழகம்) இலங்கைத் தேசிய நூல் நிலையம், இலங்கைத் தேசிய கல்வி நிறுவனம் சக்தி வளங்கள், விஞ்ஞான அதிகாரசபை ஆகிய நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவுதல்.
- கலாசார முக்கோண வலயத்தினுள் உள்ள முக்கிய நிலையங்களை புனரமைக்க உதவுதல்

இதன் அடிப்படையில் ஜெத்தவனராம தாதுகோப புனரமைப்பு இடம் பெறுவதை படம் காட்டுகின்றது.

**ஐக்கிய நாடுகளின் சர்வதேச சிறுவர் நிதியம் (UNICEF)**

இந் நிறுவனமானது நாதியற்ற நிலைக்குள்ளான குழந்தைகளின் எதிர்கால நீண்ட வளர்ச்சிக்காக உருவாக்கப்பபட்ட நிறுவனமாகும். உலகம் பூராகவும் உள்ள உதவி தேவைப்படும் சிறுவர்களின் நீண்ட கால சமூக அபிவிருத்திக்கான நிதியத்தைப் பெற்றுக் கொடுத்தலே இதன் பிரதான நோக்கமாகும். இந்நிறுவனத்தின் இலச்சினை படம் 2.13 இல் காட்டப்பட்டுள்ளது.

படம் 2.13
யுனிசெப்பின் இலட்சினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆரம்பம் | நோக்கம் |
|---|---|
| ● இரண்டாம் உலக மகா யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இலட்சக் கணக்கான சிறுவர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக 1946 ஆம் ஆண்டு சர்வதேச சிறுவர் நிதியம் ஆரம்பிக்கப் பட்டது. | ● சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்<br>● சிறுவர்களின் முழு வளர்ச்சியை ஏற்படுத்தல்<br>● குறித்த நாடுகளினதும், ஐக்கிய நாடுகள் தாபனத்தினது ஏனைய நிறுவனங்களினதும், அரச சார்பற்ற நிறுவனங்களினதும் உதவியைப் பெற்றுக் கொள்ளல். |

இவ் அமைப்பானது 2000 ஆம் ஆண்டளவில் பின்வரும் குறிக்கோள்களை அடைய செயற்படுகின்றது.

**2000 ஆம் ஆண்டில்**

- குழந்தைகளின் மரண விகிதத்தை மூன்றில் ஒன்றாக குறைத்தல்
- குழந்தைகளின் போசாக்கின்மையைக் குறைத்தல்
- எல்லாக் குழந்தைகளுக்கும் அடிப்படை சுகாதார வசதிகளை வழங்கத் திட்டமிடல்
- சகல குழந்தைகளுக்கும் ஆரம்பக் கல்வியை பெறுவதனை உறுதிப்படுத்தல்
- சிறுவர் துஷ்பிரயோகங்களை ஒழித்தல்

மேற்குறிப்பிட்ட இலக்கை அடைவதின் மூலம் பிரஜைகள் என்ற வகையில் உலகத்தை அவர்களின் உரிமையாக்கும் வகையில் உதவுதல்.

### உலக சுகாதார தாபனம் (WHO)

உலக சுகாதார தாபனம்

அங்கத்துவ நாடுகளின் பொருளாதார சமூக விருத்திக்கு அவசியமானது எனக் கருதப்படும் சுகாதார சேவைகள் வளர்ச்சியுறச் செய்வதே இவ் அமைப்பின் பிரதான நோக்கமாகும். இவ் அமைப்பு 1948 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டு 189 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கங்கள்

> நோக்கங்கள்
>
> - உலகில் உள்ள மக்கள் அனைவரும் உச்ச அளவில் சுகநலன்களை பேணுதல் இத்தாபனத்தின் பிரதான நோக்கமாகும்.
> - நாடுகளின் சுகாதாரச் செற்திட்டங்கள் தொடர்பாக திட்டமிடலும், நிருவகித்தலும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றுக்கு உதவி அளித்தல்.
> - சுகாதாரம் தொடர்பான தகவல்கள், தொழில் நுட்பங்கள், உபகரணங்கள் என்பவற்றை பரிமாறிக் கொள்ளல்.

உலக சுகாதார தாபனத்தால் இலங்கையின் 40க்கு மேற்பட்ட செயற்திட்டங்களுக்கு உதவி அளித்துள்ளது. அத்திட்டங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

உதவி

- சுகாதார சேவை தொடர்பாக மனித வளத்தை விருத்தி செய்தல்
- சுகாதாரம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளல்
- சுகாதாரம் தொடர்பான தகவல்களை வழங்கலும், கற்பித்தலும்
- தாய்மார்கள், குழந்தை, தொழிலாளர், வயோதிபர் ஆகிய விசேட தொகுதியினரின் சுகாதாரத்தை பேனுதலும், பாதுகாத்தலும்
- உள சுகாதாரத்தைக் பாதுகாத்தலும், பேணுதலும்
- உணவைப் பாதுகாத்தல் தொடர்பான முறைகளை அறிமுகம் செய்தல்
- கொடிய வியாதிகளிலிருந்து மனித சமூகத்தைப் பாதுகாத்தல்
- (போசாக்கு, பற் சுகாதாரம் உட்பட) சாதாரண சுகாதாரத்தைக் பாதுகாத்தலும் பேணுதலும்

இலங்கையில் இத்தகைய சுகாதார சேவைகளுக்கு உதவிகள் வழங்குவதன் மூலம் எமது நாட்டின் சுக நலன்களை உச்ச அளவில் விருத்தி செய்ய முயற்சிக்கின்றது. அதுவே உலக சுகாதார தாபனத்தின் பிரதான நோக்கமுமாகும்.

## புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி (IBRD)

உலக வங்கி

இவ் வங்கியானது சர்வதேச அபிவிருத்திக்கான அமைப்பாகும். 1944 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியானது அதன் அங்கத்துவநாடுகளின் புனரமைப்புக்கும், அபிவிருத்திக்கும் தேவையான முதலீட்டு உதவிகளை வழங்கி வருவதோடு, நாடுகளின் சென்மதி நிலுவைப் பிரச்சினைகளைதீர்த்துக் கொள்ள உதவுவதன் மூலம் சர்வதேச வர்த்தகத்தை விருத்தி செய்வதும் செயற்பாடுகளாக அமையும். இதில் 175 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

**நோக்கங்கள்**

காலப்போக்கில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வறுமையை ஒழிப்பதும், வறுமை நாடுகளின் பொருளாதார சக்தியை பெருக்குவதும், பொருளாதார அபிவிருத்திக்குள் அந் நாட்டு மக்களின் வாழ்க்கை நிலைமைகளை விருத்தி செய்வதும் உலக வங்கியின் பிரதான நோக்கமாக மாறியுள்ளது.

சர்வதேச புனரமைப்புக்கும், அபிவிருத்திக்குமான வங்கி, உலக வங்கி எனவும் அழைக்கப்படுகின்றது. அவ் வங்கியானது மூன்று முக்கிய செயற்பாடுகளை நிறைவு செய்கின்றன.

**செயற்பாடு**

- கடன் வழங்குதல்
- நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு தேவையான பொருளாதார ஆலோசனைகளை வழங்குவதோடு தொழில் நுட்ப உதவிகளையும் வழங்குதல்
- அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிற்கு தேவையான முதலீடு தொடர்பான வழிகாட்டல்களை வழங்கி வருதல்

உலக வங்கியினால் வழங்கப்பட்ட கடன் முதலைப் பயன்படுத்தி இலங்கை மேற்கொண்ட ஆலோசனைத் திட்டங்கள்.

- கொழும்பு சுற்றாடல் அபிவிருத்தித் திட்டம்
- வறுமை ஒழிப்புத் திட்டம்
- பொதுக் கல்வி அபிவிருத்தித் திட்டம்
- கொழும்பு போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம்
- சுகாதாரம், சனத்தொகைத் திட்டம்
- தனியார் துறை மூலதன அபிவிருத்தித் திட்டம்
- நாட்டின் நீர்பாசன முறையைக் புனருத்தானம் செய்யும் திட்டம்
- பொருளாதார மறு சீரமைப்புக்கான திட்டம்
- தொலைத் தொடர்பு அபிவிருத்தித் திட்டம்
- மின் சக்தி அபிவிருத்தித் திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே கூறியதில் இருந்து உலக வங்கியானது இலங்கையின் பலதரப்பட்ட திட்டங்களுக்கு உதவி வருவதை அறிய முடிகின்றது.

இது வரையும் நீங்கள் ஐக்கிய நாடுகள் அமையத்தின் இணைப்பு நிறுவனங்களின் பலவற்றைப் பற்றி கற்று முடித்துள்ளீர்கள். அவற்றை விடவேறு பல தாபனங்கள் ஐக்கிய நாடுகளின் இணைப்பு நிறுவனங்களாக செயற்படுகின்றன.

ஏனைய ஐ.நா. இணைத் தாபனங்கள்

அவையாவன

- சர்வதேச தொழிலாளர் தாபனம் (ILO)
- வர்த்தகம் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் மகாநாடுகள் (UNCTAD)
- சர்வதேச நாணய நிதியம் (IMF)
- ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP)
- ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் (UNEFA)
- ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தி அமையம் (UNIDO)
- உலக உணவுத் திட்டம் (WFP)

மேற்கூறிய தாபனங்களின் ஆரம்பம், நோக்கங்கள், செயற்பாடுகள் தொடர்பான தகவல்களைத் தொகுத்துக் கொள்ளுங்கள்.

ஐக்கிய நாடுகளின் செயற்பாட்டு முறை

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அதிக கவனம் செலுத்துதல்

உலக சமாதானத்தை நிலைநாட்டுவதே ஐக்கிய நாடுகள் அமையத்தின் முக்கிய செயற்பாடாகும். அத்தோடு உலக சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கினைக் கொண்டுள்ள அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் மக்கள், வறுமை, நோய், வேலையின்மை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு வருவதை தடுத்து நிறுத்தும் நோக்கோடு இவர்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்துவதற்காக தொகையான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

சமூக தூரநோக்கு கட்டாயமானதாகும்

> சமாதானம், பொருளாதாரம், சுற்றாடல், சமூக நீதி, சனநாயகம் ஆகியவற்றை முக்கிய பிரதான, கட்டாய இலக்குகளாக, கொண்ட "அபிவிருத்திக் கலாசாரத்தை" புதியதும், கட்டாயமானதும், சமூக தூரநோக்காகவும் கொண்டு வளர்த்தெடுக்க வேண்டும் என ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் உலக மக்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு காலத்திலும் சில முக்கிய அம்சங்களைக் கருத்தில் கொண்டு, அவை தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக சர்வதேச சமூகத்தை ஒன்றுதிரட்டும் மகாநாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன. உதாரணம்:

மகாநாடுகள்

- ஐக்கிய நாடுகளின் நீர்வழங்கல் மகாநாடு (மாடல் சியாட் 1977)
- பெண்கள் தொடர்பான மகாநாடு (நைரோபி 1977)
- அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு தொழிநுட்ப உதவிகள் வழங்கல் தொடர்பான மகாநாடு (புவனஸ் அயர்ஸ் 1978)
- பெண்கள், சமவுரிமை, அபிவிருத்தி, சமாதானம் தொடர்பான ஐக்கியநாடுகளின் தசாப்த மகாநாடு (கொபன்கேயன் 1980)
- குறைவிருத்தி நாடுகள் தொடர்பான மகாநாடுகள் (பாரீஸ் 1981)
- சனத்தொகை மகாநாடு (மெக்சிக்கோ 1987)

உலகப் பிரச்சினைகள் தொடர்பான மகாநாடுகள்

- போதைப்பொருட்கள் பாவித்தல், சட்ட விரோத போக்குவரத்து தொடர்பான சர்வதேச மகாநாடு (வீயன்னா 1987)
- குறைவிருத்தி நாடுகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் இரண்டாவது மகாநாடு (பரீஸ்)
- குழந்தைகள் தொடர்பான மகாநாடு (நியூயோர்க் 1990)
- சுற்றாடல் அபிவிருத்தி தொடர்பான மகாநாடு (றியோடி ஜெனரோ 1992)

ஈரான் ஈராக் சமாதானம்

ஐக்கிய நாடுகள் அமையம் அதன் பிரதானமான நோக்கமான உலக சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக பல்வேறு நாடுகளிலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் செயற்பட்டு வருகின்றது. உதாரணமாக ஈரான், ஈராக் நாடுகளுக்கிடையில் நடைபெற்ற எட்டு ஆண்டு யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவர 1997 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை தலையிட்டு இரு நாடுகளுக்கிடையில் ஒப்பந்தம் ஏற்பட்டு 1988 ஆம் ஆண்டில் இருந்து நடை முறைபடுத்தப்பட்டு வருகின்றது.

சோமாலியாவில் நிவாரணப் பணி

1991 ஆம் ஆண்டு சோமாலியாவில் ஏற்பட்ட யுத்தத்தால் மூன்று இலட்சத்துக்கு மேற்பட்டோர் இறந்தும், பத்து இலட்சத்துக்கு மேற்பட்டோர் அகதிகளாகியும் காணப்பட்டனர். இந்த அனர்த்தங்களை கவனத்துக்கு எடுத்துக் கொண்ட ஐக்கிய நாடுகள் அமையம் நிவாரணப்பணிகளை செவ்வனே ஆற்றிவருகின்றது. சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதிலும்,



5. S. P. C 000405
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் ஐக்கிய நாடுகள் அமையம் பொறுப்புடன் செயலாற்றி வருகின்றது. மத்திய ஆபிரிக்காவில் உள்ள ருவண்டாவில் ஏற்பட்ட இனக் கலவரங்களால் 5 இலட்சம் பேர் கொல்லப்பட்டும், 30 இலட்சம் பேர் ஆதரவற்றவர்களாக மாறியதும், அகதிகள் முகாம்களில் ஏற்பட்ட "கலரா" நோயினால் ஆயிரக் கணக்கானோர் இறந்ததும் அந் நாட்டின் அவலங்கள் ஆகும். இந் நிலையில் ஐக்கிய நாடுகள் அமையத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதனால் போசாக்கின்மை, தொற்று நோய்கள் ஓரளவுக்குக் குறைவடைந்துள்ளன.

**பன்னிரண்டு ஆண்டுகளின் பின் அமைதி யேற்படல்**

மத்திய அமெரிக்காவில் எல் சல்விடோர் அரசாங்கத்துக்கும், பராவுண்டோமார்டி இனத்தின் விடுதலை முன்னணிக்கும் இடையில் நடைபெற்று வந்த 12 வருட யுத்தமானது ஐக்கிய நாடுகளின் தலையீட்டினால் இரு பகுதியினருக்கும் இடையில் நீண்ட பேச்சுவார்த்தைகளின் இறுதியில் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு அதனைக் கண்காணிக்கும் பொறுப்பு, ஆயுதங்களைப் பெற்றுக் கொள்ளும் பொறுப்பும் ஐக்கிய நாடுகளின் அமையத்தைச் சார்ந்ததாக மாறியது.

**இந்தோனேசியா தீபகற்ப சமாதான முயற்சி**

பல ஆண்டுகளாக இந்தோனேசீய தீபகற்பத்தில் கம்போடியா, வியற்நாம் யுத்தம் இடம் பெற்றது. இறுதியில் வியற்நாம் வெளியேறிய போதும் கம்போடியக் குழுக்களுக்கிடையில் மோதல்கள் தொடர்ந்தன. பல வருடங்களாக ஐக்கிய நாடுகள் ஆதரவில் பேச்சு வார்த்தைகள் இடம் பெற்று இறுதியில் ஒப்பந்தம் ஏற்பட்டது. ஐக்கிய நாடுகளின் மேற்பார்வையில் நிவாரணப் பணிகள் மேற்கொளள்ப்பட்டதோடு, பொதுத் தேர்தலும் நடைபெற்று அமைதி நிலவுகிறது.

உலகில் ஆயுதப் போட்டிகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து, சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக காலத்துக்கு காலம் மகாநாடுகள் நடத்தப்பட்டதோடு, ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப் பட்டன. அவற்றில் சில கீழே தரப்பட்டுள்ளன. உதாரணங்கள்:

*1963* – அணு சக்தி ஆயுதங்களை, வளி மண்டலத்திலும், அதற்கு மேலும், நீருக்கு கீழும் பரீட்சிப்பதை தடை செய்யும் ஒப்பந்தம்.

*1967* – லத்தீன் அமெரிக்கப் பகுதிகளிலும், கரிபியன் பிரதேசத்திலும் அணு ஆயுதங்களைப் பரீட்சித்தல் தடை ஒப்பந்தம்.

*1967* – தென் பசிபிக் சமுத்திரத்தில் அணு ஆயுதங்களைப் பரீட்சித்தலைத் தடை செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1985 - தென் பசிபிக் பிரதேசம் அணு ஆயுதமற்ற சுதந்திர வலய ஒப்பந்தம். அதன்படி அணு ஆயுதங்களை அப் பிரதேசத்தில் உற்பத்தி செய்தல், பாதுகாத்து வைத்தல், கொண்டு செல்லல் ஆகியன தடை செய்யப்பட்டுள்ளது.

1968 - அணு ஆயுதங்களை அவை இல்லாத பிரதேசங்களுக்கு கொண்டு செல்வதற்கு தடை செய்யும் ஒப்பந்தம். அதன்படி அணு ஆயுதங்கள் கொண்டுள்ள நாடு வேறுநாடுகளுக்கு வழங்காது தடை செய்வதால் பரவுதல் தடை செய்யப்படுகின்றது.

1981 - அதிகளவில் உடல் தாக்கங்களை ஏற்படுத்தும் சில மரபு வழி ஆயுதங்களுக்கு தடை விதிக்கும் ஒப்பந்தம் - நிலக் கண்ணி வெடி, பொறி வெடி.

1972 - இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்தல், விருத்தி செய்தல், பாதுகாத்து வைத்தல், பாவித்தல் என்பன வற்றை தடை செய்வதற்கான ஒப்பந்தம்.


## ஐக்கிய நாடுகள் அமையமும் இலங்கையும்

இலங்கை 1955 ஆம் ஆண்டில் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டது. இலங்கை சமூக பொருளாதார கலாச்சார, கல்வி தொடர்பான விடயங்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் உதவியைப் பெற்றுக் கொண்டது. மனித வள மேம்பாட்டுக்கும் ஐக்கிய நாடுகள் சபையில் இருந்து இலங்கை பெருமளவிலான உதவிகளைப் பெற்றுக் கொண்டது.

இலங்கை நிதி, பொருட்கள், தொழில் நுட்ப உதவிகள் என்பவற்றைப் பொறுத்த வரையில் அதிக அளவில் ஐக்கிய நாடுகள் அமையத்திடமிருந்தே பெற்றுக் கொள்கின்றது. இலங்கையின் பிரதான பொருளாதாரத் துறைக்கும் அதனோடு இணைந்த நிறுவனங்களுக்கும் ஐக்கிய நாடுகள் அமையத்தில் இருந்தும் அதனோடு இணைந்த அமைப்புகள் மூலமும் பெறும் உதவிகள் படம் 2.14 உங்களால் விளங்கிக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம் 2.14

**இணைந்த நிறுவனங்கள்**

மேற் கூறியவாறு எமது நாட்டின் சமூக பொருளாதார விருத்திக்காக ஐக்கிய நாடுகள் அமையம் உதவி செய்துவருகின்றது. இவற்றில் இலங்கையில் காரியாலயங்களை நிரந்தரமாக அமைத்துக் கொண்டு உதவிகளை மேற்கொண்டு வரும் 13 இணைந்த நிறுவனங்கள் காணப்படுகின்றன.

உதாரணமாக: ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான, கலாச்சார அமையம், ஐக்கிய நாடுகளின் சனத் தொகைக்கான நிதியம், புனருத்தாபனத்துக்கும், அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி.

**தொழில் நுட்ப உதவி**

இலங்கையின் இலக்ரோனிக் தொடர்புச் சாதனத் துறைக்கு உதவிகள் பலவும் வழங்கி வருவது, தொழில் நுட்பத் துறைக்கு வழங்கி வரும் உதவியை உதாரணமாக நாங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

**கல்வி**

சர்வதேச அரசாங்கங்களுக்கிடையிலான தகவல் விஞ்ஞான செயற்றிட்டம் நவீன தொடர்பாடல் தொழில் நுட்ப நிறுவனத்தை கொழும்புக் பல்கலைக் கழகத்தில் நிறுவுதலுக்கான உதவிகளை வழங்குதல், இதன் கீழ் சப்பிரகமுவ இணைந்த பல்கலைக்கழகத்தில் தகவல் தொடர்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை என்பன இச் செயற்றிட்ட விளைவுகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கம்

நாடுகள் தாம் எதிர் நோக்கும் அரசியல், பொருளாதார இயற்கை அனர்த்தங்கள் போன்ற பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள பலநாடுகளினதும் தாபனங்களினதும் ஒத்துழைப்பினை வேண்டி நிற்கின்றன. அவ்வாறான அமைப்புகளாக சார்க் அமைப்பு, கொழும்புத்திட்டம், பொதுநலவாய நாடுகள், ஐக்கிய நாடுகள் சபை, அதன் பொதுச் சபை, பாதுகாப்புச்சபை, பொருளாதார சமூக சபை, நம்பிக்கைப் பொறுப்புச் சபை, சர்வதேச நீதி மன்றம், செயலகம், செயலாளர் நாயகம், ஆகியனபற்றியும், ஐக்கிய நாடுகளின் இணைத் தாபனங்களான யுனெஸ்கோ, யுனிசெப், உலக சுகாதார தாபனம், உலகவங்கி, என்பனபற்றியும் சமூக தூரநோக்கு, மகாநாடுகள், சமாதான முயற்சிகள், அணு ஆயுததடைகள், இலங்கைக்கும் ஐக்கிய நாடுகளுக்குமிடையிலான தொடர்புகள், இலங்கையில் நிலையாக அமைந்த ஐக்கிய நாடுகளின் இணை அமைப்புகள் ஆகிய பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

செயற்பாடுகள்

1. ஐக்கிய நாடுகள் அமையத்தின் அமைப்பைக் காட்டுவதற்கான பொருத்தமான வரைபடம் ஒன்றை வரைக.

2. கோடிக்கணக்கான மக்களை வேதனைக்கும், துக்கத்துக்கும், ஊனமுற்றும், இறப்பதற்கும் காரணமான கொடிய யுத்தம் ஒழிக்கப்பட வேண்டும். இவ்வாறு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்தின் பிள்ளை தனது வரலாற்றைக் கூறுவதாக கட்டுரை ஒன்றை எழுதி உங்கள் பாடசாலை சுவர்ப் பத்திரிகைக்கு வழங்குக.

3. வெற்றிடங்களை நிரப்புக.

அ. ஐக்கியநாடுகள் அமையம் ................................ ஆண்டில் ஆரம்பமானது.

ஆ. ஐக்கிய நாடுகள் அமையத்தின் தினமாக ................................ திகதி உலகம் முழுவதும் கொண்டாடப்படுகின்றது.

இ. ஐக்கிய நாடுகள் அமையத்தில் மொத்தமாக ............................ நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன.

ஈ. ஐக்கிய நாடுகளின் தலைமையகம் ........................................ நகரில் உள்ளது.

4. ஐக்கிய நாடுகள் தாபனம் அமைக்கப்பட்டதற்கான இரண்டு அடிப்படையான காரணங்களைத் தருக.

1.......................................................... 2..........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. யுத்தத்தினால் ஏற்படும் துக்ககரமான நிகழ்வுகளின் காட்சிகளை சித்திரமாக/கட்டுரையாக/கவிதையாக எழுதுக.

6. இங்கே கொடுக்கப்பட்டுள்ள குழந்தையின் படத்தைப் பாருங்கள்.



படம் 2.15

போசாக்கின்மையால் பீடிக்கப்பட்ட குழந்தைகள்

1. இக் குழந்தைக்கு கிடைக்க வேண்டிய இரண்டு உரிமைகளைக் குறிப்பிடுக.

..............................................................................................

..............................................................................................

2. இக் குழந்தைக்காக சர்வதேச தாபனங்கள் வழங்கும் இரண்டு உதவிகளைக் குறிப்பிடுக.

..............................................................................................

..............................................................................................

3. உதவி அளிக்கும் சர்வதேச தாபனங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

..............................................................................................

..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. நீர் அறிந்த பிராந்திய அமைப்புக்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

.................................................................................................................................

8. எமது நாட்டில் உள்ள ஒரு நகரத்தின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச அபிவிருத்தி தாபனம் யாது? அத் தாபனத்தால் நிறைவு செய்யப்பட வேண்டிய இரண்டு நோக்கங்களைத் தருக.

9. "பொது நலவாயம் என்றால் என்ன?" என்பதை விளக்கி கட்டுரை எழுதுக.

10. சர்வதேச அமையங்களைப் பற்றி மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு பாடசாலை நூலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய நூல்கள் சஞ்சிகைகள் பிரசுரங்கள் என்பன

    (i) சுய கற்கைக்கான மாணவர் பிரசுரங்கள் (ஐ. நா. தாபனம் பற்றிய)

    (ii) ஐ. நா. அமையத்தின் செய்திகள். (பிராந்திய)

    (iii) ஐ. நா. தாபனம் பற்றி வழமையாகக் கேட்கப்படும் கேள்விகள்.

    (iv) இலங்கையில் ஐ. நா. தாபனத்தின் செயற்பாடுகள்.

    (v) ஐ. நா. பற்றிய அடிப்படை விடயங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் அத்தியாயம்

# உலகில் ஏற்பட்டுவரும் பிரச்சினைகள்

## ● சனத்தொகைப் பிரச்சினையின் தன்மையும் அதன் தாக்கங்களும்

உலகில் இன்று பல்வேறு நெருக்கடி நிலைமைகள் தோன்றி வருவதை அவதானித்திருப்பீர்கள். அவற்றில் சனத்தொகை வேகமாக அதிகரித்துவருவது முதன்மையானதொன்றாக கருதப்படுகின்றது. மனிதனுக்கும், ஏனைய சகல சீவராசிகளுக்கும் உரிய ஒரேயொரு உறைவிடமாக புவி விளங்குகின்றது. மனித வரலாற்றின் ஆரம்ப கட்டத்தில் சனத்தொகையின் அளவு மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதின் காரணமாக அன்று பிரச்சினைக்குரியதாக காணப்படவில்லை. ஏனெனில் அக்கால மக்களின் தேவைகள் குறைந்த அளவினதாக காணப்பட்டதோடு, தமது தேவைகளின் பொருட்டு வளங்கள் மீது அதிக தாக்கத்தை ஏற்படுத்தியவர்களாகவும் இருக்கவில்லை. இதனால் குடித் தொகைக்கும் வளங்களுக்கும் இடையில் சாதகமான சமனிலைத் தன்மை காணப்பட்டது. எனினும் காலப்போக்கில் சனத் தொகையின் அளவு அதிகரிக்கத் தொடங்கியதால் வளங்களுடன் ஏற்கனவே காணப்பட்ட சாதகமான சமநிலைத்தன்மை குறை வடையத் தொடங்கியது. இதனை நன்கு கற்பதற்குப் பின்வரும் 3.1 படத்தை நன்கு அவதானித்துக் கற்கவும்.



படம் 3.1

**வளங்களுக்கும் சனத்தொகைக்குமிடையே நிலவும் சமமின்மை**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்களுக்கும் சனத்தொகைக்கும் இடையில் பொருத்தமற்ற சமநிலை

மேற்கண்ட படத்தினை நோக்கும் போது உங்களது மனத்தில் எழும் எண்ணங்கள் எவை என எண்ணிப்பாருங்கள். இதன்படி புவிக்கோளத்துக்கும் சனத்தொகைக்கும் இடையில் பாதகமான பொருத்தப்பாடு ஒன்று தோன்றுவதைக் காணமுடிகின்றதல்லவா? அவ்வாறான நிலைமை தோன்றுவது ஏன் என்று வினவிப் பாருங்கள்?

புவியில் உள்ள வளங்கள் பௌதீக வளங்கள், மனித வளங்கள் என இரண்டாக வகுத்து நோக்கப்படும். இவற்றில் மனித வளமென்பதே முக்கியமான வளமாக கொள்ளப்படுகின்றது. நீர், மண், வளி, கனியங்கள் போன்றன பிற வளங்களாகும். இவை பௌதீக வளங்களாகும். இவ்வாறான வளங்களை மனிதன் ஆதி காலம் தொட்டு இன்று வரை பயன்படுத்தி வருபவனாக இருக்கின்றான். அதனால் தற்கால உலக சனத்தொகையின் மிக வேகமான அதிகரிப்பானது சனத்தொகைக்கும் வளங்களுக்கும் இடையில் சாதகமற்ற பொருத்தப்பாட்டினைத் தோற்றுவித்துள்ளது. அதனை விளங்கிக் கொள்வதற்கு பின்வரும் அட்டவணையைக் கற்கவும்.

உலகம் எதிர் காலம் பற்றி எண்ணுவது மிக முக்கியமானதாகும்




உரு. 3.2

சனத்தொகையும் வளங்களும்

அதிகரித்து வரும் வளங்களுக்கு ஏற்ப வளங்களின் அளவு அதிகரிப்பதில்லை. அதற்கு பதிலீடாக கைத்தொழில் உற்பத்திகளையும் அதிகரிக்க முடிவதில்லை. அவ்வாறு அதிகரிப்பதன் விளைவாக சுற்றுப்புறச் சூழல் மாசடையும் தன்மையே விரைவாக அதிகரிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நாடொன்றின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற் கொள்ளும் போது அந் நாட்டின் சனத்தொகையையும் கவனத்திற் கொள்வது முக்கியமாகும். நாட்டில் காணப்படுகின்ற வளங்களின் உச்ச அளவில் பயன்பாட்டிற்குக் கொள்ளும் மட்டத்தில் நாட்டின் உற்பத்தி நடவடிக்கைகளில் கூடுதலான அளவு பங்களிப்பினை அளிப்பதற்குரிய சனத்தொகை அளவும் காணப்படவேண்டும். நாட்டின் அபிவிருத்திக்கு இது முக்கியமானதாகும். அதாவது உச்ச அளவிலான வளம் பயன்பாட்டிற்கு ஏற்ற அளவிலான சனத்தொகையும் அவசியமாகும்.

ஒரு நாட்டில் காணப்படுகின்ற சனத்தொகை அளவை சனத்தொகைக் கணிப்பீட்டின் மூலம் அறிய முடியும். எமது நாட்டில் ஆட்சியாளர்கள் வரி அறவிடுவதற்கும், படைகளுக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கும் குடிக்கணிப்பீடுகள் நடந்துள்ளன என ஊகிக்க முடியும். இன்று மேற்கொள்ளப்படும் நவீன குடிக்கணிப்பீடுகளது வரலாறு மிகப் பழமையானது அல்ல. அமெரிக்காவில் கி. பி. 1790 ஆம் ஆண்டில் முதன்முதலாக குடிக்கணிப்பீடு நடத்தப்பட்டிருந்தது. பெரிய பிரித்தானியாவில் 1801 ஆம் ஆண்டில்தான் முதன் முறையாக குடி மதிப்பீடு இடம் பெற்றது. இவ்வாறு இலங்கையில் 1871 ஆம் ஆண்டு முதன் முதலாக குடிக்கணிப்பீடு அறிமுகம் செய்யப்பட்டது. ஒரு நாட்டில் வாழும் சனத்தொகையைக் கணிப்பீடு செய்தல், சனத்தொகைக் கணிப்பீடு எனப்படும்.

குடித்தொகை மதிப்பீடுகளிலிருந்து உலகச் சனத் தொகையின் பரம்பல், போக்கு, அமைப்பு என்பவற்றை விளங்கிக் கொள்ள முடியும். பின்வரும் உரு 3.3 விளக்கப்படம், 3.1 அட்டவணை ஆகியவற்றைக் கற்று அறிந்து கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு. 3.3

உலக சனத்தொகையின் துரித வளர்ச்சி

| ஆண்டு | குடித்தொகை (மில்லியன்களில்) |
|---|---|
| 1750 | 791 |
| 1800 | 978 |
| 1850 | 1262 |
| 1900 | 1650 |
| 1950 | 2506 |
| 1960 | 2995 |
| 1970 | 3621 |
| 1980 | 4401 |

அட்டவணை 3.1

சனத்தொகை விருத்தி பற்றிய விடயங்களை நோக்கும்போது, உலகசனத்தொகையின் அளவு அதிகரிக்க எடுத்த கால அளவு பற்றி நோக்குவது அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டு | சனத்தொகை | சனத்தொகை அதிகரிக்க எடுத்த காலம் | அதிகரித்த அளவு மில்லியன்களில் |
|---|---|---|---|
| 1650 | 545 | | |
| 1750 | 728 | 100 | 183 |
| 1850 | 1171 | 100 | 443 |
| 1900 | 1608 | 50 | 437 |
| 1950 | 2501 | 50 | 893 |
| 1960 | 2986 | 10 | 485 |
| 1965 | 3288 | 05 | 303 |
| 1970 | 3610 | 05 | 322 |
| 1975 | 3967 | 01 | 357 |
| 1976 | 4044 | 01 | 77 |
| 1977 | 4124 | 01 | 80 |


அட்டவணை 3.2

இங்கே தரப்பட்டுள்ள 3.2 அட்டவணையில் உலக சனத்தொகையின் துரிதமாக அதிகரிக்கும் போக்கினை நன்கு இனங்காணலாம். உலக சனத்தொகையின் அளவானது 1650-1750 க்கும் இடையில் 183 மில்லியன்களால் மட்டுமே அதிகரித்தது. இது 1750-1850 க்கும் இடையிலுள்ள காலத்தில் இருமடங்காக காணப்பட்டது. இவ்வாறு சனத்தொகை இரட்டிப்பதற்கு 50 வருடங்கள் சென்றன. ஆனால் இன்றைய கால கட்டத்தில் குறிப்பாக 1950க்குப் பின் சனத்தொகை அளவில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பானது அதி தீவிரமாக காணப்பட்டது. இந்த அதிகரிப்பின் தீவிரத் தன்மை காரணமாக கி. பி. 2000 ஆண்டளவில் உலக சனத்தொகை 6.5 பில்லியன்களாக எட்டி விடும் என சனத்தொகை அறிஞர்கள் கூறியுள்ளனர். அவர்கள் கூற்று தவறாது இன்று உலக சனத்தொகை 6 பில்லியன்களை எட்டிப் பிடித்துவிட்டது.

பின்வரும் படத்தில் உலக சனத்தொகையானது எவ்வாறு பரந்து காணப்படுகின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இதனை நன்கு கற்றுக் கொள்வதின் மூலம் உலக சனத்தொகைப் பரம்பல் பற்றிய விளக்கத்தையும் பெறக் கூடியதாக இருக்கும். இந்தப் படத்தினைப் பயன்படுத்தி உலகின் சனத்தொகை அதிகம் உள்ள பிரதேசங்களைக் கண்டறிக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு. 3.4

உலக சனத்தொகை அடர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் அதிக சனத்தொகை காணப்படும் பிரதேசங்களில் மக்களின் அடிப்படைத் தேவைகளை ஈடு செய்வதில் பாரிய நெருக்கடி நிலைமைகள் தோன்றியுள்ளன. இந் நெருக்கடி நிலை மேலும் தீவிரமாவதற்கு சனத்தொகை சமனற்ற முறையில் பரவியுள்ளமையும் ஒரு காரணியாக கொள்ளப்படுகின்றது.

சனத்தொகையானது, குறிப்பிட்ட சில பிரதேசங்களில் செறிவாக வாழ்வதற்குப் பின்வரும் அம்சங்கள் காரணிகளாக அமைகின்றன.

1. சாதகமான புவியியல் காரணிகள்
2. போக்குவரத்துப் போன்ற ஏனைய வசதிகள்
3. சமயம் போன்ற கலாசார காரணிகள்
4. இயற்கை வளங்களின் பரம்பல்
5. அரசியற் காரணிகள்

புவியின் அமைப்புக்கு ஏற்ப புவியின் மேற்பரப்பானது 3/4 சதவீதம் நீராலும் 1/4 சதவீதம் நிலப்பரப்பாலும் ஆனது. கிடைக்கக்கூடிய பரப்பில் மனிதன் வாழ்வதற்கு ஏற்ற பகுதியாக 30 சதவீதமாகவே காணப்படுகின்றது. மிகுதி நிலப்பகுதி அதிக குளிர், அதிக வெப்பம், உயரமான மலைப்பகுதிகளாக விளங்குவதனால் அவை மனித வாழ்க்கைக்கு பொருத்த மற்றதாகவே காணப்படுகின்றது. இதனால் மக்கள் தமது வாழ்க்கைக்கு வசதியான இடங்களிலேயே செறிவாக வாழ்கின்றனர். இவ்வாறு குடித்தொகைப் பரம்பலின் அசமநிலை குடித்தொகை தொடர்பான ஒரு பிரச்சினையாக உரு வெடுத்துள்ளது. இவ்வாறு மனிதர் வாழும் பிரதேசங்களின் குடித்தொகை வளர்ச்சியை எடுத்துப் பார்த்தால் அது: அபி விருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் ஆகியவற்றில் வேறுபட்ட வளர்ச்சிப் போக்கினைக் காணலாம். அதனைப் பின்வரும் 3.3 அட்டவணை மூலம் அறிந்து கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் | | அபிவிருத்தி அடைந்த நாடுகள் | |
|---|---|---|---|
| நாடு | சனத்தொகையின் வளர்ச்சி வீதம் | நாடு | சனத்தொகையின் வளர்ச்சி வீதம் |
| இலங்கை | 1.4 | சுவீடன் | 0.2 |
| பங்களாதேஷ் | 2.7 | ஐக்கிய இராச்சியம் | 0.1 |
| எதியோப்பியா | 2.3 | ஜப்பான் | 1.2 |
| பாகிஸ்தான் | 2.9 | அமெரிக்கா | 0.1 |
| கென்யா | 3.3 | பெல்ஜியம் | 0.1 |

அட்டவணை 3.3

மேற்கண்ட அட்டவணையைக் கவனிக்கும் போது அபிவிருத்தியடைந்த நாடுகளின் சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைவாக காணப்படுகிறது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் சனத்தொகை அதிகரிப்பு அதிகமானதாக காணப்படுகின்றது. இதனால் சனத்தொகை அதிகரிப்பினால் ஏற்படும் நெருக்கடிகள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலேயே தோன்றியுள்ளன. இதன் காரணமாக அந் நாடுகளின் அபிவிருத்தியின் பொருட்டு செலவு செய்யப்பட வேண்டிய நிதிகள், அதிகரித்து வரும். சனத்தொகையின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் போன்றவற்றைப் பெற்றுக் கொடுப்பதிலேயே செலவிடப்படுகின்றது. அத்துடன் அதிகரித்து வரும் சனத்தொகையினருக்கு உணவினை அளிப்பதற்கான நிலமும் அதன் அளவால் வரையறுக்கப்பட்டிருப்பதும் மற்றொரு பிரச்சினையாக உள்ளது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் காணப்படும் துரித குடித்தொகை விருத்தி காரணமாக தனி நபருக்கான நிலத்தின் அளவு மேலும் குறைந்து வருகிறது. குறிப்பாக ஆசியாவில் ஒரு நபருக்குத் தேவையானவற்றை அளிப்பதற்கு ஒதுக்கக் கூடிய நிலத்தின் அளவு மிகக் குறைவாகும். இதனைப் பின்வரும் 3.4 அட்டவணை மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிய நாடுகளில் ஒருவருக்கு ஒதுக்கக் கூடிய நில அளவு

| நாடு | ஒரு நபருக்கு ஒதுக்கக் கூடிய நிலத்தின் அளவு (ஹெக்டேயரில்) |
|---|---|
| பங்களாதேஷ் | 0.14 |
| இந்தியா | 0.30 |
| பாகிஸ்தான் | 0.34 |
| தாய்லாந்து | 0.40 |
| இலங்கை | 0.16 |

அட்டவணை 3.4

பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதைக் கொண்டு உலகின் நிலப்பயன்பாடு பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்க.

உலகின் நிலப்பயன்பாட்டைக் காட்டும் வரைபு

புவியின் மேற்பரப்பில் 71 வீதம் நீராகும். நிலப்பகுதி 29 வீதமாகும். நிலப்பகுதி பயன்பாட்டு அடிப்படையில் பின்வருமாறு.

1. விவசாயத்துக்கு பயன்படும் நிலப்பகுதி 20%
2. பயிர் செய்யக்கூடியது ஆனால் புல் நிலங்களாக காணப்படுவது 10%
3. வளமற்ற நிலம் 10%
4. பொருத்தமற்ற காலநிலை 20%
5. அதிக உயரமான மலைகள் 20%
6. பாலைவனப்பகுதி 20%

இதன்படி புவிமேற்பரப்பில் மனிதப் பாவனைக்குரிய நிலப்பகுதியாக 29 சதவீதமான பகுதியே காணப்படுகின்றது. இதனை எதிர்கால சந்ததியினரும் பயன்பெறும் வகையில் பாதுகாக்கும் பொறுப்பு உங்கள் கரங்களிலேயே உண்டு.

இப் பிரச்சினைகளுக்குப் புறம்பாக துரித சனத்தொகை வளர்ச்சி, வதிவிட வசதி, தொழிற் பிரச்சினை, குடிநீர்ப் பிரச்சினை மற்றும் சேரிப் பிரச்சினை, நோய்கள் பரவுதல் போன்ற நகராக்கம் தொடர்பான பல்வேறு பிரச்சினைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றியுள்ளன. இதனால் குடித்தொகை வளர்ச்சி காரணமாகத் தோன்றியுள்ள இன்னோரன்ன பிரச்சினைகளுக்கு பரிகாரம் தேடுவதும் தற்போதுள்ள மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை எதிர்காலச் சந்ததியினருக்காக பாதுகாக்கும் தலையாய கடமை உங்களுக்கும் இருக்கும் என்பதனை கருத்திற் கொள்க.

உலக சனத்தொகையில் ஏற்பட்டு வரும் துரித வளர்ச்சி காரணமாக ஏற்பட்டு வரும் பிரச்சினைகள் பற்றி ஓரளவுக்கு விளக்கம் பெற்றுள்ளீர்கள். சனத்தொகையில் ஏற்படும் வேறுபாடுகளை சனத்தொகை வளர்ச்சி எனக் குறிப்பிடலாம். சனத்தொகை வளர்ச்சிக்கு

பிறப்பு

இறப்பு

**சனத் தொகை வளர்ச்சியினைத் தீர்மானிக்கும் காரணிகள்**

இடப்பெயர்வு ஆகிய காரணிகள் முக்கியத்துவம் பெறுகின்றது. சனத்தொகையில் இறப்பினை விட பிறப்பு அதிகமாக இருந்தால் இயற்கை வளர்ச்சி அதிகமானதாக அமையும், பிறப்பினை விட இறப்பு அதிகமாக காணப்பட்டால் சனத்தொகையின் இயற்கை வளர்ச்சியில் வீழ்ச்சி ஏற்படும். இத்துடன் நாட்டை விட்டு வெளியேறியவர்கள் தொகையையும், நாட்டினுள் குடியேறியவர்களின் தொகையை ஒப்பிட்டுப் பார்ப்பது இடப் பெயர்வாகும். இடப்பெயர்வு உள் வரவு, வெளியகல்விலும் அதிகமாக இருந்தால் இயற்கை வளர்ச்சியுடன் கூட்டி நாட்டின் மொத்த சனத்தொகை வளர்ச்சியை அறிய முடியும். ஆனால் எமது நாட்டில் பிரித்தானியர் காலத்தில் குடிவரவு அதிகரித்துக் காணப்பட்டாலும் தற்காலத்தில் குடியகல்வு அதிகரித்துள்ளது. தொழில்களுக்கான தற்காலிக குடியகல்வுகளும் உண்டு. இடப்பெயர்வுகள் நாட்டுக்கு நாடு வேறுபடும். அன்றியும் உள்நாட்டு இடப் பெயர்வுகளும் ஏற்பட்டு வருகின்றது.

இதுவரையும் உலக சனத்தொகை பற்றியும் அது தொடர்பான நெருக்கடிகள் பற்றியும் விளக்கப்பட்டது. அதேபோல் எமது நாட்டின் சனத்தொகை தொடர்பான விபரங்களையும் எடுத்து நோக்குவோம்.

**இலங்கையின் சனத் தொகை**

இலங்கையின் சனத்தொகை தொடர்பான விபரங்களை இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட குடிக்கணிப்புகள் மூலம் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. இலங்கையின் குடிக்கணிப்பானது 1871 ஆம் தொடக்கம் 1981 ஆம் ஆண்டு வரை பத்தாண்டுகளுக்கு ஒருமுறை நடாத்தப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டின் பின் முழு அளவிலான குடிமதிப்பீடு பல்வேறு காரணங்களால் நடத்தப்படவில்லை. எனினும் பிறப்பு, இறப்பு



6. S. P. C 000405

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவுகள், குடியகல்வு, குடிவரவு போன்ற புள்ளி விபரங்களை அடிப்படையாக கொண்டு ஒவ்வொரு ஆண்டும் புள்ளி விபரத் திணைக்களத்தினால் குடிமதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறு பெற்ற தரவுகள் அடிப்படையில் இலங்கையின் குடித்தொகைப் போக்கு பற்றி நோக்குவோம்.

இலங்கையின் சனத்தொகை பற்றிய தரவுகள்
*1871-1998* மூலம் - சனத்தொகைப் புள்ளி விபரத் திணைக்களம்.

| ஆண்டு | சனத்தொகை மில்லியன்களில் | வருடாந்த அதிகரிப்பு வீதம் | பருமட்டான பிறப்பு வீதம் 1000ற்கு | பருமட்டான இறப்பு வீதம் 1000க்கு |
|---|---|---|---|---|
| 1871 | 2.9 | 0.8 | 28.5 | 20.5 |
| 1946 | 6.7 | 1.5 | 35.4 | 14.3 |
| 1953 | 8.1 | 2.8 | 48.0 | 10.4 |
| 1963 | 10.5 | 2.7 | 34.1 | 8.5 |
| 1971 | 12.7 | 2.2 | 30.4 | 7.7 |
| 1981 | 14.8 | 1.7 | 28.2 | 5.9 |
| 1991 | 17.2 | 1.5 | 20.6 | 5.5 |
| 1995 | 18.1 | 1.4 | 18.9 | 5.8 |
| 1996 | 18.3 | 1.1 | 18.6 | 6.5 |
| 1997 | 18.5 | 1.3 | 17.9 | 6.1 |
| 1998 | 18.7 | 1.4 | – | – |

அட்டவணை 3.5


சனத் தொகை அளவுக்கு ஏற்ப நிலம் அதிகரிப்பது இல்லை.

இலங்கையின் சனத்தொகை அதிகரிப்புப் போக்கு பற்றி மேற்கண்ட அட்டவணை மூலம் விளக்கம் பெற முடியும். இலங்கையின் மொத்தப் பரப்பானது 65,525 சதுர கிலோ மீற்றர்களாகும். ஆனால் மனித தொகை அதிகரிப்புக்கு ஏற்ப நிலத்தின் அளவு அதிகரிப்பது இல்லை. ஆயினும் நாட்டின் சனத்தொகை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சதுர கிலோ மீற்றருக்குரிய சனத்தொகை




உரு 3.5

மூலம் : சனத்தொகைக் கல்வியும், மக்கள் வாழ்வும் அன்றும் இன்றும். பக்கம் - 12




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுர கிலோ மீற்றருக் குரிய சனத் தொகை.

மேற்காட்டிய 3.5 படத்தின் மூலம் 1871 ஆம் ஆண்டில் சனத்தொகை ஒரு சதுர கிலோமீற்றருக்கு 44ஆக இருந்தது. 1981 ஆம் ஆண்டில் ஒரு சதுர கிலோமீற்றருக்கு 227 பேராக அதிகரித்தது. 2000 ஆம் ஆண்டளவில் ஒரு சதுர கிலோமீற்றருக்கு 305 பேர்வசிப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு ஒரு சதுர கிலோ மீற்றருக்கான சனத்தொகை மேலும் அதிகரிக்குமாயின் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பது அச்ச உணர்வினை ஏற்படுத்துவதாகவே அமைகின்றது.

இலங்கையின் சனத்தொகை இரட்டிப்பு அடைவதற்கு எடுத்த காலம் பற்றிய ஒரு விளக்கத்தை தற்போது காண முயற்சிப்போம்.

சனத்தொகை அளவு மில்லியன்களில்




உரு. 3.6

மூலம் : மக்களின் வாழ்வு அன்றும் இன்றும்.
(சனத்தொகை கல்வி தொர்டர்பான மேலதிக வாசிப்பு நூல்)

சனத் தொகை இரட்டிப்புக் காலம்

சனத் தொகை இரட்டிப்புக் காலம் முதலில் எடுத்த காலத்தை விட பின்பு காலப்பகுதி குறைந்து செல்வதைக் உரு. 3.6 காணலாம். இலங்கையின் சனத்தொகை முதல் இரட்டிப்பு அடைவதற்கு எடுத்த காலம் 50 ஆண்டுகளாகும். அதற்கடுத்ததாக இரட்டிப்பு அடைவதற்கு எடுத்த காலம் 31 ஆண்டுகளாகும். இதனால் அதிகரித்து வரும் சனத்தொகைக்கு நாட்டின் வரையறுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்துவதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சனத் தொகைப் பிரச்சினைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் முயற்சிகள்**

பெருகிவரும் சனத்தொகையைக் கட்டுப்படுத்துவதற்கும், பிரச்சினைகளைக் தீர்ப்பதற்கு புதிய வழிகளை கண்டறிவதற்கும் உலக நாடுகள் பகீரத பிரயத்தனத்தில் ஈடுபட்டு வருகின்றன. ஐக்கிய நாடுகள் அமையமும் இப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து கவனம் செலுத்தி வருகின்றது. 1966 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை சனத்தொகை தொடர்பாக பிரச்சினைகளுக்கு உதவி அளிக்க முன் வந்ததோடு ஏராளமான பணத்தையும் ஒதுக்கிக் கொடுத்தது. ஐக்கிய நாடுகள் சபை 1974 ஆம் ஆண்டினை உலக சனத்தொகை வருடமாக பிரகடனம் செய்தது.

ஐக்கிய நாடுகள் சபையானது ஆசியாவில் சனத்தொகை தொடர்பான பல பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்தி வருகின்றது. அதற்காக பல்வேறு வேலைத் திட்டங்களை நிறைவு செய்து வருகின்றது.

## ஆண் பெண் சமூக நிலையும் - இலங்கையில் பெண்களுக்கு வழங்கப்படும் சமூக அந்தஸ்தும்

சமூகம் என்பது ஆண், பெண் எனும் இரு பாலாரையும் கொண்டதாகும். உலக சனத்தொகைத் தரவுகளின் படி ஆண்களும் பெண்களும் ஏறத்தாழ சம அளவிலேயே காணப் படுகின்றனர். மனித உரிமைகள் பற்றி நோக்கும் போது ஆண் களுக்கு நிகராக பெண்களும் இருக்க வேண்டும். ஆயினும் உலகின் பல நாடுகளில் பல்வேறு காரணிகளின் அடிப்படையில் ஆண்கள் பெண்களை விட சமூக அந்தஸ்து, உரிமைகள் கொண்டவர்களாக காணப்படுகின்றனர்.

பெண்கள் இங்ஙனம் அந்தஸ்து குறைந்த நிலையில் காணப்படுவதற்கு காரணங்கள் பின்வருமாறு

- திருமணம் செய்தல்
- கல்வியைப் பெறல்
- ஓய்வு பெறல், பொழுதுபோக்குகளில் ஈடுபடல்
- தீர்மானம் எடுத்தல்
- குழந்தைகளைப் பராமரித்தல்
- போசணை மட்டம்
- பாலியல் உறவு
- மரபுகள், சம்பிரதாயங்கள்
- உடல் வலிமை



7. S. P. C 000405


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானம் எடுப்பதில் ஆண்களுக்கே அதிக உரிமை காணப்படுகின்றது. பெரும்பாலும் பெண்கள் அன்றாட நடவடிக்கைகளில் பாரிய பொறுப்புடையவர்களாக காணப் படுகின்றனர். ஆண்களுக்கு பொருளாதார ரீதியாக உதவுதல் குடும்ப பிரச்சினைகளை கவனித்தல், பிள்ளைகளின் பிரச்சினை களைக் கவனித்தல் என பொருளாதார ரீதியாகவும், சமூக தேவையாகவும் பாரிய பொறுப்புகளை சுமப்பவர்கள் பெண் களாகவே விளங்குகின்றனர். "எனக்கென்றால் வானத்துக்கு போனாலும் சுதந்திரம் இல்லை" என பெண்கள் ஆதங்கப்படுவது அவர்களது மனநிலையைக் உருவாக்குகின்றது.

பல நாடுகளில் பெண்களின் அந்தஸ்து ஆணகளினை விட குறைவாகவே மதிக்கப்படுகின்றது. பல நாடுகளில் பெண்கள் தொழில் புரிவதற்குக் கூட இடம் வழங்கப்படுவதில்லை. இந்தியா போன்ற நாடுகளில் விதவைப் பெண்கள் சமூகத்தில் ஒதுக் கப்பட்ட நிலையில் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

பெண்களின் இந்நிலை பற்றி கவனம் செலுத்தும் போக்கு ஆரம்பமாகியுள்ளது. சமூக வாழ்வில் பெண்களுக்கு இயல்பான சுதந்திரத்தை வழங்க வேண்டும் என்ற சிந்தனை பரவலாக காணப்படுகின்றது.

உலகின் பெண்களின் நிலை குறித்து மேலும் விடயங்களை அறிந்துகொள்ள பின்வரும் தகவல்களை அவதானியுங்கள்.



உரு 3.7
கஷ்டப்பட்டு உழைக்கும் பெண்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“உலகிற்கு சகலதிற்கும் உணர்வினை அளிப்பது சூரிய ஒளியும் அம்மாவும் ஆகும்” (மார்க்ஸிம் கோர்க்கி).

வாழ்வுக்கு உயிரோட்டத்தையும், உலகுக்கு உறுதியினையும் தருவதில் ஆண்களுடன் சரிசம நிலையில் காணப்படுபவர்கள் பெண்களாகும். அவர்களுக்கு சகல உரிமைகளையும் வழங்குதல் வேண்டும்.

**உலகில் பெண்களுக்குள்ள அந்தஸ்து வழங்கப் பட்டுள்ளதா?**

- உலகின் வேலை செய்யும் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் பெண்களாகும்.
- உலகின் பல நாடுகளில் நீரைப் பெற பல மைல் தூரம் செல்லும் தன்மையினால் துன்புறுபவர்கள் பெண்களாகும்.
- அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் சிறுமிகளே சிறுவர் களை விட அதிகம் மந்த போசணையால் பாதிக்கப் படுபவர்கள்.



உரு 3.8
குடமேந்தி தண்ணீருக்குச் செல்லும் பெண்கள்



உரு 3.9
போசாக்கின்மையால் பீடிக்கப்பட்ட ஒருபெண்குழந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உலகில் ஆண்கள் பெறும் ஊதியத்தை விட பெண்கள் பெறும் ஊதியம் 30 தொடக்கம் 40 சதவீதத்தால் குறைவானது.
- உலகில் எழுத்தறிவின்மையில் 2 ஆண்களுக்கு 3 பெண்கள் என்ற விகிதத்தில் காணப்படுகின்றனர்.



உரு 3.10
வறுமையால் பீடிக்கப்பட்ட ஆபிரிக்கப் பெண்கள்

- உலகில் 1.3 மில்லியன் ஏழைகளில் 70 சத வீதமானோர் பெண்களாகும்.



உரு 3.11
பெண் அமைச்சர்கள்

- 1995 ஆம் ஆண்டு வரை உலக நாடுகளில் அமைச்சர்களாக பதவி வகித்தவர்கள் மொத்தத்தில் ஆறு சத வீதத்தினேராகும்.

(ஐ. நா. அமையத்தினால் வெளியிடப்பட்ட பிரசுரத்தில் இருந்து பெறப்பட்டது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற் கூறிய காரணங்களால் உலகில் பல்வேறு நாடுகளில் பெண்கள் பல்வேறு பாகுபாடுகளுக்கு உள்ளாகின்றனர்.

இதன் விளைவாக பெண்கள் தம் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக போராட்டங்களை நடத்த முற்பட்டுள்ளனர். இதன் விளைவாக:

1975 ஆம் ஆண்டு "உலக மகளிர் தினம்" பிரகடனப்படுத்தப்பட்டது.

1976-86 சர்வதேச மகளிர் தசாப்தமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

1995 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் சீனாவின் பீஜிங் நகரில் நடைபெற்ற உலக மகளிர் ஐந்தாவது மகாநாட்டில்

- மகளிர் போசாக்கு,
- மகளிர் அரசியல் உரிமை
- மகளிர் வேலையின்மை
- மகளிர் கல்வி

என்பன போன்றவை 2015 ஆண்டளவிற்குள் உலகில் சம அளவில் பேணப்படல் வேண்டும் என்ற நோக்காக ஏற்கப்பட்டது பெண்களின் வெற்றியாக கருதப்படுகின்றது.

பெண்களது பின்தங்கிய நிலையானது நாடொன்றின் பொருளாதார நிலைக்கு அல்லது அபிவிருத்திக்கு தடையாக உள்ளது எனக் கருதப்படுகின்றது. குறிப்பாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பெண்களது கல்வியினை உயர் நிலைக்கு கொண்டு வருவதன் மூலம், சிசு மரணம், மந்த போசனை நிலை போன்றவற்றினைக் குறைத்துக் கொள்ள முடியும்.

ஆசியாவில் சிசு மரணம், மந்த போசாக்கு போன்ற நிலைமைகள் மிகக் குறைந்த மட்டத்தில் இலங்கையிலும், கொரியாவிலும் மட்டுமே காணப்படுகின்றன. இந்நாடுகளில் பெண்களது கல்வி உயர் நிலையில் காணப்படுவதே இதற்கு காரணம் என்று கூறப்படுகின்றது.

உலகம் முழுவதிலும் பெண்களது நிலைகளை மேம்பாடு அடையச்செய்வதற்காக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற இவ்வேளையில் ஆண் சமூகமானது பெண்களது உயர்வினுள் அதிக அக்கறை செலுத்துவது மிக முக்கியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் பெண்களுக்கு வழங்கப்படும் சமூக நிலைமைகள்

உலகில் பெரும்பாலான நாடுகளைப் போலல்லாது இலங்கையில் வாழும் பெண்களுக்கு சகல நிலைகளிலும் உரிய அந்தஸ்து வழங்கப்பட்டு வருகின்றது. இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் கூட பெண்களின் பங்கு மகத்தானது.

**இலங்கையில் பெண்களின் நிலைமைகள்**

இலங்கையில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள அந்தஸ்தானது இன்று நேற்று அல்ல வரலாற்றுக் காலத்திலே இருந்து காணப்படுகின்றது. இவற்றுக்கு உதாரணமாக விகாரமகாதேவி, சோமாவதி போன்றோரும் கல்யாணவதி, லீலாவதி போன்ற பட்டத்து இராணிகளும் குறிப்பிடத்தக்கவர்களாகும். அத்துடன் எமது நாட்டு பெண் பிரதமரே உலகின் முதலாவது பெண் பிரதமராகும். எமது நாட்டு தற்போதைய சனாதிபதி அவர்களே உலகின் முதலாவது பெண் சனாதிபதியாக விளங்குகின்றார். அவர் ஐந்து மில்லியன் வாக்குகள் வரை பெற்றமை பெண்களின் உயர் நிலையைக் காட்டுகின்றது.

## உணவுப் பிரச்சினை

### உணவுப் பிரச்சினையின் இயல்புகள்

சனத்தொகை வேகத்தினை குறைத்துக் கொள்ள முயற்சி செய்யும் அதேநேரத்தில் உலகில் உணவுப் பிரச்சினை பிரதான பிரச்சினையாக மாறி வருகின்றது.




உரு 3.12
உணவு பற்றாக்குறை பற்றிய செய்திகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிக உணவுப் பொருட்களை அபிவிருத்தியடைந்த நாடுகள் சந்தைக்கு அனுப்புவதில்லை

உலகத்தில் உணவுப் பிரச்சினை இருப்பதாக மேலுள்ள பத்திரிகைச் செய்தி சான்று பகிர்கின்றது. உலகத்தில் உணவுப் பிரச்சினை இருப்பதற்கு முக்கிய காரணம் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்கள் ஒழுங்கான முறையில் பகிர்ந்தளிக்கப்படாமையேயாகும்.

அபிவிருத்தியடைந்த நாடுகள் விஞ்ஞான தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி தமது நாட்டுக்குத் தேவையான உணவை விடமேலதிக உணவு வகைகளை, குறிப்பாக தானியங்களை உற்பத்தி செய்தாலும் மேலதிக உணவு வகைகளை சந்தைக்கு அனுப்பாத நிலையும் உண்டு. தாங்கள் உற்பத்தி செய்யும் உணவுப் பொருட்களின் விலைகளைக் நிலையாக வைத்திருப்பதற்கு அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்காக அந்நாடுகள் கையாளும் வழிவகைகள் பல உண்டு அவையாவன; மேலதிக உணவுப் பொருட்களை அழித்தல், விளைவிக்கப்படும் நிலங்களின் அளவினைக் கட்டுப்படுத்துதல் அதனால் நட்டம் அடையும் விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்குதல் என்பனவாகும். இவ்வாறு மேலதிகமாக உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களைக் கொண்டு இலட்சக்கணக்கான மக்களின் பசிப் பிணியை நீக்க முடியும்.

தானியங்களை மிருகங்களுக்கு உணவாக வழங்குதல்

உணவுப்பழக்கமும் உணவுப் பற்றாக்குறைக்கு ஒரு காரணமாகும். அபிவிருத்தியடைந்த நாடுகள் இறைச்சி வகைகளை பிரதான உணவாக உட்கொள்கின்றனர். அதனால் தானிய வகைகளை மிருகங்களுக்கு உணவாக வழங்குகின்றனர். இவ்வாறு மிருகங்களுக்கு வழங்கப்படும் தானியங்கள் அபிவிருத்தியடைந்த நாடுகள் உணவுக்காக பயன்படுத்தப்படும் தானியங்களின் அளவிலும் அதிகம் எனக் கருதப்படுகிறது.



உரு 3.13
போசாக்கற்ற குழந்தைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமான அளவு போசனை கிடைக்காததால் மந்த போசனையால் பாதிக்கப்பட்ட குழந்தை ஒன்றின் படம் மேலே தரப்பட்டுள்ளது. எனவே உணவு தொடர்பான பிரச்சினை மட்டுமல்லாது போசாக்கு சம்பந்தமான பிரச்சினைகளும் உண்டு.


**போசாக்கின்மை**

ஒவ்வொருவரும் சுகதேகியாக இருப்பதற்கு சக்தி தரும் உணவு, வளர்சிக்கு உதவும் உணவு, பாதுகாப்புத்தரும் உணவு என்பன காணப்பட வேண்டும். ஆனால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பசியை மட்டும் முக்கியமாக கருதி சுவையற்ற தானியங்களையும், கிழங்கு வகைகளையும் உணவாக பயன்படுத்துகின்றனர். இதன் விளைவாக செயல் திறனற்றவர்களாகவும், மந்தபுத்தி படைத்தவர்களாகவும் காணப் படுகின்றனர். இதனால் குவாசிக்கோர், மரஸ்மஸ் போன்ற போசனைக் குறைபாடுள்ள நோய்களால் பாதிப்பு ஏற்படலாம். இவ்வாறு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் குழந்தை களினதும், முன் பிள்ளைப் பருவத்து பிள்ளைகளின் மரணங்களுக்கு புரதச் சத்தும், கலோரிகளின் அளவும் குறைவாக அமைந்திருப்பது காரணமாகின்றன. அபிவிருத்தி அடைந்துவரும் நாடான இலங்கையிலும் குழந்தைகளின் கலோரிப் பெறுமானம் குறைவாகவே காணப்படுகின்றது. பின்வரும் வரை படம் 3.14 அதனைக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் போசாக்குக் குறைவினைக் காட்டும் அட்டவணை (0-4 வயது) 1976




உரு 3.14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழையான நம்பிக்கைகள் சம்பிரதாயங்கள்

உணவுப் பொருட்களினால் கிடைக்கும் உச்சப் பயனைப் பெறாமல் விடுவதும், உலகத்தில் உணவுப் பிரச்சினைக்கு ஒரு காரணமாக விளங்குகின்றது. பல விதமான நம்பிக்கைகள், கலாசார அம்சங்கள் சில போசாக்குள்ள உணவுகளை உண்பதிலிருந்து மக்களைத் தடுகின்றது.

சமய நம்பிக்கை அடிப்படையில் பலர் இறைச்சி, முட்டை, மீன் போன்ற விலங்குணவுகளை உண்ணாதவர்கள் ஆசிய நாடுகளில் காணப்படுகின்றனர். தவிடு நீக்கித் தானியங்கள் உண்பதால் விற்றமின் "பி" சக்தியை இழந்து விடுகின்றனர். போசனை பற்றிய அறிவின்மையும் உணவுப் பிரச்சினைக்குக் காரணமாகும்.

## உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழி முறைகள்

1974 ஆம் ஆண்டில் உரோமபுரியில் நடைபெற்ற உலக உணவு மகாநாட்டில் உணவுப் பிரச்சினையில் உணவு உற்பத்தி, உணவு விநியோகம், போசாக்கு, உணவு சேமித்தல், உணவு பற்றாக்குறைவான நாடுகளுக்கு உதவி புரிதல் போன்றவை பற்றி ஆலோசிக்கப்பட்டது. உணவில் தன்னிறைவு அடையாத நாடுகளில் உணவு உற்பத்தியைக் அதிகரிக்க உதவிகள் வழங்குவதென்றும், தேவைப்படும் போது தானியங்களை வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

உலக உணவுப் பற்றாக்குறைவினை நீக்கிக் கொள்வதற்கும், உற்பத்தியை அதிகரித்துக் கொள்ளும் முறைகள் எவை என்பதைக் கவனிப்போம்.

உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழி முறைகள்

- உலகத்தில் விவசாயம் செய்யும் நிலப்பரப்பினை அதிகரித்தல்
- விவசாயம் செய்யும் நிலப்பரப்பில் உச்சப் பயனைப் பெற்றுக் கொள்ளுதல்
- அவசியமான நீரைப் பெற்றுக் கொள்ள நீர்பாசனத் திட்டங்களை அமைத்தல்
- கடலில் உவர்த் தன்மையைக் நீக்கி விவசாயத்துக்காக பயன்படுத்தல் (மத்திய கிழக்கு நாடுகள்)
- விஞ்ஞான, தொழில் நுட்ப திறன்களைப் பயன்படுத்தல் (நவீன உபகரணங்கள், இராசயன உரம், கிருமி நாசினி பயன்படுத்தல்)
- அதிகளவில் விளைச்சலைத் தரக்கூடிய விதையினங்களைப் பயன்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல் ஆராய்ச்சி

விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் பல உள்ளன.

இலங்கையில் பத்தலகொட, கன்னொருவை, மகா இலுப்பல்லம ஆகிய இடங்களிலும் தென்கிழக்கு ஆசியாவில் பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலா நகரத்தில் சர்வதேச ஆராய்ச்சி நிலையம் காணப்படுகிறது. இவையாவும் நெல் ஆராய்ச்சி நிலையங்களாகும்.


வீண் விரயத்தைத் தடுத்தல்

மேற்கூறிய நடவடிக்கைகளினால் தானிய வகைகளின் உற்பத்தியை அதிகரித்துக் கொள்ள முடியுமாயினும் அவற்றை எலி, காட்டு விலங்குகள் போன்றவற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்வதும் அவசியமாகும். இது விடயமாக திட்டமிட்ட முறைகளைப் பின்பற்ற வேண்டிய முறைகள் பற்றி மக்கள் விழிப்பூட்டப்பட வேண்டும்.

புரத உணவுப் பொருட்களின் விருத்தி

அவரை இனத் தாவரங்களில் இருந்தும், மரக்கறி வகைகளில் இருந்தும் புரதச் சத்து நிறைந்த உணவு வகைகளை உற்பத்தி செய்யும் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. புரதக் குறைபாட்டைக் குறைப்பதற்கு நாட்டின் விலங்கு வேளாண்மையின் தரத்தைக் உயர்த்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## வலுசக்தி பற்றிய பிரச்சினைகள்




உரு 3.15
வலுசக்தி மூலங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சக்தி மூலங்கள்**

மேலே உள்ள படத்தை அவதானிக்கும் போது பல சக்தி மூலங்களைப் பற்றியும், இதற்கு முன் நீர் விஞ்ஞான பாடத்தில் கற்றவைகளையும் ஞாபகப்படுத்திக் கொண்டு பின்வரும் விடயத்தில் கவனம் செலுத்தவும். விஞ்ஞான, தொழில் நுட்ப விருத்தியில் இன்று உலகம் மிகவும் முன்னேற்றம் அடைந்த நிலையில் இருக்கின்றது. இவைகளைப் பயன்படுத்தி நவீன உலகம் பலவிதமான பொருளாதார செயற்பாடுகளில் முன்னேறி வருகின்றது.

**சக்தி மூலங்கள்**

அடிப்படையாக இரு முறைகளினால் சக்தி பெற்றுக் கொள்ளப்படுகின்றது. அவைகளாவன உயிரியற் சக்தி, உயிரியலற்ற சக்தியாகும். உயிரியல் சக்தியானது மனிதன் அல்லது மிருகங்களின் இயக்கத்தினால் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. உயிரியலற்ற சக்தி உயிர்ச் சுவடாக்கப்பட்ட அல்லது உயிர்ச் சுவடாக்கப்படாத முதல்களினால் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. நிலக்கரி, மசகு எண்ணெய், இயற்கை வாயு என்பன சுவடாக்கப்பட்ட சக்தி முதல்களாகும். நீர், வளி, சூரிய சக்தி, அணு சக்தி போன்றவை சுவடாக்கப்படாத சக்தி முதல்களாகவும் கொள்ளப்படுகின்றன.

**மசகு எண்ணெய்**

மக்கள் பெருக்கத்துக்கு ஏற்ப மனிதத் தேவைகள் அதிகரிக்கின்றன அதற்கேற்ப தேவைகளை நிறைவு செய்வதற்காக உற்பத்திகளை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இதனால் சக்தித்தேவையும் அதிகரிக்கின்றது. நிலக்கரி, மசகு எண்ணெய் போன்ற சக்தி முதல்கள் தேய்வடையக் கூடியன. திரும்பவும் அவைகள் பழைய நிலையை அடைய நீண்ட காலம் எடுக்கும். நவீன தொழில் நுட்ப விருத்தியில் சக்தி முதல்களில் மசகு எண்ணெய் பிரதான இடத்தைப் பிடிக்கின்றது. வாகனங்கள், இயந்திரங்களை இயக்குவதற்கு அதிகளவு மசகு எண்ணெய் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் மசகு எண்ணெயின் கேள்வி அதிகமாகும். ஒரு அலகு மசகு எண்ணெயினால் உற்பத்தி செய்யப்படும் சக்தியின் அளவை ஒப்பிட்டுப் பார்க்கும் போது மற்ற சக்தி முதல்களால் உற்பத்தி செய்யப்படும் சக்தியின் அளவு குறைவானதாகும். அதே போல் மசகு எண்ணெய் அகழ்வது, இடத்துக்கு இடம் எடுத்துச் செல்வது சுலபமானது. இதனால் மசகு எண்ணெயின் கேள்வி அதிகமாகும். என்றாலும் உலகில் மசகு எண்ணெய் ஒரு வரையறுக்கப்பட்ட அளவே காணப்படுகின்றது. இதனால் எதிர்காலத்தில் தோன்றப்போகும் தொழில் நுட்பத் தேவைகளுக்கு போதுமானதாக இருக்கப் போவதில்லை. சக்திப் பற்றாக் குறைவினால் எதிர்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழில்கள் முடங்கி விடுமா? போக்கு வரத்துச் சேவை தடைப்பட்டு விடுமா? என்பன கேள்விக் குறியாகவே உள்ளன.

கீழே தரப்பட்ட படத்தை அவதானிக்கவும்




உரு 3.16

**மாற்று சக்தி மூலங்கள்**

மசகு எண்ணெய்க்குத் தட்டுப்பாடு ஏற்படும் போது வாகனங்களுக்கு வேறு வகையான சக்தி முதல்களைப் பாவிப்பதற்கு உற்சாக மூட்டும் விதம் மேலேயுள்ள 3.6 படம் எடுத்துக் காட்டுகின்றது.

**நீர் மின்சாரம்**

மசகு எண்ணெய்க்குப் பதிலாக மாற்றுச் சக்தி முதல்களை நாடுவதற்கு தற்போது மனிதர்கள் முயற்சி செய்கிறார்கள். அணுசக்தி, இயற்கை வாயு, உயிர் வாயு, சூரிய சக்தி, கடலலைகள், வளி போன்றன சக்தி முதல்களாக உபயோகிப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது, இது தவிர இப்பொழுது நீரினால் பெறப்படும் சக்தியை அதிகரிப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது, நீர் மின்சார உற்பத்தியின் போது சூழல் மாசடைவது மிகக்குறைவாகும். எனினும் நீர் மின்சார உற்பத்திக்கு சீரான கால நிலையும், பௌதீகச் சூழலும் அவசியமாகும். நீர்மின்சாரம் அதிகளவில் உற்பத்தி செய்யும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

**அணுசக்தி**

அணு சக்தி உற்பத்திக்கு யுரேனியம், தோரியம் போன்ற இரண்டு வகையான கனிப் பொருட்கள் அவசியமாகும். அதே போன்று விசேடமான விஞ்ஞான, தொழில் நுட்ப அறிவும் அவசியமாகும். இன்னும் அணு சக்தி உற்பத்தி செய்யும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியாகும் கதிர்கள் மனிதர்களைப் பாதிக்கக் கூடியதாக அமையும். இதனால் ஒரு சில நாடுகள் மட்டுமே அணு சக்தியைப் பயன்படுத்துகின்றனர்.

**சூரிய சக்தி**

பொதுவாக எல்லா நாடுகளிலும் ஓரளவுக்கு சூரிய சக்தி பெறப்படுகின்றது. இதனால் சூழல் மாசடைவதில்லை. என்றாலும் சூரிய சக்தியைப் பயன்படுத்துவதற்கு விஞ்ஞான தொழில் நுட்ப அறிவோடு அதிகளவு முதலீடும் தேவையாக உள்ளமை ஒரு பிரச்சினையாகும். இப்பொழுது பல நாடுகள் சூரிய சக்தியைப் பயன்படுத்துவதற்கு முயற்சி செய்கின்றன.

**சக்தி வளப் பாதுகாப்பு**

உயிர் வாயு விசேடமாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் சக்தி மூலமாகும் அது குறைந்த முதலீட்டைக் கொண்டு பிரதேச வாரியாக உற்பத்தி செய்து கொள்வதற்கு வாய்ப்பு இருப்பது அனுகூலமாகும். தேய்வடைந்து வரும் சக்தி முதல்களுக்கு பதிலாக மாற்றுச் சக்தி முதல்களைப் தேடுதலில் ஈடுபட்டிருக்கும் மனிதன் சக்தி மூலங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக முயற்சி எடுத்தல் வேண்டும்.

எண்ணிலடங்கா மனிதத் தேவைகளை நிறைவு செய்யும் பொழுது அதிக அளவு வணு சக்தியை நுகரவேண்டியுள்ளது. அதன் விளைவாக சக்தி வளங்கள் அருகிக்கொண்டே செல்கின்றன. ஆகவே விஞ்ஞானிகள் இதற்குப் பரிகாரமாக மாற்று வே'றுசக்தி மூலங்களை கண்டுபிடிப்பதில் அக்கறை கொண்டுள்ளனர். அத்துடன் தற்போது பயன்படுத்திவரும் வலுசக்தி செலங்களைப் பாதுகாப்பதிலும். கரிசனை கொள்ள வேண்டும்.

- உலகின் சக்தித் தேவையில் பத்துச் சதவீதம் விறகுகளினால் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.
- இலங்கையில் அதிகமாக பயன்படுத்தப்படும் எரிபொருள் விறகாகும்.
- சக்தியைச் சிக்கனமாக பயன்படுத்துவதற்கு உங்களால் முடியுமா?

**இலங்கையின் எரிபொருள் பாவனை தொடர்பாக அறிய வேண்டியவை.**

- மிகவும் பயனுள்ள அடுப்பு உபயோகித்தல்
- விறகுக்கு பதிலாக மரத் தூள், உமி என்பவற்றைப் பயன் படுத்துதல்
- சூரிய சக்தியை உபயோகித்தல்.
- தேவையற்ற நேரங்களில் மின்சார விளக்குகளையும், விசிறிகளையும் அணைத்து வைத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முடியுமான அளவு பொதுப் போக்குவரத்துச் சேவை களைப் பயன்படுத்தல்
- எரிபொருட்களை வீணாக்கும் இயந்திரங்களை பயன்படுத்தாது விடல்
- மாற்றுச் சக்தி முதல்களைப் பெற்றுக் கொள்ளல்

## சூழல் மாசடைதல்

சூழலை பிரதான இரு கூறுகளாகப் பிரிக்கலாம்

மக்களின சுற்றாடல் சூழலாகும். இயற்கைச் சூழல், கலாசாரச் சூழல் என சூழல் இரு வகைப்படும். நிலம், நீர், மண், விலங்கு கள், வளி மண்டலம் ஆகியவை இயற்கைச் சூழலாகும். மானிடத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக அமைத்துக் கொண்ட சூற்றாடல் கலாசார சூழலாகும். கட்டிடங்கள், பயிர்கள், நிலங்கள், தொழிற்சாலைகள், சமய, கலை நிர்மாணங்கள் கலாசார சூழல் ஆகும்.

மனிதன் தனது தேவைகளை நிறைவு செய்யும் போது சூழலில் மாற்றத்தை ஏற்படுத்து கிறான்

18 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சியின் பின் மனிதன் தேவைகளை துரிதமாக பூர்த்தி செய்து கொள் வதற்காக இயந்திரங்களை பாவிக்க தலைப்பட்டனர். இதனால் சூழல் துரிதமாக மாறிற்று. மனிதர் தோன்றிய காலத்திலிருந்து 18 ஆம் நூற்றாண்டு வரையில் சூழலில் ஏற்பட்ட மாற்றங்களை விட கடந்த 200 ஆண்டுகளில் அதிக மாற்றம் சூழலில் ஏற்பட்டது.

மனிதன் திட்டமின்றி இச் சூழலைப் பயன்படுத்தியதினாலே இம்மாற்றங்கள் ஏற்பட்டன. மனிதர்களும் சூழலின் ஒரு பகுதியாகும்.

மனிதன் திட்டமிடாத வேலைத் திட்டங்களினால் இன்று மக்கள் வாழ்வதற்கு பொருத்தமற்ற நிலைக்கு சூழல் மாற்ற மடைந்துள்ளது.

தரம் 11 இல் கற்கும் சாந்தனின் தினக்குறிப்புப் புத்தகப் பக்கமொன்றில் எழுதியுள்ள விடயங்கள் எவை என்பதை அவதானிப்போம்.

- நான் இன்று தந்தையுடன் கொழும்பில் உள்ள மாமி வீட்டுக்குச் சென்றேன்.
- வாகனங்களின் ஒலியும், அதிஷ்ட சீட்டு விற்கும் வாகனங் களின் ஒலிபெருக்கிச் சத்தமும் எனது காதுக்கு புதுமையான அசௌகரியத்தையும் ஏற்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாதையோரங்களில் குவிந்து கிடக்கும் அழுக்குகளின் அருகில் போகும் போது நாசியை அடைத்துக் கொள்ள நேர்ந்தது.
- களனி ஆற்றில் அழுக்கு பெருக்கெடுத்து ஓடியது.
- வாகனங்களின் இட நெருக்கடியோடு, அவைகளிலிருந்து வெளியாகும் புகையும் எனக்கு சுவாசிப்பதற்கு கஷ்ட நிலையை உருவாக்கியது.

நீங்கள் இப்பொழுது வாசித்தறிந்தது எமது நாட்டின் நகரமொன்று சாந்தனுக்கு ஏற்படுத்திய பிரச்சினைகளாகும். இப் பிரச்சினைகளுக்கு காரணங்கள் யாவை? அவற்றுக்கு பொறுப்பாளிகள் யாவர்? இவ் உலகில் வாழ்கின்ற மனிதர்கள் சூழல் சமநிலையைப் பாதுகாத்தல் வேண்டும். சூழலில் ஏற்படும் சமனற்ற நிலை சூழல் மாசுபடுதலாகும்.

**சூழலில் சமனற்ற நிலையை ஏற்படுத்தும் மனித நடவடிக்கைகள்**


மனிதனின் செயற்பாடுகளினால் சூழல் பலவிதமாக மாசடைகின்றது. இதனால் இயற்கைச் சூழல் மாற்றமடையும். இலங்கையில், வன அழிப்பு, தென் பகுதிக் கடலில் சுண்ணாம்புக் கல் அகழ்தல், நீர் நிலைகளிலிருந்து மணல் அளவின்றி அள்ளுதல் போன்றவை சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்துவனவாகும். இதே போன்று தாழ் நிலங்களை நிரப்புதல், மாடிக் கட்டிடங்கள் அமைத்து நகரமயமாக்குதல், இரத்தினக் கல் அகழ்தல், ஓடு, செங்கல் போன்றவை செய்வதற்கு நிலத்தை தோண்டி மண் எடுத்தல் ஆகியன சூழலின் சமனற்ற நிலையைக் ஏற்படுத்தக் கூடியவை.

இவ்வாறான செயல்களினால் வளி, நிலம், நீர் போன்றவை மாசடைகின்றன. மனிதரின் வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்கும் முயற்சியிலேயே இவ்வாறான சூழல் மாசடைதல் ஏற்படுகின்றது. மனிதனின் சகல தேவைகளும் நிறைவேற்றிக் கொடுக்கும் சூழலுக்கு மனிதன் செய்யும் பிரதி உபகாரம் இதுவாக அமைகின்றது. சூழலில் பிறந்து வாழும் மனிதன் அழுக்குகளைப் போட்டு எரித்து நச்சு வாயுக்களைச் சேர்த்து சூழலைக் அழிக்க முயற்சி செய்கின்றான்.

மண்ணைப் பாதுகாத்தல், நகரமயமாக்கல், வன அழிப்பு, நீர் மாசடைதல், மிருகத் தொகுதியின் அழிப்பு ஆகியன இன்று உலகத்தில் பிரதான பிரச்சினைகளாக காணப்படுகின்றன. மனித செயற்பாடுகளில் சூழலைக் அவதானிக்காது மனிதன் தன் வளர்ச்சியில் கவனம் செலுத்திக் கொண்டிருப்பதை பின் வரும் படம் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 3.17
மனித நடவடிக்கைகள் சுற்றாடலை மீறிச்செல்லும் விதம்

இவ்வாறு சூழல் மாசடைதல், வளங்கள் தேய்வடைதல் உலக நிலையை எதிர்காலத்தில் எவ்வாறு அமையும் என்று கூற முடியாது. இன்று எவ்வாறு சூழல் மாசடைகின்றது என்பதைக் கவனிப்போம். பிரதானமாக அவை மூன்று வகைப்படும். வளி மாசடைதல், நிலம் மாசடைதல், நீர் மாசடைதல் என்பன அவையாகும். தற்போதைய உலகில் சூழல் மாசடையும் வழிவகைகளைக் கவனிப்போம்.

- வாகனங்களும் தொழிற்சாலைகளும் வெளிவிடும் நச்சு வாயுக்கள்
- தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் இரசாயனக் கழிவுகள்
- கிருமி நாசினிகள்
- இத்துப் போன பல பொருட்கள்
- குப்பை கூளங்கள்
- அழிவை உண்டாக்கும் அணுப் பொருட்கள்

நிலம் மாசடைதல்

நிலம் மாசடைதல்

நிலத்தில் பிரதானமாக மாசடைந்த மண் வகை மனிதனைப் பாதிக்கின்றது. தற்காலத்தில் விவசாய நடவடிக்கைகளுக்காக அதிகமான இரசாயனப் பொருட்களை பாவிப்பதனால் அவை மண்ணில் கலந்து மண்ணின் இயற்கைத் தன்மையைக் நீக்கி



8. S. P. C 000405
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நச்சுத் தன்மையைப் பெறுகின்றது. அதேபோல் விவசாய நிலங்களுக்கு போட்டிஇருப்பதனால் படி முறை வேளாண்மை மேற்கொள்ளப்படுகின்றது. அதில் உரிய முறைகளைக் கையாளா விட்டால் மண்ணின் செழிப்புத் தன்மை நீக்கப்படுவதோடு மண்ணும் கரைந்து செல்லக் கூடும்.

அதேபோன்று அன்றாட நடவடிக்கைகளின் போது வீடுகளில் இருந்து வெளியேற்றப்படும் குப்பை கூளங்களை ஆங்காங்கு குவிப்பதனாலும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்கள் மற்றும் இத்துப்போகாத பொலித்தீன் பிலாஸ்டிக் போன்ற பொருட்கள் ஆங்காங்கே இடுவதனாலும் நிலம் மாசுபடுகிறது.

**மண்ணினைப் பாதுகாக்கும் முறைகள்**

- மண்ணைப் பாதுகாப்பதற்கு கல் அரண்களைக் கட்டுதல்
- மண் பாதுகாப்புக்காக தாவரங்களை நாட்டுதல்
- சீரான, பாதுகாப்பான வடிகால் முறையைப் பேணுதல்
- இராசயனக் கிருமி நாசினிகளுக்கு பதிலாக இயற்கையான முறைகளைப் பயன்படுத்தல் உதாரணமாக இலங்கையில், வேப்பங்காய்களைக் கரைத்துத் தெளித்தல். சாணத்தைப் பயன்படுத்தல், சாம்பல் விசுறுதல்
- இரசாயன உரங்களுக்கு பதிலாக இயற்கை உரங்களைப் பயன்படுத்தல் உதாரணம் கூட்டெருவினைப் பயன்படுத்தல்

**வளி மாசடைதல்**

வளி மாசடைதல்

மனிதர்களின் செயற்பாடுகளினால் வளி மண்டலத்தில் கலக்கும் பொருட்களினால் வளி மாசடைகின்றது. நிலக்கரி, இயற்கை வாயு, எரிபொருட்கள் ஆகியவற்றை எரிப்பதனாலும், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் வாயுக்களும் இதற்கு காரணமாக அமைகின்றன. அதற்குப் புறம்பாக அதிவேகமாக உயரப் பறந்து செல்லும் சுப்பசோனிக் விமானங்கள் (ஒலியிலும் வேகமான விமானங்கள்) மற்றும் விண்கலங்கள் போன்ற வற்றிலிருந்து வெளியேறும் நச்சு வாயுக்களும் குளிரூட்டும் சாதனங்கள் பாவிப்பதனால் வளிமண்டலத்தில் சேறும் குளோரோபுளூரோகாபன் (CFC) போன்றவற்றினாலும் புகைப்பிடிப்பதனால் வெளியேறும் நிக்கொடின் போன்ற சில நச்சு வாயுக்களினாலும் வளிமண்டலம் மாசடைகிறது. வளி மாசடைதலுக்கு எல்லை இல்லை மாசுபடுத்தப்பட்ட வளி காற்றின் மூலமாக இடங்களுக்கும் பரவும். மாசுபட்ட வளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களைப் போன்று மிருகங்களையும் தாக்கக் கூடியது. இதனால் அமில மழையும் ஏற்படலாம்.

வளிமாசடைதலால் பாதிப்படையும் கட்டிடங்களைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு அமெரிக்க அரசாங்கம் 2 மில்லியன் டொலர்களைச் செலவு செய்வதென கணக்கிடப்பட்டுள்ளது. வளி மாசடைவதால் மனிதரின் சுவாசத்தொகுதி பாதிப்படைகின்றது. நச்சு வாயுக்கள் வளியுடன் கலக்காது பாதுகாப்பதின் மூலம் வளி மாசடைதலைத் தடுக்கலாம்.

### நீர் மாசடைதல்

நீரை உபயோகிக்க முடியாத நிலை, நீரின் இயற்கைத்தன்மை மாறுபடல், நீரில் வேறு பொருட்கள் சேர்தல் போன்றவை நீர் மாசுபடுதலைக் குறிக்கின்றன.

நீர் மாசடைதல்

நீர் மாசடைதலுக்குரிய காரணங்கள்

- கழிவுப் பொருட்கள் நீருடன் சேர்தல் (வீட்டு, விலங்கு, தொழிற்சாலைக் கழிவுகள்)
- நோய்க் கிருமிகள் நீரில் வாழ்தல்
- நச்சுத் தன்மை வாய்ந்த உலோகங்கள் சேர்தல்
- கிருமி நாசினிகள் நீருடன் ஒன்று சேரல்
- செயற்கை அசேதன இரசாயனப் பொருள்கள் சேர்தல்

இவ்வாறு கழிவுப் பொருள்கள் நீருடன் கலப்பதில் செல்வாக்குச் செலுத்தும் மனித நடவடிக்கைகளை இனங்காணவும் சுற்றாடலுக்கு ஏற்படும் கேடான செயன் முறைகளைக் குறைத்துக் கொள்ளவும் முயற்சி செய்வது உங்களது தலையாய கடமையாகும்.

**21 ஆம் நூற்றாண்டில் நீரைப் பகிர்ந்து கொள்ளும் பிரச்சினையில் யுத்தம் தோன்றலாம்**

மேற்கூறிய நிலை இப்பொழுது உலகில் தோன்றியுள்ளன. நீரை வீண் விரயஞ் செய்தல், நீரைக் அசுத்தப்படுத்தல், வேகமாக நகரமயமாக்கல் திட்டங்களால் நீரின் தேவை அதிகரிப்பு போன்றவைகளில் நீர் தொடர்பாக அதிகம் கவனம் செலுத்தப்பட வேண்டும். சிக்கனமாகவும், பாதுகாப்பாகவும் நீரை உப யோகிக்காத காரணத்தால் இன்று இலங்கையில் 114 மில்லியன் லீட்டர் நீர் வீணடிக்கப்படுகின்றது எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

தற்போதைய உலகம் சப்தத்தினால் மாசடைகின்றது என்பது அடுத்த பிரச்சினையாகும். ஒலி பெருக்கி, தொழிற்சாலைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனங்கள், புகையிரதம், ஆகாய விமானங்கள் போன்ற வைகளினால் வெளியிடப்படும் சத்தம் இதற்கு காரணமாகும். அத்துடன் பொப்பிசை போன்ற பாடல்கள் மூலம் வெளியாகும் இசையொலிகளும் இதற்கு உதாரணமாகும்.

சூழல் மாசடைதலைச் சிந்திக்கும் போது கலாச்சாரச் சூழலும் பாதிப்படைகின்றது என்பதும் கவனத்தில் எடுக்கப் பட்டுள்ளது. கலாசாரச் சூழல் மாசடைதல் என்பது சமூக நிலையும் மானிடப் பண்புகளும் பாதிப்படைந்த நிலையாகும். இன்று முழு உலகமும் இந் நிலைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. மானிடப்பண்புகள், கலாசாரம் போன்றவற்றைப் பேணுவதால் கலாசார சூழலைக் பாதுகாக்கலாம்.

சூழல் மாசடைதலைக் பாதுகாத்தல் பொருளாதார அபிவிருத்தியுடன் இணைந்து போக வேண்டிய தொன்றாகும். பொருட்களிலும் சேவைகளிலும் தரப்படுத்தலைத் தடுக்க முடியும் என்பதை அவதானிக்க முடிகிறது.

**கூட்டுக் குடும்பமாக வாழ்வதனால் ஏற்படும் நன்மைகளும், தனிக் குடும்பமாக வாழ்வதால் ஏற்படும் சவால்களும் அவற்றை எதிர்நோக்கலும்**

**குடும்ப வாழ்க்கைக் கல்வி நிகழ்ச்சித் திட்டம்**

இலங்கையின் ஆரம்ப காலத்தில் இருந்து கூட்டுக் குடும்ப வாழ்க்கையே பெரிதும் காணப்பட்டது. கணவன், மனைவி, பிள்ளைகள், மாமன், மாமி, சகோதரர்கள், பேரன், பேத்தி போன்றோர் ஒன்றாக வாழ்வதே கூட்டுக் குடும்ப வாழ்க்கையாகும். அதன் விளைவாக பரஸ்பர உதவிகள், பாதுகாப்பு, ஆலோசனைகள் என்பன கிடைக்கக் கூடியதாக அமைந்தது. ஆனால் இன்று தாய், தந்தை, பிள்ளைகள் மட்டும் தனிக் குடும்பங்கள் பெருகி வருவதைக் காணலாம். தாய் தந்தை இருவர்களுமே தொழிலுக்குச் செல்வதாக அமைவது இன்றைய போக்காக அமைகிறது. அதனால் பிள்ளைகளை நன்கு பராமரிக்க முடியாமல் போவதும், பிள்ளைகளுடன் பொழுதுபோக்க முடியாது போவதும் அதன் விளைவாக பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையில் தொடர்புகள் விரிவடைந்து செல்வதும் காண முடிகிறது. இவ்வாறானவை தூரகிழக்கு நாடுகளில் அதிகம் காணப் படுகின்றது.

உலகின் பல்வேறு நாடுகளிலும் மக்களது நலன்களில் அக்கறை கொண்ட ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம், ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம், ஐக்கிய நாடுகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளுக்கான நிதியம் என்பன பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவு செய்து வருகின்றது.

- குடும்ப வாழ்க்கைக் கல்வித் திட்டம்
- தாய் சேய் போசாக்குத் திட்டம்
- எயிட்ஸ் நோய்த் தடுப்புத் திட்டம்
- சனத்தொகையும் குடும்ப வாழ்க்கைத் திட்டமும்
- சனத்தொகையும் இனப்பெருக்க சுகாதாரமும்
- மக்கள் சுகாதாரக் கல்வி நிகழ்ச்சித் திட்டம்

மேற் கூறிய நிகழ்ச்சித் திட்டங்கள் ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்கால, எதிர்கால சந்ததியினருக்காக இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

## பயங்கரவாதத்தின் தன்மைகளும் அதனால் மக்களது வாழ்வினில் ஏற்படும் தாக்கங்கள்

**பயங்கரவாதம்**

உலகில் எதிர் நோக்கப்படும் பிரச்சினைகளில் பயங்கரவாதமும் ஒன்றெனலாம். இன்றைய உலகில் பல்வேறு நாடுகளில் பல காரணங்களுக்காக பயங்கரவாத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தென் ஆசிய வலயத்திலும் பொதுவான ஒரு பிரச்சினையாக "பயங்கரவாதம்" இன்று காணப்படுகின்றது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் மாத்திரமன்றி அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் இப்பிரச்சினை காணப் படுகின்றது.

சனநாயக நடவடிக்கைகளில் இருந்து விலகி, வன் செயல்கள் மூலம் தமது குறிக்கோள்களை அடைய முயற்சிக்கும் ஒரு நடவடிக்கையாக பயங்கரவாதம் காணப்படுகின்றது. தேசிய படைகளுடன் நேராக அல்லது கெரில்லா மறைந்திருந்து தாக்கும் முறையினால் பாரிய சேதங்கள் ஏற்படுகின்றன. நாடுகளின் அரசியல் தலைவர்களைக் கொலை செய்தலில் இருந்து தற்கொலைப் பாணியிலான தாக்குதலும் பயங்கர வாதத்தில் கையாளப்படுகின்றன. மேலும் கொள்ளைகளில் ஈடுபடுதல் என்பதும் பயங்கரவாதத்தின் பண்பாகும். பயங்கரவாதத்தின் காரணமாக அகதிகள், அநாதைகள் தொகை நாளுக்குநாள் அதிகரித்துச் செல்வதும் காணக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகதிகள் தோன்றுவதற்கான காரணங்களும், அதனால் சமூகத்தில் ஏற்படும் தாக்கங்களும்

"சயரில் இருந்து அகதிகளை ஏற்றிக் கொண்டு ருவண்டா நாட்டினை நோக்கிச் சென்ற புகையிரத வண்டி ஒன்று விபத்துக்குள்ளாகியது. இதனால் 91 நபர்கள் கொல்லப்பட்டனர்" என்ற தொலைக் காட்சிச் செய்தியை அவதானித்துக் கொண்டிருந்த பிரியாவிற்கு இச் செய்தி பாரிய மனத்தாங்கலை ஏற்படுத்தியது. இதனால் அடுத்த நாள் வகுப்பாசிரியரிடம் பல விடயங்களைத் கேட்டறிந்து தனது தினக் குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்து கொண்டாள். அதனை தற்போது வாசித்துப் பார்ப்போம்.

மக்கள் சமூகத்தில் அடிப்படைவசதிகள் எதுவும் இன்றி வாழத்தலைப்படும் மக்கள், அகதிகள் என இனங்காணப்படுவர். முதலாம் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்பே உலகளாவிய ரீதியில் அகதிகள் பிரச்சினை உருவாகியது. பல்வேறு நாடுகளில், இடம்பெறும் உள் நாட்டுப் போர்கள் காரணமாகவும், நாளுக்கு நாள் அகதிகள் பிரச்சினைகளும் தொகையும் அதிகரித்து வருகின்றன.



உரு 3.18
அகதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் திடீரெனவரும் யுத்தத்தினால், உயர் பாதுகாப்பு பெற வேண்டும் என்ற நோக்கினால் ஒரு பிரதேசத்தில் இருந்து இன்னொரு பிரதேசத்துக்கு அல்லது ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்கு தமது சொத்துக்களை இழந்து செல்ல தலைப்படும் மக்களை அகதிகள் என அழைப்போம். அகதிகள் குறிப்பாக ஆப்கானிஸ்தான், அங்கோலா, ருவண்டா, சோமாலியா, அயர் போன்ற நாடுகளில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. உலகில் பல நாடுகளுக்கும் பெருந்தொகையில் வருவதால் அதுவும் ஒரே சமயத்தில் வந்து சேர்வதினால் அகதி மக்களுக்கு அடிப்படை வசதிகளை அளிப்பதில் பாரிய இடர்ப்பாடுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அகதிகள் வருகையால் நாடுகளில் இன முரண்பாடுகளும், சமய கலாசார முரண்பாடுகளும் ஏற்படுகின்றன. அத்துடன் நாடுகளின் ஸ்திரத்தன்மையையும் பாதிப்பதாக அமைகின்றது. இதனால் சர்வதேச ரீதியில் இப்பிரச்சினை கவனத்தை ஈர்த்துள்ளது. 1996 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் அறிக்கைப் படி உலக அகதி மக்கள் தொகை 29 மில்லியன்கள் அளவில் உள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இவர்களுக்கு அடிப்படை வசதிகளை அளிப்பதில் பாரிய இடர்ப்பாடுகள் தோன்றியுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையானது அகதிகளுக்கான நலன்களை கவனிப்பதில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## அகதிகள் தோன்றுவதற்கான காரணிகள்

அகதிகள் பிரச்சினைக் கான காரணங்கள்

- அரசியல் நெருக்கடி
- நாட்டின் எல்லைப் போர்
- பயங்கரவாத நடவடிக்கைகள்
- குல பேதங்கள்
- சமய நெருக்கடி
- இனவாதப் பிரச்சினைகள்

பொஸ்னியா

ருவாண்டா

சோமாலியா போன்ற நாடுகளே அகதிகளால் பெரிதும் பாதிப்படைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிய ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட பல்வேறு நெருக்கடிகள் காரணமாக பாதுகாப்பு பெறும் நோக்கில் பெரும் தொகையான மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர். அகதிகளால் அதிகளவில் பாதிப்படைந்த நாடாக விளங்குவது சோமாலியாவாகும். சோமாலியாவில் 1980 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நெருக்கடியினால் 1.8 மில்லியன் மக்கள் அகதிகளாயினர். அவர்கள் வாழும் அகதிகள் முகாம்கள் நிரந்தர வசிப்பிடங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. எதியோப்பியாவில் காணப்படும் அகதிகளது தொகை 11000க்கும் அதிகமாகும். தன்சானியாவில் 150000 மக்கள் புரூண்டி நாட்டிலிருந்து போய் தஞ்சம் பெற்றுள்ளார்கள்.

நாட்டில் அகதிகள் வருகையால் எதிர் நோக்கும் பிரச்சினைகள்

அகதிகளின் வருகையால் எதிர் நோக்கும் பிரச்சினைகள்

- அகதி முகாம்களில் வசதிகளை அளிப்பது
- தீவிரமாக அதிகரிக்கும் சனத்தொகை தொடர்பான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தல்
- அதிக சனத்தொகை நெருக்கடி ஏற்படல்
- இடம் தொடர்பான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தல்
- நாட்டின் தேசிய கலாசாரம், சமய பண்பாட்டில் தாக்கம் ஏற்படல்
- பொருளாதார ரீதியாக ஏற்படும் தாக்கங்கள்
- நாட்டின் ஸ்திர தன்மை பாதித்தல்
- அடிப்படை வசதிகளை வழங்குவதில் ஏற்படும் துஷ்பிரயோகம்

1998 ஆம் ஆண்டு உரிமைகள் தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையின் படி மக்களுக்கு எந்தவொரு பிரதேசத்திலும் பாதுகாப்புக் பெற்றுக் கொள்ளும் உரிமை உண்டு. இதன் காரணமாக எந்தவொரு அரசுக்கும் பாதுகாப்பு அளிக்க நெருக்குதல் ஏற்படுத்த முடியும். அகதிகள் பிரச்சினை நாள் தோறும் அதிகரித்து வருவதால் அதனை முடிவுக்கு கொண்டு வருவது என்பது முடியாத கருமமாக அமைகின்றது.

சுருக்கம்

இன்றைய உலகில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. சனத்தொகை அதிகரிப்பு அதில் ஒன்றாகும். சனத்தொகைக்கும், வளங்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள சமமின்மையே அதற்குக் காரணமாகும். இன்று இதனால் பட்டினி, போசாக்கின்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன ஏற்பட்டுள்ளது. இப் பிரச்சினையானது ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பெரும்பாலான சக்தி வளங்கள் இன்று அருகி வருகின்றன. இதனால் சக்தி வளங்களைப் பாதுகாக்க வேண்டிய நிலை இன்று தோன்றியுள்ளது. இதற்காக விஞ்ஞான அறிவினையும், தொழில் நுட்ப அறிவினையும் பயன்படுத்தி புதிய சக்தி முதல்களைக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. சூழல் மாசடைதல் மற்றொரு பாரிய பிரச்சினையாகும். மனித நடவடிக்கைகளே சூழல் மாசடைவதற்கு முக்கிய காரணமாகும்.

பெண்களுக்குரிய உரிமைகளைப் பாதுகாப்பது இன்றைய தேவையாகும். வன் செயல் காரணமாக பல்வேறு மனிதப் படுகொலைகள் ஏற்படுகின்றன. உலகில் நாளாந்தம் அகதிகள் தொகை அதிகரித்து வருகின்றது. இவ்வாறான பிரச்சினைகளை களைவதற்கு முன்னெடுத்து செல்வது அவசியமாகும்.

செயற்பாடுகள்

1. "2015 ஆம் ஆண்டளவில் உலக சனத்தொகை அளவு 8000 மில்லியன்களாக அதிகரிக்கும் போது ஏற்படும் சமூக பொருளாதாரப் பிரச்சினைகள்" என்ற தலைப்பில் பத்திரிகை ஒன்றிற்கு கட்டுரை வரைக.
2. "உலக வளங்களை சரிவர முகாமைத்துவம் செய்யப்பட்டால் உலக உணவுப் பிரச்சினை தோன்ற மாட்டாது" என்ற தலைப்பில் விவாத அரங்கிற்கு சாதக, பாதகமாக தகவல்கள் சேகரிக்கவும்.
3. "சக்தி வளப்பிரச்சினைக்கு தீர்வு" என்ற கருவில் கையெழுத்துப் பிரதி ஒன்று தயாரிக்குக.
4. உமது பாடசாலையில் பொலித்தீன் பாவனையைத் தடுப்பதற்காக ஒரு திட்டத்தினைத் தயாரிக்குக.
5. "இலங்கையில் பெண்களுக்கு வழங்கப்படும் உரிமைகள என்ற தலைப்பில் சமூக விஞ்ஞான மன்றத்தில் உரையாடும் பொருட்டு ஓர் உரையைத் தயாரிக்குக.
6. உலக பயங்கரவாதமும், அகதிகளும் என்ற தலைப்பில் கற்பதற்காக படங்களைக் சேகரித்து ஒருசிறிய கையேடு ஒன்று தயாரிக்குக. (பத்திரிகை, சஞ்சிகைப் படங்கள் மட்டும்)
7. உமது பாடசாலையில் "குடி நீர் பாதுகாப்பு" தொடர்பான வேலைத்திட்டம் ஒன்றினை உமது ஆசிரியர் துணையுடன் செயற்படுத்துக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் அத்தியாயம்

# சனநாயகம்

**இலங்கையின் பழைய மன்னராட்சியில் நிலவிய சனநாயக இயல்புகள்**

நவீன உலகின் பெரும்பாலான நாடுகளில் சனநாயக ஆட்சி முறை காணப்படுகின்றது. இவ் ஆட்சி முறையின் இயல்புகள் இப்போது மட்டுமன்றி பண்டைக்காலத்தில் நிலவிய ஆட்சி முறைகளிலும் கூட இருந்தமைக்கு வரலாற்றுச் சான்றுகள் உண்டு. கி. மு. ஆறாம் நூற்றாண்டுக்கு பழைமையான காலத்திலும் கூட இந்தியாவில் மக்கள் சார்ந்த அரசுகள் இருந்ததாக 'லிச்சவ் அரசர்களின்' வரலாற்றை ஆராயும் போது தெரியவருகிறது அதே போன்று அநுராதபுர பொலன்நறுவைக் காலத்திலும் எமது நாட்டில் நிலவிய மன்னராட்சி முறையிலும் இந்த இயல்புகள் காணப்பட்டன. அன்று அரச சபையில் அமர்ந்த அரசன் நாட்டின் நிர்வாக விடயங்கள் தொடர்பாக அமைச்சரவையின் கருத்துக்களைக் கேட்டு தீர்மானங்கள் மேற்கொண்டதாக வரலாறு கூறுகின்றது.



உரு 4.1

முதலாம் பராக்கிரமபாகுவின் அரச மண்டபம்

பண்டைக் காலத்தில் இலங்கையில் வழக்கிலிருந்த கம்சபா (கிராம சபை) முறையில் சனநாயகப் பண்புகள் இருந்ததைக் காணலாம். கிராமத்தின் பொது விடயங்களைக் கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த கிராமத் தலைவன் மக்களின் விருப்பத்தின் பேரிலேயே நியமிக்கப்பட்டான் எனத் தெரிய வருகிறது. அத்துடன் பண்டைய பிக்குகள் சமூகத்திலும் சனநாயக இயல்புகள் வெளிப்பட்டதாக போயாக் கருமங்களை நிறைவேற்றும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றிய நடை முறைகள் மூலம் தெளிவாகின்றது. அங்கு ஒழுங்குகளை மீறிய பிக்குகள் விடயத்தில் கலந்துரையாடல் மூலமே தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

"சனநாயகம்" என்ற பதத்தின் கருத்து மக்கள் ஆட்சி என்பதாகும். சன என்பதன் மூலம் மக்கள் என்ற கருத்தும், நாயகம் என்பதன் மூலம் தலைமை அல்லது ஆட்சி என்ற கருத்தும் வெளிப்படுகின்றன. அரசியலறிவியல்லாளர்கள் சனநாயகம் என்ற எண்ணக் கருவை இரு கோணங்களில் விளக்கியுள்ளார்கள்.

அவையாவன:


1. ஓர் ஆட்சி முறை என்ற வகையில்
2. ஒரு சமூக வாழ்க்கை முறை என்ற வகையில்

**சனநாயகம் ஓர் ஆட்சி முறை**

1. சனநாயக ஆட்சி முறையாக விளங்கும் போது அது மக்கள் விருப்பத்துக்கு வாய்ப்பளிக்கும், மக்களால் தெரிவு செய்யப்படும் ஆட்சியாளர்களைக் கொண்ட ஓர் ஆட்சி முறை என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**ஒரு சமூக வாழ்க்கை**

2. சமூக வாழ்க்கை முறை என்ற வகையிலும் சனநாயகத்தை வரைவிலக்கணப்படுத்த முடியும். சிறந்த குணப்பண்பு




உரு 4.2
கிரேக்கத்தின் நகர அரசுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடன் கூடிய மக்களைக் கொண்டமைந்த ஒரு சமூகம் ஒரு சனநாயக சமூகம் என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சனநாயகம் என்பது சுதந்திரம், சமத்துவம் என்ற எண்ணக் கருக்களினால் கட்டியெழுப்பப்பட்டது என்பது இதன் கருத்தாகும்.

**நேரடி சனநாயகம் நிலவிய அரசுகளும் அதன் இயல்புகளும்**

நவீன சனநாயகத்தின் தாயகம் கிரேக்க நாடாகும். பண்டைக்காலத்தில் கிரேக்க நாட்டில் இருந்த எதென்ஸ், ஸ்பாட்டா ஆகிய நகராட்சிகளின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்ட விதத்தில் சனநாயக இயல்புகள் காணப்பட்டன. இந் நகராட்சிகளின் முக்கிய இயல்பாக இருந்தது பிரஜைகளின் பங்குபற்றலாகும். எதென்ஸ் நகரத்தில் வாழ்ந்த சகல பிரஜைகளும் ஒரு பொதுவான இடத்தில் கூடி பொதுவான தேவைகளைப் பற்றிக் கலந்துரையாடி தீர்மானங்களை எடுப்பதன் மூலம் ஆட்சியில் பங்கு பற்றினார்கள். அக் கூட்டங்களில் பங்கு பற்றும் உரிமை அடிமைகளுக்கும், பெண்களுக்கும் மறுக்கப்பட்டிருந்தன. கிரேக்க நாட்டில் இருந்த இந்த சனநாயக முறை நேரடியான சனநாயகம் என அழைக்கப்பட்டது. ஆனால் பாரிய சனத்தொகையைக் கொண்ட இன்றைய நவீன அரசுகளின் இம் முறையை நடைமுறைப்படுத்த முடியாது. எனவே இன்றைய பொது மக்கள் ஆட்சி விவகாரங்களில் நேரடியாகப் பங்குபற்றுவதை விடுத்து மக்கள் சார்பில் ஆட்சி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதன் மூலம் ஆட்சியில் பங்கு கொள்கின்றனர். இது மறைமுக சனநாயகம் அல்லது பிரதிநிதித்துவ சனநாயகம் என அழைக்கப்படுகின்றது. மக்கள் பிரதிநிதிகள் கூடுமிடம் பாராளுமன்றம் என்பதால் பாராளுமன்ற சனநாயகம் எனவும் அழைக்கப்படுகின்றது.

சனநாயகம்

| நேரடி சனநாயகம் | மறைமுக/பிரதிநிதித்துவ சனநாயகம் |
|---|---|
| கிரேக்க நாட்டில் நிலவியது | நவீன அரசுகளில் நிலவுகிறது. |

**பிரதிநிதித்துவ சனநாயகத்தின் அடிப்படை இயல்புகள்**

பாராளுமன்ற சனாநாயகம் எனப்படும் பிரதிநிதித்துவ சனநாயகம் செயற்படும் நாடுகளில் மக்கள் பிரதிநிதிகள் மூலமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சி நடைபெறுகின்றது. அதற்கான பிரதிநிதிகளை தெரிவு செய்யும் முறை தேர்தல் என அழைக்கப்படுகின்றது.

தேர்தல்

காலத்துக்கு காலம் தேர்தல்கள் நடத்தி ஆட்சி செய்வதற்கு பொருத்தமானவர்களைத் தெரிவு செய்யும் உரிமை பொது மக்களுக்கு உண்டு. மக்கள் தமது வாக்குரிமையை இதற்காக உபயோகின்றனர். எந்த முறையில் தெரிவு செய்யப்பட்டாலும் குறிப்பிட்ட காலத்துக்குள் தேர்தலை நடாத்தி மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு முறையே சனநாயக ஆட்சி முறையின் கீழ் முக்கியமானதாகும். தொகுதிகள் அடிப்படையிலேயே பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்றனர். எழுபத்தையாயிரம் மக்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற அடிப்படையில் பிரித்தானியாவில் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் தற்போது மாவட்டம் என்ற பரந்த பிரதேசம் ஒரு தேர்தல் தொகுதியாகக் கொள்ளப்படுகின்றது.

தேர்தல் தொகுதிகள்

சனநாயக நாட்டில் அரசியற் கட்சிகள் இருக்கவேண்டியது முக்கியமாகும். மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் அரசியல் கட்சிகளூடாகவே தேர்தலில் நிற்கின்றார்கள். குறிப்பிட்ட ஒரு கொள்கைத் திட்டத்துடன் ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கில் செயற்படும் ஒரு சட்ட ரீதியான குழுவே அரசியற் கட்சியாகும். ஒரு சனநாயக நாட்டில் இத்தகைய இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசியல் கட்சிகள் இருக்க முடியும். இலங்கையில் இத்தகைய அரசியல் கட்சிகள் பல இருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள் எனவே இலங்கை பல கட்சிகள் செயற்படும் நாடு என நாம் அழைக்கலாம். பிரித்தானியாவில் இரண்டு பிரதான கட்சிகள் உண்டு.

பல கட்சி முறை

வயது வந்த அனைவருக்கும் சில குறிப்பிட்ட தகைமைகளின் அடிப்படையில் கிடைக்கும் இவ் வாக்குரிமை சர்வ சன வாக்குரிமை எனப்படும். (வாக்குரிமை கிடைப்பதற்கும், வாக்குரிமையைக் இழக்கும் சந்தர்பங்கள் பற்றியும் தரம் 9 சமூகக் கல்வியும் வரலாறும் என்ற நூலில் காணப்படுகின்றது.)

மக்கள் இறைமை

தனது வாக்குரிமையைக் பாவித்து பொருத்தமான ஆட்சியாளரைத் தெரிவு செய்யவும், பொருத்தமற்ற ஆட்சியாளர்களை நீக்கவும் உரிமை உண்டு. இலங்கையின் 1978 ஆம் ஆண்டு யாப்பில் இவ் உரிமையை அல்லது அதிகாரத்தை "மக்களின் இறைமை" என குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதிநித்துவ முறை

ஆட்சி செய்வதற்காக மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் பல்வேறு முறைகள் உண்டு. ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளுக்கும் தனித்தனியாக பெரும்பான்மை வாக்குகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவு செய்யும் முறை அதில் ஒன்றாகும். இம் முறை பிரித்தானியாவிலும் வேறு நாடுகளிலும் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக உபயோகிக்கப்படும் முறையாகும். இலங்கையில் மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை வழக்கில் உண்டு. இது பற்றி நீங்கள் ஏற்கனவே கற்றுள்ளீர்கள். பிரித்தானியாவில் பலமான இருகட்சிகளே காணப்படுவதால் அந் நாட்டை இரு கட்சி முறை நாடு என அழைக்கலாம். சோவியத் ருஷ்யாவில் பல வருடங்களுக்கு முன் ஒரு கட்சி ஆட்சி முறையே காணப்பட்டது. அதனால் அத்னை ஒரு சனநாயக ஆட்சி முறையுள்ள நாடு எனக் கூற முடியாது. அவ்வாறு ஒரு கட்சி முறையுள்ள நாடுகளில் ஆட்சிக் கொள்கையில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுவதில்லை. அத்துடன் சனநாயக ஆட்சி முறையின் பண்புகளில் ஒன்றான எதிர்க் கட்சி முறை செயற்பட வாய்ப்பில்லை. இரண்டு அதற்கு மேற்பட்ட அரசியல் கட்சிகள் இருப்பதன் மூலம் தேர்தலில் கூடிய பிரதிநிதித்துவத்தைப் பெற்ற கட்சி அரசாங்க கட்சியாகவும், ஏனைய கட்சிகள் எதிர்க் கட்சியாகவும் செயற்படும். சனநாயக நாட்டில் எதிர்க் கட்சிகள் இருக்க வேண்டியதற்கு பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன:

**இரு கட்சி முறை**

**ஒரு கட்சி முறை**

**எதிர்க் கட்சியின் பங்கு**

- அரசாங்கக் கட்சியின் செயற்பாடுகள் பற்றித் தேடி அறிந்து பயனுள்ள விமர்சனங்களை மேற்கொள்ளல்
- ஒரு மாற்று அரசைத் தோற்றுவித்தல்

சனநாயக ஆட்சி முறை காணப்படும் நாடுகளில் பொதுவாக காணப்படும் இயல்புகள்

- சர்வசன வாக்குரிமை இருத்தல்
- நாடு தேர்தல் தொகுதிகளாக பிரிக்கப்பட்டிருத்தல்
- பிரதிநிதித்துவ முறை காணப்படல்
- அரசியற் கட்சிகள் காணப்படல்
- தேர்தல் நடைபெறல்
- அரசாங்கங்கள் மாற்றமடைதலும், ஆட்சிக் கொள்கைகள் மாற்றமடைதலும்
- அரசாங்கக் கட்சியும், எதிர்க்கட்சியும் இருத்தல்

**சனநாயகம் பற்றி முன்வைக்கப்பட்ட பல்வேறு கருத்துக்கள்.**

நவீன சனநாயகத்துக்கான அறிவு பூர்வமான அத்திவார மிடப்பட்டது 18 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு பூர்வமான புனர்நிர்மாணச் செயற்பாடுகளின் போதேயாகும். இக் காலத்தில் சம கால கருத்துக்களை மறுத்து 'காரணி வாதத்துக்கு' முக்கியத்துவம் கொடுத்த ஒரு தத்துவவியலாளராகக் காணப்பட்டவர் ஜோண் லொக் என்பவர் ஆகும். இவர் கி. பி. 1690 இல் எழுதிய "அரசாட்சி பற்றிய இரண்டு மனப்பாங்குகள்" என்ற நூலில் சகல சட்டப்படியான அரசுகளினதும் ஆட்சியதிகாரம் ஆளப்படும் மக்களினது விருப்பத்திலேயே தங்கியுள்ளது' என்ற கருத்தை முன்வைத்தார். இதுவரை காலமிருந்த அரசியல் சனநாயகம் பற்றி கருத்து மாற்றமடையவும், சனநாயக நிலைமைகளின் பரவலுக்கும் ஜோண் லொக் முன்வைத்த மக்கள் விருப்பம் பற்றிய கோட்பாடு பெரிதும் பாதிப்பு செய்தது.

**சனநாயகம் பற்றிய ஜோண் லொக் கோட்பாடு**

**ரூசோவின் கோட்பாடு**

18 ஆம் நூற்றாண்டில் பிரான்சில் வாழ்ந்த ஜீன் ஜக் ரூசோ மனித சுதந்திரம் பற்றி கருத்து வெளியிட்ட ஒரு தத்துவவாதியாகும். "சுதந்திரமாக பிறந்த மனிதன் சுதந்திரமாக வாழ வேண்டும்" என்ற கருத்தினை வெளியிட்டார். நவீன சனநாயகம் மேலோங்கும்படி இடம்பெற்ற சம்பவமாக 1789 ஆம் ஆண்டு பிரான்சில் ஏற்பட்ட புரட்சியைக் குறிப்பிடலாம். அச் சந்தர்ப்பத்தில் பிரான்சு நாட்டின் மக்கள் பிரதிநிதி சபை சுதந்திர நாடொன்றின் மக்கள் அநுபவிக்கும் உரிமைகள் பற்றி பின்வரும் கூற்றை முன் வைத்தது. "ஒரு நாட்டின் மக்கள் என்ற வகையில் உள்ள உரிமைகளில், எல்லா மனிதர்களும் சுதந்திரத்துடனும், சமத்துவத்துடனும் பிறக்கின்றனர். இந்த உரிமையானது சொத்துரிமை, பாதுகாப்பு பற்றிய உரிமை, நெருக்குதலுக்கு எதிராக கிளர்ந்தெழும் உரிமை" என்றவாறாகும்.

**1789 இல் பிரான்சு மக்கள் சபை முன் வைத்த கருத்து**

**லிங்கனின் கோட்பாடு**

ஐக்கிய அமெரிக்காவின் 16 வது சனாதிபதியான ஆபிரகாம் லிங்கன் "மக்களால் மக்களுக்காக நடைபெறும் மக்கள் ஆட்சி" சனநாயகம் என அறிமுகப்படுத்தினார். அதனடிப்படையில் சனநாயகம் தனிமனித சுதந்திரத்தை மதிக்கும் ஓர் ஆட்சி முறை எனக் குறிப்பிட்டார்.

**கலைக் களஞ்சியத்தின் கருத்து**

சீலர் என்ற அரசறிவியலாளர் சனநாயகம் என்பது "எல்லோருக்கும் உரிமைகள் கிடைக்கும் ஓர் ஆட்சி முறை" என்று விபரித்தார். "மக்களுக்கு கிடைத்துள்ளதும் அவர்களால் அல்லது அவர்களின் பிரதிநிதிகளால் சுதந்திரமான தேர்தல் முறை மூலம் நேரடியாக நடை முறைப்படுத்தப் படுவதுமான ஒரு மக்கள் ஆட்சி" சனநாயகம் என கலைக் களஞ்சியம் கூறுகின்றது.

சனநாயகம் "பெரும்பான்மையினரின் விருப்பத்தின் பேரில் நடைபெறும் ஆட்சி" எனப் பலரும் கூறியுள்ளனர். அதனை பின்வரும் விடயங்களின் அடிப்படையில் ஞாபகப்படுத்தியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆட்சியாளர்களைத் தெரிவுசெய்தல்: தேர்தல் முடிவுகளின்படி மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படுபவர்கள் அதிகப்படியான வாக்குகளை பெற்றவர்களாகும்.

**பெரும்பான்மையோர் விருப்பு - நியாயமாக அமையும் சந்தர்ப்பங்கள்**

- அரச அதிகாரத்தை நிலைநாட்டுதல்: மக்களின் பெரும்பான்மை வாக்குகளால் கூடிய எண்ணிக்கையிலான அங்கத்தவர்களை வென்ற அரசியல் கட்சிக்கு ஆட்சி அதிகாரம் உரித்தாகும்.
- சட்டமாக்குதல்: சட்டத்தினையும் சமாதானத்தையும் பாதுகாப்பதற்கும் பொதுத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும், தேவையான சட்டங்களை ஆக்குவதிலும் பாராளுமன்றத்தின் பெரும்பான்மை வாக்குகள் அவசியமாகும்.

**சிறுபான்மையினர்**

பெரும்பான்மையினரின் விருப்பத்தை ஏற்றுக் கொள்வதானது சனநாயகத்தின் முக்கிய இயல்பாக இருப்பின் சிறுபான்மையினரை அடக்குதல் என்று இதன் மூலம் கருதப்படுவதில்லை. சிறுபான்மையினரின் கருத்துக்களைக் கவனத்தில் எடுத்தல், அவர்களுக்கு கருத்து தெரிவிக்கும் சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுத்தல் சிறுபான்மையினரின் கருத்தை மதித்தல் என்பன இத்தகைய ஒரு நாட்டில் கட்டாயம் இருக்க வேண்டிய அம்சங்களாகும். சிறுபான்மையினரிடையே "நாம் புறக்கணிக்கப்படுகின்றோம்" என்ற உணர்வு ஏற்படாத வண்ணம் செயற்படுவது பெரும்பான்மையினரது பொறுப்பாகும். இது பல் இன நாடுகளின் விசேடமாக கவனிக்கப்படவேண்டிய அம்சமாகும். இது பின்பற்றப்படாத போது இன ரீதியான முறுவல் நிலைகள் ஏற்பட இடம் உண்டு.

சனநாயகம் பற்றி அரசவறிவியலாளர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்களின் பொதுத் தன்மையானது -

- தனிநபரின் தனித்துவத்துக்கு மதிப்பளிக்கும்.
- தனி மனிதரின் ஆளுமையை விருத்தியாக்கும்.
- அடிப்படை உரிமையைப் பாதுகாக்கும்.

என்பனவே ஒரு சனநாயக ஆட்சி முறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனநாயகம் வெற்றிகரமாக செயற்படும் ஒரு நாட்டின் இயல்புகள்

*சுவிட்சர்லாந்து சனநாயகத்தை சிறப்பாக பேணும் ஒரு நாடாகும்*

இன்று பல நாடுகளில் சனநாயக ஆட்சி முறை நிலவுகின்றது. கோட்பாட்டு ரீதியாக நோக்கும் போது இது மிகச் சிறந்ததொரு ஆட்சி முறையாக தோன்றினாலும், உலகின் எல்லா சனநாயக ஆட்சிகளும் சிறப்பாக செயற்படுகின்றன எனக் கூறுவதற்கில்லை.

சனநாயகம் சிறப்பாக செயற்படும் நாடுகளுள் சுவிட்சர்லாந்து ஒரு மிகச் சிறந்த உதாரணமாகும். டுப்ஸ் என்ற அரசியல் சிந்தனையாளரின் கூற்றுப்படி சுவிட்சர்லாந்து மக்கள் சுதந்திரமான கருத்துக்களை உடையவர்களாகவும், தமது மேம்பாட்டினைப் போன்றே மற்றவர்களது மேம்பாட்டுக்காகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் ஒரு குழுவினராகவும் இருப்பதே இச் சிறப்பிற்கான பிரதான காரணமாக உள்ளது.

ஆள்வோரிடையேயும் ஆளப்படுவோரிடையேயும் நிலவும் சிறந்த குணப்பண்புகளுடன் சனநாயக ஆட்சி முறையில் காணப்படும் சில இயல்புகளும் சனநாயகத்தின் சிறப்புக்கு காரணமாகும்.

*சனநாயகத்தின் வெற்றிக்கான முக்கிய இயல்புகள்*

1. அரசியல் அறிவுபடைத்த மக்கள்
2. அர்ப்பணிப்புள்ள செயலாற்றும் தலைவன்
3. சுதந்திரமான ஊடகத்துறை
4. இரு அரசியல் கட்சிகள் மட்டும்
5. சிறுபான்மையினரை அடக்கியாளாத பெரும்பான்மையினர்
6. நாட்டின் பொருளாதாரம் கீழ் நிலையில் இல்லாமை

### 1. அரசியல் அறிவுபடைத்த மக்கள்

*அரசியல் விழிப்புணர்வுள்ள மக்கள்*

ஆட்சி செலுத்துவதற்குப் பொருத்தமான ஆட்சியாளர்களையும் ஆட்சிக் கொள்கைகளையும் தெரிவு செய்வதற்கு அறிவுள்ள மக்கள் இருத்தல் முக்கியமானதாகும். அத்தகைய ஒரு சமூகத்தின் ஒரு பிரஜை தனது ஆளுமையை விருத்தி செய்து கொள்வதற்கான வழிவகைகளை மேற்கொள்வதும் முக்கியமானதாகும். இத்தகைய நாடுகளின் மக்களுக்கு கல்வி பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்படுவதும் இதனாலேயாகும். எல்லா அரசியற் கட்சிகளினதும் கொள்கைகளை சீர்தூக்கிப் பார்த்து காலத்திற்கேற்ற கொள்கைகளையுடைய கட்சியைத் தெரிவு செய்து மக்கள் வாக்களிப்பர். அவ்வாறு வாக்களிக்கும் போது பயமுறுத்



9. S. P. C 000405

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல்கள், செல்வாக்குகள், இலஞ்சம், பாரம்பரிய கோட்பாடுகள் போன்றவற்றுக்கு அடிபணியாது மக்கள் புத்திசாதுரியத்துடன் செயற்படவேண்டும்.

அரசாங்கம் செயற்படும் விதம் பற்றி மக்கள் எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டும். அவ்வாறு இன்றேல் அரசியல்வாதிகள் மக்கள் நலன்களைக் கவனிப்பதை விடுத்து தமது நலன்களைக் கவனித்துக் கொள்வதில் ஈடுபடுவர்.

### 2. அர்ப்பணிப்புடன் செயற்படும் தலைமைத்துவம்

அர்ப்பணிப் புடன் செயற்படும் தலைமைத்து வம்

சனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஆகிய அரசியல் தலைவர்கள் சுய நலத்தை விட பொது நலத்தில் அக்கறை கொண்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றும், பொறுப்பு வாய்ந்த, பொறுப்புணர் வுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

### 3. சுதந்திரமான ஊடகத்துறை

சுதந்திரமான ஊடகம்

மக்கள் கருத்தைக் கட்டியெழுப்பக் கூடியதும், அதனை நெறிப்படுத்தக் கூடியதுமான பாரபட்சமற்ற ஒரு ஊடக முறை சனநாயக நாட்டில் வழக்கில் இருக்கவேண்டும். தேசிய, சர்வதேசிய விடயங்கள் தொடர்பாக மக்களுக்கு சரியான தகவல்களை வழங்கலும், மக்களுக்கு அறிவூட்டலும் மேற்கொள்ள ஊடகம் சக்தி பெற்றிருக்க வேண்டும். அத்துடன் பொறுப்புடன் பணியாற்றல் ஊடகவியலாளரின் கடமையாகும்.

### 4. இரண்டு அரசியல் கட்சிகள் மாத்திரம்

இரு கட்சி முறை

இரு கட்சி முறையினால் ஏற்படும் நன்மைகள் பலவற்றை எடுத்துக் காட்ட முடியும்

- பலமான ஒரு ஆளும் கட்சியாக இருத்தல்
- பலமான ஒரு எதிர்க் கட்சி இருத்தல்
- வாக்குகள் வீணடிக்கப்படாமை
- இரண்டு கட்சிகளும் நன்கு ஒழுங்கமைக்கப்படல்
- நாட்டின் அபிவிருத்தியையும் மக்கள் நலன்களையும் கருத்திற் கொள்ளல்.

### 5. பொருளாதாரம் கீழ்மட்டத்தில் இல்லாதிருத்தல்:

மிகவும் வறுமையான பொருளாதார நிலையில் உள்ள பாதுகாப்பற்ற ஒரு நாட்டில் வாழும் மக்களிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரம் கீழ் மட்டத்தில் இல்லா திருத்தல்

சனநாயகத்தை விரும்பும் பண்புகளை எதிர்பார்க்க முடியாது. குறைந்த பட்ச அடிப்படைத் தேவைகளையாவது நிறைவேற்றப்படாத மக்களிடம் சுதந்திரம் மட்டும் இருத்தல் பயனளிக்காது. நலன் புரிச் சேவைகளை மேம்படுத்தும் பணிகளுக்கூடாக இருப்போர், இல்லாதோருக்கிடையிலான இடைவெளிகளைக் குறைப்பதற்கு இத்தகைய அரசுகள் முயற்சிப்பதற்கு இதுவே காரணமாகும். ஹேல்ட், கீன் ஆகிய அரசறிவியலாளர்களின் கூற்றுப்படி சனநாயகம் வெற்றியடைவதற்கு இரு பக்கங்களும் ஒருங்கே செயற்பட வேண்டும்.

1. அரச இயந்திரம் சனநாயகமாதல்
2. சமூகம் சனநாயகமாதல்

**6. சிறுபான்மையினர் அடக்கப்படாது இருத்தல்:**

சிறுபான்மைக்கு மதிப்பளித்தல்

பெரும்பான்மையினரின் விருப்பத்துக்கு எப்பொழுதும் வாய்ப்பு கிடைப்பினும், சிறுபான்மையினர் தமது கருத்துக்களை முன் வைக்கவும், பெரும்பான்மையினரின் கருத்துக்களை விமர்சிக்கவும் வாய்ப்புகள் இருக்க வேண்டும்.

## மனித உரிமைகளும் கடமைகளும்

ஒரு சனநாயக நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் சமமான உரிமைகளை அநுபவிக்கின்றார்கள். அவ் உரிமைகள் யாவும் வரலாற்றுக் காலத்தில் மக்களால் வென்றெடுக்கப் பட்டவையாகும். அத்தகைய சில சந்தர்ப்பங்களாவன.

- ஆங்கிலப் புரட்சி
- பிரான்சியப் புரட்சி
- அமெரிக்கப் புரட்சி
- ருஷ்யப் புரட்சி

இத்தகைய சந்தர்ப்பங்களின் போது வெற்றி கொள்ளப்பட்ட உரிமைகளை, இனம், குலம், வர்க்கம், சமயம் என்ற பேதங்களில் இருந்து விடுபட்டு முழு மனித குலமும் அநுபவிக்கும் நோக்கில் 1948 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமையம் தனது மனித உரிமைப் பிரகடனத்தை பயன்படுத்தியுள்ளது. இவ் உரிமைகளை பிரித்து கூறுபோட முடியாதாயினும், இரு தலைப்புகளின் கீழ் விடயங்களைத் தொகுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரிமைகள்**

**குடியியல் உரிமைகள்**

- வாழும் உரிமை
- தனியார் சுதந்திரம் பற்றிய உரிமை
- கருத்து வெளியிடும் உரிமை
- சொத்துக்கள் வைத்திருக்கும் உரிமை
- விரும்பிய சமயத்தைப் பின்பற்றும் உரிமை
- சமத்துவம் பற்றிய உரிமை
- சட்டத்தின் முன் சமமாக மதிக்கும் உரிமை
- கூட்டம் கூடும் உரிமை
- வேலை செய்வதற்குள்ள உரிமை
- தமது நாட்டில் விரும்பிய இடத்தில் வாழும் சுதந்திரம்
- குடும்ப வாழ்க்கை நடாத்தும் உரிமை

**அரசியல் உரிமைகள்**

- ஆட்சியாளரைத் தெரிவு செய்யும் உரிமை
- அரசியல் கட்சியில் சேரும் உரிமை
- தேர்தலில் அபேட்சகராகும் உரிமை
- தேர்தலில் பிரசாரம் செய்யும் உரிமை
- தனது தேவைகளை அரசாங்கத்திடம் முன் வைக்கும் உரிமை
- அரசாங்கத்தில் பதவி வகிக்கும் உரிமை
- அரசாங்கத்தை விமர்சிக்கும் உரிமை

ஆளுறு, பொருளாதார, அரசியல் என்றவாறு உரிமைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளமையையும் காணலாம். இத்தகைய வகைப்படுத்தலின் கீழ் தனிப்பட்ட, மற்றும் பொருளாதார உரிமைகள் எனும் போது அவை பெரும்பாலும் குடியியல் உரிமைகள் அல்லது சிவில் உரிமைகள் எனப்படும். அத்துடன் உரிமைகள் என்ற விடயத்தில் "சுதந்திரம்" என்பதைக் குறிப்பதாகவும் அமையும். இத்தகைய சுதந்திரம், உரிமை என்பவற்றை சனநாயக நாடுகளே வழங்கியுள்ளன.

**உரிமைகளுடன் இணைந்த கடமைகள்**

பெரும்பாலான நாடுகளில் அரசியல் யாப்புகள் மூலம் இவ் உரிமைகளை உறுதிப்படுத்தியுள்ளன. உரிமைகளையும் சுதந்திரத்தை அநுபவிக்கும் நாட்டுமக்கள் அதனுடன் இணைந்த கடமைகளையும் செய்ய வேண்டும். ஒவ்வொரு உரிமையுடன் ஒவ்வொரு கடமையும் இணைந்துள்ளன. கடமைகளை இரு பிரதான பிரிவுகளாக வகுத்துக் காட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடமைகள்**

| விழுமியங்கள் | சட்டரீதியான (அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டவை) |
|---|---|
| ● பெற்றோரைக் கவனித்தல் | ● அரசுக்கு விசுவாசமாக இருத்தல் |
| ● சமூகச் சடங்குகளைப் பேணல் | ● அரசாங்க சட்டங்களைப் பின்பற்றல். |
| ● சம்பிரதாயங்களைப் பேணல் | ● சட்டத்தை நிலைநாட்ட உதவுதல் |
| ● ஆசிரிய ஆலோசனை பேணல் | ● வரி செலுத்துதல் |

> ஒரு சனநாயக சமூகத்தில் வாழும் பிரஜை அரசாங்கத்தால் வழங்கப்படும் உரிமைகளையும், சுதந்திரத்தையும் அநுபவிக்கும் அதே நேரத்தில் அத்துடன் இணைந்த கடமைகளைச் செய்பவராகவும் இருக்க வேண்டும்.

### ஒரு சனநாயக சமூகத்தில் பிரஜைகளின் பொறுப்புகள்

**சனநாயகப் பிரஜை சுயமாக தீர்மானம் எடுப்பவன்**

சனநாயக வாழ்க்கை கோலங்களுக்கு பழக்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டம் சனநாயக சமூகம் என அழைக்கப்படும். இக் கருத்தில் சனநாயக சமூகத்தில் அங்கம் வகிக்கும் ஆள் அல்லது பிரஜை மேற்கொள்ளும் எந்த ஒரு நடவடிக்கையிலும் சனநாயக ஈடுபாடு இருக்க வேண்டும் என்பது முக்கியமாகும்.

தான் வாழும் விதம், தொழில், வாழும் பிரதேசம், தொடர்புபடும் அரசியற் கட்சி தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் போது சுயேட்சையாகச் செயற்படுவதுடன் அத் தீர்மானங்கள் ஏனையவர்களைப் பாதிக்கக் கூடாது.

கலைஞர்கள், ஊடகவியலாளர்களுக்கு கூட இத்தகைய சமூகத்தில்,

- புத்தாக்கத்துக்கு
- பரீட்சை நடத்துவதற்கு
- மனித உள்ளம் அதன் தன்மை பற்றி ஆய்வு நடத்த

**சனநாயக சமூகத்தில் கல்வியின் குறிக்கோள்**

சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இத் துறைகளில் ஈடுபடுவோர் இச் சுதந்திரத்தில் இருந்து பயன் பெறுதல் வேண்டும். இத்தகையதொரு சமூகத்தில் வாழும் பிரஜை சனநாயக மனப்பாங்குகள், ஒழுங்கு முறைகள் பற்றிய சீரான விளக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருத்தல் வேண்டும். இதன் மூலம் சுயாதீனமாக செயற்படும் ஆற்றல்களையும், சவால்களை எதிர்கொள்ளும் சக்தியையும் வளர்க்க முடியும். விமர்சனம், விசாரணை மற்றும் ஏனையோர் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், ஏற்றுக் கொள்ளும் தன்மை என்பனவற்றுக்கு பழக்கப்படுதல் வேண்டும். சமமாக மதிக்கப்படும் உரிமையை அநுபவிக்கும் பேறு கிடைத்தாலும், இத்தகைய சமூகத்தின் பிரஜைகளிடையே பொருளாதார, சமூக, கலாசார ரீதியாக சமமின்மைகள் வெளிப்படலாம். இதன் மூலம் கருத்து வேற்றுமைகளும் முரண்பாடுகளும் தோன்றுவது இயல்பாகும். அத்தகைய சந்தர்ப்பங்களில் மோதல்களுக்கு காரணமான கருத்து வேறுபாடுகளும், முரண்பாட்டு நிலைமைகளும் கலந்துரையாடல் மூலம் தீர்த்துக் கொள்ளும் திறன் அவர்களிடம் வளர்க்கப்பட வேண்டும். சனநாயக அரசாங்கம் பொறுப்புகளை நிறைவேற்றும் தீர்மானங்களைக் கலந்துரையாடுதல் மூலமே எடுக்கின்றன. இதன் மூலம் சமாதான உடன்படிக்கைகளுக்கும், ஒருமுகப்பாட்டிற்கு வருவதற்கும் இத்தகைய சமூகத்தின் பிரஜைகள் பழக்கப்பட வேண்டும். "கலந்துரையாடல் சனநாயகத்தின் ஜீவ இரத்தமாகும்" எனக் கூறப்பட்டுள்ளது இதனாலேயாகும்.

ஒரு சனநாயக சமூகத்தின் பிரஜை,

- கலந்துரையாடல் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல் உள்ளவர்.
- எதிர் கருத்துக்களை சகித்துக் கொள்பவர்
- ஏனையோரின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பவர்
- ஒத்துழைப்புடன் கருமமாற்றுபவர்
- சமாதான உடன்படிக்கைகளுக்கு வர விரும்புபவர்
- உரிமைகளை அநுபவித்து கடமைகளைச் செய்பவர்

**சுருக்கம்**

சனநாயகம் என்பது ஒரு ஆட்சி முறை மட்டும் அன்றி சமுதாய முறையுமாகும். அது உலகில் உள்ள மிகச் சிறந்த ஆட்சி முறை அல்லாமலும் இருக்கலாம். ஆனால் நடைமுறையிலுள்ள ஆட்சி முறைகளுள் மக்களுக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய சீரான வாழ்க்கை நடத்த வசதி செய்துதரும் ஓர் ஆட்சி முறை எனக் கூறலாம்.

சனநாயகத்தை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்குரிய அடிப்படை விடயங்களும், ஒரு சனநாயகப் பிரஜை விருத்தி செய்து கொள்ள வேண்டிய குணப்பண்புகளையும் இதுவரை நீங்கள் கற்றவற்றில் இருந்து அறிந்து கொண்டீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடுகள்

1. ஆசிரியருடன் கலந்துரையாடி பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| பெயர் | ஆங்கிலப் புரட்சி | பிரான்சியப் புரட்சி | அமெரிக்க சுதந்திரப் போர் |
|---|---|---|---|
| தொடங்கிய திகதி | | | |
| ஏற்படக் காரணங்கள் | | | |
| வெற்றிகொண்ட உரிமைகள் | | | |

2. "இன்றைய சமூகத்தில் சனநாயகத்துக்கு விரோதமான நிகழ்வுகள் பல உள்ளன" உங்கள் அநுபவத்தின் ஊடாக இத்தகைய இரண்டு சந்தர்ப்பங்களை எடுத்துக் காட்டுவதுடன், அவற்றைச் சனநாயகமயப்படுத்தலுக்கு வழிவகைகள் யாவை எனக் கூறுக.

3. உங்கள் வகுப்புத் தலைவர் தமது கடமைகளைச் செய்யாவிட்டால் உங்களால் எடுக்கக் கூடிய மிகச் சிறந்த நடவடிக்கை யாது?

   அ. அதிபரிடம் அல்லது வகுப்பாசிரியரிடம் எடுத்துக் கூறுதல்.

   ஆ. கலந்துரையாடலின் மூலம் அவரை சிறந்த வழிக்கு கொண்டு வர முயற்சித்தல்.

   இ. அவருக்குப் பதிலாக வேறு ஒருவரை நியமனம் செய்தல்.

   ஈ. வகுப்புத் தலைவரின் கடமைகள் குறித்து அவருக்கு அறிவுரை வழங்குதல்.

4. உங்கள் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் நீங்கள் தலைமை வகித்த இல்லம் வெற்றி பெற்றதாக கொள்ளுங்கள். தோல்வி அடைந்த இல்லத்தின் தலைவர் உங்கள் இல்லம், பக்கச் சார்பான செல் வாக்கினால்தான் வெற்றி பெற்றதாக குற்றம் சாட்டினால் நீங்கள் வெளிக்காட்டும் சனநாயகப் பண்புகள் எவை?

   அ.

   ஆ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இ.

ஈ.

5. 5.1 இந்த 4.3 உருவின் இரண்டாவது வட்டம் மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதிக்குள்ளும் கிரேக்க நகராட்சியில் காணப்பட்ட ஒவ்வொரு சனநாயக இயல்பை எழுதுக.

5.2 மூன்றாவது வட்டம் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் பிரதி நிதித்துவ சனநாயகப் பண்புகள் ஆறினை எழுதுக.

5.3 நான்காவது வட்டம் பன்னிரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதிக்குள்ளும் சனநாயக முறையில் ஒரு பிரஜை அநுபவிக்கும் உரிமைகளை எழுதுக.




உரு 4.3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் அத்தியாயம்

# இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள அரசியல் யாப்பு

இலங்கையின் நடைமுறை யாப்பு அறிமுகம்

ஒரு நாட்டின் அரசியல் யாப்பானது, அந் நாட்டின் அடிப்படைச் சட்டமாக விளங்குவதுடன், மீயுயர் சட்டமுமாகும். ஓர் அரசியல் யாப்பில் பின்வருவன உண்டு:

நாட்டின் சட்டவாக்கம், நிர்வாகம், நீதித்துறை என்பவற்றின் அமைப்பு, செயற்படும் முறை, நிருவாக நிறுவனங்கள், அந் நிறுவனங்களுக்கிடையே உள்ள தொடர்புகள், அந் நிறுவனங்களின் பணிகள், அதிகாரங்கள், சட்டத்தையும் அமைதியையும் காப்பதற்கான ஒழுங்குகள், அடிப்படை உரிமைகள் என்பன அரசியல் யாப்பில் உள்ளடக்கப்படும்.

அரசியல் யாப்பானது நாட்டின் அடிப்படைச் சட்டமாகக் கருதப்படுவதனால் ஏனைய நிறுவனங்களினது சட்டங்களைத் திருத்துவது போன்று திருத்த முடியாது. அதனை மாற்றி அமைப்பதற்கு அல்லது திருத்துவதற்குப் பின்பற்றப்பட வேண்டிய சிறப்பான செயலொழுங்குகள் யாப்பினில் குறிப்பிடப்பட்டுள்ளன. பெரும்பாலான நாடுகளில் வரையப்பட்ட யாப்புகளே நடைமுறைப் படுத்தப்படுகின்றன. எம் நாட்டு யாப்பும் அவ்வாறே வரையப் பட்டதாகும். 1978 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட்ட இலங்கைச் சனநாயக சமதர்ம குடியரசு யாப்பே எம் நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

சுதந்திரம் கிடைத்த பின்பு இலங்கையில் அரசியல் யாப்புகள் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடலாம்.

I. 1972 ம் ஆண்டு 1ம் குடியரசு அரசியல் யாப்பு

II. 1978ம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் அரசியல் யாப்பு

## அடிப்படை உரிமைகள்

மனித அடிப்படை உரிமைகள்

சனநாயகத்துக்கு மதிப்பளிக்கும் பெரும்பாலான நாடுகளின் அரசியல் யாப்புகளில் நாட்டுப் பிரஜைகளின் சுதந்திரம், பாதுகாப்பு, தனியாள் உரிமைகள், பொருளாதார, அரசியல் உரிமைகள் யாவும் அடிப்படை உரிமைகளுக்கான பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளன. இலங்கையின் தற்போதைய அரசியல் யாப்பிலும் அடிப்படை உரிமைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இலங்கை மக்களுக்கு உரித்தான மனித உரிமைகள் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் முதல் முதலாக 1972 ம் ஆண்டு அரசியல் யாப்பிலேயே உள்ளடக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் அமையத்தால் 1948 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் தொடர்பான ஒரு சர்வதேச சாசனம் பிரகடனப் படுத்தப்பட்டது. சர்வதேச மட்டத்தில் முதற்தடைவையாக அச் சாசனத்தாலேயே மனித உரிமைகள் · வலியுறுத்தப்பட்டன. அதனையடுத்து ஐக்கிய நாடுகள் அமையத்தால் நிறைவு செய்யப்பட்ட மனித உரிமை தொடர்பான ஒப்பந்தத்தில் அங்கத்துவ நாடுகள் அவற்றையேற்று கையொப்பமிட்டு அங்கீகரித்ததின் விளைவாக ஒவ்வொரு அங்கத்துவ நாடுகளும் தங்கள் நாடுகளில் இச்சாசனத்தில் கூறப்பட்டவை யாவற்றையும் நடைமுறைப்படுத்த வேண்டிய கடமையுள்ள நாடுகளாக மாறியதுடன், தம்நாடுகளின் அரசியல் யாப்புகளிலும் சேர்த்துக்கொண்டன. அதனால் அவை சர்வதேச சட்டங்கள் என்ற நிலையை அடைந்தன.

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள அரசியல் யாப்பின் மூன்றாம் அத்தியாயமானது அடிப்படை உரிமைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வத்தியாயத்தில் 10 தொடக்கம் 17 வரையிலான பிரிவுகள், இலங்கைப் பிரஜைகளுக்கு உரித்தான மனித உரிமைகளையும் அவற்றை அநுபவிக்கும் விதம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. அட்டவணை இலக்கம் 5.1 இனைப் பார்க்கவும். இலங்கையருக்கு உரித்தான அடிப்படை உரிமைகள் அங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. அட்டவணை 5.1

1. சிந்திப்பதற்கான சுதந்திரம்
2. மனச் சான்றைப் பேணுவதற்கான சுதந்திரம்
3. சமயம் சார்ந்த சுதந்திரம்
4. உடல் சார்ந்த இம்சைகளிலிருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்கான சுதந்திரம்
5. எல்லாவழிகளாலும் நியாயத்தைப் பெற்றுக் கொள்ளும் சுதந்திரம்

    5.1 சட்டத்தின் முன் முழுமையான நியாயம்

    5.2 இனம், மொழி, சாதி, பால், என்பன போன்ற எந்த வொரு வேறுபாட்டின் அடிப்படையில் யாதேனும் ஒரு இடத்துக்கு பிரவேசிக்க முடியாதவாறு தடைகள் விதிக்கும் சட்டங்களுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு உடன்படாதிருப்பதற்கான உரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.3 பெண்கள், பிள்ளைகள், நலிவுற்றோர் ஆகியோர் நன்மை கருதிச் சட்ட அங்கீகாரத்துடன் விதிக்கப்படும் ஒழுங்குகளுக்கு இதனால் எத்தகைய தடைகளும் ஏற்பட மாட்டாது.

6. காரணமின்றி கைதுசெய்யப்படுவதில் நின்று தன்னைத் தவிர்த்துக் கொள்வதற்கான சுதந்திரம்

7. காரணமின்றி தடுத்து வைக்கப்படுவதில் நின்று தன்னைத் தவிர்த்துக் கொள்வதற்கான சுதந்திரம்

8. காரணமின்றி தண்டனைகளுக் காளாவதிலிருந்து தன்னைத் தவிர்த்துக் கொள்வதற்கான சுதந்திரம்

9. கடந்த காலத்துக்கு செல்லுபடியாகாத சட்டங்களில் இருந்தும், அவ்வாறான தண்டனைகளில் இருந்தும் தன்னை தவிர்த்துக் கொள்வதற்கான சுதந்திரம்.

10. பேச்சுச் சுதந்திரம்

11. அமைதியாக ஒன்று கூடுவதற்கான சுதந்திரம்

12. தொழிற் சங்கங்களை நிறுவுதல், அவற்றில் அங்கத்துவம் பெறல் என்பன சார்ந்த சுதந்திரம்

13. சங்கங்களை அல்லது கழகங்களை நிறுவுதற்கான சுதந்திரம்

14. சமய நம்பிக்கைகளைப் பேணல் சமயங்களைப் பரப்புதல் என்பன சார்ந்த சுதந்திரம்

15. தம் கலாசாரங்களைப் பின்பற்றல், தம் மொழியைப் பயன்படுத்தல் என்பவற்றுக்கான சுதந்திரம்

16. சட்ட பூர்வமான யாதேனுமொரு தொழிலில், கைத் தொழிலில், வர்த்தகத்தில் ஈடுபடும் சுதந்திரம்

17. இலங்கையில் எவ்விடத்துக்காவது பயணம் செய்யும் சுதந்திரம், தான் விரும்பிய ஒரு இடத்தில் வாழும் சுதந்திரம்

18. நாட்டை விட்டு வெளியேறல், மீண்டும் நாட்டுக்கு வந்தடைதல் சார்ந்த சுதந்திரம்

இவ் அடிப்படை உரிமை அத்தியாயத்தின் இறுதியில் உள்ள 17 வது ஷரத்து மிக முக்கியமானது. அதாவது.

இவ்வுரிமைகள் குறிப்பிட்டதின் பின்பு அடிப்படை உரிமைகள் பற்றிய வரையறைகளும் உள்ளடக்கப்படுகின்றது. அவ்வரையறைகள் மக்கள் பாதுகாப்பு, இன ஒற்றுமை, பாராளுமன்ற சிறப்புரிமைகளைப் பாதுகாத்தல், நீதிமன்றத்தை அவமதித்தல், தேசிய பொருளாதாரத்தைக் கட்டி யெழுப்புதல் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கங்களை அடைவதற்காகவே அன்றி பொதுமக்களுடைய அடிப்படை உரிமைகளை வரையறுப்பதற்காகவில்லை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

**மனித அடிப்படை உரிமை மீறப்படும் போது நடவடிக்கை மேற் கொள்ளும் முறை**

மேற்படி அத்தியாயத்தின் ஒழுங்குகளுக்கு ஏற்ப எவரேனும் ஒருவருக்கு உரித்தான சுதந்திரம் அல்லது உரிமைகள் யாதேனுமொரு நிறைவேற்றுத் துறையின் அல்லது நிர்வாகத்துறையினது நடவடிக்கையால் மீறப்பட்டிருத்தல் அல்லது மீறப்படலுக்கு அண்மித்தல் தொடர்பாக யாப்பின் 126 வது பிரிவின்படி உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்வதற்கான உரிமை அந் நபருக்கு உண்டு. அடிப்படை உரிமை மீறப்பட்ட சந்தர்ப்பங்களில் அதனை விசாரித்து நியாயம் வழங்கும் அதிகாரம் உயர் நீதி மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிரஜை ஒருவர் அந் நீதி மன்றத்தில் எவ்விதம் மனுவினைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதும் அங்கு விபரிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் ஒருவர் தமது அடிப்படை உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்தில் முறையிட முடியும்.

**அடிப்படை மனித உரிமைகள் அத்தியாயம்**

1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின்படி நிருவாக விவகாரங்களுக்கு ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்) பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் நிர்வாக கருமங்களை நடைமுறைப்படுத்தும் அரச ஊழியர்களின் மனித உரிமைகள் மீறப்பட்ட சந்தர்ப்பங்களில் நடவடிக்கை எடுக்கும் அதிகாரியாக அவர் கருமமாற்றுகிறார். அவர் அரச ஊழியர்களால் தம்மிடம் சமர்ப்பிக்கப்பட்ட முறையீடுகளைப் பொறுப்பேற்று அவற்றை பரீட்சிப்பார். அதன் அடிப்படையில் மனித உரிமைகளுக்கு தடைகள் ஏற்பட்டிருப்பதாக காணப்படும் பட்சத்தில் தகுந்த நடவடிக்கைகளை அவர் மேற்கொள்வார். அத்தோடு மனித உரிமைகள் காக்கப்படுவதை விரிவுபடுத்துவதற்கு அரசியல் யாப்பு தவிர ஆயிரத்து தொளாயிரத்து தொன்னூறாம் ஆண்டு 21 இலக்கம் உள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்துக்கு ஏற்ப மனித உரிமைகள் ஆணைக்குழு ஒன்றும் தாபிக்கப்பட்டுள்ளது.

## நாட்டில் நடைமுறையில் உள்ள அடிப்படைச் சட்டங்களும் பிரஜைகளின் உரிமைகளும்

இலங்கை அரசியல் யாப்பின்படி இலங்கை மக்கள் உரித்தாக்கிக் கொள்ளக் கூடிய உரிமைகள் பலவாகும்.

1978 ஆம் ஆண்டின் யாப்புப்படி அதன் 111 ஆம் அத்தி யாயத்தில் பிரஜை ஒருவருக்கு உரித்தான அடிப்படை உரிமை கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆயினும் இவ்வுரிமைகள் மற்றோரைப் பாதிக்காவண்ணம் அனுபவிப்பது அவசியம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுதல், கருத்து வெளியிடல் என்பன தொடர்பான சுதந்திரமே முதலில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் பொய்யாக தகவல்களை வெளிப்பாடு செய்தல், ஒருவரது கௌரவத்தைப் பாதிக்கும் விதத்தில் பேசுதல் அறிக்கைகளை வெளியிடுதல் என்பன உரிமைகளாகக் கருதப்பட மாட்டாது.

அமைதியாக ஒன்று சேருவதற்கான சுதந்திரம்.இருப்பினும் அவ்விதம் ஒன்று சேர்ந்து குழப்பங்களை விளைவிக்கவோ அல்லது சொத்துக்களை அழிக்கவோ உரிமைகள் கிடையாது.

தான் விரும்பிய பிரதேசத்தில் குடியேறி வாழுவதற்கான உரிமை ஒரு பிரஜைக்கு உண்டு. எனினும் ஒரு கூட்டத்தாரைக் குறிப்பிட்ட பிரதேசத்திலிருந்து விரட்டிவிடவோ, கொலை செய்யவோ உரிமை கிடையாது. இதன் வாயிலாக நீங்கள் விளங்கிக் கொள்வது யாது? அரசியல் யாப்பானது ஒவ்வொரு பிஜைக்கும் அடிப்படை உரிமைகளை வழங்கியுள்ளது. இலங்கை உட்பட வரையப்பட்ட அரசியல் யாப்புகளை உடைய அனைத்து நாடுகளிலும் மேற்படி அடிப்படை உரிமைகள் யாப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. வரையப்படாத யாப்புகள் உள்ள நாடுகளில் மரபுகள் மூலம் மேற்படி உரிமைகள் பேணப்படுகின்றன.

யாதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் எந்தவொரு பிரஜையாயினும் தம் உரிமைகளுக்குத் தடை ஏற்பட்டுள்ளதாக உணரும் பட்சத்தில் பரிகாரம் கோரி நீதிமன்றத்தில் முறையிட முடியும். பிரஜைகளுக்குச் சாதகமான இந் நிலைமையானது ஒரு சிறப்பு அம்சமாகும்.

எவரேனும் ஒருவர் தாம் உரித்தாக்கிக் கொண்டுள்ள உரிமையினைத் தவறான விதத்தில் பயன்படுத்துதல் பற்றிச் சிந்திக்கவும் கூடும். அல்லது நீங்கள் அத்தகைய அனுபவங்களைப் பெற்றிருக்கலாம். உங்கள் ஆசிரியர்களுடன் அத்தகைய சந்தர்பபங்கள் பற்றிக் கலந்துரையாடுக.

அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தைச் சிந்தையில் கொண்டு என்ன நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம் என்பது பற்றியும் சிந்திக்கவும், அவ்வாறு மனித உரிமைகளை மீறுவோர் மீது என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனச் சிந்திக்கவும் தவறைச் சுட்டிக்காட்டி அதைத் திருத்துவது நம் கடமையாகும். நீதி மன்ற நடவடிக்கையினை மேற்கொள்ளலாம், அல்லது பொதுசன அபிப்பிராயத்தை ஏற்படுத்தலாம். எவ்வாறாயினும் மனித அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

உரிமைகளை நாம் ஏன் காக்க வேண்டும்? இது நாம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயமாகும். அத்தோடு வரம்பு மீறி உரிமைகளை அனுபவித்தலும் ஆகாது. இதனைப் பற்றி வகுப்பாசிரியருடன் கலந்துரையாடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரேனும் ஒருவர் தம் உரிமைகளை வரம்பு மீறி அனுபவிக்க முற்படுவராயின் அதனால் மற்றொருவருக்கு தீங்கு ஏற்படலாம். உதாரணமாக தொழில் புரியும் ஒருவருக்கு தொழிற் சங்கத்தில் சேருவதற்கான உரிமை உண்டு. இருப்பினும் தொழில் சார்ந்த உரிமைகளை வென்றெடுத்தல் என்ற பெயரால் உரிமையாளரை அவமதித்தல் அல்லது அவருக்கு நட்டத்தை ஏற்படுத்தல் சமூக விருத்திக்கு தடையை ஏற்படுத்தும் நடவடிக்கைகளாகும்.

சமூகத்தில் நியாயத்தை நிலை நாட்டுவதற்காகவே உரிமைகளுக்கு சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே இனம், மொழி, குடும்பநிலை என்பன கவனத்தில் கொள்ளாது சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு நீதியை அல்லது நியாயத்தை நிலை நாட்ட முடியும். சமத்துவம், நீதி என்பவற்றை நிலை நாட்டுவதற்கும் மேற்படி உரிமைகள் அடிப்படையாக அமைகின்றன.

முன்னர் குறிப்பிடப்பட்ட உரிமைகள் யாவும் அரசியல் யாப்பில் இடம் பெற்றுள்ளன. அவற்றை அரசியல் யாப்பில் சேர்ப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டவர்கள் பாராளுமன்ற பிரதிநிதிகளேயாவார்கள். அவர்களைத் தெரிவு செய்தவர்கள் மக்களேயாகும். அதனால் மறைமுகமாக மக்கள் அதில் பங்கேற்றுள்ளார்கள், அத்தகைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியவர்கள் மக்களேயாவார்கள். இல்லாவிடின் பாதிப்புக்கு ள்ளாகுபவர்களும் மக்களேயாகும்.

## வாக்குரிமையும், அதனை தகுந்த முறையில் பயன் படுத்தலும்

**இலங்கையில் வாக்குரிமை வரலாற்றுப் பின்னணி**

1910 ஆம் ஆண்டு மக்கலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் பிரகாரமே இலங்கை மக்களுக்கு முதல் தடவையாக வாக்குரிமை வழங்கப்பட்டது. சொத்துக்கள் கணிசமான கல்வித் தகைமைகள் ஆகியவற்றை தம் வசம்கொண்டிருந்த நான்கு சதவீதத்தினருக்கு வாக்குரிமை வழங்கப்பட்டிருந்தது. இது ஒரு வரையறுக்கப்பட்ட வாக்குரிமை முன்றயாகவே அமைந்திருந்தது. 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் அடிப்படையில் 21 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. அதன்படி டொனமூர் அரசியல் யாப்பின் கீழ் 50 அங்கத்தவர்கள் பிரதேச வாரியாக அரசுக் கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டனர். அதற்கு பிறகு சோல்பரி யாப்பின் படி 1947 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் சர்வசன வாக்குரிமை அடிப்படையில் 96 அங்கத்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டனர். தற்போது பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் வாக்குரிமை உண்டு.

வாக்குரிமையின் முக்கியத்துவம்

இலங்கை மக்களுக்கு கிடைத்த சர்வசன வாக்குரிமை மிக முக்கியமானதாகும். தம்மை நிர்வகிப்பவருக்கு தகைமை உடையோரைத் தெரிவு செய்தல் அல்லது தகைமையுடைய அரசியல் கட்சியைத் தெரிவு செய்தல், தாம் விரும்பாத ஆட்சியை நீக்குதல் என்பவற்றுக்காக மக்களுக்கு வழங்கப்பட்ட ஒரு வலுவான சக்தியே வாக்குரிமையாகும். தாம் தெரிவு செய்யப்பட்ட தேர்தல் தொகுதிக்கு மட்டும் அன்றி பொதுவாக நாட்டின் நலனுக்காகவும், அதன் விருத்திக்காகவும் பணியாற்றுவதற்கு மக்களின் பிரதிநிதிகளைத் தூண்டும் ஒரு ஊக்குவிப்பாக செயற்படும்.

தேர்தலின் போது தகுந்த முறையில் வாக்களிப்பு நிகழாவிடின் வாக்குரிமையானது துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக கருதப்படும். சிலர் அறியாமை காரணமாகவும், திட்டமிட்டதின் படியும் தமது வாக்குகளை துஷ்பிரயோகம் செய்கின்றனர்.

வாக்குரிமையினை துஷ்பிரயோகம் செய்தல்

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் அடிப்படையில் வாக்களிக்கையில் வாக்குச்சீட்டைப் பயன்படுத்தும் முறை பற்றிய விளக்கம் குறிப்பிட்டளவு வாக்காளரிடம் காணப்படுவதில்லை. இதன் காரணமாக கடந்த தேர்தல்களில் ஏராளமான வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. சிலர் தமது வாக்குரிமைகளின் முக்கியத்துவத்தை உணராத காரணத்தால் தம்வாக்குகளை பயன்படுத்தமாட்டார்கள். இந் நிலைமையானது சனநாயகத்துக்கு ஏற்புடையது அன்று. தேர்தலின் போது இடம்பெறும் சட்ட விரோத நடவடிக்கைகள் நியாயமான நடவடிக்கைகளுக்கு தடையாக அமைந்துள்ளன. ஆள்மாறாட்டம், வாக்காளர்கள் வாக்குச் சாவடிகளுக்கு செல்லாமல் தடுத்தல் போன்றவை இவற்றில் சிலவாகும். இவற்றைத் தவிர்ப்பதற்கு அனைத்து அரசியற் கட்சிகளும், மக்களும் உணர்ந்து செயற்படவேண்டும். 1972, 1978 ஆகிய ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட யாப்புகளால் வழங்கப்பட்ட சர்வசன வாக்குரிமையானது இலங்கை மக்களுக்கு உரித்தான ஒரு அதிகாரமாகும்.

## விகிதாசாரப் பிரதிநிதித்துவம்

விகிதாசாரப் பிரதிநிதித்துவம்

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை, இலங்கைக்குப் பொருத்தமான விதத்தில் திருத்தங்களுக்குட்பட்டு 1978 ஆம் ஆண்டு யாப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் மாவட்டங்களில் கிடைக்கும் மொத்த வாக்குகளுக்கேற்ப விகிதாசார அடிப்படையில் அங்கத்துவ தொகையைப் பெற்றுக் கொள்வர். இதுவே விகிதாசார பிரதிநிதித்துவ முறையாகும். தற்போதைய அரசியல் யாப்பின் படி விகிதாசார பிரதிநிதித்துவத்தை நடைமுறைப்படுத்தும் விதம் சார்ந்த ஒழுங்கமைப்பினை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

I. தேர்தல் மாவட்டங்களின் எல்லைகளை நிர்ணயித்தல்

II. தெரிவு செய்யப்பட வேண்டிய அங்கத்தவர்களின் தொகையை தேர்தல் மாவட்டங்களுக்கு பகிர்ந்தளித்தல்

III. பாராளுமன்றத் தேர்தலை விகிதாசார முறைக்கேற்ப நடத்துதல்

**எல்லை நிர்ணய ஆணைக் குழு**

அரசியல் யாப்பின் 95(1) உபபிரிவின்படி தேர்தல் மாவட்டங்களின் எல்லைகளை நிர்ணயிப்பதற்கான ஆணைக்குழு சனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும். இந்த ஆணைக்குழுவிற்கு இலங்கையை இருபதுக்கு குறையாத, அதேசமயம் இருபத்து நான்குக்கு மேற்படாத எண்ணிக்கையினைக் கொண்ட தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாகாணத்தையும் சில தேர்தல் மாவட்டங்களாக பிரித்து அவற்றுக்கு பெயரிடல் இக் குழுவைச் சார்ந்ததாகும். ஒரு நிருவாக மாவட்டத்தை ஒரு தேர்தல் மாவட்டமாக அல்லது சில நிருவாக மாவட்டங்களை இணைத்து தேர்தல் மாவட்டமாக்கல் இவ் ஆணைக்குழுவிற்குள்ள அதிகாரமாகும். அரசியல் யாப்பின் 98 ஆம் பிரிவின் படி பொதுத்தேர்தல் மூலம் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட வேண்டிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை 196 ஆகும். ஒவ்வொரு அரசியல் கட்சிகளுக்கும். சுயேட்சைக் குழுக்களுக்கும் கிடைத்த மொத்த வாக்குகளின் அடிப்படையில் தேசிய பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படும் கட்சிகளினதும் சுயேச்சைக். குழுக்களினதும் அங்கத்தவர்கள் தொகை நிர்ணயிக்கப்படும். தேசிய பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படும் மொத்த அங்கத்தவர்கள் தொகை 29 ஆகும்.

**பாராளுமன்றம் கலைக்கப்படும் சந்தர்ப்பங்கள்**

ஆளும் கட்சியினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட மூலம் பாராளுமன்ற வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்படுமாயின் (குறிப்பிட்ட காலத்துக்கு முன்பாக) தோற்கடிக்கப்பட்ட சில நாட்களில் பாராளுமன்றம் கலைக்கப்படும். அது தவிர சனாதிபதி தான் தேவை என்று கருதப்படும் போதும் பாராளுமன்றத்தைக் கலைக்கலாம். ஆனால் புதிய பாராளுமன்றம் பதவியேற்ற ஒரு வருடத்தின் பின்பே இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரத்தைப் பிரயோகிக்கலாம். அதன் பின்னர் அடுத்த தேர்தல் நடைபெறும் தினம் தேர்தல் ஆணையாளரால் பிரகடனஞ் செய்யப்படும். அத் தினத்தில் இருந்து தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் தேர்தல் ஆணையாளரால் மேற்கொள்ளப்படும்.

**தேர்தல் நடவடிக்கைகள் பின்வருமாறு அமையும்**

1. தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்
2. தேர்தலை நடத்தும் செயன் முறை
3. தேர்தல் முடிவுகளை வெளியிடுதல்
4. தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் அரசாங்கம் பதவியேற்றல்

## இலங்கைக் குடியரசின் சனாதிபதி தெரிவு செய்யப்படும் முறை

இலங்கையில் சனாதிபதியைத் தெரிவு செய்து கொள்ளும் முறை பற்றி 9ஆம் தரத்தில் கற்றுள்ளீர்கள். இலங்கைக் குடியரசின் சனாதிபதி மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டும் எனவும், அவர் ஆறு வருடங்கள் பதவி வகிக்க வேண்டும் எனவும் தற்போதைய அரசியல் யாப்பின் 30(2) உப பிரிவில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையின் சனாதிபதியாக போட்டியிடும் ஒருவர் பின்வரும் தக்கமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.


**சனாதிபதிப் பதவிக்கு போட்டியிடுபவருக்கான தகுதிகள்**

1. முப்பது வயது பூர்த்தியடைந்தவராக இருக்க வேண்டும்
2. 91 ஆம் பிரிவின் 117 ஆம் உப பிரிவின் இ, உ, ஊ, எ பந்திகளின்படி பாராளுமன்ற அங்கத்தவர் ஒருவராகத் தெரிவு செய்யப்படுவதற்கான தகைமைகளை உடைய வராக இருத்தல்
3. மக்களால் இருதடைவைக்கு மேல் சனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்படாதவராக இருத்தல்
4. 38 ஆம் பிரிவின் (2) உபபிரிவில் இடம் பெறும் (உ) பந்தியினது ஒழுங்குகளின் பிரகாரம், சனாதிபதி பதவியில் நின்று நீக்கப்படாதவராக இருத்தல்



10. S. P. C 000405

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு 5.1
ஜனாதிபதி அலுவலகம்

சனாதிபதி பதவிக்கான தகைமைகளை உடைய நபர் ஒருவரது பெயரை விதந்துரைக்கக் கூடிய முறைகள் இரண்டு உண்டு. அவை பின்வருமாறு:

1. அங்கீகரிக்கப்பட்ட ஒரு அரசியல் கட்சியால் விதந்துரைக்கப்படல்

2. பாராளுமன்ற அங்கத்தவராக இருந்த அல்லது அங்கத்தவராக உள்ள ஒருவரை அங்கீகரிக்கப்படாத ஓர் அரசியல் கட்சியாலும் விதந்துரைக்க முடியும். வாக்குரிமையுடையோரின் பெயர்கள் அடங்கிய ஏட்டில் தம் பெயர் இடம் பெறும் எந்தவொரு வாக்காளர் ஆயினும் அவ்விதம் விதந்துரைக்க முடியும்.

## சனாதிபதி தெரிவு செய்யப்படல்

சனாதிபதியை தெரிவு செய்தல்

ஆறு வருடங்களுக்கு ஒரு தடைவை நடைபெறும் சனாதிபதி தேர்தலின் அடிப்படையில் சனாதிபதி நியமிக்கப்படுவார். நபர் ஒருவர் இரு தடவைகள் மாத்திரமே சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட முடியும். 1978 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்கமுடைய சனாதிபதியைத் தெரிவு செய்தல் தொடர்பான சட்ட ஒழுங்குகளின் படி தேர்தல் ஆணையாளரால் சனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். அத் தேர்தலின் போது நாடு முழுவதும் ஒரே தேர்தல் தொகுதி என்ற அடிப்படையில் தேர்தல் நடாத்தப்படும். வேட்பாளர்கள் மூவர் போட்டியிடும் போது வாக்காளர் ஒருவர் தமது விருப்பினை முறையே 1, 2 என வெளிப்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யலாம். மூவருக்கு மேற்பட்ட எண்ணிக்கையுடைய வேட்பாளர்கள் போட்டியிட்டால் 1.2.3. என்ற அடிப்படையில் விருப்பினை வெளிப்படுத்த முடியும். அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையில் அரைவாசிக்கு மேற்பட்ட எண்ணிக்கையுடைய வாக்குகளைப் பெறும் வேட்பாளர் சனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார். மூவர் போட்டியிட்ட ஒரு சந்தர்ப்பத்தில், எந்த ஒரு வேட்பாளரும் அரைவாசிக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெறாத விடத்து மூன்றாவது இடத்தைப் பெற்ற வேட்பாளர் போட்டியில் இருந்து நீக்கப்பட்டு, அவருக்கு அளிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகளில் இரண்டாம் விருப்பு வாக்குகள் யாருக்கு வழங்கப்பட்டது என்பது பரீட்சிக்கப்படும். 1ஆம் 2 ஆம் இடத்தைப் பெற்ற வேட்பாளர்களுக்கு அளிக்கப்பட்ட இரண்டாம் விருப்பு வாக்குகள் முதலாம் விருப்பு வாக்குகளுடன் கூட்டப்படும். அதன் அடிப்படையில் ஒருவருக்கு அரைவாசிக்கு மேல் ஒரு வாக்கினைப் பெற்றவர் சனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார். மூன்றுக்கு மேல் வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தால் அவர்களில் ஒருவர் அரைவாசிக்கு மேல் வாக்குகளைப் பெறாவிட்டால் மூன்றாம், ஏனைய வேட்பாளர்களின் 2 ஆம் 3 ஆம் விருப்பு வாக்குகள் கணிக்கப்பட்டு சேர்த்துக் கொள்ளப்படும். இவ்வாறு அதிக விருப்புகளைப் பெற்றவரே சனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார். சனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டவர் பிரதம நீதியரசரின் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து அவரது பதவி சார்ந்த கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும்.

## சனாதிபதியின் அதிகாரங்களும் அவர்களது பணிகளும்

அடுத்து சனாதிபதியின் அதிகாரங்களும் கடமைகளும் பற்றி கவனம் செலுத்துவோம். "நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட சனாதிபதி முறையே இலங்கைக்கு மிகப் பொருத்தமானதாகும்" என்ற தலைப்பில் பாடசாலை விவாதம் ஒன்றில் குறிப்பிடப்பட்டிருந்த கருத்துக்கள் அப் பாடசாலைச் சஞ்சிகையில் இடம் பெற்றிருந்தன. அதில் இலங்கை சனாதிபதியின் அதிகாரங்களும், பணிகளும் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

சனாதிபதி அவர்கள் பாராளமன்றத்தில் அங்கத்தவர் அல்லாதவராயினும் அரசியல் யாப்பின் 33 (அ) மற்றும் (ஆ) உப பிரிவுகளின்படி எச் சந்தர்ப்பத்திலாயினும் பாராளுமன்றத்தில் பங்கேற்கவோ அன்றி பாரளுமன்றத்துக்கு செய்திகளை அனுப்பவோ உரித்துடையவராவர். பாராளுமன்றத்தில் வாக்களிக்கும் உரிமை தவிர ஒரு பாராளுமன்ற அங்கத்தவருக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல சலுகைகள், அதிகாரங்கள் அனைத்தும் அவருக்கும் உரித்தாகும்.

பாராளுமன்றம் சார்ந்த சனாதிபதியின் உரிமைகள் என்ற அடிப்படையில் அவர் வசமுள்ள ஏனைய அதிகாரங்கள்.

(அ) பாரளுமன்ற கூட்டத் தொடர் ஆரம்பமாகையில் அரசாங்க கொள்கைகளை வெளியிடுதல்

(ஆ) பாராளுமன்றம் கூட்டப்படும் முதலாவது கூட்டத்துக்கு தலைமை தாங்குதல்

**சனாதிபதியின் அதிகாரங்கள்**

இவை தவிர பாராளுமன்றச் செயலாளரை நியமிக்கும் அதிகாரமும் சனாதிபதிக்கு உண்டு. பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பிரேரணையின் அடிப்படையில் கோரிக்கை விடல் மேலும் பாராளுமன்றத்தின் தேர்தல் முடிவடைந்து ஒரு வருடகாலம் வரை பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் சனாதிபதிக்கு இல்லையாகும். அரசியல் யாப்பின் 42 ஆம் பிரிவின்படி பொதுமக்கள் பாதுகாப்பு சார்ந்ததும், நடைமுறையில் உள்ளதுமான சட்டங்கள் உட்பட, வேறு வரையப்பட்ட சட்டங்களின் பிரகாரம் தம் அதிகாரங்கள், பணிகள், செயற்பாடுகள் என்பவற்றை உரியவாறு ஆற்றுதல் தொடர்பாக சனாதிபதி பாராளுமன்றத்துக்கு வகை கூறல் வேண்டும்.

சனாதிபதி வசமுள்ள நிறைவேற்று அதிகாரங்கள்:

1. அமைச்சரவையின் தலைவராக கடைமையாற்றல்
2. அமைச்சரவைக் கூட்டங்களை வழிநடத்துதல்
3. பிரதம மந்திரியை நியமித்தல்
4. ஏனைய அமைச்சர்களையும், பிரதி அமைச்சர்களையும் நியமித்தல், அத்துடன் அவர்களுக்கு பொறுப்பான பணிகளை வழங்குதல்
5. அமைச்சரவையை மாற்றி அமைத்தல்
6. யுத்தத்தையும் சமாதானத்தையும் பிரகடனப்படுத்தல்
7. அரசியல் யாப்பின் படி அமைச்சரவை கலைக்கப்படினும் சனாதிபதி தொடர்ந்தும் பதவி வகிப்பார்.

சனாதிபதியால் வழங்கப்படும் நியமனங்கள்:

1. வெளிநாட்டுத் தூதுவர்களையும் ஆணைக்குழுத் தலைவர் களையும் நியமித்தல்
2. முப்படைத் தலைவர்களையும், பொலிஸ் மா அதிபரையும் நியமித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கணக்காய்வாளர் நாயகம், தேர்தல் ஆணையாளர், அமைச்சுகளின் செயலாளர்களை நியமித்தல்

4. பிரதம நீதியரசர், மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன் முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதிபதிகள் உட்பட நீதிபதிகள், உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல்

5. சட்டமா அதிபர், சொலிசிற்றர் ஜெனரல், சனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர், அதன் தலைவர்களை நியமித்தல்

6. மாகாண ஆளுநர்களை நியமித்தல்

7. நீதிச் சேவை ஆணைக்குழுத் தலைவர், அதன் அங்கத்தவர்களை நியமித்தல்

8. பல்கலைக்கழக நிதி ஒதுக்கீட்டு ஆணைக்குழுவின் தலைவர், அதன் அங்கத்தவர்கள், பல்கலைக்கழக வேந்தர்கள், அதன் துணை வேந்தர்கள் ஆகியோரை நியமித்தல்

மேற்படி நியமனங்களுள் சில அரசியல் யாப்பின் படியும், மற்றும் சில பாராளுமன்றச் சட்டங்களின் படியும் வழங்கப் பட்டுள்ளன. அத்தோடு அரச இலச்சினையைத் தன் பொறுப்பில் வைத்திருக்கும் அதிகாரமும் சனாதிபதிக்கு உண்டு.

## சனாதிபதி வசமுள்ள நீதிமன்ற அதிகாரங்கள்

இலங்கையில் எந்த ஒரு நீதிமன்றத்திலாயினும் குற்ற வாளியாக்கப்பட்ட ஒரு நபரை முழுமையாக விடுதலை செய்ய, மன்னிப்பு வழங்கி தண்டனையைக் குறைக்க அல்லது அத் தண்டனையை ஒத்தி வைக்க, விதிக்கப்பட்ட தண்டனையை முற்றாகவே அகற்றுவதற்கு அல்லது முற்றாக நிராகரிக்க அல்லது ஒரு பகுதியைக் குறைக்க, பறிமுதல் செய்யப்பட்ட சொத்தை முழுமையாக திருப்பி வழங்க அல்லது பகுதியைத் திருப்பி வழங்க, இது போன்ற பல அதிகாரங்கள் சனாதிபதிக்கு உண்டு.

> எனினும் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரைப் பொறுத்த வரையில், அத் தீர்ப்பினை மாற்றியமைப்பதில் அத்தீர்மானத்தை வழங்கிய நீதிபதிகளின் அறிக்கைகள், சட்டமா அதிபரின் ஆலோசனைகள், நீதி அமைச்சரின் விதப்புரை என்பன அடங்கிய விபரங்கள் சனாதிபதி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்றத்தின் அமைப்பும், அதன் செயலொழுங்குத் திட்டமும்

இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பின் 10ஆம் அத்தியாயத்தில் பாராளுமன்றம் தொடர்பாக பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளது.

62(1) உபபிரிவின்படி நாட்டின் ஆட்சி முறையில் அரசியல் யாப்பு விதிகளின்படி அமைக்கப்படுகின்ற தனித்தனி தேர்தல் மாவட்டங்களில் இருந்து வாக்குகளைப் பெற்று தெரிவு செய்யப்படும் 196 உறுப்பினர்களைக் கொண்டதாக பாராளுமன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி அத்தியாயத்தின் மூலம் நாம் பாராளுமன்றம் பற்றித் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

பாராளுமன்றம் பற்றிய அறிமுகம்

பாராளுமன்றமானது எமது நாட்டின் மீயுயர் நிறுவனமாகும். நாட்டை நிருவகிப்பதற்கான சட்டங்கள் யாவற்றையும் பாராளுமன்றமே இயற்றுகின்றது. மக்கள் வாக்குகளால் தெரிவு செய்யப்படும் 196 அங்கத்தவர்களையும், தேசிய பட்டியல் மூலம் தெரிவு செய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட 29 அங்கத்தவர்களையும் சேர்த்து மொத்தமாக 225 அங்கத்தவர்களால் ஆனது பாராளுமன்றமாகும். அரசியல் யாப்பு சார்ந்த கருமங்கள் தொடர்பான முழுமையான அதிகாரம் பாராளமன்றத்திடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. பாராளமன்ற ஊழியர்களில் மிக முக்கியமானவர் அதன் செயலாளர் நாயகமாவார். இலங்கை அரசியல் யாப்பின் 65 ஆம் பிரிவில் (1) உபபிரிவில் பாராளுமன்ற செயலாளர் பற்றி குறிப்பிடப்படுகிறது.

பாராளுமன்றத்தின் கருமங்களை ஒழுங்கு செய்தல், அவற்றை நடைமுறைப்படுத்தல் என்பன அவரது பணிகளாகும். சபா நாயகரது அனுமதியுடன் அவருக்கு உதவுவதற்கென ஆளணியினர் நியமிக்கப்படுவர்.

வேத்திரதாரி பாரளுமன்றத்தில் கடைமையாற்றும் ஒரு ஊழியர் ஆவர். பாராளுமன்றத்தில் கூட்டத்தொடர் நடைபெறும் சந்தர்ப்பங்களில் சபாநாயகருக்கு முன்னால் வேத்திரதாரி செங்கோலை ஏந்திச் செல்வார். கூட்டத்தொடர் முடிவடைந்த பின்பும் செங்கோலை ஏந்தியபடி அவர் சபாநாயகருடன் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேறுவார்.

ஆளும் கட்சி, எதிர்க் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த பிரதி நிதிகள்

பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களை, ஆளும் கட்சியினர், எதிர்க் கட்சியினர் என்ற அடிப்படையில் இரு பிரிவினராகப் பிரிக்கலாம். பொதுத்தேர்தலில் அதிக எண்ணிக்கையிலான அங்கத்துவத்தை வென்றெடுத்த கட்சியைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த பிரதிநிதிகள், ஆளும் கட்சியினர் எனவும், அதனை விட குறைந்த அங்கத்தவர்களை வென்றெடுத்த கட்சியினர் எதிர்க் கட்சியினர் எனவும் அழைக்கப்படுவர்.

பாராளுமன்றம் கூட்டப்படும் சந்தர்ப்பங்களில் இவ்விரு சாராரும் வெவ்வேறாக பிரிந்து அமரக்கூடிய விதத்தில் இருக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. சபாநாயகர் இரு சாராருக்கும் மத்தியில் பிரத்தியேகமாக இடப்படும் ஓர் இருக்கையில் அமருவார். இங்கே காணப்படும் படத்தை நோக்கவும். செங்கோல் சபாநாயகருக்கு முன்னிலையில் காணப்படுகின்றது.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பிரதான சட்ட மூலகங்கள் தொடர்பான விவாதங்களின் போதும் நாட்டின் பிரதான பிரச்சினைகள் தலையெடுக்கும். இச் சந்தர்ப்பங்களின் போதும் ஆளும் கட்சியினரும் எதிர்க் கட்சியினரும் அர்த்தமுள்ள கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துரைப்பர். நாட்டுக்குப் பயன்தரக்கூடிய சட்டங்களை அங்கீகரித்துக் கொள்வதற்கு எதிர்க் கட்சியினர் ஆளுங்கட்சியினருக்கு ஒத்துழைப்பினை வழங்குவர். அரசாங்கத்தை நல்வழிப்படுத்தும் நோக்கில் எதிர்க் கட்சியினர் பாராளுமன்ற கூட்டங்களின்போது ஆளும் கட்சியை விமர்சிப்பர்.

சனாதிபதி பாராளுமன்ற அங்கத்தவர்களிலிருந்து பிரதமரையும் அமைச்சர்களையும் நியமிப்பார். அமைச்சர்கள் அரசியல் யாப்பு சார்ந்த கருமங்களிலும், சட்டம் இயற்றுதல் சார்ந்த கருமங்களிலும் பொறுப்பாக உள்ளனர்.

**சட்டங்கள் நிறைவேற்றப்படல்**

சட்ட மூலங்களை அனுமதித்தல் பாராளுமன்றத்தில் ஆற்றப்படும் பிரதான பணியாகும். சட்ட மூலகங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் முறையினை கவனிப்போம். அந் நடவடிக்கையானது சில கட்டங்களுக்கூடாக நிறைவு செய்யப்படும்.

1. **முதலாம் வாசிப்பு**

   ஒரு அமைச்சரால் அல்லது ஒரு பிரதி அமைச்சரால் அல்லது ஒரு பாராளுமன்ற அங்கத்தவரால் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் சட்ட மூலத்தின் பெயர் மாத்திரம் வாசிக்கப்படும். இதுவே முதலாவது வாசிப்பாகும்.

2. **இரண்டாம் வாசிப்பும் செயற்குழு நிலையும்**

   இச் சந்தர்ப்பத்தில் சட்டமூலத்தின் பொதுப்பண்புகள், கோட்பாடுகள் தொடர்பான ஒரு விவாதம் இடம் பெறும். அதனை அடுத்துச் சட்ட மூலமானது பாராளுமன்றத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்குழுவின் பால் வழிப்படுத்தப்படும். சட்ட மூலத்தின் ஒவ்வொரு பிரிவும் நன்கு ஆராயப்பட்டுத் தேவையின் பிரகாரம் மாற்றங்கள் விதந்துரைக்கப்படும். அதன்படி மாற்றங்களும் மேற்கொள்ளப்படும்.

3. மூன்றாம் வாசிப்பு

சட்ட மூலத்தை மூன்றாம் தடவை வாசிக்கும் சந்தர்ப்பத்தில் அதில் எம்மாற்றங்களையும் புகுத்த முடியாது. அச் சந்தர்ப் பத்தில் பாராளுமன்ற அங்கத்தவர்களின் விருப்பினை அறிவதற்காக வாக்கெடுப்பு இடம் பெறும். பெரும்பான்மை வாக்குகளால் நிறைவு செய்யப்பட்ட பின் அச் சட்ட மூலம் ஒழுங்காக நிறைவு செய்யப்பட்டது என சபாநாயகரால் அத்தாட்சிப்படுத்தப்படும்.

வருடாந்த நடைமுறைச் சட்ட மூலங்களை அங்கீகரித்தல், நாட்டின் பொது நிதியைக் கட்டுப்படுத்தல் என்பனவும் பாராளுமன்றத்தைச் சார்ந்த ஏனைய பொறுப்பான பணிகளாகும். பொது நிதியானது செலவிடப்பட்ட பின்னர் அது தொடர்பான ஒரு அறிக்கையைக் கணக்காய்வாளர் நாயகத்தால் வருடாந்தம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும். அந்த அறிக்கையும் பாராளுமன்றத்தில் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படும். நிலையியற் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப பாராளுமன்றத்தின் அன்றாடக் கருமங்கள் ஆற்றப்பட வேண்டும். பாராளுமன்றத்தில் காணப்படும் பல்வேறு வகையான செயற் குழுக்கள் பாராளுமன்றக் கருமங்களை செவ்வனே நிறைவேற்ற அநுசரணையாக விளங்குகின்றது.

## அமைச்சரவையும் அதன் கூட்டுப் பொறுப்பும்

ஐவஜெனிங்ஸ் என்பவரால் எழுதப்பட்ட "இராணியின் அரசாங்கம்" என்ற நூலை வாசித்துக் கொண்டிருந்த சுரேஷ் தனக்குப் பக்கத்தில் இருந்த ரமேஷிடம் பின்வருமாறு வினாவினான்.

அமைச்சரவையும் அதன் கூட்டுப் பொறுப்பும்

சுரேஷ் : கபினற் என்ற ஆங்கிலச் சொல் புராதன இங்கிலாந்தில் "சிறிய அறை" என்ற பொருளைக் குறிப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டது என்பது உமக்குத் தெரியுமா?

ரமேஷ் : "ஆமாம், நானும் அதைப் பற்றி கேள்விப்பட்டிருக் கின்றேன்"

சுரேஷ் : "அக் கால அரசர்கள் தம் அமைச்சரவையோடு அந்த பிரத்தியேக சிறிய அறையில் கூடி கலந்துரையாடினார் கள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமேஷ் : "ஆட்சி முறை சார்ந்த தீர்வுகளும், அவை தொடர்பான பல மரபுகளும் இங்கிலாந்தில் தற்செயலாக தோற்றுவிக்கப்பட்ட பிரதமர் பதவியை அடுத்தே ஆரம்பமாயின"

ஆரம்ப காலத்தில் இங்கிலாந்தில் அரசரும், அமைச்சர்களும் ஒன்று கூடி கலந்துரையாடியே சட்டம் இயற்றுதல் சம்பந்தமான தீர்மானங்களை மேற்கொண்டனர். அரசரே அமைச்சரவையின் தலைவராக செயற்பட்டார். பாராளுமன்ற முறையானது, மேம்படத்தொடங்கிய காரணத்தினால் காலப்போக்கில் அரசனது அதிகாரம் குறையத் தொடங்கியது. அதனையடுத்து பிரதமர் தலைமையிலான அமைச்சரவையே பிரதான சட்டவாக்கத் துறையாக மாறியது. பிரித்தானியாவின் முதலாம் பிரதமர் றொபேட் வோல்போல் என்பவரேயாவார்.

**இலங்கையின் அமைச்சரவை முறை**

இலங்கையில் அமைச்சரவை முறையானது 1947 ஆம் ஆண்டு சோல்பரி யாப்பின் படி ஆரம்பமாயிற்று. எனவே இலங்கை அமைச்சரவை மூலம் அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட அநுபவத்தைக் கொண்டுள்ளது. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 43(4) உப பிரிவின் படி குடியரசின் நிருவாகத்தை வழிப்படுத்தல், அந் நிருவாகம் சார்ந்த ஆணைகளை நடைமுறைப்படுத்தல் என்பவற்றுக்குப் பொறுப்பாக ஒரு அமைச்சரவை உண்டு. சனாதிபதி அமைச்சரவையில் அங்கத்துவம் வகிப்பதோடு அதன் தலைவராகவும் விளங்குகின்றார். அரசியல் யாப்பின் படி சனாதிபதியின் விருப்பத்துக்கேற்பவும், பாராளுமன்றத்தில் அதிக நம்பிக்கையைப் பெற்றவரே பிரதம மந்திரியாக தெரிவு செய்யப்படுவார். பாராளுமன்ற அங்கத்தவர்களில் இருந்து ஏனைய அமைச்சரவை அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு சனாதிபதியால் நியமிக்கப்படுவார்கள்.

அமைச்சரவையின் உள்ளடக்கத்தை சனாதிபதியே தீர்மானிப்பார். அமைச்சரவையில் அங்கம் வகிக்க வேண்டியோரின் எண்ணிக்கையைக் தீர்மானித்தல், அவர்களுக்குப் பொறுப்பான துறைகளைத் தெரிவு செய்தல் என்பன உள்ளடக்கமாகும். அமைச்சரவை சார்ந்த அமைச்சுக்களின் எண்ணிக்கையைக் கூட்டுதல் அல்லது குறைத்தல் தொடர்பான முடிவை சனாதிபதியே மேற்கொள்வார். சனாதிபதி, தேவை எனக் கருதும் பட்சத்தில் பிரதமரின் கருத்தினையும் கேட்டு அறிந்து அமைச்சரவையின் எண்ணிக்கையையும், அவர்களிடம் ஒப்படைக்க வேண்டிய பொறுப்புகளையும் தீர்மானிப்பார். ஒரு அமைச்சரிடம் உள்ள துறையினைத் தானே பொறுப்பேற்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனாதிபதிக்கு அதிகாரம் உண்டு. ஓர் அமைச்சரிடம் ஒப்படைக்கப்படாத ஒரு துறையினை அல்லது பணியினைத் தம் பொறுப்பில் வைத்திருப்பதற்கும் சனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

அரசியல் யாப்பின் படி அமைச்சரவையானது பாராளு மன்றத்துக்கு கூட்டாக வகை கூற வேண்டும்.


அமைச்சர்களுக்கு உதவுவதற்காகப் பிரதி அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் சனாதிபதிக்கு உண்டு.

அமைச்சர்களிடம் வினாக்களை கேட்டு, அதற்கான பதில்களைப் பெற்றுக் கொள்ளும் உரிமை பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கு உண்டு. அமைச்சர்களே சட்ட மூலங்களைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார்கள். அதனை அடுத்து முன்பு கூறியவாறு மூன்று கட்டங்கள் ஊடாக சட்டமூலம் நிறைவேற்றப்படும். அமைச்சரவையால் சமர்ப்பிக்கப்படும் சட்டமூலம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படாவிடின் அமைச்சரவை பதவி விலகி விடும்.

நீங்கள் மேலே தரப்பட்ட பகுதி மூலம் அமைச்சரவை நியமிக்கப்படும் விதம், அதன் அமைப்பு, பணிகள், அதிகாரங்கள் என்பன சார்ந்த விளக்கத்தைப் பெற்றுக் கொண்டிருப்பீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




95

உரு 5.2
இலங்கையின் நிருவாக மாவட்டங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரதேச நிருவாகமும் அதன் பின்னணியும்**

அநுராதபுரம் இராசதானியாக விளங்கத் தொடங்கியதில் இருந்து பிரதேச முறையும் அமுலாகத் தொடங்கியது. அதனை உறுதிப்படுத்துவதற்கான தகவல்கள் உண்டு. உத்தர தேசம், புரஸ்திம தேசம், தக்கின தேசம், பஷ்ஸிம தேசம் என்ற நிருவாக அலகுகள் சில அநுராதபுரத்துக்கு அண்மையில் காணப்பட்டது. அக்கால நிருவாகத்தில் பஷ்ச, ரட்ட, கணதிக, தசஹம என்ற அடிப்படையிலும் நிருவாக பிரிவுகள் காணப்பட்டன. பொலநறுவை, கோட்டைக் காலங்களிலும் பிரதேச நிருவாக முறை நடைமுறையில் காணப்பட்டது. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலங்களிலும் கூட 'திசாவ' "திசாவனி" என்ற பெயர்களில் பிரதேச நிர்வாகம் சார்ந்த அலகுகள் நடைமுறையில் காணப்பட்டன. கோரளை, பற்று என்ற பெயர்களில் நிருவாகப் பிரிவுகள் அழைக்கப்பட்டன. 1833 ஆம் ஆண்டு அதாவது பிரித்தானியர் காலத்தில் இலங்கை வடக்கு, மேற்கு, கிழக்கு, தெற்கு, மத்தி என்ற அடிப்படையில் ஐந்து மாகாணங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. 1845 ஆம் ஆண்டில் வடமேல் மாகாணமும், 1866 ஆம் ஆண்டு ஊவா மாகாணமும் 1873 ஆம் ஆண்டு வடமத்திய மாகாணமும், 1889 ஆம் ஆண்டு சப்பிரகமுவா மாகாணமும் நிறுவப்பட்டன. அரசாங்க அதிபர்களே அம் மாகாணங்களுக்கு பொறுப்பானவர்களாக இருந்தனர். 1931 ஆம் ஆண்டில் டொனமூர் ஆணைக்குழுவின் விதப்புரைப்படி 9 மாகாணங்களிலும் 19 மாவட்டங்கள் நிறுவப்பட்டன. 1955 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அரச நிருவாக மாற்றங்களின் படி அரசாங்க அதிபர் ஒவ்வொருவரதும் அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசமானது மாவட்டம் என வரையறுக்கப்பட்டது. அத்தகைய மாவட்டங்களின் எண்ணிக்கை 20 ஆகும். 1959 ஆம் ஆண்டில் மொனராகலையும், 1961 ஆம் ஆண்டில் அம்பாறையும், 1978 ஆம் ஆண்டில் கம்பஹாவும், முல்லைத்தீவும், 1984 ஆம் ஆண்டில் கிளிநொச்சியும் புதிய மாவட்டங்களாயின. அதனால் மாவட்டங்களின் எண்ணிக்கை 25 ஆக அதிகரித்தது. படத்தைப் பார்க்கவும். இலங்கையின் நிருவாக மாவட்டங்களையும், மாகாணங்களையும் காட்டும் இப்படத்தின் மூலம் உங்களால் அவற்றின் நிலையத்தைக் விளங்கிக் கொள்ள முடியும். பிரதேச செயலாளர் பிரிவும், கிராம சேவையாளர் பிரிவும் ஒரு மாவட்டத்தின் நிருவாகம் சார்ந்த உப பிரிவுகளாகும். ஒரு மாவட்டத்துக்கு பொறுப்பான நிருவாக அதிகாரி மாவட்ட செயலாளராகும். பிரதேச செயலாளர் பிரிவுக்கு பொறுப்பான அதிகாரி பிரதேச செயலாளர் எனப்படுவார். 1987 ஆம் ஆண்டில் மாகாணசபைகள் தாபிக்கப்பட்ட பின் நிர்வாகம் பன்முகப்படுத்தப்பட்டது. முன்னர் கச்சேரிகளிடமும், அரசாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர்களிடமும் கொடுக்கப்பட்டிருந்த பெரும்பாலான நிர்வாக நடவடிக்கைகள் தற்போது பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பிரதேச செயலாளர் அலுவலகங்கள் பிரதான நிர்வாகக் கூறுகளாக மாறியுள்ளன.

மாகாண சபை அறிமுகமாதல்

நிர்வாகம் சார்ந்த அதிகாரங்களைப் பரவலாக்கப்படுத்தல், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணல் ஆகிய குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் நோக்கில் 1987 ஆம் அண்டில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் யாப்பின் 13 வது திருத்தத்திற்கேற்ப மாகாண சபைச் சட்டத்தின் கீழ் மாகாண சபை முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.

மாகாண சபை அமைப்பு

மாகாண சபைச் சட்டத்தின் கீழ் ஒரு மாகாணத்துக்கு ஒரு மாகாணசபை அல்லது ஒரு சில மாகாணங்கள் இணைந்த ஒரு மாகாணசபை என்ற அடிப்படையில் மாகாணசபைகளை நிறுவ முடியும். இலங்கை 9 மாகாணங்களைக் கொண்டிருப்பினும் எட்டு மாகாண சபைகளே காணப்படுகின்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டாக இருந்தபோதும் ஒரு மாகாண சபையே காணப்படுகின்றது. விருப்பின் பேரில் இரண்டு மாகாண சபையாகவும் நிறுவிக்கொள்ள முடியும்.

அரசியல் யாப்பின் 13 ஆம் திருத்தம் மாகாண சபைச் சட்டம் என்பதின்படி மாகாண சபைக்கு சனாதிபதியினால் ஒரு ஆளுநர் நியமிக்கப்படுவார். நியமனம் பெற்ற திகதியில் இருந்து 5 வருடங்களுக்கு பதவி வகிப்பார். 1988 ஆம் ஆண்டு 2 ஆம் இலக்கச் மாகாணசபைத் தேர்தல் சட்டத்தின்படி மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அத் தேர்தலின் மூலம் மாகாணசபைகளுக்குரிய அங்கத்தவர்கள் தெரிவு செய்யப் படுவார்கள். அதிக அங்கத்தவர்களைக் வென்றெடுத்த கட்சியைச் சார்ந்தவரும், முதல் அமைச்சர் பதவிக்காக போட்டியிட்ட வருமான வேட்பாளர் முதலமைச்சராக நியமிக்கப்படுவார். அவரைத் தவிர மேலும் நான்கு அமைச்சர்களும் நியமிக்கப்படுவார்கள். மாகாணசபை உறுப்பினர்களே இவ்வாறு அமைச்சர்களாக நியமிக்கப்படுவர். மாகாண சபையின் நிர்வாக காலம் 5 வருடங்களாகும்.

## மாகாண நிருவாகம்

மாகாண சபையின் செயற்பாட்டு நோக்கங்கள்

நிருவாக நடவடிக்கைகளுக்கு மக்களின் பங்களிப்பினைப் பெறல், பிரதேச மக்களின் விருப்பத்துக்கு ஏற்றதாகவும், அவர்களின் தேவைக்கு ஏற்றதாகவும், மத்திய அரசாங்கத்தின் கொள்கையைத் திட்டமிட்டு அதனை நிறைவு செய்தலும் மாகாண சபையினால் எதிர்பார்க்கப்படும் சிறப்பு நோக்கங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1865 ஆம் ஆண்டில் விதிக்கப்பட்ட மாநகர சபைகளை நிறுவுதல் சார்ந்த கட்டளையின்படி கொழும்பு, கண்டி, காலி போன்ற நகரங்களில் உள்ளூராட்சியினை நடத்துவதற்காக மாநகர சபைகள் நிறுவப்பட்டன. இவ்வாறு உள்ளூராட்சி நியைங்கள் விரிவடைந்து தற்போது 14 மாநகர சபைகளும் 37 நகர சபைகளும் எம் நாட்டில் நடை முறைப் படுத்தப்படுகின்றன. 1980 ஆம் ஆண்டு வரை கிராம சபை, பட்டின சபை என இருவகையான உள்ளூர் ஆட்சி மன்றங்கள் காணப்பட்டன. 1980 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபைச் சட்டத்தின்படி கிராம சபைகள், பட்டின சபைகள் ஒழிக்கப்பட்டு. அனைத்து மாகாண சபைகளுக்காகவும் அபிவிருத்திச் சபைகள் நிறுவப்பட்டன. ஆயினும் 1987 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மாகாண சபை முறையை அடுத்து மாவட்ட அபிவிருத்திச் சபைகள் ஒழிக்கப்பட்டன. தற்போது மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் ஆகியன மட்டும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்ட ஒழுங்குகளின் பிரகாரம் ஒரு பிரதேச சபைப்பிரிவானது நிருவாகப் பிரதேசம் என்ற அடிப்படையில் பிரதேச சபைகள் நிறுவப்பட்டுள்ளன.

## இலங்கையில் மாநகர சபைகள் மூலம் நிருவகிக்கப்படும் நகரங்கள்

கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, குருநாகல், பதுளை, இரத்தினபுரி, நீர்கொழும்பு, தெஹிவளை–கல்கிசை, மாத்தளை, மொரட்டுவ, கோட்டை (ஸ்ரீ ஜெயவர்த்தனபுர) என்பன.

**மாநகர சபைகள்**

மாநகர சபைகளினதும், நகர சபைகளினதும் பணிகள்

- வீதிகள் அமைத்தல், அவற்றைப் பராமரித்தல்
- நீர் விநியோகத்தை மேற்கொள்ளல்
- சுகாதார சேவைகளை வழங்கல்
- சுகநலன்களைப் பேணும் நடவடிக்கைகள்
- அங்காடிகளை நிறுவதலும், அவற்றைப் பராமரித்தலும்
- நூல் நிலையங்கள், வாசிப்போர் கூடங்கள், பூங்காக்கள் ஆகியவற்றை அமைத்தலும் பராமரித்தலும்
- கழிவகற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச சபைகள்

நிருவாகம், அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளில் மக்களது வினைத்திறன் மிக்க பங்களிப்பினைப் பெறுவதற்கும். அதற்கான சந்தர்பங்களை மக்களுக்கு வழங்குவதற்கும் பிரதேச சபைகள் நிறுவப்பட்டன.

பிரதேச சபைகளினால் ஆற்றப்படும் பணிகள்

பிரதேச சபைகள்

- பிரதேச சபையின் நிதியின் ஒரு பகுதியை பயன்படுத்தி, அதன் விருத்திக்காக கட்டிடங்களை நிர்மாணித்தலும், அவற்றைப் பராமரித்தலும்.
- சமய அடிப்டையான வைபவங்களை ஒழுங்குபடுத்தல்
- மறைக் கல்வி அல்லது சமயக் கல்வி புகட்டுவதற்கான பாடசாலைகளை நிறுவி, அவற்றை நடைமுறைப்படுத்தல், சமயக் காப்புக்கான சபைகளை நிறுவி நடைமுறைப்படுத்தல்
- இலக்கியம், கலாசாரம் தொடர்பான வைபவங்களை ஒழுங்கு செய்தல்
- தம் பிரதேச மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கான வேலைத்திட்டங்களைத் திட்டமிட்டு அவற்றை நடைமுறைப்படுத்தல்
- சுகாதாரம், சுகநலன் சார்ந்த வசதிகளை வழங்கல்
- பிரதேசத்தில் விளையாட்டுத் துறையை மேம்படுத்தல்

## சுருக்கம்

யாப்பானது ஒருநாட்டின் அடிப்படைச் சட்டமாகும். அது எழுதப்பட்டதாக அல்லது மரபு முறையாக ஏடுதப்பட்டதாக இருக்கலாம். இலங்கையின் யாப்பானது 1947 முதல் வரையப்பட்டு, பனி 1972, 1978 ஆகிய ஆண்டுகளில் முற்றியும் மாற்றியமைக் கப்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டு யாப்பானது மனித அடிப்படை உரிமைகள் நீதித்துறை, நீதிமன்றங்கள் சனாதிபதி தெரிவு செய்யப்படல் சனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள், செயற்பாடுகள், பாராளுமன்றம், அதன் அங்கத்தவர்களைக் தெரிவு செய்தல், கட்டவாக்க நடைமுறை, அமைச்சரவையும் அதன் கூட்டுப் பொறுப்பும் இலங்கையில் அமைச்சரவை முறை, பிரதேச நிருவாகமும் மக்கள் பங்கேற்றலும் மாகாண நிருவாகம், மா நகரசபை பிரதேச சபைகள் என்பன பற்றி பூரண விளக்கத்தைத் தருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதி வழங்கல், சனநாயகத்தைக் காத்தல் சார்ந்த நீதித் துறையின் பொறுப்புகள்

நீதித் துறையானது ஒரு சுதந்திரமான அமைப்பாகும். மக்கள் நீதித் துறையிடம் இருந்து பக்கச் சார்பற்ற நீதியை எதிர்பார்க்கின்றார்கள். அத்தோடு சட்டத்தை மீறியோர்களுக்கு தண்டனை வழங்கல், அமைதியானதும், நீதியானதுமான ஒரு சமூகத்தை கட்டியெழுப்பும் சேவையும் நீதிமன்றங்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போதைய சிக்கலான சமூகத்தில் தெரிந்தோ, தெரியாமலோ அல்லது திட்டமிட்டோ உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்கள் பல உண்டு. வன்முறையினைப் பிரயோகித்தல், கொலை செய்தல், சொத்துக்களை அழித்தல், பாலியல் வன் முறைகள், வேலை நீக்கம் செய்தல், செல்வாக்குகளை பிரயோகித்தல், கொள்ளை, களவுகளை மேற்கொள்ளல், ஊழல், கலப்பட மோசடிகள் எனப் பல சட்ட விரோத நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. நீங்களும் நாள்தோறும் பல்வேறு பொதுசன ஊடகங்கள் மூலம் இவற்றை அறிந்து கொண்டே உள்ளீர்கள். அதற்காக பலர் தண்டிக்கப்படுவதையும் அறிந்திருப்பீர்கள். அதன் மீதும் உங்கள் கவனத்தை செலுத்தவும்.

**நீதி மன்றங்களின் கட்டமைப்பு**

1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு 1978 ஆம் ஆண்டு 02 ஆம் இலக்கமுடைய நீதிமன்ற ஒழுங்குக் கட்டளைகள் என்பன பிரகாரம் இலங்கையின் நீதித் துறையானது பின்வரும் விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

அ. இலங்கைக் குடியரசின் மீயுயர் நீதிமன்றம்

ஆ. இலங்கைக் குடியரசின் மேன் முறையீட்டு நீதிமன்றம்

இ. முதல் கட்ட நீதிமன்றங்கள்

1. உயர் நீதி மன்றம்
2. மஜிஸ்ரேட் நீதி மன்றம்
3. மாவட்ட நீதி மன்றம்
4. குடும்ப நீதி மன்றம்
5. முதனிலை நீதி மன்றம்

**நீதித் துறையின் பொறுப்பான பணிகள்**

1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் படி மேற்படி நீதி மன்றங்கள், தமது உரிமைகளைக் காப்பதோடு அதனை உறுதிப்படுத்தி நீதி வழங்கும் நிறுவனங்களாக மக்கள் கருது கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக் குடியரசின் உயர்ந்ததும், அதே சமயம் இறுதியுமான மேன் முறையீட்டு நீதி மன்றம் மீயுயர் நீதி மன்ற மாகும். (சுப்பிரீம் நீதி மன்றம்) இந் நீதி மன்றத்தில் பின்வரும் விதத்தில் அதிகாரங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

மீயுயர் நீதி மன்றத்தின் அதிகாரங்கள்

அ. சட்ட மூலகங்கள் அரசியல் யாப்புடன் ஒத்திசைதல் தொடர்பான நீதி மன்ற அதிகாரங்கள்

ஆ. அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான அதிகாரங்கள்

இ. இறுதி மேன் முறையீட்டு நீதிமன்ற அதிகாரங்கள்

ஈ. ஆலோசனை சார் நீதிமன்ற அதிகாரங்கள்

உ. தேர்தல் முறையீட்டு மனுக்கள் சார்ந்த அதிகாரங்கள்

ஊ. பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறப்படுவது தொடர்பான அதிகாரங்கள்

எ. பாராளுமன்றத்தால் சட்டபூர்வமாக ஒப்படைக்கப்பட்ட விடயங்கள்

மீயுயர் நீதிமன்றமானது பிரதம நீதியரசரையும், அத்தோடு ஆறு பேருக்கு குறையாத அதேசமயம் பத்து பேருக்கு மேற்படாத நீதிபதிகளைக் கொண்டதாக இருக்கும்.

மீயுயர் நீதி மன்றத்தில் அங்கம் வகிப்பவர்கள்

ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டமானது அதன் அரசியல் யாப்பேயாகும். பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படும் சட்ட மூலம் ஒன்று அரசியல் யாப்புக்கு இயைபுடையதாக உள்ளதா என்பது தொடர்பாக பிரச்சினை எழும்போது அது தொடர்பான முடிவினை மேற்கொள்ளும் அதிகாரம் மீயுயர் நீதிமன்றத்துக்கே உரித்தானதாகும். இந்த மீயுயர் நீதிமன்றத்தை விட வேறு எந்த நீதிமன்றத்துக்கும் இதனை விசாரிக்கும் அதிகாரமோ அல்லது கருத்து கூறும் அதிகாரமோ கிடையாது.

சட்ட மூலங்கள் அரசியல் யாப்புடன் இயைபுடையதா எனத் தீர்மானிக்கும் அதிகாரம்

மேற்கூறப்பட்ட இயைபாக்கம் உடையதா என்பதை அறிய சனாதிபதி அல்லது நாட்டுப் பிரசை ஒருவர் எழுத்து மூலமான ஒரு மனுவினை மீயுயர் நீதி மன்றத்துக்கு சமர்ப்பிக்கலாம். நீதி மன்றம் அவ் மனு மீது விசாரணை செய்து மூன்று கிழமைக்குள் சனாதிபதிக்கோ அல்லது சபாநாயகருக்கோ முடிவை அறிவிக்க வேண்டும்.

சட்டமூலத்தின் இயைபாக்கம் தொடர்பான

நாட்டுப் பிரஜை ஒருவரின் ஓர் அடிப்படை உரிமை அல்லது மொழி சார்ந்த உரிமை யாதேனுமொரு ஆணையால் அல்லது நிருவாகம் சார்ந்த செயற்பாட்டினால் மீறப்பட்டிருப் பதாக உணரப்பட்டால் ஒரு மாத காலத்துக்குள் தனக்கு



11. S. P. C 000405
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை உரிமைகள் தொடர்பான விசாரணை தண்டனைகளுக்கு எதிரான மனுவினை விசாரித்தல்.

நிவாரணம் வழங்குமாறு சட்டத்தரணி ஒருவர் ஊடாக மீயுயர் நீதிமன்றத்தைக் கோர முடியும்.

அடிப்படை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட ஒரு தீர்ப்புக்கு எதிராக நிவாரணம் கோரி மீயுயர் நீதி மன்றத்துக்கு ஒரு மனுவினைச் சமர்ப்பிக்க முடியும். அத் தீர்ப்பினை உறுதிப் படுத்தவோ அல்லது மாற்றி அமைக்கவோ மீயுயர் நீதிமன்றத்துக்கு அதிகாரம் உண்டு. அவசியம் எனக் கருதும் பட்சத்தில் புதிய அல்லது மேலதிக சாட்சியாளர்களை அழைக்குமாறு அல்லது பொறுப்பேற்குமாறு முன்னைய நீதி மன்றத்துக்கு ஆணையிட மீயுயர் நீதி மன்றத்துக்கு அதிகாரம் உண்டு.

தேர்தல் தொடர்பான வழக்குளை விசாரிக்கும் அதிகாரம்

சனாதிபதி தெரிவு செய்யப்பட்ட தேர்தல் தொடர்பான அல்லது வேறு ஏதாவது தேர்தல் தொடர்பான வழக்குகள் மீயுயர் நீதிமன்றத்தினால் விசாரிக்கப்படும். தேர்தல் சட்டங்கள் மீறப்பட்ட சந்தர்ப்பங்களில் அத்தகைய மனுக்கள் மீயுயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும். சனாதிபதியின் தேர்தல் அல்லது நியமனம் தொடர்பான மனுவாக இருந்தால் பிரதம நீதியரசரையும் ஏனைய நான்கு மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளையும் கொண்ட ஐந்து நீதிபதிகளால் விசாரிக்கப்படும். இது ஒரு சிறப்பான அம்சமாகும்.

பாராளுமன்ற சிறப்புரிமை மீறல் தொடர்பான அதிகாரம்

பாராளுமன்றத்தில் அதன் அங்கத்தவர் ஒருவர் குறிப்பிட்ட ஒரு விடயம் தொடர்பாக அல்லது சமர்ப்பித்த ஒரு விடயம் தொடர்பாக அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியாது. அத்தகைய சிறப்புரிமையைப் பாதுகாத்தல் மீயுயர் நீதிமன்றத்தின் பொறுப்பாகும். அத்தோடு யாதேனும் ஒரு பொறுப்பினைத் தட்டிக் கழித்தல் அல்லது பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறல் என்பன தொடர்பாக முடிவினை மேற்கொள்ளும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கே உண்டு. ஆனால் நிரூபிக்கப்படும் குற்றத்துக்கு தண்டனை விதிக்கும் அதிகாரம் மீயுயர் நீதி மன்றத்துக்கே உரியது. பாராளுமன்ற அவையில் உடல் சார்ந்த வன் முறைகளை மேற்கொள்ளல், அவமதித்தல், திட்டமிட்ட தடைகளை மேற்கொள்ளல், பலாத்காரத்தைப் பிரயோகித்தல், பொய்யான அல்லது திரிக்கப்பட்ட அறிக்கைகளை வெளியிடல், ஒரு விவாதத்தில் விலக்கப்பட்ட ஒரு பகுதியை வெளியிடல், பதவி சார்ந்த அதிகாரத்தைத் தவறாகப் பிரயோகித்து இலஞ்சம் வாங்குதல் என்பன குற்றச் செயலாக கருதப்படுகின்றன.

நாட்டின் கட்டாய தேவையாகக் கருதப்படும் ஒரு விடயம் தொடர்பாக சட்டமூலம் ஒன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் யாப்புடன் இயைபுடைமையைத் தீர்மானித்தல்

முன்னர் அதனை சட்டத்திற்கேற்ப தயாரித்தல், அச் சட்டமூலம் அரசியல் யாப்புடன் இயைபாக்கம் பெற்றுள்ளதா என்பதை ஆய்ந்தறிதல் என்பன மீயுயர் நீதி மன்றத்திடம் விடப்படும். நீதிமன்றம் அதனைக் கவனத்திற் கொண்டு பின்னர் அதன் சட்டபூர்வமான தன்மையை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கும். அடுத்து சட்டமூலமானது பாராளுமன்றத்தினால் அங்கீகரிக் கப்பட்ட பின் அரசியல் யாப்பின் அடிப்படையிலான ஒரு சட்டமாக மாறும்.

## மேன்முறையீட்டு நீதிமன்றம்

மேன் முறையீட்டு நீதிமன்றம்

யாதேனும் ஒரு முதற்கட்ட நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பானது ஒரு தரப்பினருக்கு அது தனது உரிமைக்குத் தீங்கு விளைவிக்கப்பட்டுள்ளதாக அல்லது நியாயம் வழங்கப்படவில்லை என சந்தேகம் எழும் பட்சத்தில் அத்தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கும் உரிமை உண்டு. அதனை மேன் முறையீட்டு நீதிமன்றம் விசாரணை செய்யும்.

மேன் முறையீட்டு நீதி மன்றம் தலைவர் உட்பட அறுவருக்கு குறையாத அதே சமயம் பதினொருவருக்கு மேற்படாத வகையில் அமைக்கப்பட்டிருக்கும். முதற்தடவை வழக்கை விசாரணை செய்த நீதிமன்றத்தால் அழைக்கப்பட்ட சாட்சிகளை விட வேறு சாட்சிகளை ஏற்கவும் இவ் நீதிமன்றத்தால் முடியும்.

சட்டத்துக்கு மாறான விதத்தில் அல்லது நடைமுறைக்கு புறம்பான விதத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒரு நபரை நீதி மன்றத்தின் முன்னிலையில் சமர்ப்பிக்குமாறு ஆட்கொணர்வு ஆணையை (ஹேபியஸ் கோபஸ்) பிறப்பிக்கும் அதிகாரம் மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்கே உண்டு. அத்தோடு பிள்ளைகள் சார்ந்த பொறுப்புகள், தடை உத்தரவு விதித்தல், தேர்தல் முறையீட்டு மனுக்களை விசாரித்தல் முதற்கட்ட நீதிமன்றம் ஒன்றின் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கட்டளை இடல் ஆகிய அதிகாரங்கள் மேன்முறையீட்டு நீதிமன்றிடம் உண்டு. இந் நீதிமன்றத்தால் மேற்கொள்ளப்படும் முடிவானது ஏகமனதாக அமையாத பட்சத்தில் அது பெரும்பான்மை நீதிபதிகளால் அங்கீகரிக்கப்பட்ட முடிவாதல் வேண்டும். நீதிபதிகள் இருவருக்கிடையில் முரண்பாடு காணப்படுமிடத்தில் மூவர் இணைந்து மீளாய்வு செய்யப்படும் வரை நீதிமன்ற முடிவு ஒத்தி வைக்கப்படும்.

1978 ஆம் ஆண்டு 02 ஆம் இலக்கமுடைய நீதிமன்ற ஒழுங்குகள் மூலம் தாபிக்கப்பட்ட முதற்கட்ட நீதிமன்றங்கள் சில வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் கட்ட நீதி மன்றங்கள்

1. உயர் நீதிமன்றம்
2. மஜிஸ்ரேட் நீதி மன்றம்
3. மாவட்ட நீதி மன்றம்
4. குடும்ப நீதி மன்றம்

## உயர்நீதி மன்றம்

முதற்கட்ட நீதிமன்றங்களில் அதிகாரம் கூடிய நீதி மன்றம் உயர் நீதி மன்றமாகும். யாதேனும் ஒரு வழக்கில் சாட்சிகளை அழைத்து விசாரித்து தீர்ப்பு வழங்குகின்றது. இத் தீர்ப்பினால் நீதி வழுங்கவில்லை என எந்த கட்சிக்காரரும் கருதினால் மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம். அதைத் தவிர கொலை வழக்குகள் தொடர்பான அடிப்படைச் சாட்சிகளை கோவைப்படுத்தி மேலும் சாட்சிகளை விசாரித்து தண்டனை வழங்குவதற்காக மேன் முறையீட்டு நீதி மன்றம் உயர் நீதிமன்றத்தை வழிப்படுத்தலாம். குற்றச் செயலின் தன்மைக்கு ஏற்ப அவ்விதம் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### இணக்க சபைகள்

இணக்க சபை

இவை முன்னர் குறிப்பிட்ட முறைசார் நீதி மன்ற வகைகளைச் சார்ந்தது அல்ல. கிராம மட்டத்தில் இரு பகுதியினருக்கிடையில் ஏற்படும் பிணக்குகளை அல்லது சிறு தகராறுகளைத் தீர்த்துக் கொள்ள அல்லது சமரசம் செய்துவைக்க இச் சபைகள் செயற்படுகின்றன. முறைசார் நீதிமன்றங்கள் போல் கட்டிடங்களோ, நீதி மன்ற நடை முறைகளோ, சட்டத் தரணிகளின் வாதங்களோ காணப்படமாட்டாது. இணக்க சபை ஒன்று கூடுதலுக்காக பாடசாலைக் கட்டிடங்கலே தெரிவு செய்யப் படுகின்றன. இரு சாராரையும் சமரசம் செய்து வைப்பதற்காக கிராமத்தில் பெரும்பாலோரின் கௌரவத்துக்கு பாத்திரமான பிரமுகர்கள் சிலர் இச் சபையில் அங்கத்துவம் வகிப்பது உண்டு. இதன் தலைவர் இணக்க சபைத் தலைவராகும்.

இணக்க சபையின் நடைமுறை

தகராறுக்கு முகம் கொடுக்கும் இரு சாராரையும் நேரடியாக சந்திக்கச் செய்து திறந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். நேரடியாகவே அக் கலந்துரையாடலைக் செவிமடுக்கும் இணக்க சபையின் அங்கத்தவர்கள் மேற்படி இரு சாராரும் ஏற்கக் கூடிய ஒரு முடிவினை ஈற்றில் மேற் கொள்வர். அத்தோடு இரு சாராருக்கும் மத்தியில் ஏற்பட்ட பகைமை உணர்வினை அவ்விடத்திலேயே நீக்கிச் சமரசம் செய்துவைப்பர். இது கிராமத்தவர்களது பணத்தையும், நேரத்தையும் விரயமாக்காத ஒரு செயல் முறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றம் தன்னகத்தே கொண்டுள்ள சுதந்திரம்

பக்கச் சார்பின்றி நியாயமான தீர்ப்பினை அளிக்க வேண்டுமாயின் நீதிமன்றமானது கட்டாயமாக ஒரு சுதந்திர நிறுவனமாக இயங்க வேண்டும். அவ் விதம் இயங்குவதற்கு ஏற்புடைய ஒரு நலமான பின்னணியினை அரசியல் யாப்பானது வழங்கியுள்ளது.

மேற்படி பின்னணியின் அடிப்படையில் ஒரு நீதிபதியால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியாது. நீதிபதி ஒருவர் நல்லொழுக்கம் உடையவராக இருக்கும் வரையும் பதவியில் இருப்பார். முறை கேடான நடத்தை அல்லது உடல் நலிவு காரணமாக ஒரு நீதிபதியைக் பதவி நீக்கம் செய்ய வேண்டுமாயின் பாராளுமன்றத்தில் ஒரு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு பெரும்பான்மை வாக்குகளால் அது அங்கீகரிக்கப்பட வேண்டும். அதன் பின் அப் பிரேரணை சனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். சனாதிபதியின் கட்டளைப்படியே அவர் பதவி நீக்கம் செய்யப்படுவர். மேற்படி நடைமுறைக்குப் பாத்திரமாகாத மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள் அறுபத்தைந்து வயது வரை பதவி வகிப்பார்கள். இவ்வாறு மேன் முறையீட்டு நிதிமன்ற நீதிபதிகள் அறுபத்திமூன்று வயது வரை பதவி வகிக்கலாம்.

உயர் நீதி மன்ற நீதிபதிகளின் நியமனம் தொடர்பாக அனைத்து நடவடிக்கைகளும் நீதிச் சேவை ஆணைக்குழுவின் ஆலோசனையின் படி சனாதிபதியினால் மேற்கொள்ளப்படும். இவ் ஆணைக் குழுவின் தலைவராக பிரதம நீதியரசரே கருமமாற்றுவார். அவரோடு மேலும் இரண்டு மீயுயர் நீதிமன்ற நீதியரசர்கள் கடைமையாற்றுவார்கள். நீதி சேவை ஆணைக் குழுவானது எவ்வித தலையீட்டுக்கும் உட்படாது சுதந்திரமாக இயங்கத்தக்க வலுவினை உடையதாகும். எவராயினும் எச் சந்தர்பத்திலும் நிர்ப்பந்தங்களை விதிக்க முடியாது. அவ் விதம் யாராவது நிர்ப்பந்தத்தை மேற்கொண்டால் யூரி சபையில்லாது விசாரிக்கும் நீதிமன்றமாக நீதி சேவை ஆணைக் குழு இயங்கி தண்டனை விதிக்கலாம்.

நீதித்துறைக் கட்டமைப்பினுள் நீதிபதிகள் பக்கச் சார்பின்றியும், நிர்ப்பந்தங்கள் எதுவுமின்றி கருமமாற்றக் கூடிய சூழ் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. எனவே இச் சூழ் நிலையானது சிறந்த வொரு சனநாயக சமூகத்தை தோற்றுவிப்பதற்கான அடித்தளமாக விளங்குகின்றது.

"சட்டபூர்வமான எந்தவொரு குற்றச் சாட்டையும் சுமத்தாது அரசு என்ற பெயரால் நபர்கள் சிறையில் அடைக்கப் பட்டுள்ளார்கள். அவர்களது சொத்துக்கள் அரசுடைமை யாக்கப்பட்டுள்ளது. அவர்கள் வன் முறைக்குள்ளாக் கப்பட்டுள்ளார்கள், ஒரு சாரார் நாடு கடத்தப்பட்டுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொரு சாரார் கொலை செய்யப்பட்டுமுள்ளார்கள். இருப்பினும் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை சனநாயக சமூகம் சகித்துக் கொண்டிருக்க முடியாது.

ஜோன் கே. பிரான்க்

**பிரஜைகள் ஏன் சட்டத்துக்கு கீழ் படிகின்றார்கள்**

சனநாயக நாடுகளில் பிரஜைகள் சட்டத்துக்குக் கீழ்படிகின்றார்கள் அதற்கான காரணம் என்ன? சட்டவாக்கத்தோடு அவர்கள் மறைமுகமாக தொடர்பு கொண்டிருப்பதேயாகும். எனவே பிரஜைகளால் இயற்றப்பட்ட சட்டத்துக்கு அவர்கள் கீழ்ப் படியும் போது சட்டம், சனநாயகம் ஆகிய இரண்டும் காக்கப்படும். குற்றவாளி என நிருபிக்கப்படும் நபருக்கு தண்டனை விதிக்கும் அதிகாரம் நீதி மன்றத்துக்கே உண்டு. அத்தோடு சட்டத்தை அமுலாக்கும் செயல் முறையானது இரகசியமாகவோ, தான் தோன்றித்தனமாகவோ அல்லது அரசியல் செல்வாக்கினைப் பிரயோகிப்பதாகவோ அமைந்து விடக்கூடாது. சனநாயக நாடுகளில் இது தொடர்பான முறைசார் நடைமுறைகள் கைக்கொள்ளப்படுகின்றன. அந் நடைமுறைகள் பின்வருமாறு.

- நீதிமன்ற ஆணையின்றி எவரேனும் ஒருவரது இல்லத்தைச் சோதனையிடும் அதிகாரம் பொலிசாருக்கு கிடையாது.
- எழுத்து மூலமான ஒரு குற்றச் சாட்டின்றி எவரையேனும் கைது செய்து தடுத்து வைக்க முடியாது.
- சட்ட பூர்வமான அநுமதியின்றி எவரேனும் தடுத்து வைக்கப்பட்டிருப்பின் ஆட்கொணர்வு சட்டத்தின் படி அவரை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கோரிக்கை விடுவிக்க முடியும்.
- தலைமறைவாக இருக்கும் சந்தேக நபர் ஒருவர் தம்மால் சமூகத்துக்கு தீங்கு விளையாது என எடுத்துக் காட்டியபடி தமக்கு பிணை கேட்டுக் கோரிக்கை விடுவிக்க முடியும்.
- பொலிசார் எந்த ஒரு காரணத்துக்காகவும் சந்தேக நபர் ஒருவரைத் துன்புறுத்தக் கூடாது.
- சந்தேக நபர் ஒருவர் பொலிசாரிடம் அளிக்கும் வாக்கு மூலம் சாட்சியாக எடுத்துக் கொள்ள முடியாது. பொலிசார் பலவந்தமாக ஒப்புதல் பெறுவது கூடாது.
- குற்றமற்றவர் என நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டவர் மீண்டும் அதே குற்றத்துக்காக வழக்கு தொடர முடியாது.
- மொழி, நிறம், பால், செல்வம், சாதி, அரசியல், பதவி என்ற அடிப்படையிலான தனிநபர் வேறுபாடுகள் நீதிமன்றத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. அங்கு அனைவரும் சமமாகவே கருதப்படுவர்.

- ஒருவர் குற்றவாளி எனக் நிரூபிக்கப்படும் வரை குற்றமற்ற வராகவே கருதப்படுவார்கள்.
- குற்றத்துக்காக தண்டிக்கப்பட்டவர் ஒரு நிரந்தர குற்றவாளியாகக் கருதப்பட மாட்டார். நீதி மன்றம் அவரை ஒரு நற் பிரஜையாகச் சமூகத்துக்கு அறிமுகம் செய்யப்படும்.
- முதற்கட்ட நீதிமன்றத் தீர்ப்பினால் தமக்கு நீதி கிடைக்கவில்லை எனக் கருதும் தரப்பினர் அது சார்பாக தமக்கு நியாயம் கோரி மேல் முறையீட்டு நீதிமன்றத்துக்கு மனுவினைச் சமர்ப்பிக்கலாம்.
- உயர் நீதி மன்ற வழக்கு விசாரனை யூரிமார் சபையின் முன்னிலையில் நடைபெறுவதின் மூலம் சட்டபூர்வமான அங்கீகாரமானது ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது. அத்துடன் நியாயமான தீர்ப்புக்கு அது வழி வகுக்கும்.
- மரணதண்டனை விதிக்கப்பட்டவருக்கு ஈற்றில் மன்னிப்பு வழங்குமாறு சனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதற்கான உரிமை உண்டு.

சனநாயக நாடுகளின் நீதித்துறை சார்ந்த கட்டமைப்பில் அச் சமூக முறையினால் மதிக்கப்படும் தனிநபர் சுதந்திரத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படும். குற்றம் இழைத்த ஒருவராயினும் அவரை நல்வழிப்படுத்தி அவரில் சமூக இயபாக்கத்தை ஏற்படுத்தவே சட்டத் துறையானது முனையும்.

## சுருக்கம்

*1978* ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் படி நீதித்துறை சார்ந்த இரண்டு பெரிய தாபனங்கள் நிறுவப்பட்டுள்ளன. இலங்கைக் குடியரசின் மீயுயர் நீதிமன்றமும், மேன் முறையீட்டு நீதிமன்றமுமாகும். இவை தவிர முதற் கட்ட நீதிமன்றங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அவை உயர் நீதிமன்றம். மஜிஸ்ரேட் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், குடும்ப நீதிமன்றம், ஆரம்ப நீதிமன்றம் என்பன அவையாகும். கிராம மக்களிடம் ஏற்படும் பிணக்குகளை அல்லது சிறு தகராறுகளைக் தீர்ப்பதற்கான ஒரு செயற்பாடு என்ற அடிப்படையில் கிராமப் பிரமுகர்களான இணக்க சபைகள் தாபிக்கப்பட்டுள்ளன.

சனநாயக நிருவாக முறைக்கு பொருத்தமானதாகவும் நீதித்துறை அமையவேண்டும். அவ்விதம் அமைவதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரஜைகளின் மனித உரிமைகள் உறுதிசெய்யப்படுகின்றன. அதன் அடிப்படையில் நீதி நிலை நாட்டப்படுவதனால் சிறந்த சமூகம் உருவாக வழி பிறக்கும்.

## செயற்பாடு I

1. உங்களது சமூகக்கல்வி ஆசிரியரின் ஆலோசனைகளின்படி அரசியல் யாப்பு ஒன்றில் சேர்க்கப்பட வேண்டிய அடிப்படை உரிமைகளை உங்களது பயிற்சிப் புத்தகத்தில் எழுதுக.
2. 1978 ஆம் ஆண்டு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியல் யாப்பின் பிரகாரம் இலங்கைப் பிரசைகளுக்கு உரித்தாகும் உரிமைகளை குடியியல் உரிமைகள், அரசியல் உரிமைகள், பொருளாதார உரிமைகள் என்ற அடிப்படையில் வகைப்படுத்துக.

## செயற்பாடு II

1. உங்களது சமூகவியல் மன்றத்தில் "சர்வ சன வாக்குரிமையின் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் சமர்ப்பிக்கப்படவுள்ள பேச்சில் இடம்பெற வேண்டிய விடயங்களைக் குறித்துக் கொள்க.
2. உங்களது வகுப்புச் சஞ்சிகையில் "இலங்கைத் தேர்தல் முறையின் பிரதான பண்புகள்" என்ற தலைப்பில் இடம் பெறவுள்ள கட்டுரையில் சேர்க்கப்பட வேண்டிய விடயங் களை குறிப்பிடுக.

## செயற்பாடு III

1. மக்கள் வாக்குகளால் சனாதிபதி தெரிவு செய்யப்படும் 3 நாடுகளையும், பாராளுமன்றத்தால் சனாதிபதி தெரிவு செய்யப்படும் 3 நாடுகளையும் குறிப்பிடுக.
2. இலங்கையின் சனாதிபதி பதவிக்குப் போட்டியிட விரும்பும் ஒரு வேட்பாளர் கொண்டிருக்க வேண்டிய அடிப்படைத் தகைமைகள் எவை?
3. இலங்கை சனாதிபதி வசமுள்ள பாராளுமன்றம் சார்ந்த இரண்டு அதிகாரங்களைக் குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு IV

- தேர்தல் தொகுதிகளின் அடிப்படையில் வாக்காளரால் தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற அங்கத்தவர்களின் தொகை 196 ஆகும். தேர்தல் மாவட்டங்களின்படி அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படும் விதத்தினைக் குறிப்பிடுக.
- ஒரு சட்டமூலம் அங்கீகரிக்கப்படும் விதத்தினை விளக்குக.

## செயற்பாடு V

1. அமைச்சரவைக்கும், பாராளுமன்றத்துக்கும் இடையில் உள்ள தொடர்பு எவ்வாறானது என்பதை ஆராய்க.
2. அமைச்சரவையிடம் ஒப்படைக்கப்படும் மூன்று பணிகளைக் குறிப்பிடுக.
3. உங்களது வகுப்பு மாணவர்களில் ஒரு குழுவினைத் தெரிவு செய்து அவர்கள் மூலம் ஒரு மாதிரி அமைச்சரவை ஒன்றினை நடித்துக் காட்டுக.

## செயற்பாடு VI

1. இலங்கையில் முன்னர் நடைமுறையிலிருந்த பிரதேச நிர்வாக முறை பற்றி மாணவர் மன்றத்தில் நிகழ்த்த உள்ள உரைக்கான சட்டகத்தை தயாரிக்குக.
2. இலங்கையின் தற்போதைய நிர்வாகப் பிரிவுகளை பெரிய அலகிலிருந்து சிறிய அலகு வரை வரிசைப்படுத்துக.
3. பின்வரும் "அ" பகுதியில் இடம் பெறும் நிர்வாகப் பிரிவுகளோடு "ஆ" பகுதியில் இடம் பெறும் நிருவாகம் சார்ந்த பதவிகளோடு இணைக்குக.

| "அ" பகுதி | "ஆ" பகுதி |
|---|---|
| 1. கிராம உத்தியோகத்தர் பிரிவு | 1. மாவட்ட செயலாளர் |
| 2. பிரதேச செயலாளர் பிரிவு | 2. ஆளுநர் |
| 3. நிருவாக மாவட்டம் | 3. கிராம உத்தியோகத்தர் |
| 4. மாகாணம் | 4. பிரதேச செயலாளர் |
| | 5. பிரதேச வருமான உத்தி யோகத்தர் |

4. மாநகர சபை, நகர சபை ஆகியவற்றின் மூன்று பணிகளையும், பிரதேச சபையின் மூன்று பணிகளையும் குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாம் அத்தியாயம்

# தேசப்படக் கல்வி

அறிமுகம்

மனித நடவடிக்கைகளில் தேசப்படங்களின் பயன்பாடு மிகவும் அத்தியாவசியமான தேவையான வளர்ந்து வருவதனைக்கான முடிகின்றது. கி. மு. 2800 ஆம் ஆண்டளவில் மெசப்பதேமியாவில் வாழ்ந்த ஒருவர் தன் காணி அமைந்துள்ள இடத்தினைக் காட்டுவதற்காக களிமன் தட்டில் வரைந்த படமே, உலகில் இதுவரை கண்டெடுக்கப்பட்டுள்ள தேசப்படங்களுள் மிகப் பழைமையானதாகக் கருதப்படுகின்றது. அன்றிலிருந்து தேசப்படக் கலையினில் பல்வேறு முன்னேற்றங்கள் அடையப் பெற்றுள்ளன. நாடுகளது அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது, தேசப்படங்களது பயன்பாடு மிகவும் அவசியமானதாகவும், அடிப்படையானதாகவும் அமைகின்றன. இன்றைய தேசப்படங்களினை வரையும் படவரை கலைஞர்கள் பலதரப்பட்ட தேசப்படங்களினை வரைகின்ற ஆற்றலினைப் பெற்றுள்ளனர். இன்றைய மனிதர் நாம் வாழுகின்ற புவியினைப் பற்றிய தேசப்படங்களினை மட்டுமன்றி, எமது புவியிலிருந்து வெகு தொலைவில் உள்ள வேறு கோள்களினைப் பற்றியும் கூட தேசப்படங்கள் வரையும் ஆற்றல்களினைப் பெற்றுள்ளனர்.


இங்கே தரப்பட்டுள்ள உரு 1 றினை நன்கு நோக்கவும். அதில் பலதரப்பட்ட தேசப்படங்கள் காட்டப்பட்டுள்ளன. அத்தகைய தேசப்படங்கள் ஒவ்வொன்றும் பல்வேறு விடயங்களினை எமக்குத் தருகின்றன. இதிலிருந்து எழுகின்ற தேவைகளினைப் பொறுத்து பல்வேறு வகையிலான தேசப்படங்கள் வரையப்படுகின்றன எனத் தெளிவாகின்றது.

புராதன காலந் தொட்டு, மனிதன் தான் வாழுகின்ற புவி பற்றிய தகவல்களினை அறிவதில் ஆவலுடையவனாயிருந்தான். இவ்வாறு பெறுகின்ற தகவல்களை ஒருங்கே சேகரித்து வைத்துக்கொள்ள முற்பட்ட போது, தேசப்படங்கள் வரையும் கலை ஆரம்பமாயிற்று எனலாம்.

இந்த அத்தியாயத்தில் 1:50,000 என்ற அளவுத்திட்டத் தினையுடைய இலங்கைத் தேசப்படம் பற்றிய விபரங்களே தரப்படுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 6.1
பல்வேறு தேசப்படங்கள்

இலங்கையின் குடித்தொகை அடர்த்தி



## தேசப்படம் என்றால் என்ன?

தேசப்படம் என்பது ஒரு பிரதேசத்தின் அல்லது, நாடொன்றின் புவியியல் விபரங்களை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டும் ஒரு வழிமுறையாகும்.

தேசப்படத்தினை குறித்த பல்வேறு வரைவிலக்கணங்கள் காணப்படுகின்றன. அவற்றுல் சில:

"தேசப்படம் எனின், புறத்தே இருந்து பார்க்கும் போது பிரமாண்டமான புவியானது நாடொன்றுக்குச் சமனாகும் வகையில் வரையப்படும் படமே ஆகும்."

ஆர்வின் ரேஸ்

"எந்தவோர் இடத்தினதும் அமைவிடத்தினை எடுத்துக் காட்டப் பயன்படுகின்ற பல விடயங்களினையும் வெளியிடுகின்ற மையமாக தேசப்படம் விளங்குகின்றது."

"புவி மேற்பரப்பில் காணப்படும் பெரும் நாடுகளினைப் பற்றிய பல விடயங்களினையும் தெளிவாக அறிந்து கொள்ளக் கூடிய வகையில், பொருத்தமானதோர் அளவுத்திட்டத்தின்படி சிறியதாகக் காட்டக்கூடிய உபகரணம் என்ற வகையில் தேசப்படம் விளங்குகின்றது."

ஜீ. ஈ. ஜேம்ஸ்.

இங்கே எடுத்துக் காட்டப்பட்ட சில வரைவிலக்கணங் களிலிருந்து கூறப்படுகின்ற விடயத்தினைப் பின்வருமாறு இலகுவாக விளக்கலாம்.

> புவி மேற்பரப்பில் காணப்படுகின்ற முப்பரிமான வடிவில் உள்ள அம்சங்களினைப் பொருத்தமானதோர் அளவுத்திட்டத்தின் அடிப்படையில் இருபரிமாண வடிவினில் கடதாசி ஒன்றில் வரைகின்ற படமே தேசப்படம் என அழைக்கப் படுகின்றது.

## தேசப்படத்தின் பயன்பாடு

தேசப் படத்தின் பயன்பாடுகள்

தேசப்படங்கள், இன்றைய உலக மக்களின் மிக அவசியமான தேவைகளில் ஒன்றாக மாற்றம் அடைந்து வருகின்றன. உலக நாடுகளின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் போது, எழுகின்ற பலதரப்பட்ட தேவைகளின் பொருட்டு தேசப்படங்கள் வரையப்படுகின்றன. அவ்வாறான தேவைகள் சிலவற்றினை இங்கு நோக்குவோம்:-

- உல்லாசப் பிரயாணத் தேவைகள்.
- பிரதேச அபிவிருத்தியின் போதான தேவைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைய உள்ளன.

- நீர்பாசன உத்தேசத்திட்ட நடவடிக்கைகளின் போது.
- குடியேற்றங்களினை நிறுவும் போது.
- கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும் போது.
- கல்விசார் நடவடிக்கைகளின் போது.
- யுத்த நடவடிக்கைகளின் போது.
- நிருவாகத் தேவைகளின் போது.

என்று, தேசப்படங்கள் பயன்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்களிற் சிலவற்றினை எடுத்துக்காட்டக் கூடியதாக உள்ளது. இத்தகைய சந்தர்ப்பங்களில் தேசப்படங்களினை உபயோகிப்பதற்கு, தேசப்படங்களினை விளக்குவதற்கு, அவற்றிலிருந்து தனக்குத் தேவையானவற்றினைப் பெற்றுக் கொள்வதற்குக் கூடிய ஆற்றல் காணப்படுவது மிக அவசியமானதாகும். இத்தகைய ஆற்றல்களினை அடைந்துகொள்வதற்குத் தேசப்படங்களது அடிப்படைகள் பற்றி நன்கு அறிந்திருத்தல் அவசியமாகும்.

### தேசப்படங்களின் அடிப்படைகள்

தேசப்படம் ஒன்றினை அமைக்கும் போது பல்வேறு அடிப்படைக் காரணிகளில் கவனம் செலுத்துதல் வேண்டும். இந்த அடிப்படைக் காரணிகள் சகல வகையான தேசப்படங்களிலும் அமைந்திருத்தல் வேண்டும். இத்தகைய அடிப்படை விடயங்கள் வருமாறு:-

(அ) தேசப்படத்தின் பெயர்

(ஆ) அளவுத்திட்டம்:- தேசப்படங்கள் பல்வேறு அளவுத்திட்டங்களில் வரையப்படுகின்றன.

தேசப்படம் அமைக்கும் போது, பல காரணிகளில் கவனம் செலுத்த வேண்டும்.

உதாரணமாக.

| | |
|---|---|
| சிற்றளவுத்திட்டம்: | 1:250 000 |
| | 1:500 000 |
| நடுத்தர அளவுத்திட்டம்: | 1:50, 000 |
| பேரளவுத் திட்டம்: | 1:5,000 |
| | 1:10,000 |

(இ) திசை:- தேசப்படங்களில் எப்போதும் வடக்குத் திசை மூலம் திசை காட்டப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) குறியீடுகள்:- புவியில் காணப்படுகின்ற புவியியல் அம்சங்களினை அப்படியே தேசப்படம் ஒன்றில் காட்டுவது என்பது இயலாத காரியமாகும். எனவே, இத்தகைய புவியியல் அம்சங்களினை முடிந்தளவு எளிதாக விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில், மிகத் தெளிவாக தகவல்களை அளிக்கும் வகையில் குறியீடுகளினைத் தேசப் படத்தினில் உபயோகிக்க முடியும்.

(உ) நிறங்கள்: குறிப்பிட்ட தகவல்களினை மிகத் தெளிவாகவும், இலகுவில் புரிந்துகொள்ளக் கூடிய வகையிலும் பொருத்தமான நிறங்கள் தேசப்படத்தினில் பயன்படுத்த முடியும்.

(ஊ) நேர்த்தி:- தேசப்படத்தினை வாசிப்பதற்கும், விளங்குவதற்கும் நேர்த்தி மிக அவசியமானதாகும்.

## தேசப்படம் ஒன்றில் காட்டப்படுகின்ற விபரங்கள் பிரதிபலிக்கும் முறைகள்

தேசப்படம் ஒன்றில் பல்வேறு வகையான புவியியல் அம்சங்கள் காட்டப்படுகின்றன. அத்தகைய் விபரங்கள் மூன்று முறைகள் மூலம் பிரதிபலிக்கப்படுகின்றன.

(அ) புள்ளி உருவக் குறியீடுகள்

மலையின் உச்சி, பாடசாலை, வைத்தியசாலை, குடியிருப்பு, காவல் நிலையம் போன்றவைகளைப் புள்ளிக் குறியீடுகள் மூலம் வெளிக்காட்டப்படும். இவை, மிகச் சரியான அமைவிடத்தினில் அமைவதற்காகவே முக்கியம் பெறுகின்றன.

(ஆ) கோட்டுக் குறியீடுகள்:-

**தேசப்படமொன்றில் காட்டப் படுகின்ற விபரங்கள் பிரதிபலிக்கும் முறைகள் மூன்றாகும்.**

போக்குவரத்துப் பாதைகள், இரும்புப்பாதை, கால்வாயிகளைப் பரா்மரிக்கும் எல்லைகள் போன்ற புவியியல் அம்சங்கள் கோட்டுக் குறியீடுகளால் காட்டப்படுகின்றன.

(இ) பரப்பியல் உருவக் குறியீடுகள்:-

புவியில் பரம்பிக் காணப்படுகின்ற, காட்டுப்பிரதேசம், பயிர்ச் செய்கைகள், கட்டிடங்கள் போன்றவற்றினை இத்தகைய பரப்பு உருவக் குறியீடுகள் மூலம் தெளிவாகக் காட்டப்படுவது உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசப்படங்களின் வகைகள்

பல்வேறுபட்ட தேசப்படங்கள் காணப் படுகின்றன.

உங்களுடைய பாடநூல்களில் உள்ள தேசப்படங்களையும், தேசப்பட நூலில் உள்ள படங்களினையும் ஆராய்ந்து அவ்வப்படங்களில் குறித்துக் காட்டப்படும் தகவல்கள் யாவை எனக் கண்டறியுங்கள். அவ்வாறு ஈடுபடும்போது, எழுகின்ற நோக்கங்களின் பொருட்டு தேசப்படங்களின் வகைகள் வேறுபட்டு அமைகின்றன எனத் தெளிவாகும்.

ஒரு தேசப்படத்தில் தரப்படும் தகவல்களின் இயல்பு களிற்கேற்ப அவற்றை இரண்டு பிரதான வகுதிகளுக்குள் அடக்கலாம்.

(அ) பௌதீக உறுப்புகளைக் காட்டும் படங்கள்.

(ஆ) பண்பாட்டு அம்சங்களைக் காட்டும் படங்கள்.

இவையல்லாது தேவைகளின் பொருட்டு தேசப்படங்களினை இரண்டாக வகுத்து நோக்கலாம்.

1. சாதாரண படங்கள்.
2. சிறப்புப் படங்கள்.

பொதுவான விடயங்களினைக் குறித்துக் காட்டுவதற்காகத் தயாரிக்கப்படும். படங்கள் சாதாரணப் படங்கள் என்றழைக் கப்படும்.

ஒரு விடயத்தினைச் சிறப்பாகக் குறித்துக்காட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் படங்கள் சிறப்புத் தேசப்படங்கள் என்றழைக் கப்படும்.

இத்தகைய படங்கள் எவை என்பனவற்றைப் பின்வருமாறு விளக்கலாம்.

தேசப்படங்கள்

| சாதாரண படங்கள் | சிறப்புப் படங்கள் |
|---|---|
| (அ) இலங்கை ஓரங்குல இடவிளக்கப்படம். | (அ) போக்குவரத்துப் படம் |
| (ஆ) இலங்கை மெற்றிக் அளவிலான இடவிளக்கப்படம். | (ஆ) உல்லாசப் பயணத் தேசப் படம். |
| (இ) தேசப்பட நூல் (அட்லஸ்) | (இ) காலநிலைத் தேசப்படம். |
| (ஈ) சுவரில் தொங்கவிடப்படும் தேசப்படம். | (ஈ) மக்கட் பரம்பல் தேசப்படம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் இடவிளக்கத் தேசப்படங்கள்

இடவிளக்கத் தேசப்படங்கள் என்றால் என்ன? என்பது பற்றிப் பல்வேறு வரைவிலக்கணங்கள் உள்ளன. அவற்றுள், சிறந்ததொரு வரைவிலக்கணம் வருமாறு:

"புவியில் இயற்கையாகவே காணப்படும் அம்சங்களான, பௌதீக அம்சங்களினையும், மனிதனால் உருவாக்கப்பட்ட பண்பாட்டு அம்சங்களினையும் உள்ளடக்கிய வகையில் நடுத்தர மற்றும் பேரளவுத் திட்டங்களில் வரையப்படும் தேசப்படங்கள், இடவிளக்கத் தேசப்படம் எனப்படும்."

இந்த இடவிளக்கப்படத்தினில் கீழே தரப்படுகின்ற அம்சங்களே உள்ளடக்கப்பட்டிருக்கும்.

- வடிகால் அம்சங்கள்.
- தரை உயரம் (இது சம உயரக்கோடு, இட உயரம், திரிகோண கணித நிலையம் என்பனவற்றால் காட்டப்படும்.)
- பெரிய கற்குன்றுகள்.
- போக்குவரத்து அம்சங்கள்: (சகல போக்குவரத்துப் பாதைகளும், புகையிரதப் பாதைகள் உட்பட)
- நிலப்பயன்பாடு: (இயற்கையானதும், மனிதனால் உருவாக்கப்படுபவைகளும்)
- கட்டிடங்கள்.
- நிருவாக எல்லைகள்.
- குறிப்பிட்ட இடங்களின் பெயர்கள்.
- அறிமுகத் தகவல்களுடன் மிக முக்கியமான கட்டிடங்கள்.
- குடியிருப்புகள்.

தேசப்படம் என்ற வகையில் நமது நாட்டில் முதன் முதலில் தயாரிக்கப்பட்ட படம், ஓரங்குல தேசப்படம்/ஓரங்குல இடவிளக்கப்படம் என்ற பெயரால் வழங்கப்பட்டது. இதன் அளவுத்திட்டம் 1:63,360 என வழங்கப்படடது. அதாவது நிலத்தின் ஒரு மைல் தூரம் இப்படத்தினில் ஓர் அங்குலமாகக் காட்டப்படடது. இக் காரணத்தினாலேயே இத் தேசப்படம், ஓரங்குல இடவிளக்கப்படம் என்றழைக்கப்பட்டது. முதலாவது ஓரங்குல இடவிளக்கப் படம் கி. பி. 1746 ஆம் ஆண்டில் பிரித்தானியாவில் வரையப்பட்டது. இதன் பின்பே இலங்கையிலும், ஓரங்குல இட விளக்கப்படங்கள் தயாரிக்கப்படலாயின. இலங்கை நில அளவைத் திணைக்களம் கி. பி. 1800 ஆம் ஆண்டளவிலேயே இலங்கையின் ஓரங்குல இடவிளக்கப்படங்கள் வரைவதற்கு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு 1924 ஆம் ஆண்டில் நிறைவேற்றப் பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் 1:50000 இடவிளக் கப்படம் 92 உள்ளன.

பிரித்தானியா, மற்றும் உலகின் பிற நாடுகளினைப் போன்று இலங்கையிலும் நிறுவை, அளவை தொடர்பாக மெற்றிக் அளவுமுறை ஆரம்பிக்கப்பட்டது. 1964 ஆம் ஆண்டில் 24 ஆவது நிறுத்தல், அளத்தல் திருத்தச் சட்டத்தின்படி மெற்றிக் அளவிலான முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன்படி இடவிளக் கப்படங்களிலும் மெற்றிக்முறை புகுத்தப்பட்டது.

ஆகவே, 1980ஐ அடுத்த தசாப்தத்தின் முற்பகுதியில் 1:50000 இடவிளக்கத் தேசப்படத் தயாரிப்புகள் ஆரம்பமாயிற்று. இது ஏற்கனவே வழக்கத்தில் இருந்த ஓரங்குல இடவிளக்கப் படத்தினை விடவும் ஓரளவு பெரிதாகும் இதனால் இலங்கை முழுவதிற்குமாக காணப்பட்ட 72 ஓரங்குல இடவிளக்கப்படங்களுக்குப் பதிலாக 92 மெற்றிக் அளவிலான (1:50000) படங்கள் தயாரிக்கப்பட்டன.

இந்த 1:50000 அளவுத்திட்ட இடவிளக்கத் தேசப்படமானது சிறப்பு மிக்கதாகக் காணப்படுகின்றது. இதை மத்திய அளவுத் திட்டத் தேசப்படமாகக் கொள்ளப்படுகிறது. பூமியின் மேற்பரப்பிலுள்ள ஒரு கிலோமீற்றர் தூரம் இத்தேசப் படத்தில் 2 சென்றி மீற்றர்களில் காட்டப்படுகிறது. இதன்படி தேசப்படத்தினில் காட்டப்படும் ஒரு சென்றி மீற்றர் தூரம் நிலத்தினில் $^1/_2$ கிலோ மீற்றராகும் என்பதை நீங்கள் விளங்கிக் கொண்டிருப்பீர்கள். இதன் பிரகாரம் 1:50000 எனும் அளவுத் திட்டமானது 1 சென்றிமீற்றர் – 50 000 சென்றி மீற்றர் என்று கொள்ளப்படுகிறது.

$$1 \text{ cm} = 1/2 \text{ km}$$

$$1 \text{ cm} = 50{,}000 \text{ cm}$$

இங்கே எடுத்துக் கூறப்பட்ட அளவுத்திட்டத்திற்கமைய இலங்கைத் தேசப்படம் ஒன்றைத் தயாரித்தால் அப்படத்தில் இலங்கையின் நீளமும் அகலமும் எவ்வாறு இருக்கும் என எண்ணிப் பாருங்கள்.

இலங்கையானது பருத்தித்துறையில் இருந்து தெவுந்தர முனை வரையும் 432 கி. மீற்றர் நீளத்தினையும் கொழும்பில் இருந்து சங்கமன்கந்த முனை வரையும் 224 கி. மீற்றர் அகலமும் கொண்ட தீவாகக் காணப்படுகின்றது, எனவே மேலே குறிப்பிடப்பட்ட அளவுத்திட்டத்திற்கு இணங்க வரையப்படும் இலங்கைத் தேசப்படமானது.


432 x 2 = 864 சென்றி மீற்றர் நீளமுடையதாயும்

224 x 2 = 448 சென்றி மீற்றர் அகலமுடையதாகவும் அமையும். (அதாவது 8.64 மீற்றராகவும், 4.48 மீற்றராகவும் அமையும்.)



12. S. P. C 000405

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 6.2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நீள அகலங்களில் பாரிய தேசப்படம் ஒன்றை வரைவது என்பது இயலாத காரியமாகும். இதனாலேயே இலங்கையின் 1:50000 இடவிளக்கத் தேசப்படம் பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதனால் இத்தேசப்படம் 92 துணைப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதிலொரு பிரிவு 40 கிலோமீற்றர் நீளத்தினையும், 25 கிலோ மீற்றர் அகலத்தினையும் கொண்ட நிலப்பகுதியினை உள்ளடக்கியதாக இருக்கும் வகையில் 80cm நீளம் 50cm அகலம் உடையதாக இருக்கும். அதாவது 1000 சதுர கிலோமீற்றர்களைக் கொண்டிருக்கும். இதனை உரு – 2 இல் அவதானிக்க.

1:50000 எனும் இடவிளக்கத் தேசப்படத்தினை உபயோகிப்பதற்கும் அவற்றில் காட்டப்பட்டிருக்கும் பௌதீக, பண்பாட்டு அம்சங்கள் பலவற்றினை இனங்காண்பதற்கு அதற்குத் தேவையான அடிப்படை விபரங்களை நாம் அறிந்து கொள்ளல் வேண்டும். தேசப் படத்தினில் காட்டப்பட்டிருக்கும் பல அடிப்படைத் தகவல்களை பிரதானமாக இரு பிரிவாகப் பிரித்துக் காட்ட முடியும்.

1. **தேசப்படத்தின் முகப்பு விபரங்கள் அல்லது உட்பகுதி விபரங்கள்.**

   தேசப்படத்தினில் பிரதேசம் ஒன்றில் பௌதீக மற்றும் பண்பாட்டு அம்சங்கள் பலவும் குறியீடுகள், நிறங்கள் கொண்டு காட்டப்பட்டிருக்கும்.


2. **தேசப்படத்தின் விளிம்பு விபரங்கள்.**

   தேசப்படத்தினை வாசித்து விளங்கிக் கொள்ளும் வகையில் தேவையான விபரங்கள், படத்தின் விளிம்பு பக்கங்களில் தரப்பட்டிருக்கும்.

படத்தின், விளிம்பு பக்கங்களில் தரப்பட்டிருக்கும் விபரங்கள் தேசப்படத்தின் உட்பகுதியில் தரப்பட்டிருக்கும் விபரங்களுக்குப் புறம்பானதாகக் காணப்படும். இவை வெளிக்கரை விபரங்கள், உட்கரை விபரங்கள் என்றனவாக இரண்டாகப் பிரித்து நோக்கப்படும். இங்கே தரப்பட்டுள்ள உரு – 3 இனை நன்கு அவதானியுங்கள். அதில் உட்பகுதிக்கரை, மற்றும் வெளிக்கரை என்பன நன்கு காட்டப்பட்டுள்ளன. உங்களது பாடசாலையில் உள்ள 1:50000 மெற்றிக் அளவைப் படமொன்றைப் பெற்று மேலதிக விபரங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 6.3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1:50000 படத்தினில் வெளிச்சட்டக் கோடுகள் இரண்டாகக் காணப்படும்.

**1:50000 இடவிளக்கப் படத்தினை கற்பதற்கு படத்தின் விளிம்பு விபரங்கள் அவசியமான தாகும்.**

(அ) உட்புற எல்லைக்கரை: கறுப்பு நிறக் கோட்டினால் காட்டப்பட்டிருக்கும். தேசப்படத்தின் ஏனைய பிரதேசங்களின் விபரத்தினை எல்லையாக இது கொள்ளப்படும்.

(ஆ) வெளிப்புற எல்லை: கரிய கறுப்பு நிறக்கோட்டினால் இது காட்டப்பட்டிருக்கும். உட்புற எல்லைக் கரைக்கும் இக்கோட்டிற்கும் இடையில் சில cm இடைவெளியே காணப்படும்.

உட்புற எல்லைக் கோட்டிற்கு வெளியே காணப்படும் பகுதி "வட்டக்கரை" என அழைக்கப்படும். உரு - 3 இல் இதனைக் காண முடிகின்றது. இவ்வட்டக்கரை இரண்டு பகுதியாகப் பிரிக்கப்படும். அவையாவன:

(அ) மேல் வட்டக் கரை.

(ஆ) கீழ் வட்டக் கரை.

அவற்றில் உள்ளடக்கப்படும் விபரங்கள் என்னென்ன என்பது பற்றி ஆராய்ந்து நோக்குவோம். (உங்கள் பாடசாலையில் உள்ள 1:50000 தேசப்படத்தினை நன்கு அவதானித்து இவற்றைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்க.)

(அ) மேல் வட்டக் கரை:- இதில் பின்வரும் விடயங்கள் காட்டப் பட்டிருக்கும்.

1. தேசப்படத்தின் பெயர் உ-ம்; கெக்கிராவை

2. தேசப்படத்தின் வகை உ-ம்; இலங்கை 1:50000

3. தேசப்பட இலக்கம் உ-ம்; 36

(தேசப்படத்தின் 92 பிரிவுகளில் 36 ஆவது படம். இது கெக்கிராவை இடவிளக்கப்படத்தினைக் குறிப்பதாக அமையும்.)

(1) அளவுத் திட்டம்:-

இது, இரண்டு முறைகளில் காட்டப்பட்டிருக்கும்.

- வகைக்குறிப்பின்ன அளவுத்திட்டம். உ-ம் 1:50000

(இந்த அளவுத்திட்டத்தினை இரு முறைகளில் கையாளலாம். ஒன்று பின்னமாகக் காட்டுவது. மற்றையது விகிதத்திற் காட்டுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


$^1/_{50.000}$ ; 1:50,000)

- நேர்கோட்டு அளவுத்திட்டம். (உரு–4 இனைக் கவனிக்கவும்.)

இம்முறையில் அளவுத்திட்டம் ஒரு நேர்கோட்டினால் காட்டப்பட்டிருக்கும். 1: 50,000 எனும் படத்தினில் நேர்கோட்டு அளவுத்திட்டம், பின்வருமாறு காட்டப் பட்டிருக்கும்.

ஒரு நேர்கோடு 2 செ. மீ. கள் இடைவெளி கொண்டதாகப் பிரிக்கப்பட்டிருக்கும். அதன் ஒரு பிரிவு நிலத்தில் 1 கிலோ மீற்றர் அளவினைக் குறிப்பதாக அமையும். அந் நேர்கோட்டின் முதல் இரு பிரிவுகளிலும் ஒரு cm இன் பத்திலொரு பகுதிகளினையும் காட்டும் வகையில் உப பிரிவுகள் பிரிக்கப்பட்டிருக்கும்.

**வகைக்குறிப்புப்பின்ன, நேர்கோட்டு அளவுத்திட்டங்கள்**




உரு 6.4

மேற்கண்ட இரு அளவுத்திட்டங்கள் தவிர, "அளவுத்திட்டக் கூற்று என்ற அளவுத்திட்டமும் உள்ளது. அளவுத்திட்டத்தை சொற்களில் கூறும் முறையாகும். ஆனால், இம்முறை 1: 50,000 இடவிளக்கப்படங்களில் இடம் பெறுவதில்லை.


*(2) திசைகள்*

தேசப்படத்தில் திசை குறித்தல் என்பது மிக முக்கியமான அம்சமாகும். பொதுவாக தேசப்படமொன்றில் வடக்குத் திசை மட்டுமே குறிப்பிடப்படும். ஆனால், 1: 50,000 இடவிளக்கத் தேசப்படங்களில் திசையைக் காட்டுவதில் சிறப்பானதொரு வழி பின்பற்றப்படுகின்றது. அதாவது மூன்று வகையான வடக்குத் திசைகள் காட்டப்படுகின்றன.

அவையாவன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 6.5

- உண்மை வடக்கு [True North (TN) ]
- காந்த வடக்கு [Megnetic North (MN) ]
- அளியடைப்பு வடக்கு [Grid North (GN) ]

இதனை உரு 6.5 இல் காணக்கூடியதாக உள்ளது.

**உண்மை வடக்கு** - உண்மை வடக்கு என்பது புவியியல் வடக்குத் திசையைக் குறிப்பதாக அமைகின்றது. உண்மை வடக்கு என்பது புவிக்கோளத்தின் வட முனைவு அமைந்துள்ள திசையாகும்.

**காந்த வடக்கு** - இவ்வடக்கு திசைகாட்டி முனைகளால் காட்டப்படும் வடக்காகும். திசைகாட்டியி லுள்ள ஊசியானது காந்த வடக்கை நோக்கியே திரும்புகிறது. உண்மை வடக்கிற்கும் காந்த வடக்கிற்கும் இடைப் பட்ட இடைவெளி, இடைக் காந்த மாறல் எனப்படும்.

**அளியடைப்பு வடக்கு** -

உண்மை வடக்கிற்கும், காந்த வடக்கிற்கும் இடைப்பட்டதாகக் காட்டப்பட்டிருப்பது அளியடைப்பு வடக்காகும். இதன் மூலம் படம் வரையப்பட்டுள்ள சதுரக் கோட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பில் வடக்கு காட்டப்படும். 1:50000 தேசப்படத்தில் உண்மை வடக்கிற்கும் அளியடைப்பு வடக்கிற்கும் இடையில் மிகக் குறைந்தளவு கோண வேறுபாடே காணப்படும்.

### (3) அமைவிடம் :

நீங்கள் பயன்படுத்தும் 1: 50,000 இட விளக்கப்படத்தில் காட்டப்படும் பிரதேசம் எந்த அமைவிடத்தில் உள்ளது என்பதனை இலகுவாக அறிந்து கொள்ளும் வகையிலான ஒரு பகுதி கீழ் வட்டக் கரையில் திசை காட்டப்பட்டுள்ள பகுதிக்கு வடக்கே காட்டப்பட்டிருக்கும்.

உதாரணமாக கெக்கிராவை 1:50000 இடவிளக்கப்படத்தின் காட்டப்பட்டுள்ளவாறான பகுதியினை

உரு-இல. 6.6 இல் நீங்கள் காணலாம்.

அதில் மத்திய பகுதியில் கெக்கிராவைக்குரிய பெயர் - இலக்கம் தரப்பட்டுள்ளதுடன், அப்பிரதேசப் படத்தினைச் சூழ வேறு எந்த எந்தப் படங்கள் அமைய வேண்டும் என்பதும் காட்டப்பட்டிருப்பதனைக் காணலாம்.

| அமைவிடம் | | |
|---|---|---|
| கலாஓயா<br>30 | அனுராதபுரம்<br>31 | கவுதுல்லை<br>32 |
| கல்கமுவ<br>35 | கெக்கிராவை<br>36 | பொலன்னறுவை<br>37 |
| நிக்கவெரட்டிய<br>41 | தம்புள்ளை<br>42 | எலகர<br>43 |

உரு. -6.6


### (4) நிருவாக எல்லைகள்

தேசப்படங்களில் காட்டப்படுகின்ற பிரதேசத்தின் நிருவாகத்திற்கெனப் பிரிக்கப்பட்ட எல்லைகள் காட்டப்படுவதுண்டு. மாகாண, மாவட்ட, கிராம சேவகர் பிரிவு என்ற நிருவாக எல்லைகள் இவற்றுள் சிலவாகும். உரு - இல. 07 இனில் இத்தகைய நிருவாக எல்லைகள் காட்டப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருவாக எல்லைகள்




மாகாணங்கள், மாவட்டங்கள், உ.அ.அ. பிரிவுகள், கிராமசேவகர் பிரிவுகள் என்பவற்றின் பெயர்கள் சிவப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

உரு. 6.7

### (5) குறியீடுகள்:

தேசப்படங்களை வாசித்து தெளிவு பெறுவதற்கு குறியீடுகள் அவசியமாகும். தேசப்படத்தினில் காட்டப்பட்டுள்ள பௌதீக மற்றும் பன்பாட்டு அம்சங்களுக்குரிய குறியீடுகள், நிறங்கள் என்பன பற்றியும் தேசப்படத்தில் கீழ்க் கரையில் காட்டப்பட்டிருக்கும்.


1:50000 தேசப்படத்திற்குரிய குறியீடுகள் பினவரும் பிரிவு களாக உள்ளடக்கப்பட்டிருக்கும்.

- நிருவாக எல்லைகள்.
- உல்லாசப் பிரயாணத் தகவல்கள்.
- பெருந் தெருக்கள்.
- புகையிரதப் பாதைகளும் அதனுடன் தொடர்பான விடயங்களும்.
- வடிகால் அம்சங்கள்.
- நிலப்பயன்பாடு.
- பயிர்ச்செய்கை.

மற்றும் பிற அம்சங்கள் என காட்டப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு. 6.8

மெற்றிக் வரைபடங்களில் உபயோகிக்கப்படும் குறியீடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே எடுத்துக் காட்டப்பட்டுள்ள விபரங்களினை உங்களது பாடசாலையில் உள்ள 1:50000 இடவிளக்கத் தேசப்படத்துடன் ஒப்பிட்டுக் கற்றுக் கொள்ளவும். அவ்வாறு கற்கும் போது, நிறங்கள், உருவம், அளவுத்திட்டம் என்பனவற்றில் சிறப்புக் கவனம் செலுத்துதல் வேண்டும். இயற்கையான தாவரங்களினைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் குறியீடுகளில் மிகக் குறைந்தளவு வேறுபாடே காணப்படுவதால் அவற்றில் அதிக அவதானம் அவசியமாகும்.

உம்: சேற்று நிலமும், நீர்த்தாழைத் தாவரமும்.

இத்தகைய வேறுபாடுகளினைக் கண்டறிவதற்குக் கூடிய பயிற்சியும் அவதானமும் அவசியமாகும்.

மேலே குறிப்பிட்டுக் காட்டப்பட்ட அம்சங்களைத் தவிர வேறு பல தகவல்களும் கீழ் வட்டக் கரையில் குறிப்பிடப் பட்டிருக்கும்

- அளியடைப்புப்பாவனைக்கான அறிவுரைகள்.
- எறிய வகை.
- அச்சுக்குறிப்பும், அச்சகப் பெயரும்.
- வெளியீட்டாளர் குறிப்பு.
- கடலுயர மட்டம்.
- சம உயரக் கோட்டு இடைவெளி.
- தயாரித்த ஆண்டும் மீள் பதிப்பித்த ஆண்டும்.

## சமவுயரக் கோடுகள்

இடவிளக்கப்படங்களில், பிரதேசம் ஒன்றின் தரையுயர்ச்சி (தரைத்தோற்ற) வேற்றுமைகளைக் காட்டுவதற்குச் சமவுயரக் கோடுகள் பயன்படுத்தப்படுகின்றன. புவியின் மேற்பரப்பில் சம உயரத்தினை உடைய இடங்களைத் தொடுப்பதற்காக வரையப்படும் கோடே சமவுயரக் கோடாகும். எனவே ஒரு சமவு யரக் கோட்டின் மூலம் ஒரே சமமான உயரம் காண்பிக்கப்படும். இதனை உரு-இல 08 விளக்குகின்றது. இதிலிருந்து சமவுயரக் கோடென்பது தரையின் உயரத்தினை அளவிட்டு சமவுயரத்தை யுடைய இடங்களைத் தொடுத்து வரையப்படுகின்ற ஒரு கற்பனைக் கோடாகும் என அறிந்திருப்பீர்கள். சமவுயரக் கோட்டுப் படத்தின் மூலம் ஏதுமொரு பிரதேசத்தின் தரையுயர்ச்சி வேற்றுமைகளை வரைந்து காட்டலாம். இடவிளக்கப்படங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம உயரக் கோடுகள் கபில நிறக்கோட்டினால் காட்டப்படும். அத்துடன் 1:50000 படங்களில் இக்கோடு 20 மீற்றர் இடைவெளிகளில் வரையப்படுவதுண்டு.

### சமவுயரக் கோடுகள்
### தரை உயர்ச்சி அம்சங்கள் (தரைத்தோற்ற வேற்றுமைகள்)

இலங்கையின் 1: 50,000 இடவிளக்கத் தேசப்படங்களில் தரை உயர்ச்சி வேறுபாடுகள் சமவுயரக் கோடுகள் மூலம் காட்டப்பட்டிருக்கும். சமவுயரக் கோடுகளின் மூலம் குறித்த பிரதேசத்தின் அமைப்பு, உயர வேறுபாடுகளை அறிந்து கொள்ளல் முடியும். ஒரு பிரதேசத்தின் வேறுபாடுகள் பல்வேறு பெயர்கள் கொண்டு இனங்காணப்படுகின்றன.

அவற்றைப் பின்வருமாறு எடுத்துக் காட்டலாம்.

| | |
|---|---|
| சம உயரக்கோடுகளின் மூலம் தரை உயர்ச்சி வேறுபாடுகள் காட்டப்படுகின்றன. | உயர் நிலங்கள்<br>தாழ் நிலங்கள்<br>சமவெளிகள்<br>தொடரலை நிலம்<br>மலைத் தொடர்<br>கூம்புக்குன்று<br>பீடபூமி/மேட்டுநிலம்<br>சுவடு<br>பள்ளத்தாக்கு, நெடும் பள்ளத்தாக்கு<br>குறுக்குப் பள்ளத்தாக்கு<br>பாறை<br>மென்சாய்வு<br>குழிவுச் சாய்வு<br>குவிவுச் சாய்வு<br>குத்துச் சாய்வு<br>சரிவுச் சாய்வு |


இங்கே எடுத்துக் காட்டப்பட்ட தரை உயர்ச்சி வேற்றுமைகளை சம உயரக் கோடுகள் மூலம், சம உயரக் கோடுகளில் காட்டப்படும் உயர அளவுகளைக் கொண்டும் அறிந்து கொள்ளலாம். இவற்றை 1: 50,000 இடவிளக்கத் தேசப்படத்தினைக் கொண்டு மேலும் விளங்கிக் கொள்ளவும்.

இங்கே தரப்பட்டுள்ள உரு. – இல. 6.9 ஐயும் 6.10 இனையும் நன்கு அவதானத்துடன் கற்கவும். அவற்றில், தரைத் தோற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்களில் சில விளக்கப்படுத்தப்பட்டுள்ளது. விளக்கங்களுடன் சம உயரக் கோட்டுப்படம் மூலமும் காட்டப்பட்டுள்ளது. இவற்றுடன் 1: 50,000 இலங்கை இடவிளக்கத் தேசப்படத்தினைக் கொண்டு தரை உயர்ச்சி வேற்றுமை உறுப்புக்களைக் கண்டறிய முயலவும்.





உரு 6.9
பள்ளத்தாக்கும் சுவடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இவற்றிற்கு 10 ஆம் 11 ஆம் ஆண்டுகளுக்குரிய தேசப்படக்கல்வி நூலினை உதவிக்குக் கொள்வது உசிதமானதாகும்.)




P - A குழிவுச் சாய்வு    P - A குத்துச் சாய்வு

P - B குவிவுச் சாய்வு

உரு 6.10

சுவடு

சம உயரக் கோட்டுப் படத்தில் உயரம் குறைந்த பிரதேசத்தினை நோக்கி நீண்டு சாய்ந்திருக்கும் விதத்தைப் பாருங்கள் இது ஆங்கில V வடிவத்தினை ஒத்திருக்கும்.

பள்ளத்தாக்கும் ஆற்றுப் பள்ளத்தாக்கும்

சம உயரக் கோடுகள் யாவும் உயர் பிரதேசத்தை நோக்கிச் சென்று வளைத்திருப்பதைக் கொண்டு. பள்ளத்தாக்கு அடையாளப் படுத்தப்படுகிறது. இங்கு ஆறு பாய்வதானால், ஆற்றுப் பள்ளத்தாக்கு என அழைக்கப்படும். இன்றேல், பள்ளத்தாக்கு எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமவெளி

படத்தில் 60 மீற்றர் 80 மீற்றர்களுக்கிடைப்பட்ட பிரதேசத்தில் சமவெளி ஒன்று காட்டப்படுகிறது. இவற்றிற்கிடையே வேறு தரை உயர வேறுபாடுகள் இல்லை எனத் தெளிவாகின்றதல்லவா.

மேற்கண்ட உருவப் படத்தில் காட்டப்படும் பிரதேசத்தில் மேலும் சில தரை உயர்ச்சி உறுப்புக்கள் காட்டப்படுகின்றன. அவற்றில்,

மலைத்தொடர்.
திரிகோண கணித நிலையம்
மென்சாய்வு
குத்துச் சாய்வு

என்பன காட்டப்படுவதனைக் காணலாம். இப்பிரதேசத்தின் நடுப்பகுதியில் காட்டப்பட்டிருப்பதே மலைத்தொடராகும். இது தெற்கிலிருந்து மேற்குப்புறமாகப் பரந்து செல்லும் வகையில் மலைத் தொடர் அமைந்துள்ளது. இம்மலைத் தொடர் இரண்டு பகுதிகளாகப் பிரிந்திருப்பதை நீங்கள் அவதானிக்கலாம்.

அத்துடன் மலை உச்சியில் முக்கோண வடிவிலமைந்த கபில நிறக்குறியீட்டைக் காணலாம். அக்குறியீட்டின் நடுவில் புள்ளி ஒன்று இடப்பட்டு, உயரத்தின் அளவும் (474 மீற்றர்) குறிக்கப்பட்டுள்ளது. இத்தகைய குறியீடுகளே, திரிகோண கணித நிலையம் எனப்படும். இவை மலையின் உச்சிகளைக் காட்டுவ்தற்குப் பயன்படுத்தப்படுவதுண்டு.

மலைத் தொடரின் வட பகுதியை ஆராய்ந்து பாருங்கள். அப்பகுதியின் மேற்குப் பகுதியிலுள்ள சம உயரக் கோடுகள் ஒன்றுக் கொன்று வெகுதூரத்தில் அமைந்திருக்க, கிழக்குப் புற சம உயரக் கோடுகள் ஒன்றிற்கொன்று நெருக்கம் உடையதாக அமைந்திருக்கின்றன. சமஉயரக் கோடுகள் ஐதாக, தூரத்தூர அமைந்திருப்பின் அவற்றை மென்சாய்வு என்றும் சம உயரக் கோடுகள் நெருக்கம் உடையதாக அண்மையில் அமையின் குத்துச் சாய்வு என்றும் கூறுவோம்.

படத்தில் காட்டப்பட்டுள்ள பகுதியில் A-B எனும் குறுக்கு வெட்டுப்பகுதியில் இவை காட்டப்பட்டுள்ளன. A யில் இருந்து மலை உச்சி வரையிலான பகுதி மென்சாய்வாகவும், மலையுச்சியில் இருந்து B வரையிலான பகுதி குத்துச் சாய்வாகவும் இருக்கின்றது.

இதே பிரதேசத்தில் வடமேற்குத் திசையில் சம உயரக் கோடுகள் மூலம் தனித்து அமைந்துள்ள குன்று ஒன்று காட்டப் பட்டுள்ளது. ஏனைய தரைத் தோற்ற அம்சங்களில் இருந்தும் பிரிந்து தனியாக அமைந்திருப்பதால் இதனைத் தனிக்குன்று என்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் உரு. - இல. 11 றினை நன்கு அவதானியுங்கள். அங்கே தரப்பட்டுள்ள பிரதேசத்தில் எவ்வாறான தரைத் தோற்ற அம்சங்கள் காட்டப்படுகின்றன என ஆராய்ந்து பாருங்கள்.

மேற்கண்ட படத்தில் காட்டப்படும் பிரதேசத்தில் கூம்புக் குன்று, பள்ளத்தாக்கு

குழிவுச் சாய்வு,
குவிவுச் சாய்வு
சரிவுச் சாய்வு என்பன போன்ற
அம்சங்கள் காட்டப்பட்டுள்ளன.

குழிவுச்சாய்வு

படத்தில் A-B எனும் கோட்டால் காட்டப்பட்டுள்ளது. இங்கு சமவுயரக் கோடுகள் ஆரம்பத்தில் ஐதானதாகவும் உச்சியினை நோக்கி செல்லச் செல்ல செறிவாதாகவும் காணப்படுகிறது. இது குழிவுச்சாய்வு எனப்படும்.

குவிவுச்சாய்வு

படத்தில் P-B எனும் கோட்டால் காட்டப்பட்டுள்ளது. கீழ்ப்புற சமிவுயரக் கோட்டுப் பகுதியில் சம உயரக்கோடுகள் நெருக்கமானதாகவும் உச்சியினை நோக்கி ஐதானதாகவும் காணப்படுகின்றது. இதுவே குவிவுச்சாய்வு எனப்படுவதுண்டு.

சரிவுச்சாய்வு

G-H எனும் கோட்டினை அவதானியுங்கள்: அங்கே உச்சியிலிருந்து சமவுயரக் கோடுகள் மிக நெருக்கமாகக் காட்டப்பட்டுள்ளன. உயர் பிரதேசத்திலிருந்து கீழ்ப் பகுதிக்குத் திடீரென ஏற்படும் சரிவினை இது காட்டுகின்றது.

கூம்புக்குன்று

ஒரு தாதுகோபத்தின் அல்லது கூம்பின் வடிவத்தைக் கொண்ட குன்று கூம்புக்குன்று எனப்படும். இங்கு சமவுயரக் கோடுகள் வட்டப்பாங்கிலே அமைந்திருக்கக் காணலாம். இத்தகைய குன்றுபடத்தில் தென்கிழக்கு மூலையில் காணப் படுகின்றது.

### பள்ளத்தாக்குகள்

மேற்கண்ட பிரதேசத்தினை நன்கு ஆராய்ந்து பாருங்கள். தென் மேற்கிலிருந்து வடகிழக்குத் திசையினை நோக்கிச் காணப்படும் பிரதான மலைத்தொடர் ஒன்று காட்டப்பட்டுள்ளது. இப்பிரதான மலைத் தொடர் இருபகுதிகளாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றிற்கிடையில் ஆறு ஒன்று செல்லும் பகுதியே பள்ளத்தாக்கு ஆகும். இது மலைத் தொடருக்கு ஊடாகச் செல்வதனால் இது குறுக்குப் பள்ளத்தாக்கு எனப்படும். மலைத் தொடரின் நீண்டு செல்லும் திசைக்கு சமாந்தரமாக பள்ளத்தாக்கு காணப்படின் நெடுக்குப் பள்ளத்தாக்கு எனப்படும். இவ்வாறான இரு பள்ளத்தாக்கு படத்தில் X - Y எனும் எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ளன.

### வடிகாற் பாங்கு

உயர் பிரதேசங்களில் ஊற்றெடுக்கும் சிற்றோடை வழியாகவே ஆறு உற்பத்தியாகின்றது. அது தாழ்நிலங்களினை நோக்கி ஓடும் போது வேறு சில நீரோடைகளும் அதனுடன் சேருகின்றன. இவ்வாறு நீரோடைகள் ஒன்று சேர்வதனால் கிளையாறுகளும், கிளையாறுகள் ஒன்று சேர்வதினால் தலை ஆறும் உருவாகின்றன. தலை ஆற்றையும் அதனுடன் ஒன்றிணையும் சகல கிளையாறுகளையும் ஒன்றாகக் கொள்ளும்போது "ஆற்றுத் தொகுதி" எனப்படுகின்றது. இலங்கையில் அண்ணளவாக நூற்றி மூன்று பிரதான ஆற்றுத் தொகுதிகள் உள்ளன. இவற்றுள் அநேகமான ஆறுகள் மத்திய மலையுச்சியில் உற்பத்தியாகின்றன. பின்னர் இவை சமவெளிகளினூடாகப் பாய்ந்து சென்று தீவின் வெவ்வேறு இடங்களில் கடலுடன் கலக்கின்றன. ஆறு பாய்ந்து செல்லும் பாங்கு "வடிகாற் பாங்கு" எனப்படும். வடிகாற் பாங்கினைக் குறிப்பிட்ட பிரதேசத்தின் தரையுயர்ச்சி வேற்றுமைகள் நிருணயிக்கின்றன. இதன்படி, வடிகாற் பாங்குகள் சில தோற்றம் பெறுகின்றன. இவற்றினை இங்கு சுருக்கமாக நோக்குவோம்.

*1. ஆரை வடிகாற் பாங்கு* : ஆறுகள் ஒரே நீரேந்து பிரதேசங்களில் சிற்றோடையாக உருவெடுத்து தாழ் நிலங்களினை நோக்கி ஓடும் போது வண்டிச் சில்லின் ஆரை போல் பிரதேசம் எங்கும் பரந்து விரிந்து ஓடும் போது, அவற்றை ஆரை வடிகாற் பாங்கு என அழைப்போம். இலங்கை இதற்குச் சிறந்த உதாரணமாகும். இங்கு எல்லா நதிகளும் மத்திய மலைநாட்டில் உருவெடுத்து பல்திசைகளை நோக்கி பாய்ந்தோடுகிறது.



13. S. P. C 000405

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. மரநிகர் வடிகாற் பாங்கு :** கிளையாறுகள் தலையாற்றுடன் எப்போதும் ஒரு மரத்தின் கிளைகள் விரிந்து செல்லும் பாங்கில் இணைந்திருக்கும். பெரிய பல மரக்கொப்புகள் பெரிய மரக்கிளையில் இணைந்து மரத்தில் ஒன்றாக இணைந்திருப்பதற்கு நிகராக கிளையாறுகள், தலையாறுகளுடன் இணைந்து இருக்கும் பாங்கு மரநிகர் வடிகாற் பாங்கு என அழைக்கப்படும். இலங்கை நதிகளில் பெருமளவு, இவ் வடிகாற் பாங்கு காணப்படுகிறது.

எமது நாட்டில் அநேகமான ஆற்றுத் தொகுதிகள் மரநிகர் வடிகாற் பாங்காகவே காணப்படுகின்றன.

**3. அளியடைப்பு வடிகாற் பாங்கு:**

ஆறுகள் குறிப்பாகக் கிளையாறுகள், தலையாற்றுடன் செங்கோண வடிவில் அல்லது சட்டத்தட்டு வடிவில் இணையும் போது, அதனை அளியடைப்பு வடிகாற் பாங்கு என அழைப்பர். இலங்கையின் தென்மேற்குச் சமவெளிப் பிரதேசத்தில் இத்தகைய வடிகாற் பாங்கைக் காணலாம். களனி கங்கை, களுகங்கை, பெந்தரகங்கை என்பனவற்றிலும் இத்தகைய வடிகால் அமைப்பு காணப்படுகின்றது.


**4. கங்கண வடிகாற் பாங்கு:** ஆறு ஒன்றானது மலைப் பகுதியினைச் சுற்றி வட்டமாக அல்லது அரை வட்டமாகப் பாய்ந்தோடும் போது அது கங்கண வடிகாற் பாங்கு என அழைக்கப்படும். இலங்கையின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய மலைத் தொடர்ச் சிகரங்களின் சில இடங்களில் இத்தகைய வடிகாற் பாங்குகள் உள்ளன.

பின்வரும் படங்களில் நீங்கள் இதுவரை கற்ற வடிகாற் பாங்குகளில் சிலவற்றை இனங்காணமுடியும்.




உரு. 6.11
மரநிகர் வடிகால்




உரு. 6.12
அளியடைப்பு வடிகாற் பாங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்பாட்டு அம்சங்கள்:

பண்பாட்டு அம்சங்கள் குறியீடுகள் நிறங்கள் கொண்டு படத்தில் காட்டப் படுகின்றன.

ஏதாவது ஒரு பிரதேசத்தில் உள்ள பௌதீக உறுப்புக்களுக்குப் புறம்பானதானதாக பண்பாட்டு அம்சங்களும் காணப்படும். பௌதீக அம்சங்களால் தூண்டற்பேற்றைப் பெற்ற மனிதன் தன் சிந்தனைகளுக்கும் எண்ணங்களுக்கும் ஏற்ப கட்டியெழுப்பும் எல்லா அம்சங்களும் பண்பாட்டு அம்சங்கள் எனக் கருதப்படுகின்றன. பண்பாட்டு அம்சங்களுள், நீர்ப்பாசன வேலைகள், நிலப்பயன்பாடு, போக்குவரத்து, குடியிருப்புக்கள் போன்றவைகள் உள்ளடக்கப்படுவதுண்டு.

1: 50,000 இடவிளக்கத் தேசப்படங்களில், இத்தகைய பண்பாட்டு அம்சங்கள் குறியீடுகள், நிறங்கள் கொண்டு வெளிக்காட்டப்படுகின்றன. இத்தகைய குறியீடுகள், நிறங்களினை மிகச் சரியான வகையில் கையாளப்படாதவிடத்து, தேசப்படங்களில் வெளிக்காட்டப்படும் தகவல்கள் பிழையானதாகக் வெளிக் காட்டப்படும். இதனால் இவற்றைச் சரியாகவும், தெளிவாகவும் பயன்படுத்துவதற்குச் சிறந்த பயிற்சிகள் அவசியமாகும்.

1: 50,000 இடவிளக்கப்படங்களில் பயன்படுத்தப்படும் குறியீடுகள், நிறங்கள் பற்றி, மிகக் கூடுதலான அவதானத்தினைச் செலுத்துங்கள். குறியீடுகளுடன் நிறங்களும் ஒருங்கே உபயோகிக்கப்படுவதனாலேயே இத்தகைய அவதானம் தேவையாகின்றன. பின்வரும் அட்டவணையில் 1:50,000 இடவிளக்கப்படங்களில் பயன்படுத்தப்படும் சில நிறங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றை நன்கு கற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| நீல நிறம்:- | ஆறு, குளம், கால்வாய், கடல் போன்ற நீரோடு சம்பந்தமான அமிசங்கள். |
| மஞ்சள் நிறம்:- | குறிப்பிட்ட நிலப்பயன்பாட்டு அமிசங்களுக்கும் |
| கடும் மஞ்சள் நிறம்:- | பிறவீதிகள். |
| இளம் பச்சை நிறம்:- | நெற் செய்கை |
| சிவப்பு நிறம்:- | பிரதான வீதிகள், நிருவாக எல்லைகள், புகையிரத நிலையம் போன்றவை. |
| கறுப்பு நிறம்:- | புகையிரதப் பாதைகள், குடியிருப்பு பெயர்கள், பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேச எல்லைகள். |
| கபில நிறம்:- | சமவுயரக் கோடு, குள அணைக்கட்டுக்கள். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசப்படங்களில் தகவல்களை வெளிக்காட்டுதலும் அவற்றினை விளக்குதலும்

1: 50,000 இலங்கை இட விளக்கப் படம்

1:50,000 இடவிளக்க தேசப்படங்களின் தரைத்தோற்ற உறுப்புக்கள் வடிகால் அம்சங்கள் போன்ற பௌதீக உறுப்புக்கள் மற்றும் போக்குவரத்து, நிலப்பயன்பாட்டு அம்சங்களான பண்பாட்டு அம்சங்களையும் எவ்வாறு படங்களில் சம உயரக் கோடு, குறியீடுகள், நிறங்கள் என்பவற்றை உபயோகித்து வெளிக்காட்டலாம் என இதுவரை நீங்கள் கற்றவற்றில் இருந்து விளங்கிக் கொண்டிருப்பீர்கள்.

உமது பாடசாலையில் உள்ள தரைத்தோற்ற பகுதியில் பௌதீக மற்றும் பண்பாட்டு உறுப்புகளைத் தேசப்படமாக வரைவதற்கு உமக்கு அவசியப்படுகின்றது என எண்ணிக் கொள்ளுங்கள். இதுவரை நீங்கள் கற்றவற்றில் இருந்து பெற்றுக் கொண்ட, சம உயரக் கோடு, குறியீடுகள், நிறங்கள் பற்றிய அறிவில் இருந்து குறிப்பிட்டதோர் அளவுத்திட்டத்தில் இத்தகைய படம் ஒன்றினை உங்களால் வரைய முடியும்.

ரெஜிபோம், கார்ட் போர்ட், களிமண் போன்றவற்றை உபயோகித்தும் இப்பிரதேசத்தின் விபரங்களை முப்பரிமாண அடிப்படையில் அவற்றை அமைக்க முடியும். இதனால் தேசப்பட விபரங்களை அமைப்பதில் இரு முறைகள் காணப்படுகின்றன என அறிந்து கொள்ள முடியும்.

தேசப் படங்களில் விபரங்களை வெளிக்காட்டும் முறைகள் இரண்டாகும்.

1. ஏற்றுக்கொள்ளப்பட்ட குறியீடுகள், நிறங்கள் கொண்ட இரு பரிமாண அடிப்படையில் படத்தை அமைத்தல்.
11. முப்பரிமாண அடிப்படையில் வெளிக்காட்டுதல்.

தேசப்படங்களில் விபரங்களை வெளிக்காட்டுவதற்கும் அவற்றினை விளங்கிக் கொள்வதற்கும் ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளுதல் அவசியமாகும். பிரதேசத்தின் பரப்பு, தரைத் தோற்றம், வடிகால், போக்குவரத்து, நிலப்பயன்பாடு, குடியிருப் புகள் போன்ற விபரங்களைத் தேசப்படங்களில் வெளிக் காட்டுவதற்கும் · விளக்குவதற்கும் வாசிப்பதற்கும் இத்தகைய ஆற்றல்கள் அவசியமாகும்.

தேசப்படம் ஒன்றினை வாசிக்கும் போது பின்வரும் காரணிகளில் கூடிய அவதானம் செலுத்துதல் வேண்டும்.

அளவுத்திட்டம்.
திசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையம்.

தரைத்தோற்றமும் வடிகாலமைப்பும்.

நிலப்பயன்பாடு.

குடியிருப்பு, போக்குவரத்து, மதவழிபாட்டுத் தலங்கள் போன்றன.

தேசப்படம் ஒன்றில் சம உயரக் கோடுகள், குறியீடுகள், நிறங்கள் கொண்டு வெளிக்காட்டப்படும் பிரதேசத்தின் பரப்பு, இடவுயரம், தரைத்தோற்றம், நிலப்பயன்பாடு, குடியிருப்புக்களின் தன்மை என்பவற்றுடன் அப்பிரதேசத்தின் மக்களது சமயம், பிரதான பொருளாதார நடவடிக்கைகள் பற்றியும் அதிக அவதானம் செலுத்துதல் வேண்டும்.

தேசப்படம் ஒன்றினை விவரணம் செய்யும் பொழுது சில அடிப்படை விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

அடிப்படை 1 – தேசப்படத்தில் காட்டப்படும் பிரதேசத்தில் முக்கியமான உறுப்புக்களை வெளிக்காட்டுதல்.

அடிப்படை 2 – மிகத் தெளிவாகத் தெரியும் பௌதீக மற்றும் பண்பாட்டு அம்சங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட பிரதேசத்தினை வலயங்களாகப் பிரித்துக்கொள்ளல்.

அடிப்படை 3 – வகுத்துக்கொள்ளப்பட்ட வலயங்களின் அடிப்படையில் பௌதீக மற்றும் பண்பாட்டு அம்சங்களினை விவரணம் செய்தல்.

**தேசப்படம் ஒன்றினை விவரணம் செய்யும் போது சில அடிப்படை விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.**

விவரணம் செய்யும் போது;
தரைத்தோற்றம்
வடிகால்
போக்குவரத்து
நிலப்பயன்பாடு
குடியிருப்பு

பௌதீக மற்றும் மனித நடவடிக்கைகளுக்கு இடையிலான தொடர்பு என்பனவற்றில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

இவ்வாறு தேசப்படம் பற்றிய ஆற்றல்களை வளர்த்துக் கொள்வதற்குக் கடினமான பயிற்சிகள் அவசியமாகும். உமது பாடசாலையில் உள்ள 1:50,000 தேசப்படங்களைப் பாவித்து இத்தகைய பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசப்படங்களின் பயன்பாடுகள்

இன்றைய மக்களது அன்றாட வாழ்க்கையில் பல்வேறுபட்ட தேவைகளின் பொருட்டு தேசப்படங்கள் பயன்படுத்தப்படுகின்றன. புராதன காலத்தில் வாழ்ந்தோர்கூட தமது சுற்றுச் சூழல்கள் பற்றி தேசப்படங்களினை வரைந்து பயன்படுத்தி வந்தனர் என அறிய முடிகின்றது. இன்றைய உலகில் வாழுகின்ற எமக்குப் பல சந்தர்ப்பங்களில் தேசப்படங்கள் தேவையாக உள்ளன. கட்டிடங் களைக் கட்டும்போது, கடல், வான்வழிப் பிரயாணங்களினை மேற்கொள்ளும் போது தேசப்படங்கள் எமக்கு உறுதுணையாக அமைகின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களில் இத்தகைய தேசப்படங்களைப் பயன்படுத்தலாம் எனத் தெரிந்து கொள்ளுதல் மிக முக்கியமாகும். இதன் காரணமாகவே தேவைகளுக்கு ஏற்ப ஏற்ற படங்களைத் தெரிவு செய்வதில் அதிக அவதானம் தேவையாகும். உதாரணமாக, குறிப்பிட்ட பயணம் ஒன்றினை மேற்கொள்ளும் போது இலங்கையின் போக்குவரத்துப் பாதைகள் பற்றிய தேசப்படம் பாவிப்பதற்கு வேண்டும். ஒரு பிரதேசத்தின் தரைத்தோற்ற அம்சங்களைக் கண்டறிவதற்குப் பிரதேச இடவிளக்கப்படம் அவசியமாகும்.

இதன் மூலம் எழுகின்ற தேவைகளுக்கு ஏற்ப தேசப்படத்தின் வகையும் வேறுபடுகின்றது என அறிந்து கொள்ளலாம். பல்வேறு நடவடிக்கைகளின் இலகுவாக்கும் பொருட்டு குறிப்பிட்ட விடயங்கள் சார்ந்த படங்களைத் தெரிவு செய்து உபயோகித்தல் வேண்டும்.

இலங்கையில் தேசப்படங்களின் வகைகளின் பல்வேறு தலைப்புகளிலான தேசப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. தேசப் படக் கற்றலின் போது எண்ணற்ற தகவல்களை மிகக் குறுகிய காலத்தில் அறிந்து கொள்ளும் ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். தேசப்படக் கலையில் பயன்படுத்தப் படுகின்ற குறியீடுகள் நிறங்களினை அறிந்து கொள்வதும் அவசியமாகும்.

இதுவரை கற்றவற்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவின்படி தேசப்படங்களை உபயோகித்தல் அதற்கான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதே இன்றைய தேவையாக உள்ளது.

### சுருக்கம்

தேசப்படங்கள் இன்று யாவருக்கும் அவசியமான கருவியாக உருவெடுத்துள்ளது. மனிதன் தனது பல்வேறு தேவைகளுக்காகப் பல்வேறு வகைப்பட்ட தேசப்படங்களை வரைந்து வருகிறான். "புவியின் மேற்பரப்பில் காணப்படுகின்ற முப்பரிமாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவிலான அம்சங்களினை இரு பரிமாண அடிப்படையில் கடதாசி ஒன்றில் பொருத்தமான அளவுத்திட்டத்தின் அடிப்படையில் வரைந்து கொள்ளுதல் தேசப்படம் எனப்படும்".

தேசப்படங்களில் காட்டப்படும் விடயங்களின் அடிப்படையில்,

1. பௌதீக தேசப்படங்கள் (தரைத்தோற்றம், வடிகால், காலநிலை போன்ற தேசப்படங்கள்)
2. பண்பாட்டு தேசப்படங்கள் (நீர்ப்பாசனம், நிலப்பயன்பாடு, போக்குவரத்து, குடியிருப்புகள் என்பவற்றைக் காட்டும் தேசப்படங்கள்)

என இரு பிரதான பிரிவுகளாகப் பிரிக்கப்படும்.

இலங்கை நில அளவைத்திணைக்களத்தினரால் 1980 ஆம் ஆண்டளவில் 1:50,000 இலங்கை இடவிளக்கப்படங்கள் வரைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி முழு இலங்கைத் தீவுக்குமாக 92 தேசப்படங்கள் வரையப் பட்டுள்ளன. ஏதாவது ஒரு பிரதேசத்தின் தரைத்தோற்றம் வடிகால், நிலப்பயன்பாடு, போக்குவரத்து, கட்டிடங்கள், குடியிருப்புகள் போன்ற பௌதிக பண்பாட்டு அம்சங்கள் 1:50000 இடவிளக்கப் படங்களில் காட்டப்படுகின்றன.

1:50,000 இடவிளக்கப்படங்களினைப் பயன்படுத்துவதற்கு முன், அளவுத்திட்டம், திசை, குறியீடுகள், நிறங்கள், நிருவாக எல்லை போன்றவற்றில் அதிக அவதானம் செலுத்ததல் வேண்டும். சம உயரக் கோடுகள் மூலம் பிரதேசத்தின் தரை உயர்ச்சி வேற்றுமைகள் வெளிக்காட்டப்படுகின்றன. அத்துடன் தரையின் அமைப்பு, உயரம், சாய்வுகளும் வெளிக்காட்டப் படுகின்றன. இதனால் இதனைப்பற்றி அதிக அவதானத்துடன் கற்க வேண்டும்.

தரைத்தோற்றம், வடிகால் அம்சங்கள் என்பன ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையாகும். அதனாலேயே தரைத்தோற்ற இயல்புகளிற்கேற்ப, வடிகால் பாங்குகள் தீர்மானிக்கப்படுகின்றன. வடிகால் பாங்குகளில்.

ஆரை வடிகால்,
மரநிகர் வடிகால்,
அளியடைப்பு வடிகால்,
கங்கண வடிகால் என்பன முக்கியமானவைகளாகும்.

பண்பாட்டு அம்சங்கள், தேசப்படத்தில், நிறங்கள், குறியீடுகள் கொண்டு வெளிக்காட்டப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசப்படக் கலையில் அடையப்பெற்றுள்ள அபிவிருத்தியின் காரணமாக, பலதரப்பட்ட தேசப்படவகைகள், வரையப்பட்டு வருகின்றன. அதனைத் தேவைகளின் பொருட்டு, தேசப் படங்களினைத் தெரிவு செய்து உபயோகிப்பதில் ஆற்றல்கள் அவசியமாகின்றன.

தேசப்படங்கள்,

இரு பரிமாண அடிப்படையில்,
முப்பரிமாண அடிப்படையில்

என இரு முறைகளில் நிருமானிக்கப்படுகின்றன. இது தொடர்பான அறிவும் உங்களுக்கு அவசியமாகின்றன. தேசப்படங்களினை அமைப்பது போலே தேசப்படங்களை வாசித்து விளங்கிக் கொள்வதும் மிக அவசியமானதாகும். அதற்காக அவ்வப்போது பயிற்சிகளும் அவசியமாகும்.

**செயன் முறைகள்**

கீழ்வரும் பயிற்சிகளில் ஈடுபடுக.

(1) 1:50,000 இடவிளக்கப்படத்தில் உள்ள நேர்கோட்டு அளவுத் திட்டத்தைக் குறிப்பிடுக.

(2) நேர்கோட்டளவுத்திட்டத்தில் உள்ள முதற் பகுதி சிறு சிறு கூறுகளாக ஏன் பிரிக்கப்பட்டுள்ளது.

(3) தேசப்பட வகைக் குறிப்பின்னத்தைத் தருக.

(4) கீழ்வரும் தம்புள்ளை தேசப்படத்தைச் சூழ அமைந்துள்ள தேசப்படங்களைப் பற்றிய அட்டவணையை உதாரணமாகக் கொண்டு தம்புள்ளை பிரதேசத்திலிருந்து மற்றயவை எத்திசைகளில் உள்ளன என எழுதுக.

| | | |
|---|---|---|
| கல்கமுவ 35 | கெக்கிராவை 36 | பொலன்னறுவை 37 |
| நிக்கவெரட்டியா 41 | தம்புள்ளை 42 | எலகர 43 |
| குருணாகலை 47 | மாத்தளை 48 | பள்ளேகம 49 |

வடக்கு ................................வடமேல் ................................

கிழக்கு ................................வடகிழக்கு ................................

தெற்கு ................................தென்கிழக்கு ................................

மேற்கு ................................தென்மேற்கு ................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) பின்வருவனவற்றை இனம் காண்க.

உ. வ.

கா. வ.

அ. வ.

(6) $1^{1}/_{2}$ சதுர கிலோமீற்றர் அளவினதான நெல் வயல் பிரதேசத்தினை வரைந்து அதற்குரிய நிறத்தினையும் தீட்டுக.

(7) கீழ்வரும் உறுப்புக்களுக்கு உரிய நிறங்கள், குறியீடுகளைப் பெயரிடுக.


நிருவாக எல்லை.
A வகை பிரதான வீதி.
பொலிஸ் நிலையம்.
உல்லாச விடுதி.
பள்ளிவாசல்.
வாடிவீடு.
தென்னை.
பாடசாலை.
அகன்ற ஒற்றை இரட்டை புகையிரதப் பாதை.
நடைபாதை.

(8) தேசப்படம், இன்றைய மனிதனது அத்தியாவசியமான கருவியாக ஏன் உருவெடுத்துள்ளது? இதற்கான காரணங்களைத் தருக.

(9) பின்வரும் தேசப்படத்தினை அடிப்படையாகக் கொண்டு கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு. 06

(அ) 200 மீற்றர்கட்கு மேலான உயரமான பிரதேசங்களை இனம் காண்க.

(ஆ) தேசப்படப் பிரதேசத்தின் பரப்பளவு யாது?

(இ) A 6 என்ற பாதை அமைக்கப்பட்ட ஆண்டைக் குறிப்பிடுக.

(ஈ) படத்தில் திரிகோண கணித நிலையம் காட்டப்பட்ட பகுதிகளை இனம் காண்க.

(உ) A 6 பாதையின் நீளத்தினை கிலோ மீற்றரில் தருக.

**மாதிரிப் பயிற்சி**

1. (அ) உமக்கு வழங்கப்பட்ட 1:50,000 இலங்கைச் சமவுயரக் கோட்டுப்படத்தை ஆராய்ந்து அது தொடர்பாகக் கீழே கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக. சமவுயரக் கோட்டுப் படத்தை உமது விடைத்தாளுடன் இணைக்க.

   (1) கீழே காணப்படும் அம்சங்கள் அமைந்துள்ள இடங்களை வழங்கப்பட்ட படத்தில் இனங்கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை படத்தில் காணப்படும் நிலையங்களில் 1,2,3,4 என்ற இலக்கங்களை முறையே எழுதுக.

(a) பிரதேசத்தின் அதி உயரமான மலை உச்சியில் காணப்படும் திரிகோணகணித நிலையத்தை இலக்கம் (1) எனவும்.

(b) குத்துச்சரிவினைக் குறிக்கும் வகையில் கோடு ஒன்றை வரைந்து இலக்கம் (2) எனவும்.

(c) வெளியரும்புப் பாறையை இலக்கம் (3) எனவும்.

(d) காட்டுப் பிரதேசத்தை இலக்கம் (4) எனவும் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(ii). (a) பிரதேசத்தில் காணப்படும் பாரிய குளம் அமைக்கப்படுவதற்கு முன் காணப்பட்ட வடிகாற்றொகுதியினை வரைக.

(b) பிரதான சந்தியிலிருந்து கிழக்குத் திசையில் பிரதான வீதி வழியாக 03 கிலோமீற்றர் தூரம் நடந்தால் ஒரு பாடசாலை காணப் படும். அப்பாடசாலையைச் சுட்டும் மரபுக் குறியீட்டைச் சுற்றி வட்டம் ஒன்றை வரைக.

(c) காணப்படும் நேர்கோட்டு அளவுத் திட்டத்தைப் பிழையின்றிப் பெயரிடுவதோடு பூரணப்படுத்துக.

(04 புள்ளிகள்)

(iii) பின்வரும் எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை எழுதுவதற்குத் தரப்பட்டுள்ள (5 ஆம் பக்க) தாளில் உள்ள இடத்தைப் பயன்படுத்துக. அதனை விடைத்தாளுடன் இணைக்க

(a) இப்பிரதேசத்தில் காணப்படும் பயிர்கள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக.

(b) பிரதான ஆற்றின் வழியே காணப்படும் நிர்வாக எல்லைக் கோடு யாது?

(c) மேற்கு உயர் பிரதேசத்தின் அடிப்பாகத்தில் வடக்கிலிருந்து தெற்காக நேர்கோட்டுக் குடியிருப்புக் காணப்படுகின்றது. அக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியிருப்பு உருவாகப் பங்களிப்புச் செய்த பிரதான காரணி யாது?

*(04 புள்ளிகள்)*

(iv) அடைப்புக்குள் தரப்பட்ட விடைகளில் மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்து எழுதுக.

(a) பிரதான ஆறு ஓடிவிழும் திசை (வடக்கு / தெற்கு கிழக்கு / மேற்கு) ஆகும்.

(b) ஆகவும் பெரிய குளத்தில் நீர் நிறையும்போது அதன் நீர் மட்டம் (60-80/ 80-100 / 100 - 120 / 120 - 140) வரை உயரும்.

(c) படத்தில் காணப்படும் பிரதேசம் (வெள்ளப் பெருக்கால் எப்பொழுதும் அழிவுறும் பிரதேசம் / அழிவுற்ற குளங்கள், வாய்க்கால் களைக் கொண்ட காட்டுப் பிரதேசம் / கைத் தொழில் நடவடிக்கைகளினால் விருத்தி யடைந்த பிரதேசம் / நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாயப் பிரதேசம்) எனக் குறிப்பிடப்படலாம்.

*(03 புள்ளிகள்)*

(v) புள்ளி X இலிருந்து புள்ளி Y வரைக்கும் குறுக்கு வெட்டுமுகத்தை வரைக. 100 மீற்றர் இடைவெளி களைக் கொண்ட பிரதான சமவுயரக் கோடுகளை மட்டும் பயன்படுத்துக.

*(03 புள்ளிகள்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் நாட்டு இளஞ் சந்ததியினரின் நலன்கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இந்நூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரர்களுக்கு வழங்கத்தக்க முறையில் கவனமாக வைத்துப் படிக்க.

பாடசாலையின் பெயர் ..........................................

| | மாணவர் பெயர் | தரம் | வகுப்பு ஆசிரியரின் கையொப்பம் |
|---|---|---|---|
| 2001 | .................. | ........ | .................... |
| 2002 | .................. | ........ | .................... |
| 2003 | .................. | ........ | .................... |
| 2004 | .................. | ........ | .................... |
| 2005 | .................. | ........ | .................... |

**සමාජ අධ්‍යයනය හා ඉතිහාසය 11 ශ්‍රේණිය (දෙමළ)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org